சுதேச
மித்திரன்
ஏப்ரல் 1, 1956
விலை 4 அணு
ர்ஸாக்...

ஆரோக்கியமான குழந்தைகள் தவறாமல் லைப்பாய் சோப் உபயோகித்துக் குளிக்கின்றனர்

*அன்றாட அழுக்கிலுள்ள கிருமிகளை அது கழுவிக் களைகிறது!

*தினசரி நம்மீது படியும் அழுக்கிலுள்ள கிருமிகள் வாயிலாக நாம் ஒவ்வொருவரும் தொத்து நோய் ஆபத்துக்கு ஆளாகிறோம். அதன் காரணமாகவே, ஆரோக்கியமுள்ள பலர் வழக்கமாக லைப்பாய் சோப் உபயோகித்து அழுக்குடன் கிருமிகளையும் கழுவிக்களைந்து தத்தம் ஆரோக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்கின்றனர்—ஆரோக்கியமான அத்தகைய புதுமலர்ச்சியை அது அளிக்கிறது!

L. 257-X52 TM

இந்தியாவில் தயாரித்தது

வாழிய செந்தமிழ் சுதேசமித்திரன் வாழ்க நற்றமிழர்
வாரப்பதிப்பு

விலைவாசி ஏற்றம்

கடந்த சில வாரங்களாக விலைவாசிகள் ஏறுமுகமாயிருக்கின்றன. முக்கியமாக, உணவுப் பொருள்களின் விலை உயர்வால் ஏழை, எளியவர்கள் பாதிக்கப்படுகின்றனர். இந்நிலையில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பமாகப் போவதால், மேற்கொண்டு விலைவாசிகள் கட்டுமீறி உயர்ந்துவிடுமோ என்ற அச்சம் எங்கும் தோன்றியிருப்பது இயற்கையே. ஏனெனில், இத்திட்ட காலத்தில் சர்க்கார் செலவினங்கள் சுமார் 4800–கோடி ரூபாய் இருக்குமென மதிப்பிடப்பட்டிருப்பதோடு, வரி, கடன், வெளியுதவி மூலம் திரட்டக்கூடியதுபோக எஞ்சிய 1200–கோடி ரூபாய்க்குச் செலாவணியைப் பெருக்குவதென்பது சர்க்கார் உத்தேசமாகும்.

பலவகையிலும் பண்ட உற்பத்தி விசேஷமாக அதிகரிக்குமாயின், மேற்குறித்த அச்சம் முற்றிலும் ஆதாரமற்றதாகிவிடும். எதிர்பார்க்கும் பிரகாரம் தொழில் துறையில் தனியார் முதலீடு 2300–கோடி ரூபாய் தேறுமென்றால், நிலைமை நிச்சயம் நம்பிக்கையூட்டக்கூடியதே. ஆனால், ஆலைகளில் உற்பத்தியைக் கட்டுப்படுத்தவும், தனியார் தொழில் முயற்சிக்குள்ள நிர்ப்பந்தங்களைப் பெருக்கவும் நடவடிக்கைகள் உருவாவது மக்களுக்குத் தெம்பூட்டக்கூடியதாயில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

சென்னை ராஜ்யம் சம்பந்தப்பட்டவரை, நாம் கோரியதில் பாதியளவாகிய 190–கோடி ரூபாய்க்குத்தான் இரண்டாவது திட்டத்தில் செலவினங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் விவசாய, தொழில் துறைகளில் நாம் எவ்வளவு தூரம் முன்னேற முடியும்? எந்த அளவுக்கு அதன் மூலம் செலாவணிப் பெருக்க விளைவுகளுக்கு ஈடு கொடுக்க முடியும்?

விவசாயத் துறையில் மேற்கொண்டு பெரிய திட்டம் எதையும் நாம் அமுலாக்கக்கூடிய நிலையில் இல்லை. ஆகவே, தற்போதைக்கு உள்ள நிலங்களிலேயே கூடியவரை விளைச்சலைப் பெருக்கி, விவசாயத்தை ஒரு லாபகரமான தொழிலாக்குவதில் நம் கவனம் திரும்புவதே பொருத்தம். நிலத்தை நம்பி வாழ்வோர் எண்ணிக்கை குறைந்து, அவர்களில் ஒரு கணிசமான பகுதியினர் பிற தொழில்களுக்கு மாறக்கூடிய நிலை ஏற்படவேண்டும். நம் ராஜ்யத்திலோ பெருந் தொழில்கள் மிகச் சொற்பம். இரண்டாவது திட்ட காலத்திலாவது சில கனரகத் தொழில்களை இங்கு ஸ்தாபிக்க வேண்டுமென்ற கோரிக்கை, பலமாக வற்புறுத்தப்பட்டு வருகிறது. செலாவணிப் பெருக்கப் பாதக விளைவுகளைச் சமாளிக்கும் அவசியத்தை முன்னிட்டு, மத்திய சர்க்கார் இக்கோரிக்கை சம்பந்தமாக உருவான நடவடிக்கை எடுப்பரென எதிர்பார்க்கிறோம்.

ஜனநாயக பாகிஸ்தான்

சுதந்திரமெய்தி, தனி நாடாகப் பிரிந்து சென்று எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு, குடியரசு அரசியல் அமைப்பை பாகிஸ்தான் தனக்கு வகுத்துக்கொண்டிருக்கிறது. முன்னேற்ற, சுபிட்சப் பாதையில் பாகிஸ்தான் மக்கள் வெற்றி மேல் வெற்றி அடைய இந்தியர் அனைவரும் ஒருங்கே ஆசி கூறுவர். தனி சமுதாயமாகவும், தனி நாடாகவும் இயங்கினாலன்றி முஸ்லிம்களுக்கு இந்திய உபகண்டத்தில் விமோசனம் கிடையாதென்ற, காலஞ்சென்ற ஜனாப் ஜின்னாவின் லட்சியம் இதன் மூலம் பூரணமாக ஈடேறிவிட்டதெனலாம். ஆனால், நாளதுவரை கராச்சியில் ஆட்சி புரிந்த தலைவர்கள், தேசப் பிரிவினையை இந்தியா மனப்பூர்வமாக ஒப்புக்கொள்ளவில்லை என்ற எண்ணத்தாலும், பிரிவினையைத் தொடர்ந்த குழப்ப நாசகரச் செயல்களாலும் பாரதத்தை விரோதி நாடாகவே மதிக்க வந்திருக்கின்றனர். புதிய அரசியலமைப்பு அமுலுக்கு வந்த பிறகாவது, இருநாடுகளிடையே நல்லுறவு தழைக்கும் புதிய சகாப்தம் துவங்குமாயின், அதைவிட மகிழ்ச்சிகரமானது இந்தியாவுக்கு வேறெதுவும் இருக்காது. ஆனால், இதற்கு பாக். தலைவர்களின் மனோபாவம் மாற வேண்டும். இந்தியா மீதும், ஹிந்து மைனாரிட்டி மீதும் துவேஷத்தை வளர்க்க அவசியமில்லையென்பதை உணரவேண்டும். கீழ் வங்க அகதிகள் வருகை அதிகரிப்பும், ஹிந்துக்களின் சிறிய கோரிக்கையாகிய கூட்டுத் தொகுதியைக்கூட மறுத்ததும், இஸ்லாமியக் குடியரசென நாமகரணம் சூட்டியதும் புதிய சகாப்தத்துக்கான நல்ல அறிகுறிகளல்ல. ஆயினும், ஜனநாயக அமைப்பில், மக்களின் கருத்தைப் பிரதிபலிக்கும் தலைவர்கள் என்றைக்காவது முன்னணிக்கு வந்து பாரதத்துடன் நேச வாழ்வுக்கு வகை செய்வரென்றே நாம் நம்புகிறோம்.

காற்றுவாக்கிலே..

இதுதான் அக்கறையா?

'ஆண்டவனே! என் நண்பர்களிடமிருந்து என்னைக் காப்பாற்று' என்று அறிஞரொருவர் அரற்றியதாகச் சொல்வதுண்டு. ஆயுர்வேதத்தை அரசாங்கம் ஆதரிப்பதாக நம் ஆரோக்கியப் பாதுகாப்பு அமைச்சர் கொஞ்சமும் கூசாமல் கூறும்போது அதுவே நினைவுக்கு வருகிறது.

போதிய அளவு வைத்திய வசதியின்றி ஜனங்கள் திண்டாடுவதை மந்திரி ஒப்புக்கொள்கிறார். வேறு வழியில்லை; முழுப்பூசனிக்காயைச் சோற்றில் மறைக்க முடியவில்லை. அமைந்திருக்கும் அரசினர் ஆஸ்பத்திரிகளிலும் அவல நிலையை அசெம்பிளியில் அங்கத்தினர்கள் அலசித் தள்ளிவிட்டனர். பதிலளிக்க மந்திரி பட்ட பாடு, அவருக்குத்தான் தெரியும்!

வைத்திய வசதிக் குறைபாடு அற்ப சொற்பமான கோளாறல்ல. ஆனால், விரைவில் விடிவு காண வழிதான் மந்திரிக்குப் புலப்படவில்லை. பிரதி வருஷமும் கோடிக்கணக்கில் பெருகி வரும் நம் ஜனத்தொகைக்கு மேலை வைத்திய முறைகளைக் கற்றறிந்த டாக்டர்களின் எண்ணிக்கை போதவே போதாது. புதிய வைத்தியக் கல்லூரிகள் ஆரம்பிக்க ஆசைதான். ஆனால், 'கையில் காசில்லை' யென்றே சதா பல்லவி! போதாக் குறைக்குத் திட்டக் கமிஷனும் தயவு செய்ய மறுக்கிறதாம். அப்படியே மீறி ஆரம்பிப்பதாக இருந்தாலும் வேண்டிய ஆசிரியர்களுக்கு எங்கே போவதென்று தவிப்பு. இருக்கும் வைத்தியக் கல்லூரிகளில் தேறுபவரும் கிராமங்களுக்குப் போவதில்லை. கொள்ளைப் பணத்தைக் கொட்டியழுது பெரிய பட்டம் பெறுபவர்கள், கணிசமான வருமானத்தை எதிர்பார்ப்பதில் ஆச்சரியமேயில்லை. பட்டிக்காட்டுக்குச் சென்றால் கைப்பணமல்லவா நஷ்டம்?

கிராம ஆஸ்பத்திரிகளின் நிலையென்ன? வைத்தியர் இருந்தால் மருந்து இல்லை; மருந்து இருந்தால் வைத்தியர் இல்லை! கிராமாந்திரங்களில் பெருவாரியாக வசிக்கும் ஏழை மக்களுக்கு உருவான நிவாரணம் ஏற்பட வழி சுதேச வைத்திய முறைகளுக்கு ஆக்கமளிப்பதே—என்று சட்ட சபையில் உறுப்பினர் பலர் அறிவுறுத்தினர். இம்முறைகளையொட்டிய மருந்துகளே கிராமவாசிகளின் பொருளாதார நிலைக்கும் கட்டுப்படியாகக் கூடியது; மேலும், நாட்டில் பெரும்பாலோர் இத்தகைய மருந்துகளிலேயே நம்பிக்கை கொண்டவர்கள் என்று சுட்டிக் காட்டினர். ஆனால், ஆட்சி பீடத்தை அலங்கரிக்கும் அமைச்சரின் அபிப்பிராயமோ வேறு. சுதேசிச் சாக்கில் தமக்குள்ள அருவருப்பை அவர் சிறிதும் ஒளிக்கவுமில்லை. "மேனாட்டு வைத்திய முறைதான் சாலச்சிறந்தது; அதையே அங்கீகரிக்க வேண்டும்; தேவையானால், சுதேச வைத்திய முறைகளில் உபயோகப்படக்கூடிய அம்சங்கள் ஏதாவது தென்பட்டால், அவற்றை மேனாட்டு முறையுடன் சேர்த்துக்கொள்ளலாம்" என்று அள்ளி வீசிவிட்டார். தலைகீழ் ராஜாங்கம்! ஆயுர்வேதத்திடம் ஆதாரமற்றதொரு வெறுப்பு; அர்த்தமற்ற அவநம்பிக்கை; அதற்கேற்றவாறே அரசாங்க ஏற்பாடுகளும். காமாலை, கண்டமாலை, காசம், வாதம், பலப்பல நோய்களுக்கும் கைகண்ட நாட்டு மருந்துகள் இருக்கின்றன என்று கதறியும், என்ன பயன்? செவிடன் காதில் சங்கு ஊதின மாதிரித்தான். புழக்கடைப் பச்சிலை கண்ணுக்குத் தெரியவில்லை. தூரத்துப் பச்சையே குளிர்ச்சியாக இருக்கிறது!

"இந்திய வைத்தியக் கல்லூரியை நீடிக்கச் சர்க்காருக்கு இஷ்டமில்லையானால், அதைத் தைரியமாகச் சொல்வது தானே? மறைமுகமாகக் குழி தோண்டுவானேன்" என்று எதிர்க்கட்சித் தலைவர் படபடத்தார். ஆத்திரத்துக்குக் காரணம்? கடந்த சில ஆண்டுகளில் அக்கல்லூரி விஷயத்தில் ஆட்சியாளர் நடந்துகொண்டிருக்கும் விதமே. இந்திய வைத்திய முறைப்படிப் பத்து பாடங்கள் கற்று, பத்திலும் பரீட்சையில் தேற வேண்டுமென்று இருந்ததைச் சென்ற மூன்று, நான்கு வருஷங்களில் படிப்படியாகக் குறைத்து, இப்போது பாடங்கள் ஐந்துதானென்றும், அவற்றிலும் நான்கிலேயே பரீட்சை போதுமென்றும் ஏற்பாடு செய்துள்ளனர். கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிறது! பாடங்களைக் கற்கவும், ஆஸ்பத்திரியில் பயிற்சி பெறவுமுள்ள நேரத்தில் கால்பங்கு அவகாசமே இந்திய வைத்தியத்துக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆயுர்வேத, சித்த, யூனானி மருந்துச் செலவையும் பிரதி வருஷமும் இரண்டு லட்ச ரூபாயிலிருந்து நாற்பதாயிரத்துக்குக் கொண்டு வந்தாகிவிட்டது. இத்தனை மட்டம் தட்டியதும் போதாதென்று, இக்கல்லூரியில் தேறிப் பட்டம் பெறுவோர் இறுதியில் தமது தொழிலில் மேல்நாட்டு வைத்திய முறைகளைக் கையாளக்கூடாது என்று கட்டுப்பாடு கொண்டுவரவும் உத்தேசம். 'ஆயிரம் வேரைக் கண்டவன் அரை வைத்தியன்' என்ற ஆதிகால வாக்கு 'ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்' என்று தற்காலம் சிதைந்து நிற்பதற்கேற்ப, வைத்தியர்களும் அமைந்தால் போதும் என்பது அமைச்சரின் விருப்பமாயிருக்கலாம்!

நிபுணர் குழாம் நிர்ணயித்த பாடக் கிரமம், போதனா முறை அனைத்தையும் அச்சு வேறு, ஆணி வேறாக ஆட்டி வைத்திருக்கும் மதி மந்திரி, ஆயுர்வேதம் குறித்து அழகு காட்ட மாத்திரம் தயங்கவில்லை. "சென்ற ஐம்பது ஆண்டுகளில் ஆங்கில வைத்திய முறை எத்தனை அபிவிருத்தி அடைந்திருக்கிறது! ஆனால், உங்கள் இந்திய வைத்தியத்தில் என்ன முன்னேற்றம் சாதித்துவிட்டீர்கள்?" என்று கேட்கிறார். வாஸ்தவம்தான். ஆனால், அந்த அறிவுத் தேக்கத்துக்கும், தூக்கத்துக்கும் பொறுப்பாளியார்? அஸ்திவாரத்துக்கே வெடிவைத்துவிட்டால், மேற்கொண்டு ஆராய்ச்சிதான் சாத்தியமா? முன்னோர்கள் கண்டெடுத்த மருந்துகள், பல்லாயிரக் கணக்கானவர் பலன் கண்ட அருமருந்துகள், மேனாட்டினரும் வலிந்து தேடும் அற்புத மூலிகைகள் பல இருப்பதைச் சுட்டிக் காட்டினாலும், அவற்றின் குணத்தை, சக்தியை அரசாங்க ஆஸ்பத்திரிகளில் புதிதாகப் பரீட்சித்துப் பார்த்த பின்னரே ஒப்புக்கொள்ள முடியும் என்று சுகாதார மந்திரி சொல்வதிலிருந்தே, இதுவரை அரசாங்கம் ஆயுர்வேத சாஸ்திர ஆராய்ச்சியில் என்ன அக்கறை காட்டியிருக்கிறது என்பது தெளிவாகவில்லையா? இத்தனையும் சொல்லிவிட்டு, அப்புறமும் இந்திய வைத்தியத்துக்கு ராஜ்ய சர்க்கார் ஆதரவு கொடுத்து வருகின்றனர் என்று கூறும்போதுதான் அழுவதா, சிரிப்பதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. 'நல்லதொரு சாஸ்திரத்தை வீணாக அலட்சியம் செய்கிறீர்கள்; அதன் வளர்ச்சிக்கு நீங்கள் எதுவும் செய்யவில்லை' என்று குற்றம் சாட்டினால், மறுப்பவர் கூறுவதென்ன? "ஐந்து இந்திய வைத்தியக் கல்லூரிகளை ஆரம்பிக்க இந்திய சர்க்கார் உத்தேசித்திருக்கிறது; வேண்டுமானால், உங்கள் ஊரில் ஒன்றை வைக்கச் சொல்லுங்களேன்" என்கிறார். கிண்டல் செய்கிறாரா? சத்திரத்துச் சோற்றுக்குத் தாத்தய்யங்கார் உத்தரவா?

—அரட்டை.

அட்டைப் படம்

★

அதோ, அந்த சுண்டைக்காய்ப் பயலைப் பாருங்கள்; நண்டு பிடிக்க அல்லவா ஆரம்பித்திருக்கிறான்! 'நீலத் திரைக் கடல் ஓரத்திலே நின்று' நவநவமான பல காட்சிகளைக் கண்டு களிப்பதுபோன்றதோர் இன்பம் இல்லை. அதிலும், உருட்டி விளையாட உதை பந்து பக்கத்திலிருக்க, அதை லட்சியம் செய்யாமல், உயிரோடு உலாவும் அந்த ஜீவனைப் பிடிக்கத் துடிக்கும் சுட்டிப் பயல்களின் சில்விஷமங்களையும் காண முடியுமென்றால், கடற்கரை ஒரு பேரின்ப நிலையமேயன்றோ!... அருமை மைந்தனின் கையை அகற்ற விரைகின்றாளே அந்த அன்புத்தாய், அச்சமோ; அருவருப்புத்தான் காரணமோ...?

அட்டை ஓவியத்தை 'உயிரோவியமோ' வெனத் தீட்டியுள்ள சைத்ரிகர், 'ரெஸாக்'.

திரிவேணி

ஹேமா ஆனந்ததீர்த்தன்

13

கோயமுத்தூரில் ஒருவாருகத் தாயாரின் காரியங்களை எல்லாம் முடித்துக்கொண்டு ராஜு சென்னை வந்து சேர்ந்தான். அவனைக் கண்டதும் லீலா, பத்மா இருவரும் பீறிட்டுக் கொண்டு வந்த துக்கத்தை அடக்க மாட்டாமல், கண்ணீர் பெருகக் கதறியழுதனர். ராஜுவும் தன் துக்கத்தையெல்லாம் கண்ணீராகப் பொழிந்தான். யார் அவர்களுக்கு ஆறுதல் வார்த்தைகள் சொல்வது? அவர்களே ஒருவரை ஒருவர் தேற்றிக்கொண்டார்கள்?

ஆனால், வெளிப்பார்வைக்குத்தான் ஒருவருக்கொருவர் மனம் தேறியதாகக் காட்டிக்கொண்டார்கள். உள்ளுக்குள் மூன்று பேரும் நடந்துபோன துர்ச்சம்பவத்தின் கொடுமையை நினைந்து நினைந்து, உள்ளம் புழுங்கிக் கொண்டிருந்தனர்.

ஆகஸ்ட் 25-ந் தேதி இரவு! அதைப் பற்றி அம்மூவரும் எப்படியெப்படியெல்லாம் கனவுகள் கண்டுகொண்டிருந்தனர்! ராஜுவும், பத்மாவும் எவ்வளவு துடிதுடிப்புடன் அப்பொன்னுளை எதிர்நோக்கிக்கொண்டிருந்தனர்! 'அன்று இரவு அவர்கள் இருவரும் எப்படியெப்படியெல்லாம் இருப்பார்கள்; நடந்து கொள்வார்கள்!' என்றெல்லாம் மானசீகக் கண்களால் கண்டு லீலா உள்ளம் பூரித்துக் கொண்டிருந்தாள்.

ஆனால், நடந்தது என்ன? அந்த நாள், அதே நேரத்தில், ராஜு என்ன செய்து கொண்டிருந்தான்! மயானத்தில் தன் தாயாருக்குக் கொள்ளி வைத்துக்கொண்டிருந்தான்! என்ன பயங்கரமான விதி! எண்ணுவதொன்றுனால், நடப்பது மற்றொன்று என்று சொல்லுகிறார்களே, அதன் உண்மை இதைவிடக் கொடூரமான முறையில் வெளிப்பட முடியாது.

சாந்தி முகூர்த்தம் என்ற பேச்சை மீண்டும் எடுக்கவே அவர்கள் மனம் கூசியது.

நாட்கள் மெதுவாக ஓடிக்கொண்டிருந்தன. துக்கம் ஆற்றும் அருமருந்து காலம்தானே? கொஞ்சம் கொஞ்சமாக மூவரும் தங்கள் விசனத்தை மறந்து, பழையபடி கேலியாகப் பேசியும், சிரித்தும் சந்தோஷமாக இருக்கவும் ஆரம்பித்தனர்.

ஒரு நாள் இரவு எல்லோரும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள்—ராமசுவாமி உள்பட.

அப்போது ராமசுவாமி எல்லோரும் ஆச்சரியத்தால் திகைக்கும்படியான ஒரு செய்தியைச் சொன்னார்.

"இந்த மாதக் கடைசியில் நான் சில நண்பர்களுடன் யாத்திரை போகப் போகிறேன். திரும்பிவரக் குறைந்தது நான்கு மாசமாவது ஆகும்."

"நான்கு மாசமா?" என்று ஆச்சரியத்துடன் லீலா கேட்டாள்.

"ஆமாம். இன்னும் ஜாஸ்தியானாலும் ஆகலாமேயொழிய, அதற்கு முன்னால் திரும்ப மாட்டேன்."

"அப்படி எங்கெல்லாம் போகிறீர்கள்?" என்று ராஜு கேட்டான்.

"எல்லா இடங்களுக்கும்! நாசிக், பூரி, பிரயாகை, காசி, ரிஷீகேசம், பத்ரிநாத், கேதாரிநாத்—எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்துக்கொண்டு வரப் போகிறோம்."

"லீலாவையும் அழைத்துக்கொண்டு போகிறீர்களோ இல்லையோ?"

ராமசுவாமி கடகடவென்று வாய் விட்டுச் சிரித்தார். அபூர்வமானது அவர் சிரிப்பு!

"நாங்கள் எல்லோரும்—ஆண்கள்மாத்திரம்தான்—தனியாகப் போகிறோம். யாரும் பெண்டுகளை அழைத்துவரவில்லை. மேலும், இது பக்தி யாத்திரை அல்ல. உல்லாசப் பிரயாணம்தான். ஆபீஸில் ஆறு மாசம் லீவ் போட்டுவிட்டேன்" என்று சொல்லும்போது, ராமசுவாமியின் முகத்தில் மகிழ்ச்சி ததும்பிக் கொண்டிருந்தது.

"பின்னே; நீங்கள் சொன்ன பேர்கள் எல்லாம் ஓரே புண்ணிய ஸ்தலங்களாக இருந்தனவே?" என்று லீலா சந்தேகமாகக் கேட்டாள்.

"அதுவா? சும்மாச் சொன்னேன். இன்னும் பம்பாய், கல்கத்தா, டில்லி, முடியுமானால் காஷ்மீர்—அங்கெல்லாம் போய்விட்டு வரலாமென்றுகூட உத்தேசித்திருக்கிறோம்."

"எனக்கும் அந்த இடங்களையெல்லாம் பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. . . ." என்றாள் லீலா.

"ஆசைப்பட்டால் நடந்து விடுமா? முதலில் பணம் வேணுமே? யாரிடம் இருக்கிறது? அப்படிப் பணம் கிடைத்தாலும் இங்கே உன் தங்கையையும், இவரையும் எப்படித் தனியாக விட்டுவிட்டு வர முடியும்?" என்றார்.

"அதென்ன பெரிய இடைஞ்சலா என்ன? நாம் புறப்பட்டுப் போவதற்கு முன்னால் ஒரு நல்ல முகூர்த்தம் பார்த்து, அவர்கள் சாந்தியை முடித்து விடுகிறது. அப்புறம் என்ன கவலை? பத்மா ஒரு நாலு மாசம் அவனுக்குச் சமைத்துப் போட மாட்டாளா என்ன?"

"ரொம்ப நன்றாயிருக்கிறதே நீ சொல்வது? அவர் தாயார் இறந்து இன்னும் ஆறு மாசம்கூடச் சரியாக ஆகவில்லை. அதற்குள் சாந்தி முகூர்த்தம் எப்படி வைத்துக்கொள்வது?" என்று கேட்டார் ராமசுவாமி.

அவர் அப்படிக் கேட்டதும்தான் லீலாவுக்குத் தன் தவறு புரிந்தது. ராஜு, பத்மா இருவரின் முகத்தையும் பார்த்தாள். அதில் நிரம்பியிருந்த வேதனையைக் கண்டு அவள் மனம் சுருங்கியது.

"அது எப்படியிருந்தாலும் இங்கே பணம் எங்கே இருக்கிறது? என் ஒருவன் செலவுக்கே என்னிடம் பணம் இல்லை. கடன்தான் வாங்க உத்தேசம்" என்றார் ராமசுவாமி.

அதற்குமேல் லீலா அவரோடு பேசவில்லை. பேசிப் பிரயோசனமில்லை என்று தெரியும். மேலும், அவளுக்கு யாத்திரையில் அவ்வளவாக ஆசை இருக்கவில்லை. தன் கணவர் குறிப்பிட்ட இடங்களையெல்லாம் பார்க்க வேண்டுமென்ற ஆசை முதலில் தோன்றியதென்னவோ வாஸ்தவம்தான். ஆனால், பத்மாவையும், ராஜுவையும் விட்டுவிட்டுப் போவதென்

தொடர் கதை

பது அவளால் இயலாத காரியம் என்பதை உணர்ந்தாள். அதுவும் பல இடங்களைப் பார்க்க வேண்டுமென்ற அவள் உற்சாகம், தன் புருஷருடன் சேர்ந்து போக வேண்டுமென்பதை நினைத்த போது குன்றிவிட்டது.

சாப்பாடு முடிந்து, ராமசுவாமி எழுந்துவிட்டார். சிறிது நேரத்திற்கெல்லாம் சட்டையும், அங்கவஸ்திரமும் போட்டுக்கொண்டு, வழக்கப்படி பஜனை மடத்திற்குக் கிளம்பிவிட்டார்.

அவர் சென்ற பிறகு மற்ற மூவரும் வெகு நேரம் அதைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தனர். லீலாவுக்கு ஒரு வகையில் சந்தோஷமாகவே இருந்தது.

“ஒரு நாலு மாசமாவது பிக்கல், பிடுங்கல், கோபம், சண்டை என்று இல்லாமல், நிம்மதியாக நம் இஷ்டம்போல் இருக்கலாம்” என்றாள்.

“உலகத்தில் எல்லோரும் இதுமாதிரி சந்தர்ப்பங்களில் கணவனை விட்டுப் பிரிந்திருக்க வேண்டுமே என்று வருத்தப்படுவார்கள். நீ என்னடாவென்றால், அவர் போனால் போதுமென்று சந்தோஷப்படுகிறாய்” என்று கேலியாகக் கூறிய ராஜு, லீலாவின் முகத்தைப் பார்த்ததும், தன் தவறை உணர்ந்து, உதட்டைக் கடித்துக்கொண்டான்.

“உலகத்தில் உள்ள எல்லோரையும் போல நான் வாழ்க்கைப்படவில்லையே. என் தலைவிதி என்னை இப்படியல்லவா பிணைத்துவிட்டது?” என்று அவள் சொன்னாள். அப்போது அவள் இதயத்தின் வேதனை முகத்தில் கோடிட்டது.

ராஜுவின் உள்ளம் தன் தவறுக்காகப் பெரிதும் வருந்தியது. குத்திக்காட்டுவது போல் பேசிவிட்டதற்காகத் தன்னையே நொந்துகொண்டான்.

“ஐ ஆம் சாரி லீலா. வாய் தவறி, நான் ஏதோ சொல்லிவிட்டேன். தப்பாக நினைத்துக்கொள்ளாதே” என்றான்.

“இதில் தப்பென்ன ராஜு? நீ உண்மையைத்தானே சொன்னாய்?”

“இருந்தாலும், அதை நான் சொல்லியிருக்கக்கூடாது லீலா. என்னை மன்னித்துவிடு” என்று வேண்டிக்கொண்டான்.

ராமசுவாமி யாத்திரை கிளம்பிப் போய்விட்டார். வீட்டில் பத்மா, லீலா, ராஜு மூவர் மாத்திரம்தான் இருந்தனர். ராமசுவாமியினுடைய கோபதாபமும், கூச்சலும் இல்லாமலிருந்தபோதிலும், வீட்டில் உற்சாகமோ, சந்தோஷமோ நிலவியிருக்கவில்லை. அதன் முக்கிய காரணம் பத்மாவின் உடல்நிலைதான்.

நாளுக்கு நாள் பத்மா இளைத்துக்கொண்டே வந்தாள். கன்னங்கள் ஒட்டிப் போய், முகத்தில் பழைய பொலிவு மறைந்துவிட்டிருந்தது. பளபளவென்று மின்னிக்கொண்டிருந்த அவள் தோல், லேசாகக் கருத்தும், சுருங்கியும் போயிற்று. உருண்டு திரண்டு தந்தத்தில் கடைந்தெடுத்ததுபோலிருந்த அவளது கைகால்கள், இளைத்துப்போய் அவைகளில் ஓடிய பச்சை நரம்புகள் நன்றாகத் தெரியும்படிச் சதைப்பற்று அற்றுப் போயின. அங்கங்கே எலும்புகள் குத்திட்டு நின்றன.

திடீரென்று அவள் உடல்நிலை இவ்வளவு மோசமாகிவிட்டதைக் கண்டு ராஜு, லீலா இருவரும் கலவரமடைந்தனர்.

டாக்டரிடம் காட்டியதில், “ஒன்றும் இல்லை. ஜெனரல் டெபிலிடி. டானிக் எழுதிக் கொடுக்கிறேன். வாங்கிக்கொடுங்கள். சரியாகப் போகும்” என்று சொன்னார்.

டாக்டரின் அந்தத் தேறுதல்வார்த்தைகள் ஓரளவுக்கு அவர்களுக்கு மனச் சமாதானத்தை அளித்த போதிலும், பத்மாவைப் பார்க்கும்போதெல்லாம் அவர்களது உள்ளத்தை யாரோ கசக்கிப் பிழிவது போலிருக்கும்.

“எப்படியிருந்த மேனி எப்படியாகிவிட்டது! நினைக்க நினைக்க ஆறவே இல்லை” என்று ராஜு அடிக்கடி சோகம் ததும்பச் சொல்லுவான்.

அப்போது லீலாவுக்கு துக்கம் பொங்கி வரும். பத்மாவின் உடம்பு கெட்டுப் போய்விட்ட துக்கத்தைக் காட்டிலும் அதை நினைந்து உருகும் ராஜுவின் வேதனையைத்தான் அவளால் தாள முடியவில்லை. அவள் மனம் ரத்தக் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தது அச்சமயங்களிலே.

“என்ன காரணமென்றே தெரியவில்லையே. திடீரென்று என் உடல் இப்படி இளைத்துப் போக வேண்டும்? ஒருக்கால், என் தாயார் இறந்து முகூர்த்தம் நின்றுபோனதனால் ஏற்பட்ட அதிர்ச்சி காரணமாக இருக்குமோ?” என்று ராஜு கேட்பான்.

லீலா, “அப்படியெல்லாம் ஒன்றும் இருக்காது. நானும்கூட அவள் வயசில் அப்படித்தான் திடீரென்று எலும்பும் தோலுமாக இளைத்துப் போய்விட்டேன். இரண்டு மூன்று வருஷம் அப்படியேதான் இருந்தது. பிறகுதான் உடம்பு தேற ஆரம்பித்தது. அந்த மாதிரித்தான் அவளுக்கும் ஆகியிருக்கிறதோ என்னவோ?” என்று பதில் சொல்வாள்.

கூடுமானவரையில் பத்மா இல்லாத சமயங்களிலும் அவள் காதில் படாத வகையிலும்தான் இருவரும் பேசிக்கொள்வார்கள். ஆனாலும் சில சமயங்களில் அவர்களையறியாது பேச்சு வந்துவிடும். அப்போது பத்மாவின் முகம் சுண்டிப்போகும். பிறகுதான் இருவரும் விழித்துக்கொள்வார்கள். வேறு திசையில் பேச்சைத் திருப்பி, அவள் மனத்தை உற்சாகப்படுத்த முயல்வார்கள்.

ராமசுவாமி புறப்பட்டுச் சென்று கிட்டத்தட்ட இரண்டு மாசங்கள் சென்றன.

ராஜுவுக்குக் கொஞ்ச நாட்களாகவே ஒரு புதுக் கவலை ஏற்பட்டிருந்தது. லீலாவின் நடத்தையிலும், பேச்சிலும் ஒரு திடீர் மாறுதலைக் கவனித்தான் அவன். என்ன காரணமென்று தெரியவில்லை. அவளாக அவனுடன் பேசவே இல்லை. எப்போதும் ஏதோ கவலையால் வாடுபவள்போல் இருந்தது அவள் முகம். அவன் பேசினால்கூட ஓரிரண்டு வார்த்தைகளில் பதில் சொல்லிவிட்டு, பேசப் பிரியப்படாதவள்போல் மெதுவாக வேறு காரியத்தைக் கவனிக்க எழுந்து சென்று விடுவாள்.

என்ன கவலை அவளை வாட்டுகிறது என்று அவனுக்குத் தெரியவில்லை. பத்மாவைக் கேட்டுப் பார்த்தான். அவளும் ஒன்றும் சரியாகச் சொல்லவில்லை.

ராஜுவுக்குப் பல சந்தேகங்கள் தோன்றலாயின. அவன் மனம் விபரீதமாகவெல்லாம் கற்பனை செய்யலாயிற்று. பத்மாவும், லீலாவும் ஏதாவது சண்டை போட்டுக்கொண்டுவிட்டார்களா? அவர்களுக்குள் மனஸ்தாபம் எழக் காரணம்? ராஜுவே காரணமாக இருக்குமோ? ஒரு காலத்தில் தான் பயந்தது நடந்துவிட்டதோ? தானும் லீலாவும் நெருங்கிப் பழகுவதிலே, பத்மா களங்கம் கற்பித்துக்கொண்டுவிட்டாளோ?

சே, சே! அப்படியெல்லாம் இருக்காது. பத்மா அப்படிப்பட்டவள் அல்லவே? இவ்வளவு நாளும் இல்லாமல் இப்போது திடீரென்று அந்தமாதிரி சந்தேகம் தோன்றுவானேன்? அதெல்லாம் இருக்காது. பின் லீலாவின் இந்த விசித்திர நடத்தைக்குக் காரணம்?

ஒரு நாள் அவன் லீலாவையே கேட்டுவிட்டான் தைரியமாக.

“லீலா, இப்போ கொஞ்ச நாட்களாகவே நீ என்னவோபோலிருக்கிறாயே, ஏன்?”

கொடியறியா மேதாவி!

தற்சமயம் பாகிஸ்தான் பிரஜைகளில் ஒருவராகிய ஸர் முகம்மது சாபருல்லாகான், பிரிட்டிஷ் இந்திய அரசாங்க வர்த்தக இலாகா மெம்பராக இருந்தபோது, கம்யூனிஸ்ட் கட்சி விஷயமாக ஒரு நாள் சட்ட சபையில் பேசினார். இங்கிலாந்தில் கம்யூனிஸ்ட் கட்சிக் கூட்டங்கள், ஹைட்பார்க்கு சமீபத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமையும் மாலை நேரத்தில் நடப்பதைக் குறிப்பிட்டுவிட்டு, "இவர்களின் உடைமைகளெல்லாம், ஒரு கறுப்புக் கொடியும், நின்று பேசுவதற்கான ஸ்டூல் ஒன்றும்தான்" எனக் கூறினார்.

மெம்பர்களில் ஒருவர் எழுந்து, அக்கொடியின் நிறம் சிவப்பு, கறுப்பல்ல என்பதை அவருக்கு நினைவுபடுத்தினார்.

ஸாபருல்லா உடனே, தன்னைத் திருத்திய மெம்பருக்கு வந்தனம் செலுத்திவிட்டு, "கட்சிகள், சங்கங்கள் இவைகளின் கொடிச் சின்னங்களைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது" என்று பெருமையுடன் அறிவித்தார்.

காலஞ்சென்ற ஸ்ரீ சத்தியமூர்த்தி மெதுவாக எழுந்து, "பரவாயில்லை, உங்களுக்குத் தெரிய வேண்டியதெல்லாம் யூனியன் ஜாக் ஒன்றுதான். அது மட்டும் ஞாபகமிருந்தால் போதுமானது. வேறென்ன தெரியவேண்டும்?" என்று பதில் கொடுத்தார்.

—கே.

"ஒன்றும் இல்லையே. எப்போதும் போல்தானே இருக்கிறேன்?" என்று லீலா மறுத்தாள்.

"இல்லை. நீ என்னிடம் மறைக்கிறாய்? உனக்கு என்மீது ஏதோ கோபம் போலிருக்கிறது."

"உன்மீது நான் ஏன் கோபித்துக் கொள்ள வேண்டும் ராஜு?"

"பின்னே? யார்மீது கோபம்? பத்மாவின் மீதா? சொல் லீலா. என்ன நடந்தது?"

"பைத்தியக்காரா! உன்மீதும் பத்மாவின் மீதும் நான் கோபித்துக்கொள்வேனா?"

"பின் ஏன் நீ இப்படி இருக்கிறாய்? சரியாகவே பேசுவதில்லை என்னோடு. முகம் என்னவோமாதிரி இருக்கிறது" என்று கெஞ்சும் குரலில் கேட்டான் ராஜு.

லீலா பதில் ஏதும் சொல்லாமல் மௌனமாகவே தலையைக் குனிந்து கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவளைப் பார்க்க ராஜுவுக்கு வருத்தமாக இருந்தது. அவள் மனத்தில் தீராத ஏக்கம் ஏதோ குடிகொண்டிருக்கிறது என்பது நிச்சயமாகிவிட்டது.

"பேச மாட்டாயா லீலா? நீ ஒன்றும் சொல்லாமலிருந்தால், என் மனம் என்னவெல்லாமோ பயங்கரமாக நினைத்துக் கொள்கிறது."

"பயங்கரமானதுதான் நடந்துவிட்டது ராஜு!" என்று சொல்லி, லீலா விக்கி விக்கி அழ ஆரம்பித்துவிட்டாள்.

ராஜுவுக்கு வானமே இடிந்து, அவன் தலையில் விழுந்துவிட்டது போன்றிருந்தது. இனமறியாத அச்சம் அவனைச் சூழ்ந்துகொண்டது. ஆனாலும் காரணம் என்னவென்று இன்னமும் அவனுக்குப் புரியவில்லை. லீலா அழுவதைக் கண்டு அவன் கண்களிலும் கண்ணீர் பெருகியது.

"அழாதே லீலா, அழாதே. என்ன நடந்துவிட்டது சொல்."

"வேண்டாம் ராஜு. என்னை ஒன்றும் கேட்காதே. போ. போய்விடு."

"லீலா! அப்படி என்னிடம் சொல்லக் கூடாத உன் வேதனை என்ன லீலா? உன் துயரத்தை என்னால் சகித்துக்கொள்ள முடியவில்லையே லீலா" என்று தேம்பினான் ராஜு.

"உன்னிடம் எப்படிச் சொல்லுவேன், ராஜு? யாரிடம்தான் எப்படிச் சொல்லுவேன் இந்த அவமானத்தை? அவர் வந்ததும் இதைத் தெரிந்துகொண்டதும் என்ன நினைப்பார்? ஐயோ, இவ்வளவு நாள் இல்லாமல் எனக்கு இப்போதுதான் இது வரவேண்டுமா? அபவாதத்தைத் துடைக்க ஒரு வழி தேடப் போக, பெரிய அபவாதமல்லவா என் தலையில் விடியப் போகிறது? ராஜு! ஒன்றும் அறியாத அசடாக நீ இருக்கிறாயே" என்று கூறி, மேலே பேச முடியாமல் உடல் குலுங்க அழுதாள் லீலா.

ராஜுவுக்கு விஷயம் புரிந்துவிட்டது. லீலா தாய் ஆகப் போகிறாள்!

ராஜுவின் மனத்தில் ஏற்பட்ட உணர்ச்சி பயமா, சந்தோஷமா, கலவரமா என்று அவனுக்குப் புரியவில்லை. லீலா, ஏன் இதற்காக இப்படிப் பிரமாதப்படுத்த வேண்டும்? சந்தோஷப் படக்கூடிய சமாச்சாரம் அல்லவா இது?

"லீலா, இதற்கா இவ்வளவு அமர்க்களப்படுத்திவிட்டாய்? என்னவோ ஏதோ என்று நான் பயந்துவிட்டேன்."

"ராஜு!"—கண்களைப் பயங்கரமாக உருட்டினாள் லீலா.

ராஜு ஒரு கணம் பயந்து போய்விட்டான்.

"நீ இன்னும் சுத்த விளையாட்டுப் பிள்ளையா? இதன் விபரீதம் எவ்வளவு தூரத்திற்குப் போகும் என்று உனக்குத் தெரியவில்லையா? அவரும் ஊரில் இல்லை. நீயும் இங்கே இருக்கிறாய். ஏற்கெனவே ஊரில் நம்மைப்பற்றி நல்ல அபிப்பிராயம்! நாளைக்கு இதுவும் வெளியானால், அதைவிட வேறு அவமானம் என்ன வேண்டும்?"

"லீலா, கடவுள் அறிவார் நாம் நிரபராதிகள் என்பதை."

யோசனம்? ஊர் அறிந்துகொள்ளாதே?"

"யார் என்ன சொல்லிவிடுவார்கள் பார்க்கிறேன். நாக்கைத் துண்டித்துவிட மாட்டேனா?"

"போதும் போதும்; நீ பேசாமலிரு. உன் கோபத்திற்கெல்லாம் ஊரார் பயப்பட்டுவிட மாட்டார்கள். அவர்கள் சந்தேகம் இன்னும் உறுதிப்படும். அவ்வளவுதான்."

ராஜுவுக்கு அப்பொழுதுதான் மூளையில் ஏறியது, விஷயம் எவ்வளவு ஆபத்தானதென்பது. பனை மரத்தின் கீழ் நின்று பால் குடித்த சமாச்சாரம்தான்!

"லீலா, நீ ஒன்றுக்கும் பயப்படாதே. யார் வேண்டுமானாலும் எது வேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளட்டும். தர்மத்திற்கும் தெய்வத்திற்கும் நாம் பயப்பட வேண்டுமேயொழிய, ஊர் நாய்களுக்கெல்லாம் நாம் ஏன் பயப்பட வேண்டும்?" என்று அவளுக்கு ராஜு சமாதானம் சொன்னான்.

ஆனால், லீலாவின் மனம் அதனால் சமாதானம் அடைந்ததாகத் தெரியவில்லை.

"பத்மாவுக்குத் தெரியுமா, லீலா?"

"தெரியும்."

"அவள் என்ன சொல்லுகிறாள்?"

"அவள் என்ன சொல்லுவாள்? நீயே குழந்தையாக இருக்கிறாய். அவள் இன்னும் சிறியவள். உன்னைப்போல் அவளும் முதலில் சமாச்சாரம் தெரிந்ததும் சந்தோஷப்பட்டாள்."

"பார்த்தாயா? யாரும் சந்தோஷப் படக்கூடிய சமாச்சாரம் இது. நீ அநாவசியமாக உன் மனசை வேதனைப் படுத்திக் கொள்கிறாய்."

"உனக்குத் தெரியாது ராஜு. உலக அனுபவம் உனக்குப் போதாது. உலகத்தில் எல்லோரும் உன்னைப் போலவும், பத்மாவைப் போலவும் இருக்க மாட்டார்



சிறுத்தைகளும் வாழவில்லையா?"

"அது எப்படியிருந்தாலும் அதற்காக நீ இந்தச் சமயத்தில் இப்படி மனத்தைப் போட்டு உலுப்பிக்கொள்ளக் கூடாது லீலா. வருவது வரட்டும். எது வந்தாலும் நாம் மூவரும் மாத்திரம் பரஸ்பரம் அபிமானமும், நம்பிக்கையும் குறையாமல் நடந்துகொண்டால் போதும்" என்றான் ராஜு.

இது நடந்து ஒரு ஐந்தாறு நாட்கள் கழிந்தன.

தூக்கத்திலே ஏதோ பயங்கரக் கனவு கண்டு ராஜு திடுக்கிட்டு எழுந்தான். அவன் கைகால்களெல்லாம் பயத்தால் நடுங்கிக்கொண்டிருந்தன. கண்டதெல்லாம் கனவு என்ற அறிவு ஏற்பட்ட பிறகுதான் அவனுக்குத் தைரியம் உண்டாயிற்று.

எழுந்து சென்று மேஜைமீது இருந்த டைம்பீஸில் மணி பார்த்தான். ஒன்றரை! கெட்ட கனவு கண்டால் கைகால் முகம் அலம்பிக்கொண்டு, மீண்டும் தூங்க வேண்டும் என்று சிறு வயதில் அவன் தாயார் அவனுக்கு உபதேசித்திருந்தாள். அதை அவன் எப்பொழுதும் கடைப் பிடிக்கத் தவறியதேயில்லை. அதேபோல அன்றும் அப்படிச் செய்வதற்காக அறையைவிட்டு வெளியே வந்தான்.

வெளியே வந்தவன் படுக்கையில் லீலா இல்லாதிருப்பதையும், சமையலறையில் விளக்கு எரிவதையும் கண்டான்.

'இந்நேரத்தில் சமையலறையில் என்ன வேலை இருக்கும் இவளுக்கு?' என்ற ஆச்சரியம் தோன்றியது. ஒரே கணம்தான் அது. அடுத்த விநாடி அவன் கண்ட கனவு ஞாபகத்திற்கு வந்தது. பகீரென்று பயம் பற்றிக்கொண்டது அவனை. பரபரப்புடன் சமையலறையை நோக்கி ஓடினான்.

சமையலறைக் கதவு உள்ளே தாளிடப்பட்டிருந்தது.

சந்து வழியாகப் பார்த்தான் ராஜு.

அலறிவிட்டான்.

புட்டியிலிருந்து தன் உடைகளின் மீது மண்ணெண்ணெய் ஊற்றிக் கொண்டிருந்தாள் லீலா!

அவன் போட்ட சப்தத்தைக் கேட்டு பத்மா எழுந்து, அலறிப் புடைத்துக் கொண்டு ஓடி வந்தாள்.

கதவை இரண்டு கைகளாலும் இடித்தான் ராஜு.

லீலா கதவைத் திறக்கவில்லை. பரபர வென்று அங்கும் இங்கும் ஓடினாள். தீப் பெட்டி தேடினாளோ என்னவோ?

பத்மா 'ஹோ'வென்று அழ ஆரம்பித்துவிட்டாள்.

ராஜு தன் பலத்தையெல்லாம் கால்களிலே சேர்த்து, நான்கு உதைகள் விட்டான். கதவு உடைந்தது. உள்ளே பாய்ந்தோடி, லீலாவின் இரு கைகளையும் கெட்டியாகப் பற்றிக்கொண்டான்.

"லீலா, பைத்தியமா என்ன உனக்கு?"

"என்னை விடு ராஜு" என்று திமிறினாள் லீலா.

"அக்கா" என்று கதறிக்கொண்டு பத்மா அவள் காலடிகளில் வந்து வீழ்ந்து புரண்டாள்.

ராஜுவின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து, கன்னங்களில் பளபளத்துக் கொண்டிருந்தது.

லீலாவுக்கு அதற்குமேல் பொறுக்க முடியவில்லை. சுய நினைவு அப்போது தான் அவளுக்கு வந்ததுபோலும்.

"ராஜு! பத்மா!" என்று இருவரையும் இரு கைகளாலும் அணைத்துக்கொண்டு, இருதயம் வெடித்துவிடும்போல் தேம்பித் தேம்பி அழுதாள்.

பத்மாவுக்குக் கிலி பிடித்தாற்போல் ஆகிவிட்டது. அக்காவின் முகத்தைப் பார்ப்பதும் மீண்டும் மீண்டும் அழுவதுமாக இருந்தாள்.

"முதலில் அந்தப் புடவையை அவிழ்த்தெறிந்துவிட்டு, வேறு புடவை கட்டிக் கொள் லீலா" என்று அழுகைக்கிடையே ராஜு சொன்னான்.

"ராஜு! பத்மா! என்னை மன்னித்து விடுங்கள். என் கண்களே, என்னை மன்னித்துவிடுங்கள். என் புத்தி கெட்டுப் போயிருந்தது. இப்போதுதான் என் கண்கள் திறந்தன" என்று புலம்பினாள்.

"லீலா, இப்படி நீ செய்யலாமா? எங்கள் வயிற்றிலே நெருப்பைக் கொட்டி விட்டாயே? நான் வராமலிருந்தால், என்ன கதியாகியிருக்கும்? நானும், பத்மாவும் அநாதைகளாகிவிட்டிருப் போமே லீலா" என்று முகத்தை மூடிக் கொண்டு குலுங்கக் குலுங்க அழுதான் ராஜு.

"அக்கா! அக்கா!" என்றுதான் பத்மாவின் வாயிலிருந்து வார்த்தைகள் வந்தனவே தவிர, அவளால் வேறொன்றும் பேச இயலவில்லை.

"லீலா, இனிமேல் இந்த மாதிரி பைத்தியக்காரத்தனமான காரியம் செய்யாதே. செய்யாதே. என்மேல் ஆணை. பத்மாவின்மேல் ஆணை!" என்று ராஜு ஆவேசம் வந்தவன்போல் சொன்னான்.

லீலா அவன் வாயைப் பொத்தினாள். "ஆணையிடாதே ராஜு. இனிமேல் சத்தியமாக இப்படிப்பட்ட காரியத்தைச் செய்ய மாட்டேன். என் புத்தியை ஏதோ பிசாசுதான் சூழ்ந்து கொண்டிருந்திருக்க வேண்டும். இப்போது எனக்கு அறிவு வந்துவிட்டது. இனிக் கனவிலும் இதுமாதிரி காரியத்தை நினைக்க மாட்டேன்" என்றாள்.

"ஊரில் எவ்வளவு பேர் என்னென்ன அக்கிரமங்கள் எல்லாம் செய்துவிட்டு பத்தினி வேஷம் போட்டுக்கொண்டு திரிகிறார்கள். நீ ஒன்றும் இல்லாததற்கு இப்படித் துணிந்துவிட்டாயே" என்று ராஜு சொன்னான்.

லீலா மெதுவாக அவர்களிடமிருந்து விடுவித்துக்கொண்டு வேறு புடவை உடுத்துக்கொள்வதற்காகச் சென்றாள்.

ராஜு தெருக்கதவைத் திறந்து கொண்டு, வாசலில் போய் நின்று பார்த்தான். வீட்டில் ஏற்பட்ட சப்தத்தில் யாராவது அக்கம்பக்கத்தார் விழித்துக் கொண்டு, சமாச்சாரம் என்னவென்று கிரகித்துக்கொண்டிருந்தால் அது வேறு தொந்தரவு வருமே என்று அவனுக்குப் பயம். நல்ல வேளையாக யாரும் காணப் படவில்லை. பட்டணமல்லவா? அக்கம் பக்கத்து வீட்டிலிருந்து 'திருடன்' 'திருடன்' என்று கூச்சல் கேட்டாலும் கூட 'நமக்கேன் வம்பு? நாம் போய் மாட்டிக்கொள்ள வேண்டாம்' என்று போர்வையை இன்னும்நன்றாக இழுத்துப் போர்த்திக்கொண்டு தூங்கும் ஜனங்கள் நிறைந்த ஊர். இது மாதிரி சந்தர்ப்பங்களில் அதுவும் நன்மைக்கே என்று எண்ணி, ராஜு ஆறுதலடைந்தான்.

அன்று தூக்கம் அவ்வளவுதான். மூன்று பேருக்கும் தூக்கம் வரவில்லை. லீலாவுக்கும், ராஜுவுக்கும் பத்மாவைச் சமாதானப்படுத்துவதே பெரியபாடாகப் போய்விட்டது.

நாலு நாலரை மணி சுமாருக்கு பத்மாவுக்கு தூக்கம் வந்தது. பிறகுதான் ராஜுவும் அங்கிருந்து எழுந்து படுக்கச் சென்றான்.

(தொடரும்)



தஞ்சை கலைஞர், எழுத்தாளர் சங்க முதல் கூட்டம் மார்ச் 18-ந் தேதி. சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் ஸ்ரீ 'தேவன்' தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீ 'தேவனு'டன், சங்க நிர்வாகிகளையும் அங்கத்தினர்களையும் காணலாம்.



எப்படியும் லீவு கிடைத்துவிடும் என்றுதான் எதிர்பார்த்தார் தாமோதரம்.

ஊரில் அவர் தங்கை பிள்ளைக்குக் கல்யாணம். அன்று இரவு கடைசி வண்டிக்குப் புறப்பட்டால்கூடப் போதும்; காலை கல்யாணத்திற்குப் போய்ச் சேர்ந்துவிடலாம். வீட்டில் புறப்படுவதற்குத் தயாராயிருக்கும்படிச் சொல்லிவிட்டு ஆபீஸுக்குச் சென்றார்.

மறு நாள் பெரிய துரை பரிசோதனைக்கு வருவதாக ஆபீஸில் தந்தி வந்துவிடவே, தாமோதரத்துக்கு லீவு இல்லையென்றாகிவிட்டது. முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டு மாலை வீடு திரும்பினார். அவரைப் பார்த்ததுமே விஷயம் விளங்கிவிட்டது, மனைவி தர்மாம்பாளுக்கு. "ஏன் கல்யாணத்துக்குப் போன மாதிரிதானே! பெட்டியில் எடுத்து வைத்த துணிமணிகளையெல்லாம் அலமாரியில் எடுத்து வைச்சுடட்டுமா?" என்றாள் நமிட்டுச் சிரிப்புடன்.

"அது சரி. கல்யாணத்துக்குப் போகாமலிருக்க முடியுமா? நீயாகிலும் போய்த்தானாக வேண்டும்" என்றார் தாமோதரம்.

"நானா! என்னையா போகச் சொல்றீங்க! ஊஹூம், நீங்க இல்லாமெ நான் எப்படிப் போறது?" என்று தலைகுனிந்தாள். அவள் குரலில் அச்சம், பயம், சங்கோஜம் எல்லாம் சேர்ந்து குமிழிட்டது. அவள் அதுவரை தனிப் பிரயாணம் செய்தது கிடையாதல்லவா!

"இதோ பார் தர்மு, நீ ஒண்ணும் அச்சப்படாதே. நானே நேரில் வந்து

யிலே ஏற்றிவிடுகிறேன். அதுதான் நேர் வண்டி. வழியில் எங்கும் இறங்கவே வேண்டாம். நேரே ஊருக்குப் போய் இறங்கிவிடு. அதற்குள் நன்றாய் விடிந்துவிடும். இதோ கையோடு ஒரு சவரன் வாங்கி வந்திருக்கிறேன். இதையுங் கொண்டுபோய் மாப்பிள்ளைக்கு ஓதியிட்டுவிட்டு, காப்பி பலகாரத்தோடு அடுத்த ரயிலிலேயே திரும்பிவிடு" என்றார்.

அவள் குனிந்த தலை குனிந்தபடியே இருந்தது. பதில் ஒன்றுமே பேசவில்லை.

"என்ன செய்றது? நாளைக்கு நிறையப் பேச்சுக்கொள்ளும். நம்ம கடமையைச் செய்தாகணும் பார்" என்று தாமோதரம் தான் பேசினார்.

"நான் எப்படி தனியா போறது?" என்று மீண்டும் சொன்னாள் தர்மாம்பாள். அவள் மனதின் அச்சம், குரலில் நிழலாடியது. அச்சமயம் அவள் கண்களில் நீர் சுரக்காவிட்டாலும், அவள் மனம் விசிக்கத் தொடங்கிவிட்டது.

"அதெல்லாம் ஒண்ணும் பயம் இல்லே. நான்தான் சொல்றேனே! உம் உம். புறப்படு" எனத் தீர்மானமாய்ச் சொல்லிவிட்டார் அவர். அதன்பிறகு என்ன செய்வது!

பக்கத்து வீட்டம்மாளோடு கலந்து பேசினாள் தர்மாம்பாள். "என்ன செய்றது அம்மா, போய்த்தானாகணும். ஜாக்கிரதையாப் போயிட்டு வாங்கோ. பெண்கள் பெட்டியாயிருந்தாலும் பலே திருடிகள் எல்லாம் ஏர்றது உண்டு. அன்றைக்கு, எங்களவர்கூட பேப்பரிலே படிச்சுச் சொல்லிக்கொண்டிருந்தார். நீங்கள் யாரிடமும் பேசிக்கவேண்டாம். இரவு வேளை; அசந்துவிடப் போறது. கண் கொட்டாமல் போய்ச் சேருங்க" என்று சொல்லியனுப்பினாள் அந்த அம்மாள்.

மாற்றுக் கட்டுக்கு ஒரு புடவையை எடுத்துப் போட்டுக்கொண்டு, தனிப் பையுடன்தான் புறப்பட்டாள் தர்மாம்பாள். தாமோதரன் கூடவந்து ரயிலேற்றினார். பெண்களுக்கான பெட்டியில் ஏற்றிவிட்டு, "தூங்கிப்போய்விடாதே. உடனே திரும்பிவிடு. ஜாக்கிரதை" என்று வழியனுப்பினார். ரயில் அன்று சற்று தாமதமாய் வந்ததால், உடனே புறப்பட்டுவிட்டது.

வீடு திரும்பின தாமோதரத்துக்கு மனது சரியில்லை. "பாவம்! ரொம்ப அச்சப்பட்டுக்கொண்டு போகிறாள்! நாம் கூட அவளை இப்படித் தனியா அனுப்பியிருக்கவேண்டாம். பெண் - மாப்பிள்ளையை ஆசீர்வதித்து ஒரு தந்தியனுப்பிவிட்டு, பிறகு ஒரு தரம் அவர்களை இங்கு அழைப்பித்து மரியாதை செய்து அனுப்பியிருக்கலாம். சே சே, அப்போ இந்த யோசனை வராமல் போயிடுத்தே" என்று முணுமுணுத்துக்கொண்டே படுத்தார்; சரியான தூக்கங்கூட இல்லை.

பெண்கள் பெட்டியில் தனிப் பிரயாணம் செய்துகொண்டிருந்த தர்மாம்பாள் மனதிலும் ஆயிரம் எண்ணங்கள் எழுந்தன. 'வாழ்க்கைப்பட்டு இத்தனை வருஷங்களுக்கப்புறம் இவர் இன்று இப்படி நடந்துகொண்டுவிட்டாரே' என்று தன் கணவன்மேல்தான் மனத்தாங்கல்பட்டுக்கொண்டாள். அந்தப் பெட்டியிலிருந்த அத்தனை பெண்களும் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தபொழுது, அவள் கொட்டு கொட்டென்று விழித்துக்கொண்டிருந்தாள்.

வேகமாய்ப் போய்க்கொண்டிருந்த வண்டி, ஏதோ ஒரு ஸ்டேஷனில் வெடுக்கென்று நின்றது. அவசர அவசரமாய் கதவைத் தள்ளிக்கொண்டு ஒருத்தி ஏறினாள். கையில் வைத்துக்கொண்டிருந்த தன் பையால் தர்மாம்பாளின் முட்டியில் ஒரு இடி இடித்துக்கொண்டு உள்ளே வந்தாள். அப்பா! நன்றாய் இடித்துவிட்டாளே! தர்மாம்பாளுக்கு சற்று வலித்ததுகூட. நிமிர்ந்து பார்த்தாள் அவளை.

கன்னங் கறுத்து வாட்டசாட்டமாய் இருந்தாள் அவள். தலை மயிர் வாரி முடிக்கப்படாமல் பம்பையாயிருந்தது. முன் பற்கள் நீட்டிக்கொண்டு, விழிகள் வெளியே பிதுங்கிநின்றன. 'ஐயோ!' என்று கத்தலாம்போலிருந்தது தர்மாம்பாளுக்கு. அவள் அண்டையில் வேறல்லவா அமர்ந்துவிட்டாள்! உடல் நடுங்காவிட்டாலும், உள்ளம் நடுங்கியது தர்மாம்பாளுக்கு.

பக்கத்து வீட்டம்மாள் சொன்னதெல்லாம் நினைவுக்கு வர, மனம் பதறினாள். 'ஏது ஏது, முழுசாய் ஊருக்குப் போய்ச் சேரமாட்டோம் போலிருக்கே' என்று துணுக்குற்றாள்.

இடையில் ஒரு தடவை அந்த முண்டக்கண்ணி, தன் பார்வையைத் தர்மாம்பாள்மீது செலுத்தினாள். ஜில் ஜில் என்று ஏதோ இரத்தம் உறைவதுபோலிருந்தது. அவள் ஏதோ தன் கழுத்திலி

ருந்த நகைகளைக் [illegible] தெரியவே, 'வெடுக்'கென்று இழுத்துப் போர்த்திக்கொண்டாள் தர்மாம்பாள். 'அவர் பேச்சைக் கேட்டுக்கொண்டு, இப்படியும் தனியாய் வருவோமா!' என்று சங்கடப்பட்டுக்கொண்டாள். ரயில் ஒன்றிரண்டு ஸ்டேஷன்களில் நிற்காமல்கூட வேகமாய் ஓடிக்கொண்டிருந்தது. இருந்தும், ஏதோ மெதுவாகப் போவதுபோல இருந்தது தர்முவுக்கு.

வயிறு வெடித்துவிடும்போலிருந்தது. சற்று சிரமபரிகாரம் செய்துகொள்ள எழுந்தாள். மெதுவாய் கால்மாடு தலைமாடாய் படுத்துக்கிடந்த பெண்களைத் தாண்டிக்கொண்டு முகம் கழுவும் அறைக்குள் சென்றாள். 'ஐயையோ! பையைக் கையோடு கொண்டு வராமல் போனேனே! அதனுள்ளே சவரன் இருக்கே! அந்தப் பாவி அதை இந்நேரம் திருடியிருப்பாளோ!' என்று அப்பொழுதுதான் நினைத்துக் கொண்டாள். தன்னையே நொந்துகொண்டு, அவசர அவசரமாய்த் திரும்பினாள். அந்தச் சமயம் அந்த முண்டக்கண்ணி வேறு பக்கம் திரும்பிக்கொண்டிருந்தாள். 'சரிதான்; அதோ பைகூட சற்றுசாய்ந்து கிடக்கிறதே!' மனம் பதைக்க, பையில் கைவிட்டுத் துழாவினாள் தர்மாம்பாள். சவரனைக் காணோம்.' 'ஐயையோ! எப்படி கேட்பது அவளை? அப்படியே கழுத்தைத் திருகிப் போட்டுவிட மாட்டாளா' அசந்து உட்கார்ந்துவிட்டாள் தர்மாம்பாள். அதன் பிறகு அந்த முண்டக்கண்ணி தர்மாம்பாள் பக்கம் திரும்பவேயில்லை.

'உம், இப்படியும் நமக்கு ஒரு சோதனையா! தெரிந்தும் திருட்டுக் கொடுத்தோமே! வெறுங் கையோடு கல்யாணத்துக்குப் போய் அவமானப்படணும் என்று இருக்கும் போலிருக்கிறதே' என்று பெருமூச்சுவிட்டாள். கண்களில் நீர்கூடத் துளித்தது.

அப்பொழுது ஏதோ அரவங் கேட்கவே, திரும்பிப் பார்த்தாள். முண்டக்கண்ணி விடுவிடென்று முகம் கழுவும் அறைக்குச் சென்றுகொண்டிருந்தாள். அங்கிருந்தவர்களை மிதித்துக் கொண்டுதான் சென்றாள்! அவள் கதவைச் சாத்தும் சப்தம் கேட்டது. உடனே திடுக்கென்று ஒரு யோசனை உதித்தது தர்மாம்பாளுக்கு. 'முண்டைக் கண்ணி பையும் பக்கத்தில்தானே கிடந்தது! கையைவிட்டுப் பார்த்துவிட்டால்!' பரக்கப் பரக்க கையைவிட்டுத் துழாவினாள் தர்மாம்பாள். அதோ சவரன் கிடைத்துவிட்டதே! 'வெடுக்'கென்று எடுத்துத் தன் பையில் வைத்துக்கொண்டாள். அதோ அந்த முண்டக்கண்ணியும் வந்துவிட்டாளே! ஐயையோ! எடுத்ததைப் பார்த்துவிட்டிருப்பாளோ! தொலைஞ்சோம் நாம்.' குப்பென்று வியர்த்துவிட்டது தர்மாம்பாளுக்கு. பையை எடுத்து மார்போடணைத்துக்கொண்டு, வேறு பக்கம் திரும்பிக்கொண்டாள். இருந்தும், அவள் இதயம் பக் பக்கென்று அடித்துக்கொண்டது. 'இதோ இன்னும் மூன்று ஸ்டேஷன்கள் தானே இருக்கிறது! சீக்கிரம் போய் தொலையக்கூடாதா இந்த வண்டி!'

சற்று நாழிகைக்குள் அந்த முண்டக் கண்ணி, தன் இரு கரங்களாலும் அவள் கழுத்தை நெரிக்க வருவதுபோல் ஒரு பிரமை தட்டியது. உடல் குலுங்கத் திரும்பிப் பார்த்தாள். அப்பொழுதுதான் தன் பையைத் தலைக்கு வைத்துக் கொண்டு சற்றுச் சாய்ந்திருந்தாள் அந்த முண்டக்கண்ணி.

அதற்குள் பலபலவென்று விடிந்துவிட்டது. தர்மாம்பாள் இறங்க வேண்டிய ஊரில் ரயில் நிற்கவே, பையைக் கெட்டியாய்க் கையில் பிடித்துக்கொண்டு அவசர அவசரமாய் இறங்கினாள். அப்பொழுதுகூட, எங்கே அவள் எழுந்தோடி வந்து தன் பையைப் பிடுங்கிக்கொள்வாளோ என்ற பயம் தர்முவுக்கு. கடைசியில் ஸ்டேஷனைவிட்டு ரயில் நகர்ந்த பிறகுதான் நல்ல மூச்சு வந்தது அவளுக்கு.

இரவு முழுதும் தூக்கம் இல்லையா! மயக்கம் தலையைச் சுற்றியது அவளுக்கு. ஒரு ஒத்தை மாட்டு வண்டியாவது வைத்துக் கொண்டுதான் வீடு போய்ச்சேர வேண்டுமென்று தீர்மானித்தாள். அங்கிருந்த ஒரு வண்டிக்காரனிடம் சென்று "என்னடா கேட்கிறே, கல்யாண வீட்டுக்குப் போக!" என்றாள். "ஏறுங்க ஏறுங்க சும்மாத்தான்" என்றான் அவன்.

"என்னடா அது?" சற்று கோபம் தொனித்தது அவள் குரலில்.

"கல்யாண வீட்டுக்கு வருகிறவங்களை ஒருத்தர் ஒருத்தரா ஸ்டேஷனிலிருந்து கொண்டு வந்து விடும்படி எனக்கு ஐயா உத்தரவுங்க அம்மா. இந்த வண்டி அவரதுதானே" என்றான். "அப்படியா அது!" என்று தர்மாம்பாள் ஏறிக்கொண்டாள். வண்டி 'ஜல்ஜல்'லென்று புறப்பட்டது.

"வாங்கமாமி. மாமா வரலியா?" என்று மாப்பிள்ளை வரவேற்றான். "அடிமைத் தொழிலிலே லீவு கிடைச்சது ஏது! கடைசி வரைக்கும் காத்திருந்துவிட்டு, என்னை அனுப்பி வைச்சாங்க" என்று தூக்க மயக்கத்துடன் சொன்னாள். "ஓ! நீங்கள் தனியா வரக்கூடத் தெரிந்து கொண்டீங்களே!" என்றான் அவன். அவள் தனியா வந்து பட்டது அவளுக்கல்லவா தெரியும்!

திருமணம் வெகு விமரிசையாய் நடந்தது. மாங்கல்ய தாரணம் ஆகி ஓதியிடும் வேளை வந்தது. சவரனையெடுக்க பையில் கை விட்டாள். இன்னும் பையிலிருந்து கையைக்கூட வெளியில் எடுக்கவில்லை. அதற்குள் "மாமாவிடமிருந்து ஒரு தந்தி" என்று கொண்டு வந்தான் மாப்பிள்ளையின் தம்பி. 'சவரன் இங்கேயே அலமாரியில் விட்டுப் போய்விட்டது. தேட வேண்டாம்' என்று இருந்தது அதில். 'ஐயையோ! அப்படியென்றால் அவள் பையிலிருந்து எடுத்த அந்தச் சவரன்! இப்போ யார் திருடி!'" தலை சுழன்றது தர்மாம்பாளுக்கு. கூடவே அந்தக் கல்யாண மண்டபம் சுழன்றது; பெண்ணும் மாப்பிள்ளையும் சுழன்றனர்.

அப்படியே பையில் கைவிட்டபடி ஸ்தம்பித்து உட்கார்ந்துவிட்டாள் தர்மாம்பாள்.



கும்பகோணம் மகாமகம் உத்ஸவக் கண்காட்சியில் லிப்டன் ஸ்டாலிற்கு முதன் மந்திரி ஸ்ரீ காமராஜ் நாடார் விஜயம் செய்தபோது எடுத்த படம்.



அகில இந்திய மாதர் சங்கத்தின் திருவேட்டீஸ்வரன்பேட்டைக் கிளையை ஸ்ரீ ஆர். கே. மனுலால் வீட்டில் 8-ந் தேதி சென்னை முதன் மந்திரி ஸ்ரீ காமராஜ் துவக்கி வைத்த போது எடுத்த படம்.

பிரமுகர் வரிசை:

விநோபா பாவே

நெருப்பு எரிகிறது; எரிந்துகொண்டே இருக்கிறது. தன்மீது பாத்திரத்தை வைத்து, நீர் நிரப்பி, அரிசியைப் போடுகிறார்களா இல்லையா என்று அது கவலைப்படுவதில்லை. நெருப்பு தனது கடமையைச் செய்வதுபோல, பிறரும் தமது கடமைகளைச் செய்யவேண்டும். ஜனங்கள்தான் தங்களுடைய பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ளப் போகின்றனர்; நானல்ல. நான் ஒரு சூழ்நிலையைத்தான் சிருஷ்டிக்கிறேன். இந்தச் சூழ்நிலை வியாபிக்க, வியாபிக்க யாராவது கேட்பார்கள்; யாராவது கொடுப்பார்கள்.

புதுமையென்றும், புரட்சிகரமென்றும் வர்ணிக்கப்படும் 'பூமிதான' இயக்கத்துக்கு இவ்விதம் விளக்கம் கூறிய ஆசார்ய விநோபா பாவே, சகல வழிகளிலும் காந்திஜியின் அடிச்சுவடைப் பின்பற்றுபவர். இடை வேஷ்டிதான் அவரது உடை. ஐந்தடி நான்கு அங்குல உயரமிருப்பினும், நிறை 86 ராத்தல்தான். அதே சாந்தமான, மிருதுவான, ஹாஸ்யம் இழையோடும் குரல் இவரிடமும் எதிரொலிக்கிறது. சம்ஸ்கிருதம், பார்ஸி, உருது, ஹிந்தி, மராத்தி, குஜராத்தி, வங்காளி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஆங்கிலம் ஆகிய மொழிகள் இவருக்குத் தெரியும்.

60 வயதாகும் விநோபா மேற்கிந்தியக் கிராமமொன்றில் பிராமண குலத்தில் ஜனித்தவர். பெற்றோர்கள் சூட்டிய 'விநாயக்' என்ற பெயரை மாற்றியவர் காந்திஜிதான். பத்து வயதிலேயே சந்நியாச வாழ்க்கையையும், பிரம்மசரிய விரதத்தையும் மேற்கொண்டார். இருபதாவது வயதில் பம்பாய்க்குப் படிக்கக் கிளம்பி, வங்க தேசீய இயக்கத்தில் கலந்து, காசியில் சம்ஸ்கிருதம் பயின்று, வேதாந்த விசாரத்தில் இறங்கினார். 1916-ல்தான் காந்திஜியுடன் முதல் சந்திப்பு நேர்ந்தது. அன்று முதல் இன்றுவரை குருவின் உண்மையான சீடனாகத் திகழும் ஆசார்யா பாவே, அடுத்த மாதம் சென்னைக்கு வருகிறார்.

தலைநகர் பால்.....

"நாடகக் கலை அரியதொரு போதனை சாதனம்; வெறும் பொழுதுபோக்கிற்கு மட்டுமின்றி, மக்கள் மனத்தில் உயர் பண்புகளை வளர்க்கவல்லதொரு பிரசார சாதனமாகும். நம் நாட்டுக்குரிய மரபின் படிச் சீரான வகையில், அந்தக் கலை வளம்பெற வழி வகை காண வேண்டும்"–டாக்டர் ராதாகிருஷ்ணன் 25–3–56 அன்று தில்லியில் துவக்கி வைத்த நாடகக் கலை மகாநாட்டில் இவ்வாறு கூறினர். ஸங்கீத, நாடக அகாடமியார் நடத்தும் இந்த மகாநாட்டில், இந்தியாவின் நாடகாசிரியர்கள், நடிகர்கள், இதர கலைஞர்கள் முதலானோர் கலந்து கொண்டு, நாடகக் கலை வளர்ச்சிபற்றி விவாதிக்கிறார்கள்.

"நாடகக் கலை ஜீவனுள்ளதொரு சக்தியாகத் திகழவேண்டுமானல், தற்கால வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாக இருக்கவேண்டியதோடன்றி, பழமையின் சிறப்பையும் உணர்த்துவதாக இருக்கவேண்டும்" என்று அகாடெமியின் அக்கிராஸனர் சென்னை பிரதம நீதிபதி ஸ்ரீ ராஜமன்னர் கூறினர்.

மார்ச் 30–ந் தேதிவரை நீடிக்கவிருக்கும் இந்த மகாநாட்டில், இந்நாட்டு அறிஞர்கள் சுமார் 40 பேர் நாடகக்கலை பிரச்னைகளை ஆராய்ந்து, வளர்ச்சிக்கு வழி வகை செய்யப் போகிறார்கள். நாடகத்துறையில் முக்கியப் பங்கு கொண்டுள்ள தமிழகம், போதிய பிரதிநிதித்வம் பெறவில்லையென்பது வருந்தத்தக்கது.

ஃ ஃ ஃ

நாரதர் ஸ்ரீனிவாச ராவ் கோஷ்டியின் நாடக விழா 24–3–56 மாலை விமரிசையாகத் துவங்கிற்று. லோதி காலனி மதராஸி பள்ளியின் திறந்தவெளி அரங்கில், பெருந்திரளாகக் கூடியிருந்த தமிழர் முன்னிலையில் சபாநாயகர் ஸ்ரீ எம். அனந்தசயனம் அய்யங்கார் நாடகத் தொடரைத் துவக்கிவைத்து, தமக்கே இயல்பான பாணியில் ஹாஸ்யமாகப் பேசினர். சென்னை கோஷ்டியின் கலை ஆர்வத்தைப் பாராட்டினர்.

இதற்கு முன், 'ஸரஸா' நாடக நூலின் வெளியீட்டு விழா மத்திய அரசாங்க ரயில்வே துணை மந்திரி ஸ்ரீ. அளகேசன் தலைமையில் நடைபெற்றது. "நூறாவது தடவையாக 'ஸரஸா' இப்போது மேடையில் தோன்றுகிறாள்; புத்தக வடிவில் முதல் தடவையாகத் தலைநகரில் வெளியாகிறாள்" என்று ஸ்ரீ ஸ்ரீனிவாச ராவ் கூறினர். மந்திரி ஸ்ரீ அளகேசன் ஸ்ரீ ராவின் கலைப் பணியைப் பாராட்டி ஆசி கூறினர்.

சனிக்கிழமையன்று 'ஸரஸா'வையும், ஞாயிறன்று 'தங்கப் பதுமை'யையும் நடித்துக் காட்டினார்கள். 'ஸரஸா' நாடகம் சுமார்தான். உபபாத்திரங்களாக வரும் பிரபல நடிகர்களும், நடிகைகளும் பிரமாதமாக நடித்தனர். இரண்டு தினங்களிலும் சுவாரஸ்யம் நீடிக்கும்படிச் செய்தவர்கள்–பி. டி. சம்பந்தமும், வி. வி. ஜயராமனும், வாதிராஜும் வசந்தாவும்தான். 'ஸரஸா'வில் கனபாடிகளாக வந்த சேஷாத்திரி, இரண்டாவது நாள் சோபிக்கவில்லை. 'தங்கப் பதுமை'யில் பொன்னம்பலம் பிரமாத அப்ளாஸ் வாங்கினர். விகடம் சந்துரு, சந்தானம் ஜோடி இரண்டாவது நாளன்று பிரமாதமாக நடித்தார்கள். அவர்களுக்கு இன்னும் பெரும் பங்கு கொடுக்கவில்லையே என்பதுதான் குறையாய் இருந்தது. கதாநாயகனாக வந்த ஸ்ரீனிவாச ராவ், முழு அளவில் சோபிக்கவில்லை என்றே சொல்ல வேண்டும்.

நாடகத்தின் வெற்றி தோல்விக்குக் கதையும் காரணமாகும். 'ஸரஸா' பழசாய்ப் போன கருத்தின் அடிப்படையில் உருவான கதை. அபார வேகத்தில் முன்னேறி வரும் இக்காலத்தில் அவ்வளவு சுவாரஸ்யமானதாகப்படவில்லை அந்தக் கதை. 'தங்கப் பதுமை'யோ ஒரு தழுவல் கதை. இந்நாட்டுச் சூழ்நிலைக்குத் தக்கதாய் அமையவில்லை. எந்த நீதியையும் நீண்ட பிரசங்கங்கள் மூலம் உணர்த்துவதாக நாடகம் இருக்கலாகாது. ஆனால், இரண்டு நாடகங்களிலும் கதாநாயகர் பிரசங்கங்கள் செய்கிறார். மேலும், நாடகங்களின் போக்கு சிக்கல் மிகுந்திருந்தது; பாட்டுக்களும் அனந்தம். கிட்டப்பா காலத்திய மேடை நினைவுகளை, இந்த நாடகங்கள் கொண்டு வந்தன.

தட்சிண பாரத் சமாஜம், கர்நாடக சங்கீத சபா ஆகியவற்றின் ஆதரவில் நடைபெற்ற இந்த நாடகங்களைக் காண தமிழ் அன்பர்கள் பெருமளவில் கூடியிருந்து விருந்தாளிகளைக் கௌரவித்தனர்.

ஸ்ரீனிவாச ராவ் தமது தில்லி நாடகங்கள் சம்பந்தமாக சபா–சமாஜ் சார்பில் அழகான மலர் ஒன்றைத் தயாரித்திருக்கிறார். நாடகக் கதைச் சுருக்கமும், நாடகக் கலைக் கட்டுரைகள் இரண்டொன்றும் கொண்ட அந்த மலரில், சென்னை கவர்னர், மந்திரிகள், ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீனிவாசன், ஸ்ரீ வாஸன் முதலான பெரியோர்களின் ஆசிச்செய்திகளும் இடம் பெற்றுள்ளன. பாலு சகோதரர்கள் அழகுறத் தீட்டியுள்ள படமொன்றை அட்டையில் ஏந்தி வரும் இந்த மலரின் சிறப்புக்காக நாரதர் ஸ்ரீனிவாச ராவைப் பாராட்ட வேண்டும்.

ஃ ஃ ஃ

தென்னிந்தியக் கலைச் சங்கத்தின் ஆதரவில் நடனமாடிய பதினேறு வயதேயான குமாரி நளினி, தில்லி அன்பர்களின் பாராட்டுக்குப் பாத்திரமானாள். ஸ்ரீ என். ஸி. வஸந்தராமனின் சிஷ்யையான நளினி, தனது நாட்டியத்தின் மூலம் தனக்குள்ள கலை ஆர்வத்தை நன்கு வெளிக்காட்டினாள். இந்த மூன்று மணி நேர நிகழ்ச்சியைக் காண வடநாட்டினர் பெருமளவில் வந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. கலைச்சங்க அக்ராஸனர் ஸ்ரீ அனந்தசயனம் அய்யங்கார், குமாரி நளினியைப் பாராட்டித் தங்கப் பதக்கமொன்றை வழங்கினர்.

ஜனாதிபதி வழக்கமாக ஆண்டுதோறும் வழங்கும் விருதுகள், இம்முறை ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலட்சுமிக்கும், பாலக்காடு மணி அய்யருக்கும் கிடைத்துள்ளன என்பதைக் கேட்டு, தலைநகர் அன்பர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அதுவும் 'ஸ்ரீமதி எம். எஸ். ஏப்ரல் மாதம் முதல் வாரம் தலைநகர் வரப்போகிறார். கர்நாடக சங்கீத சபாவின் ஆதரவில் இன்னிசை விருந்து அளிக்கப் போகிறார்' என்பதை அறிந்து, அவரது வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

கொட்டடா!

தங்களுக்குக் குறைந்தபட்சக் கூலியை நிர்ணயம் செய்துவிட வேண்டுமென்று அப்பள உற்பத்தித் தொழிலாளர் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியது.

—சென்னைச் செய்தி.

அப்பள உற்பத்தி முதலாளிகள் 'இழுத்த இழுப்புக்கெல்லாம்' தாங்கள் 'மசிவது' சாத்தியமில்லை என்றுதானே, பிரஸ்தாபத் தீர்மானம்?!

ஃ ஃ ஃ ஃ

பிள்ளையார் கோயிலில் நடுநிசியில் திருடவந்த ஒருவனை மறைந்திருந்த இருவர் கையுங்களவுமாகப் பிடித்துக் கொண்டனர்.

—நெம்மேலி செய்தி.

பாவம், 'பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காக முடிந்ததே' என்று தன்னையே நொந்து கொண்டிருப்பான் அந்தத் திருடன்!

ஃ ஃ ஃ

பிரதேச காங்கிரஸ் கமிட்டித் தலைவர்கள் அவசியம் பூதான யாத்திரை மேற்கொள்ளவேண்டுமென்று அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி சுற்றறிக்கை விடுத்துள்ளது.

—லக்ஷ்மணபுரி செய்தி.

பூதானம் இப்பொழுது 'பிரதான'மாகப்பட்டிருக்கிறது போலும் காங்கிரஸ் கமிட்டியின் கண்ணுக்கு!

ஃ ஃ ஃ

கேள்வி நேரத்தில் கேள்விகளின் எண்ணிக்கை குறைந்து வருவது பற்றி சென்னை சட்ட சபையில் ஒரு அங்கத்தினர் வருத்தம் தெரிவித்தார்.

—செய்தி.

'இதைக் கேட்பார் இல்லையே!' என்ற ஏக்கம் காரணமாக இருக்குமோ?!

ஃ ஃ ஃ

பொதுத் தேர்தல் சமீபித்துவிட்டதால், இதுவரை பேசாத மெம்பர்களையும், அபூர்வமாகப் பேசுபவர்களையும் லோக் சபையில் பேசச் செய்யப் போவதாக சபாநாயகர் அறிவித்தார்.

—புதுடில்லி செய்தி.

சபாநாயகருடைய கருணைகடாக்ஷம் எதிர்பாராமல் தம்மீது திரும்பியதைக் கண்டு, சந்தோஷத்தில் 'பேசமுடியாமல்' திக்குமுக்காடிப் போகாமலிருக்க வேண்டுமே!

—தாளம்.

அன்பின் துன்பம்

ஜெயபாரதி

"**கி**ர்ர். . ." என்ற சப்தத்துடன் பஸ் பறந்து கொண்டிருந்தது. அதில் ஒரு ஓரமாக உட்கார்ந்து ஏதோ தமிழ்ப் பத்திரிகையொன்றைப் புரட்டிக்கொண்டிருந்தேன். மனம் அதில் செல்ல மறுத்தது. பழைய குப்பைகளைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கிளறி, இரை தேடிக் கொண்டிருந்தது சிந்தனை! திடீரென்று ஒரு குலுக்கலுடன் பஸ் நின்றது. பஸ்ஸில் உட்கார்ந்திருந்த அனைவரும் ஒருவரோடு ஒருவர் உராய்ந்து மோதிக்கொண்டனர். 'ஏதேனும் ஊர் வந்துவிட்டதா என்ன?' என்ற எண்ணத்தில் வெளியே பார்த்தேன். வெறும் பொட்டலாக இருந்த இடத்தில், நாலைந்து குடிசைகள் மட்டும் தெரிந்தன.

"என்ன ஊர்?"—பக்கத்திலிருந்தவரைக் கேட்டேன்.

"ஊருமில்லை; பேருமில்லை. ஏதோ ஒரு பைத்தியம் குறுக்கே விழுந்தடிச்சுண்டு ஓடி வந்தது. டிரைவருடைய சாமர்த்தியத்தால்தான் பிழைச்சுது. இல்லாவிட்டால், இத்தனை நேரம் ஒரே ரத்த வெள்ளமாக ஓடியிருக்கும். இந்த மாதிரி பைத்தியங்களை வெளியில் விடக்கூடாது ஸார்! ஆஸ்பத்திரியிலோ, வீட்டிலோ அடைத்துப் போட வேண்டும்"—சிறு பிரசங்கமே செய்துவிட்டார் அவர்.

பரபரப்புடன் மறுபடி பார்வையை வெளியே ஓடவிட்டேன். தெருவின் ஓரத்தில் நின்றிருந்த மனிதனைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது. எண்ணெய்ப் பசையென்பதே கண்டிராத தலைமயிர், கற்றை கற்றையாக முகத்தில் விழுந்து அலங்கோலம் செய்துகொண்டிருந்தது. அவனுடைய முகத்தில் பலவித சுருக்கங்கள் விழுந்திருந்தன. அவனுடைய சூன்யமான பார்வை, வெட்டவெளியிலே எதையோ தேடிக்கொண்டிருப்பது போல இருந்தது. அந்த மனிதனுடைய அழுக்கு நிறைந்த உடையையும், தோற்றத்தையும் கண்ட என் மனம் பகீரென்றது. 'என் பாலுவும் இப்படித்தான் இருப்பானோ?' என்ற கேள்வி உள்ளத்தில் எழும்பி, உள்ளத்தையே ஒரு உலுக்கு உலுக்கியது. கையிலிருந்த பத்திரிகையை மூடி வைத்துவிட்டு, மனத்திரையில் நிழலாடும் நினைவுச்சித்திரத்தில் சிந்தனையைப் புகுத்திவிட்டேன். மறுபடி 'பூம்! பூம்!' என்று பெரிதாக அலறிவிட்டு, பஸ் புறப்பட்டுவிட்டது. சில்லென்ற காற்று முகத்தில் பட்டு ஒரு வித குளிர்ச்சியைக் கொடுத்தது.

"எதுவரை போகிறீர்கள் ஸார்?" என்று கேட்டார் பக்கத்திலிருந்தவர்.

"சென்னைக்கு." ஒரே வார்த்தையில் சுருக்கமாகப் பதிலளித்துவிட்டு மறுபுறம் முகத்தைத் திருப்பிக்கொண்டேன். இன்னும் ஏதாவது கேட்டுவிடப் போகிறாரே என்ற எண்ணம் மனதிலே புரண்டு கவலையைக் கொடுத்தது. என் கவலையை உணர்ந்தவரைப் போல அவர் கையில் ஒரு பேப்பரை எடுத்துக்கொண்டுவிட்டார். நானும் நிம்மதியாக மனதிலே சுழித்தோடும் துயரச் சிந்தனையிலே லயித்தேன். இரண்டு வருஷங்களுக்கு முன் நடந்த சம்பவங்கள் திரைப்படம் போலக் கண் முன்னே ஓடிக்கொண்டிருந்தன. என்னுடன் பிறந்த ஒரே சகோதரியான செல்லத்தின் அவல வாழ்வை எண்ணி எண்ணி உருகியிருந்த என் உள்ளத்தைத் துயரச் சுமை பெரும் பாரமாக அழுத்திக்கொண்டிருந்தது.

ஃ ஃ ஃ

என் பெற்றோர்களுக்கு நான் ஒரு பிள்ளையும், செல்லம் ஒரு பெண்ணும் தான் இருந்தோம். 'ஆஸ்திக்கு ஒரு பிள்ளை; ஆசைக்கு ஒரு பெண்!' என்று கூறுவார்கள் ஊர்க்காரர்கள். நான் நன்றாகப் படித்துப் பட்டம் பெற்று நல்ல வேலையில் அமர்ந்தேன். செல்லத்திடம் என் உயிரையே வைத்திருந்தேன். அவளைப் பெரிய இடத்தில் விவாகம் செய்து கொடுத்து, நல்ல நிலைமையில் வைக்க வேண்டும் என்ற ஆசை என்னுள்ளே வளர்ந்து கொண்டிருந்தது.

நாம் நினைத்தபடி நடந்துவிட்டால் விதிக்கு வேலையில்லாது போய்விடுமே! என் மாமா பிள்ளை ஒருவன் அந்த ஊரிலேயே ஓட்டல் வைத்திருந்தான். படிப்பு, சொத்து இரண்டும் சுமார்தான். செல்லத்தின் உள்ளத்தை அவன் திருடிவிட்டான். அவனுடைய கம்பீரமான இளமையின் எழிலிலே தன் மனதைப் பறிகொடுத்துவிட்டாள் அவள். நான் எத்தனையோ எடுத்துச் சொல்லியும் அவள் மனம் மாறவில்லை.

"அண்ணா, அன்பு என்பது பணம், படிப்பு, அழகு, குணம் இவை எதையுமே எதிர்பார்ப்பது இல்லையே! அவரோடு வாழ்வதில்தான் எனக்கு இன்பம் கிடைக்கும். தடங்கல் எதுவும் சொல்லாதே!" என்று ஒரே தீர்மானமாகக் கூறிவிட்டாள். நானும் அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை. உள்ளங்கள் ஒன்றிவிட்ட பிறகு வாய்ப்பேச்சால் என்ன பயன்?

ஒரு சுப முகூர்த்தத்தில் தான் விரும்பிய கணவனையே கைப்பிடித்துவிட்டாள் செல்லம். வாழ்க்கை இன்ப ஊற்றாக ஓடிக்கொண்டிருந்தது. அவர்களுடைய அன்புச் செல்வமாக பாலு பிறந்தான். நானும் என் குடும்பத்துடன் அதே ஊரில்தான் இருந்தேன். தங்க விக்கிரகம்போல இருந்த குழந்தை, என் நெஞ்சை மிகவும் கவர்ந்துவிட்டான். ஓய்வு நேரத்தையெல்லாம் பாலுவின் மழலையைக் கேட்பதிலும், அவனது பால விளையாட்டுகளைப் பார்ப்பதிலுமே கழித்தேன்.

டன. என் வீட்டிலும் கீதா பிறந்தாள். அன்றே பாலுவையும் கீதாவையும் ஒன்றாக முடி போட்டேன். அந்தச் சிறுவர்கள் நெஞ்சிலும் அன்பு விதையைத் தெளித்துவிட்டேன்.

அப்பொழுது பாலுவிற்குப் பத்து வயது. அப்பொழுதுதான் மளிகைக் கடை சுப்பராமய்யர் செல்லத்தின் கணவன் ராஜுவிற்கு நண்பரானார். அவருடைய நட்பு அந்தக் குடும்பத்தையே பலி வாங்கிவிடப் போகிறது என்று அன்று யாருமே நினைக்கவில்லை.

ஓட்டல் வியாபாரத்தைக் கண்ணும் கருத்துமாகக் கவனிக்கும் அவன், அடிக்கடி சுப்பராமய்யர் வீட்டுக்குப் போக ஆரம்பித்தான். ஆரம்பத்தில் நான் அதை அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. அவர்களுடைய சிநேகம் வளர, வளர, ஓட்டல் வியாபாரம் ஓய்ந்தது. வீட்டில் வறுமை புகுந்தது. செல்லத்தின் நகைகள் விற்றுப் பணமாக்கிக் கரைந்தன. திடீரென்று இந்த நிலை ஏற்பட்ட காரணம் தெரியாது செல்லம் விழித்தாள். அந்தக் காரணத்தை அறிந்துகொள்ள ராஜுவின் போக்கிலே என் கவனம் பூராவையும் செலுத்தினேன். விரைவிலே விஷயம் புரிந்துவிட்டது. பணக்காரர்கள் பொழுது போக்குவதற்காக ஏற்பட்ட குதிரைப் பந்தயம் ராஜுவின் மனதைக் கவர்ந்துவிட்டது என்பதை உணர்ந்தபொழுது பிரமை

...விட்டேன். கையில் கிடைத்ததையெல்லாம் குதிரைப் பந்தயத்தில் தோற்றுவிட்டு, வீட்டிலே வறுமையை நிலவச் செய்த ராஜுவிடம் எனக்குக் கோபம் பொங்கிக்கொண்டு வந்தது.

ஒரு நாள் நேராக ஓட்டலுக்குப் போய் ராஜுவைச் சந்தித்தேன். முதலில் சாவதானமாகவே பேச ஆரம்பித்தேன்.

"ராஜு, நீ செய்யும் காரியம் நன்றாக இருக்கிறதா? நாம் குதிரைப் பந்தயத்துக்குப் போனால், என்ன கிடைக்கும்! வீணாக அதில் பணத்தைக் கொட்டிவிட்டு அவதிப்படாதே!" என்றேன்.

எப்பொழுதும் புன்சிரிப்பு தவழும் அவனுடைய முகம், கடுமையாக மாறியது. "நான் ரேஸிற்குப் போகிறேன் என்று உனக்கு யார் சொன்னார்கள்? அதைக் கேட்டுக்கொண்டு நீயும் என்னை விசாரிக்க வந்துவிட்டாய்!" என்றான் சிறிது அழுத்தமாக.

"யார் சொல்ல வேண்டும்? உன் வீடு சொல்கிறது; உன் முகம் சொல்கிறது; உன் கடை சொல்லுகிறது? போறாதா?" என்றேன் சிறிது கோபத்துடன்.

அவனுக்குக் கோபம் வந்துவிட்டது.

"தெரிந்து கொண்டு விட்டாயோ, இல்லையோ! சரி, உன் வேலையைப் பார்த்துக்கொண்டு போ! என் விஷயத்தில் தலையிட வேண்டாம்!" என்றான்.

எனக்கு அவனை அப்படியே நொறுக்கி விடலாம்போல ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. என்னை நானே அடக்கிக்கொண்டு, "என் தங்கையைக் கொடுத்திருப்பதால் உன்னிடம் வந்தேன். அவள் கண் கலங்கக்கூடாது என்ற எண்ணத்தில் உனக்குப் புத்தி சொல்ல வந்தேன். இனி வர மாட்டேன். எல்லாவற்றையும் தொலைத்துவிட்டு, அவளையும், குழந்தையையும் பிச்சை எடுக்கவிட்ட பிறகாவது உனக்கு புத்தி வருமோ என்னவோ! அவள் தலை எழுத்தை யாரால் மாற்ற முடியும்!" நொந்த உள்ளத்துடன் கூறிவிட்டு வீட்டிற்குத் திரும்பினேன்.

வீட்டில் செல்லம் உட்கார்ந்திருந்தாள். அவளைக் கண்டதும் என் இதயத்திலே நிறைந்திருந்த அன்பு உடைப்பெடுத்துக் கொண்டு பெருகியது.

"செல்லம், சாப்பிட்டாயா அம்மா?" என்று கேட்டேன் ஆதரவுடன்.

"ஆச்சு அண்ணா?" என்றாள் சலிப்பாக.

அவள் அருகில் உட்கார்ந்து கொண்டேன். கீதாவும் பாலுவும் சுவாரஸ்யமாக ஏதோ விளையாடிக்கொண்டிருந்தனர்.

"ராஜுவினுடைய போக்கு நாளுக்கு நாள் மோசமாகிக்கொண்டு வருகிறது. நீயாவது நல்லதனமாகச் சொல்லித் திருத்த வேண்டாமா? இப்படியே போய்க் கொண்டிருந்தால் என்ன செய்வது?" என்றேன், மெதுவான குரலில்.

சட்டென்று விளையாட்டை விட்டு விட்டு, நான் பேசுவதைக் கவனித்தான். பாலு. அவனுடைய புத்தி கூர்மையைக் கண்டு என் மனம் வியந்தது.



செல்லத்தின் முகம் களங்கமற்ற குழந்தையைப் போல இருந்தது.

"என்ன சொல்கிறாய் அண்ணா? நீ சொல்வது எனக்குப் புரியவில்லை. அவர் என்ன செய்கிறார்?" என்று கேட்டாள் மெல்லிய குரலில். அவள் குரலில் தொனித்த வேதனை என் நெஞ்சைத் தொட்டது.

"உனக்கு ஒன்றுமே தெரியாதா செல்லம்? உன் அகமுடையான் செய்யும் வேலை உனக்கே தெரியாதா? தெரியாவிட்டால் இப்பொழுதாவது தெரிந்து கொள். சுப்பராமய்யருடன் சேர்ந்து கொண்டு குதிரைப் பந்தயத்துக்குப் போகிறான். கையில் கிடைக்கும் பணம் போறாது என்று, உன்னுடைய நகைகளையும் பிடுங்கித் தொலைத்தாகிவிட்டது. நீங்கள் எப்படியாவது போங்கள். நாளைக்கு அந்தக் குழந்தையின் கதி என்ன? ஆத்திரம் கலந்த குரலில் பட பட வென்று பொரிந்து கொட்டினேன்.

செல்லம் பதில் பேசவில்லை. அவள் கண்களை நீர்த்திரை போர்த்திவிட்டது. பாலுவின் சின்னஞ்சிறு முகத்தில் கூட வேதனையின் நிழல் படர்ந்தது.

மறு நாள் மாலை. செல்லத்தின் வீட்டுப் பக்கமாகப் போனேன். வாசற்படியில் கால் வைத்த எனக்கு உள்ளிருந்து ராஜுவின் உரத்த குரல் கேட்டது. தயங்கி நின்ற என் காதுகளில் தெளிவாக ஒலித்தன அவனுடைய வார்த்தைகள்.

"நீயோ, பாலுவோ அந்த வீட்டின் பக்கம் போகக்கூடாது. நேற்று நாலு பேர் நடுவில் புத்தி சொன்னான் அவன். இன்று உன்பிள்ளை தைரியமாக என்னைக் கேட்கிறான். எல்லாம் நீ கொடுக்கிற இடம்! அயோக்கியப் பயல்!" ஒவ்வொரு வார்த்தையிலும் ஆத்திரத்தின் வெறி படர்ந்திருந்தது.

செல்லத்தின் குரல் லேசாகக் கேட்டது. "உண்மையைச் சொன்னால் உடம்பு எரிச்சலா? நீங்கள் பொறுப்பில்லாது கையில் கிடைத்த எல்லாவற்றையும் தொலைத்து விட்டு வரலாம். குழந்தை கேட்டதும், அண்ணா சொன்னதும்தான் தப்பாகிவிட்டதா? உங்கள் போக்கு உங்களுக்கே நன்றாக இருக்கிறதா?" நிதானமாகக் கேட்டாள் அவள்.

"எனக்கு எவரும் புத்தி சொல்ல வர வேண்டாம். பிள்ளையை அடக்கி வை. தெரிந்ததா? இன்னொரு தடவை இதைப் பற்றி ஏதாவது கேட்டால் சரியான உதை கிடைக்கும்" என்று உறுமிவிட்டு, பின்பக்கம் போய்விட்டான் அவன்.

என்னையுமறியாமல் கால்கள் நாலடி எடுத்து வைத்தன. ஜன்னல் மூலமாகத் தெரிந்த காட்சி, என் உள்ளத்தை உருக்கியது. பாலுவைத் தன் நெஞ்சோடு சேர்த்து அணைத்துக் கொண்டு கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள் செல்லம். அவள் என்னை கவனிக்கவில்லை. ஒரு நிமிஷம் நின்று பார்த்துவிட்டு, அவர்கள் அறியாமலே திரும்பி விட்டேன்.

இனிமேல் செல்லம் அடிக்கடி இங்கு வரமாட்டாள் என்ற நினைவு இதயத்தைக் கரையான்போல அரித்தது.

நாளுக்கு நாள் ராஜுவின் போக்கு மோசமாகியது. கையில் கிடைக்கும் காசுகளை எல்லாம் குதிரைப் பந்தயத்தில் கொட்டினான். வீட்டில் வறுமை பேயாட்டம் ஆடியது. என்னால் முடிந்த வரை பணமாகவும், சாமானாகவும் கொடுத்து உதவி செய்தேன். செல்லம் பொறுமையின் எல்லையைக் கடந்து இருந்தாள். அப்பொழுதும் அவளுக்கு ராஜுவிடம் இருந்த அன்பு களங்கமற்றதாகத்தான் இருந்தது. "அவரைக் குற்றம் சொல்வதில் பயனில்லை. என் தலைவிதி; அனுபவிக்கிறேன். பாலு பெரியவனாகிவிட்டால் என் கஷ்டம் விடிந்துவிடும் அண்ணா. அவனுடைய படிப்பிற்கு உதவி செய்து விடுங்கள். அதுதான் நீங்கள் எனக்குச் செய்யும் பெரிய உதவி!" என்று கேட்டுக் கொண்டாள். அவள் விருப்பப்படி பாலுவைப் பணம் கட்டிப் படிக்க வைத்தேன்.

இந்த சமயத்தில் என்னை சம்பள உயர்வுடன் திருச்சிக்கு மாற்றி விட்டார்கள். பாலுவையும், செல்லத்தையும் விட்டுப் பிரிய மனமில்லாது பிரிந்தேன். மாதா மாதம் பணம் அனுப்பி உதவி செய்வதாக மனதிற்குக் கூறி சமாதானம் செய்தேன்.

❀ ❀ ❀

"ஸார், டிக்கட்டைக் காண்பிக்கிறீர்களா?" என்தோளில் யாரோ தட்டினார்கள். தூக்கத்திலிருந்து விழித்தவனைப்போல திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டேன். பஸ் நின்றிருந்தது. டிக்கட்டை எடுத்துக் காண்பித்தேன். பஸ் ஏன் நின்றுவிட்டது என்ற யோசனையுடன் வெளியே எட்டிப் பார்த்தேன். பஸ்ஸைச் சுற்றிச் சிறு கூட்டம் இருந்தது.

"செங்கல்பட்டு வந்துவிட்டது. இன்னும் கொஞ்ச நேரத்திலே பட்டணம் போயிடலாம்" பின் ஸீட்டில் யாரோ கூறிக்கொண்டிருந்தார்கள்.

பாதி தூரம் கடந்தாகிவிட்டது. 'இன்னும் இரண்டு மணி நேரத்தில் பாலுவைப் பார்த்துவிடலாம். எப்படி இருப்பானோ! முன்னாலே சந்தித்த பைத்தியத்தைப் போல அவனும் உரு மாறிப் பார்க்கச் சகிக்காமல் இருப்பானோ?' துயரம் கலந்த எண்ணம் நெஞ்சிலே குறுகுறுத்து ஓடியது. 'அத்தனை மோசமாக இருக்க மாட்டான். அடிக்கடி டாக்டருக்குப் பணம் அனுப்பிப் பார்த்துக் கொள்ளச் சொல்லியிருக்கிறேனே! நன்றாகச் சித்தம் தெளிந்து குணமாகிவிட்டது என்று டாக்டர் கடிதம் எழுதியிருந்தாரே! பாலு பழைய பாலுவாகத்தான் இருப்பான்' என்ற எண்ணமும் ஊடே தோன்றி மனத்திற்கு ஓரளவு ஆறுதலைக் கொடுத்தது.

'அவனையும் அழைத்துக்கொண்டு சாயங்காலமே திரும்பிவிட வேண்டும். சீதா துடியாகத் துடித்துக்கொண்டிருப்பாள். புறப்படும் பொழுதே "நானும் அத்தானை அழைத்து வர வரட்டுமா அப்பா?" என்று ஆவல் பொங்கக் கேட்டாள். நான்தான் அவளைத் தடுத்து நிறுத்திவிட்டு வந்தேன். பாலுவின் மனதிற்குக் கொஞ்சங் கூட அதிர்ச்சி கூடாது. இரண்டு வருஷத்தில் சீதா மதமதவென்று வளர்ந்திருக்கிறாள். அவளைப் பார்த்தால் பாலு அதிர்ச்சி அடைந்துவிடுவானோ என்ற எண்ணத்துடன்தான் அவளை நிறுத்தி விட்டு வந்தேன். போகும் வழியில் அவனிடம் சொல்லிவிட வேண்டும். இன்னும் ஏதேனும் கொஞ்சம் கோளாறு இருந்தாலும் சீதாவின் அளவற்ற அன்பினால் தெளிந்துவிடும். அவர்களிருவரும் ஒன்று சேர்வதைக் காணச் செல்லம் இல்லை. அவளிருந்தால். . !'

'உர்ர்ர். . .' என்ற ஒலியைப் பரப்பிக் கொண்டு பஸ் கிளம்பியது. என்னுடைய சிந்தனையும் விட்ட நினைவைத் தேடி எடுத்துப் பின்ன ஆரம்பித்தது.

"பஸ்ஸிலே ஏறினால் சில பேர் தூங்க ஆரம்பிச்சுடறாங்க." பக்கத்திலிருந்தவர் வாய் விட்டுக் கூறினார். அது காதில் விழுந்ததும், நான் கண்களை இறுக மூடிக் கொண்டேன். 'தூங்குவதாகவே நினைத்துக் கொள்ளட்டும்' என்ற எண்ணம் நெஞ்சிலே தோன்றியது. மனம் பழைய நாட்களைத் தேடி ஓடியது. அதன் வேகத்திலே அயர்ந்துவிட்டேன்.

❀ ❀ ❀

திருச்சிக்குப் போன பிறகு வருஷத்திற்கு ஒரு ஊராக மாற்றினார்கள். ஊர் ஊராகப் போய்க்கொண்டிருந்த நான், செல்லத்திற்குப் பணம் அனுப்புவதை மட்டும் மறக்கவில்லை. பாலுவை எத்தனையோ முறை என்னிடம் அனுப்பும்படிக் கடிதம் எழுதியும், செல்லம் அதற்குச் சம்மதிக்கவில்லை.

பாலு அந்த வருஷம் எஸ். எஸ். எல். ஸி., படித்துக்கொண்டிருந்தான். 'கஷ்டப்பட்டு இதை முடித்துவிட்டால், பிறகு செல்லத்தின் கஷ்டம் விடிந்துவிடும்' என்ற எண்ணம் இதயத்தை நிரப்பியிருந்தது. வழக்கத்தைவிட அதிகமாகவே பணம் அனுப்பிக்கொண்டிருந்தேன்.

ஒரு நாள் பகல் நேரம். வேலையில் மூழ்கி என்னை மறந்திருந்தேன். அப்பொழுது ஆபீஸ் பியூன் வந்து, "உங்களைப் பார்க்கணுமின்னு ஒரு பொண்ணு வந்திருக்கு" என்றான்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. என்னைப் பார்க்க எந்தப் பெண் வந்திருப்

அமிர்தம் போன்ற

அனங்க பிரபாயாகுதி

அழகுள்ள வாலிபத்திற்கும் பிரகாசிக்கும் வன்மைக்கும் ஓர் ஊற்று. அது ரத்த சுத்தியும், விருத்தியும் அளிக்கிறது. சோர்வடைந்த நரம்புகளுக்கு ஊக்கமளித்து நேர்மையான மண வாழ்க்கையை அனுபவிக்கச் செய்யும் உத்தரவாதமுள்ள ஓர் சஞ்சீவி.

முழு கோர்ஸ் ரூ. 10. ½ கோர்ஸ் ரூ. 5.

மதன் மஞ்சரி பார்மஸி

ராம்வாடி, கல்பாதேவி ரோட், பம்பாய்-2

ஏஜண்டுகள்:— சென்னை: மேத்தா டிரேடிங் கார்ப்பொரேஷன். 52, பந்தர் தெரு; சேலம்: மாடர்ன் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ்; பெங்களூர்: சிடி மெடிகல் ஸ்டோர்ஸ், சிக்பேட்.

மற்றஇடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை

அழைத்து வா!" என்றேன்.

அடுத்த நிமிஷம் என் எதிரில் வந்து நின்றாள் கீதா. அவள் முகமெல்லாம் வியர்த்துப் பேயடித்தாற்போல இருந்தது. என்னவோ நடந்துவிட்டது என்று என் மனம் கூறியது.

"என்னம்மா கீதா?" என்று கேட்டேன் பரபரப்புடன்.

"பட்டணத்திலிருந்து தந்தி வந்திருக்கிறது அப்பா!" நடுங்கிய குரலில் கூறிய அவள், தந்தியை என்னிடம் நீட்டினாள். என் உள்ளம் பயங்கரமாக நடுங்கியது. ஆத்திரமும், பயமும் கொப்புளிக்க, தந்தியைப் பிரித்தேன். அதில் இரண்டே வரிகள்:

"செல்லத்திற்கு அபாயம். உடனே வரவும்!"

ராஜூதான் தந்தியடித்திருந்தான். எனக்கு என்ன செய்ய வேண்டும் என்றே தெரியவில்லை. மேஜைமீது இருந்த காகிதங்களை வாரி டிராயரில் போட்டுப் பூட்டிவிட்டு, லீவு லெட்டரை எழுதி மேஜைமீது வைத்துவிட்டு, வீட்டிற்கு ஓடி வந்தேன். அப்பொழுது நான் காஞ்சீபுரத்தில் இருந்தேன்.

என் மனைவியையும், கீதாவையும் அழைத்துக்கொண்டு பஸ்ஸில் புறப்பட்டேன். என் உள்ளத்தின் வேகத்திற்கு பஸ்ஸின் வேகம் போதவில்லை. 'ஏன் இத்தனை மெதுவாகப் போகிறது?' என்று எனக்குள்ளேயே முணுமுணுத்துக்கொண்டேன். 'செல்லம் நான் போகும் வரை உயிருடன் இருப்பாளா? அவளிடம் நாலு வார்த்தை பேச முடியுமா?' என்ற ஏக்கம் நெஞ்சிலே சுழித்தது.

மாலை நான்கு மணிக்கு பஸ் சென்னையை அடைந்தது. செல்லத்தின் வீட்டை அடைந்தபொழுது வீடு பூட்டிக் கிடந்தது. 'எல்லாரும் எங்கே போயிருப்பார்கள்? ஒரு வேளை செல்லத்தின் காரியம் முடிந்துவிட்டதோ என்னவோ' என்று எண்ணிய எனக்குத் துக்கம் அளவுக்கு மீறிப் பொங்கியது. உடல் படபடத்துக் கால்கள் துவண்டன. அப்படியே வாசற்படியில் உட்கார்ந்தேன். கீதாவும், மனைவியும் என் முகத்தைப் பார்த்தனர்.

அதற்குள் பக்கத்து போர்ஷனில் குடியிருந்தவர் என்னிடம்வந்து, "ஸார், உங்கள் தங்கை ஜெனரல் ஆஸ்பத்திரியில் இருக்கிறார். நீங்கள் வந்தால் நேராக அங்கே வரச்சொன்னார்கள். இதோ வார்டு நெம்பர்" என்று ஒரு சீட்டை என்னிடம் கொடுத்தார்.

"எங்க அத்தைக்கு என்ன உடம்பு மாமா?" என்று அவரிடம் கேட்டாள் கீதா. எனக்கு அதைக் கேட்கக்கூடத் தோன்றவில்லை.

"பாலுவும், அத்தையும் தூங்கிக்கொண்டிருக்கும்பொழுது, ஏதோ கண்ணாடி ஜாடியை உயரேயிருந்து எலி தள்ளி தலையில் விழுந்துவிட்டதாம். நல்ல அடிபட்டு ரத்தம் பூராவும் வெளியில் போய்விட்டது. பதிலுக்கு ரத்தம் கொடுத்தால், ஒருவேளை பிழைக்கலாம் என்று டாக்டர் சொல்லுகிறார். சப்தம் கேட்டுக் கண்ணைத் திறந்த பாலுவின் கண்களிலும் கண்ணாடித் தூள்கள் விழுந்துவிட்டன. அவனும் ஆஸ்பத்திரியில்தான் இருக்கிறான்" என்றார் அவர்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. சிறு கண்ணாடி ஜாடி அவள் உயிருக்கு எமனாகிவிட்டதா? 'இருக்காது' என்று என் நெஞ்சினுள்ளே ஏதோ கூறியது. ஒரு டாக்ஸி வைத்துக்கொண்டு, ஆஸ்பத்திரிக்குப் பறந்தேன். வார்டைக் கண்டு பிடித்து அவர்களைப் பார்ப்பதற்குள் அரை மணிக்கு மேலாகிவிட்டது.

செல்லத்தை அடையாளமே தெரியவில்லை. தலையில் பெரிய கட்டு போட்டிருந்தது. முகமெல்லாம் தும்பைப்பூவைப் போல வெளுத்திருந்தது.

"செல்லம்!" என்று அழைத்தேன், உணர்ச்சிப் பெருக்குடன்.

மூடியிருந்த கண்களைத் திறந்த அவள் முகத்தில் மகிழ்ச்சி பரவியது. "அண்ணா, வந்துவிட்டீர்களா?" என்றாள் ஈனஸ்வரத்தில்.

என் பார்வையைக் கண்ணீர் மறைத்தது. "செல்லம், என்ன நடந்தது? தலையில் எப்படி அடிபட்டது?" என்று கேட்டேன்.

"அண்ணா, அந்த நாற்காலியில் உட்காருங்கள். சொல்லுகிறேன். விஷயத்தைக் கேட்டுவிட்டு அவரிடம் ஆத்திரம் கொள்ளக்கூடாது. அப்படியானால் சொல்லுகிறேன்" என்றாள்.

"அவனால் இந்த நிலை ஏற்படுமென்று நினைத்தேன். நினைத்தது நடந்துவிட்டது. செல்லம் சொல்லு. . ராஜூவினுடைய வெறிச் செய்கையைச் சொல்லு. . கேட்கிறேன்" என்றேன் சிறிது ஆத்திரத்துடன்.

அவள் சொல்ல ஆரம்பித்தாள்: "இந்த மாதம் பாலுவிற்குப் பரீட்சைக்குப் பணம் கட்ட வேண்டும். அதற்காக உங்களிடமிருந்து வந்த பணத்தை ஒதுக்கி வைத்திருந்தேன். நேற்று அதைக் கொடுக்கும்படிக் கேட்டார். நான் மறுத்தேன். கோபம் வந்து என்னை அடித்தார். அதைப் பார்த்து பாலு கொதித்து எழுந்தான். 'அம்மாவை அடித்தால் உங்களுக்கும் அது கிடைக்கும்' என்று கோபத்துடன் உறுமினான்.

நான் குறுக்கே விழுந்து மறித்தேன்.

'பாலு, தூரப்போய்விடு. அவருடன் பேசாதே' என்று எச்சரித்தேன்.

ஆனால் பாலு அடங்கவில்லை. 'அம்மாவிற்குப் பதிலாக என்னை அடியுங்கள் அப்பா. எனக்காகத்தான் அம்மா பணம் வைத்திருக்கிறாள். ஆகையால் என்னை அடியுங்கள்' என்று கூறி, என்னிடமிருந்து திமிறிக்கொண்டு அவர் அருகில் போய் நின்றான்.

ஒரு கணம் தயங்கிய அவர், 'செல்லம் பணத்தைக் கொடுத்துவிடு; நேரமாகிறது' என்றார் நயமாக.

என்னுடைய பொறுமை உடைந்துவிட்டது. 'கிண்டிக்குப் போக நேரமாகிவிட்டதா? என்னைக் கொன்றாலும் பணத்தை நீங்கள் பார்க்க முடியாது' என்றேன் சினம் கொதிக்க.

அவர் முகம் பயங்கரமாக மாறியது. 'கொடுக்காவிட்டால் உன்னை யார்விடப் போகிறார்கள்?' என்று உறுமிய அவர், என் பக்கமாக வந்தார். அவருக்கு முன் துள்ளிவந்து என்னை மறைத்துக்கொண்டான் பாலு. அவருடைய கோபம் உச்ச நிலையை அடைந்துவிட்டது. பக்கத்தில் இருந்த கண்ணாடி ஜாடியை எடுத்து எங்கள் மீது வீசினார். பாலுவின் மீது பட்டுவிடப் போகிறதே என்ற பயத்துடன் அவனை அணைத்துக்கொண்டேன். தலையில் வந்து மோதிய ஜாடி சுக்கு நூறாக உடைந்தது. எங்கோ வானத்தில் பறப்பதுபோல இருந்தது. அந்தச் சமயத்தில் பாலுவின் 'ஐயோ' என்ற அலறல் என் காதுகளில் லேசாக விழுந்தது. கண்களைத் திறந்து பார்க்க முயன்றேன்; முடியவில்லை.

நல்ல நினைவு வந்த பொழுது ஆஸ்பத்திரியில் இருந்தேன். பாலுவின் கண்களில் கண்ணாடித் தூள்கள் விழுந்திருப்பதாக அறிந்தேன். சிறு குழந்தையைப் போல விம்மி விம்மி அழுது என்னிடம் மன்னிப்புக் கேட்டார் அவர்.

எனக்கு ஏற்பட்ட ஆபத்தினால் அவர் திருந்திவிட்டார் என்பதை நினைக்க எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. அண்ணா, நீ அவரை ஒன்றும் சொல்லாதே. பாலுவை அழைத்துவர அந்த வார்டுக்குப் போயிருக்கிறார்.

இத்தனை நாள் உதவி செய்ததுபோல பாலுவின் கண்களைக் கவனித்து வைத்தியம் செய்துவிடுங்கள் அண்ணா" என்று கூறி முடித்தாள். மெல்லிய குரலில் திணறித்திணறித்தான் அவள் பேசினாள். அந்தக் களைப்பு தாங்காது முகமெல்லாம் வியர்த்துவிட்டது.

என் துண்டால் அவள் முகத்தைத் துடைத்துவிட்டு, "செல்லம், அதிகம் பேசாதே. நான் போய் டாக்டரைப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று எழுந்தேன்.

என் கைகளைப் பிடித்துக்கொண்ட அவள், "வேண்டாம் அண்ணா. டாக்டரைப் பார்த்துப் பிரயோசனமில்லை. இன்று இரவு தாண்டாது என்று கூறிவிட்டார் அவர். எனக்கு நினைவு இல்லை என்று அவர் நினைத்து, இவரிடம் சொல்லிக்கொண்டிருந்தார். என்னால் கண்களைத் திறக்க முடியவில்லையே

தவிர அவர்கள் பேசுவது நன்றாகக் காதில் விழுந்தது. ஆகையால், நீங்கள் எங்கும் போக வேண்டாம். என் கிட்டவே இருங்கள். பாலுவும் என்னுடனேயே இருக்கட்டும்" என்று கூறி, ஆயாசத்தால் கண்களை மூடினாள். மூச்சு ஒன்றையொன்று துரத்துவது போல வேகமாக வந்து கொண்டிருந்தது.

'செல்லம், உன் கஷ்டங்களுக்கு விடிவு காணாமலே போய்விடப் போகிறாயா?' மனதிற்குள் அரற்றிக்கொண்டேன். சீதா மௌனமாகக் கண்ணீர் வடித்தாள்.

அதற்குள் பாலுவும், ராஜூவும் வந்து சேர்ந்தனர். என்னைப் பார்த்த ராஜூ 'ஓ' வென்று கதறிவிட்டான். "சேகர், எனக்கு என்ன தண்டனை கொடுக்கப்போகிறாய்?" என்று விம்மினான். கொதித்துக்கொண்டிருந்த என் உள்ளம், அவன் தோற்றத்தைக் கண்டு அடங்கிவிட்டது. நொந்த உள்ளத்தை மேலும் புண்படுத்த விரும்பவில்லை.

பாலு "மாமா" என்று கூவிக்கொண்டு என்னைத் தழுவிக்கொண்டான். அவனுடைய கண்களிலும் கட்டு போட்டிருந்தது. "அத்தான்" என்று அருமையாக அழைத்துக்கொண்டு, அவன் கையைப் பிடித்துக்கொண்டாள் சீதா.

"நீயும் வந்திருக்கிறாயா சீதா? உன்னையெல்லாம் என்னால் பார்க்க முடியவில்லையே!" என்றான் வருத்தத்துடன்.

"அவசரப்படாதே! கண் கட்டை அவிழ்த்த பிறகு பார்க்கலாம்" என்று கூறி, அவனைச் சமாதானம் செய்தேன்.

"இப்பொழுதே பார்த்துவிட்டு உடனே கட்டிக்கொண்டுவிடுகிறேன் மாமா?" என்றான்.

"கண் கட்டை அவிழ்க்கக்கூடாது. அவிழ்த்தாலும் உன்னால் ஒருவரையும் பார்க்க முடியாது. பிறகு பார்வையும் போய்விடும். ஜாக்கிரதை!" என்று எச்சரிக்கை செய்தாள் நர்ஸ்.

"அம்மாவைப் பார்க்கவே முடியாதா மாமா?" உணர்ச்சியுடன் அலறிவிட்டான் அவன். தன் துவண்ட கரத்தால் அவனைத் தடவி ஆசுவாசப்படுத்தினாள் செல்லம். பிறகு, "பாலு, அசட்டுத்தனமாகக் கண்களை இழந்துவிடாதே! இன்னொன்று. அப்பாவிடம் கடுமையாக நடந்து கொள்ளாதே! இது இரண்டையும் செய்தால், என் மனம் குளிர்ந்துவிடும் கண்ணே!" என்று கூறினாள்.

"அப்பாவா அவன்? மிருகம்!" அவனையும் மீறி வார்த்தைகள் வெடித்தன.

"அவரை ஒன்றும் சொல்லாதே பாலு" சட்டென்று அவன் வாயைப் பொத்தினாள் செல்லம்.

அவனுடைய உடல் ஆத்திரத்தால் துடித்துக்கொண்டிருந்தது. மெள்ள அவனை அணைத்து சமாதானம் செய்தேன். ராஜூ குலுங்கக் குலுங்க அழுது கொண்டிருந்தான். அழுகையின் மூலமாக ஓரளவு மனப்பாரத்தை இறக்கிக் கொள்ளட்டும் என்று நான் சும்மாவிருந்தேன்.

நேரம் ஓடியது. செல்லத்தின் அருகிலேயே துயரம் கனக்கும் மனத்துடன் உட்கார்ந்திருந்தோம். அன்று இரவு எட்டு மணிக்கு எங்களை உட்கார்த்தி வைத்துவிட்டு, செல்லம் தன் உடல் கூட்டை உதறிவிட்டுப் பறந்துவிட்டாள். அவள் இறந்ததற்கு அழக்கூட எனக்கு நேரமில்லை. ராஜூவைக் கட்டிப்பிடிக்கவே முடியவில்லை. நீறு பூத்திருந்த அவனுடைய அன்பு கனிந்துவிட்டது. ஆனால், நான் எதிர்பார்த்ததுபோல பாலு அழவில்லை. மௌனமாக சிலையைப்போல உட்கார்ந்திருந்தான்.

ஒரு வாரத்தில் அவனுக்குக்குணமாகி கண் கட்டை அவிழ்த்து வீட்டிற்கு அனுப்பினார்கள். செல்லத்தின் காரியங்கள் முடிந்ததும் பாலுவை என்னுடனேயே அழைத்துப் போய்விட வேண்டும் என்று தீர்மானித்திருந்தேன்.

ஆனால் அது நடக்கவில்லை. வீட்டிற்கு வந்த பாலு ஒவ்வொரு பொருளையும் கூர்ந்து பார்த்தான். ஒருவருடனும் பேசுவதில்லை. சூழ்நிலையையே மறந்து காணப்பட்டான். செயல்கள் நிலை தடுமாறின. யாரேனும் ஏதேனும் கேட்டால் அவன் ஏதேனும் சொல்லத் தலைப்பட்டான். சம்பந்தா சம்பந்தமில்லாமல் எதையோ பேசினான்; செய்தான். அவன் செய்கைகள் என் மனதைக் குழப்பின.

பிரசித்தி பெற்ற டாக்டரிடம் அழைத்துப் போய்க் காண்பித்தேன். "மன அதிர்ச்சியில் மூளை குழம்பிவிட்டது. மூளைக் கோளாறு ஆஸ்பத்திரி ஸர்ஜனுக்குக் கடிதம் தருகிறேன். போய்ப் பாருங்கள்; உதவி செய்வார்" என்று கூறிவிட்டார்.

நான் பிரமையடைந்துவிட்டேன். நிமிஷத்துக்கு நிமிஷம் அவனுடைய நிலைமை மோசமாகியது. பெண்களைக் கண்டால் கை கூப்ப ஆரம்பித்தான். அந்த டாக்டரிடம்காண்பித்ததில் அவர், "இதை அதிர்ச்சி என்று சொல்ல முடியாது. ஒரு பிரமை மனதில் விழுந்திருக்கிறது. கூடிய சீக்கிரம் தெளிந்துவிடும். கவலைப்படாதீர்கள்" என்றார்.

அவர் யோசனைப்படியே பாலுவை ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டு காஞ்சீபுரம் திரும்பினேன்.

இரண்டு வருஷம் ஓடிவிட்டது. மாதா மாதம் டாக்டருக்குப் பணம் அனுப்பிக் கொண்டிருந்தேன். நானும் அடிக்கடி ஆஸ்பத்திரிக்குப் போய் பாலுவைப் பார்த்துவிட்டு வந்தேன். கடைசியில் போன வாரம் "நன்றாகத் தெளிந்துவிட்டது. நீங்கள் அழைத்துப் போகலாம்" என்று கடிதம் எழுதியிருந்தார். புறப்பட்டுவிட்டேன்.

'பாலுவை அழைத்துப்போய் சீதாவிற்கும், பாலுவிற்கும் இந்த வருஷமே விவாகத்தைச் செய்துவிட வேண்டும். அவளுடைய அன்பில் அவன் நடந்தவற்றை மறந்து வாழவேண்டும். இதாவது நான் நினைத்தபடி நடக்குமா? அல்லது..'

ஃ ஃ ஃ

டக்கென்று மூன்றாவது முறையாக பஸ் நின்றது.

"ஸார், நீங்கள் இங்கே இறங்கப்போவதாகச் சொன்னீர்களே!" பக்கத்திலிருந்தவர் என்னைத் தட்டியெழுப்பினார். 'சிந்தனைக்குள்ளே நுழைந்துவிட்டால் சூழ்நிலையே மறந்துவிடுகிறதே' என்று எண்ணிக்கொண்டு, பரபரப்புடன் இடத்தைவிட்டு எழுந்தேன். பஸ் பூராவும் காலியாக இருந்தது. 'எல்லோரும் எங்கே இறங்கினார்கள்?' என்று எண்ணிய நான், பஸ்ஸிலிருந்து இறங்கினேன்.

சென்னையின் மண்ணை மிதித்தவுடன் பாலுவை உடனே பார்க்க வேண்டும் போலிருந்தது. நேராக டாக்ஸி பேசிக் கொண்டு, ஆஸ்பத்திரிக்கு விரைந்தேன். என்னைப் பார்த்த டாக்டர், புன்முறுவலுடன் "வாருங்கள்" என்று முகமன் கூறி வரவேற்றார். இருவருமாக பாலு இருந்த அறைக்குப் போனோம். பாலு ஒரு பேப்பரைப் படித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

"பாலு!" உள்ளத்தில் பொங்கிய அன்பை வார்த்தையில் தேக்கிக் கூப்பிட்டேன்.

என் குரலைக் கேட்டு பாலு எழுந்தோடி வந்து, என்னைக் கட்டிக்கொண்டான். அவனை இறுகத் தழுவிய நான், "பாலு, ஊருக்கு வருகிறாயா?" என்றேன்.

"ஊருக்கா? எதற்கு?" என்றான் நிதானமாக.

"எதற்கா? சீதா உனக்காகக் காத்திருக்கிறாள். அவளைப் பார்க்க வேண்டாமா?"

'சீதா! சீதா!' மறந்து போனதை நினைவுபடுத்திக்கொள்ளுபவனைப் போல வாய்க்குள்ளேயே கூறிக்கொண்டான். பிறகு, "சரி மாமா, போகலாம். சீதா என்னுடன் பேசுவாளா?" என்று கேட்டான் குழந்தையைப் போல.

"உன்னுடன் பேசுவதற்காக வாசலிலேயே காத்திருப்பாள். வா போவோம்" என்று கூறிவிட்டு, டாக்டரிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டோம். வண்டியில் ஏறி உட்கார்ந்த பாலு "அப்பாவைப் பார்க்க வேண்டாமா மாமா?" என்றான் யோசனையுடன்.

நான் தொண்டையைக் கனைத்துக் கொண்டேன். 'மன வேதனை தாங்காது, செல்லம் இறந்த நான்காவது மாதத்தில் அவனும் போய்விட்டான் என்பதை எப்படி அவனிடம் கூறுவது!' சிறிது நேரம் தயங்கிவிட்டுப்பிறகு, "அப்பாவை அப்புறம் பார்த்துக்கொள்ளலாம். முதலில் சீதாவைப் பார்க்கலாம்" என்றேன். கார் காஞ்சீபுரத்தை நோக்கிப் பறந்தது. பாலுவின் தெளிவால் ஏற்பட்ட நிம்மதி மனதிற்கு இதத்தைக் கொடுத்தது. செல்லத்தின் ஆத்மா சாந்தி அடைந்துவிடும் என்ற நம்பிக்கை என் உள்ளத்தில் பிறந்தது.

ஹோமியோபதி

வைத்தியம் மிகச் சிறந்தது சுலபமாகக் கற்றுக்கொள்ளக்கூடியது. தமிழில் தபால்மூலம் குறைந்த செலவில் இவ்வைத்திய முறையைக் கற்றுக்கொள்ள இதுவே கடைசி சந்தர்ப்பம். விருப்பம் இருந்தால் முழு விவரங்களுக்கு இன்றே எழுதுங்கள்

ஹோமியோபதி ஹௌஸ், S. W.
77, ராமகிருஷ்ணமடம்ரோடு, மதருஸ்-28.

“நேற்று நம்ம சங்கத்திற்கு அலமேலு ஒரு சிநேகிதியை அழைத்துக் கொண்டு வந்திருந்தாளே! அவள் காதில் போட்டுக்கொண்டிருந்த நகையைக் கவனித்தீர்களோ? ரொம்பவும் நன்றாக இல்லை?” என்று மங்களம்—சின்னய்யா கேட்டாள்.

“ஆமாம்; அழகாக இருந்தது. அதுவும் அவள் முகம் உருண்டையாக, கன்னங்கள் மாம்பழக் கதுப்புகள் போல் இருந்ததா; இந்த நகை அவளுக்கு ரொம்பவும் பொருத்தமாக இருந்தது!” என்றாள் வேதவல்லி—சாரி.

“அது என்ன புதிய நகை? சொல்லுங்கள். நானும் தெரிந்துகொள்ளுகிறேன். ஏதாவது கிரணங்கள் திடீர் திடீர் என்று வெளிப்பட்டு எல்லாருடைய கவனத்தையும் கவர்ந்ததா?” என்று என் அத்தை சற்றுக் குத்தலாகவே கேட்டாள்.

நாங்கள் வழக்கம்போல் மத்தியானம் எங்கள் வீட்டு ஹாலில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அதற்கு ஒரு நிமிஷத்திற்கு முன் ஏதோ விஞ்ஞான ஆராய்ச்சியைப் பற்றிப் பேச்சு நடந்தது. “இதெல்லாம் அத்தைக்குச் சுலபமாகப் புரியாது!” என்று பார்வதி துடுக்காகச் சொல்லிவிட்டாள். அத்தைக்கு ஒரே கோபம்.

ஆனால் அந்தப் பெண் போட்டுக்கொண்டிருந்த காதணி உண்மையிலேயே புதிய தினுசாக, அழகாக இருந்தது. தங்கத்தினால் செய்த நகைதான். தங்கத்தினால், தோடு வரும் இடத்திற்கு, ஒரு சிறிய ஐந்து இதழ்கள் உள்ள பூப்போல் செய்திருந்தது. இதில் இருந்து ஒரு கொடி மேல் நோக்கிப் படர்ந்திருந்தது. இந்தக் கொடி, மேலே போகப் போக. கனம் குறைந்து இலேசாகிக்கொண்டே வந்தது. அதாவது நிஜக்கொடி போல் சிறுத்துக்கொண்டே வந்து, இலையில்லாத தண்டாக முடிந்துவிட்டது. ஆரம்பத்தில் இந்தத் தண்டின் இரு பக்கங்களிலும் சிறிய இலைகள் அமைக்கப்பட்டிருந்தன. இந்த இலைகளும் மேலே போகப் போக சிறியதாகிக்கொண்டே வந்தன. இந்தக் கொடி, காதின் உட்புறம் நன்றாகப் பதிந்து நிற்கும் வகையில் காதின் வடிவமாகவே செய்யப்பட்டிருந்தது. தண்டின் முடிவில் ஒரு சிறிய வளையம். இந்த வளையத்தில் இரட்டை வட முத்து மாட்டல் பொருத்தப்பட்டிருந்தது. தலைமயிரைக் கொண்டை போட்டு, மாட்டலைப் பின்புறமாகக் கொண்டையின் அருகில் பொருத்தி இருந்தாள், அந்தப் பெண். காதின் உட்புறமாகப் பதிந்து நின்று ஜொலித்த இந்தக் காதணியும், அதில் இசைக்கப்பட்டு, கொண்டை அருகில் மாட்டப்பட்டிருந்த மாட்டலும் இந்தப் பெண் முகத்திற்கு ஒரு அலாதிச் சோபையை அளித்தன.

இந்த நகை மொத்தம் ஒன்றரை பவுன் எடைதானும். கூலியும் அதிகம் இல்லை. பார்வைக்கு அழகாக, நாசூக்கான தோற்றத்துடன் இருக்கிறது. உன் மருமகளுக்கு இரண்டு சவரனுக்குள் அவள் வளைகாப்புக்கு ஒரு பரிசு கொடுக்க வேண்டும் என்றும், ஏதாவது புதிய தினுசில் நகை சொல்லு என்றும் நீ எழுதியிருந்தாய் அல்லவா? இந்தக் காதணி அதிக விலையும் இல்லை; புதிய தினுசாகவும் இருக்கிறது. வேண்டுமானால் எழுது. இப்படி ஒன்று செய்து அனுப்புகிறேன்.

“ஆமாம், அவள் இந்த நகையை எங்கே செய்தாளாம்?” என்று வேதவல்லி—சாரி கேட்டாள்.

“இது ஹைதராபாத்தில் செய்ததாம். இப்போது நம்ம ஊரிலும் செய்கிறார்கள்” என்றேன்.

“எங்க நாளிலும் காது நிறைய நகைகள் போட்டுக்கொள்வோம். நடுவில் காதில் நகையே போட்டுக்கொள்ளாமல் இருப்பது ஒரு ‘பாஷ’னாக இருந்தது. இப்போ இன்னொரு தினுசில் காதை மூடிப் போட்டுக்கொள்ளுகிறார்கள். இதுதான் வித்தியாசம்!” என்றாள் என் அத்தை.

“‘சூரியன் உதிக்கும் உலகத்தில் புதியது என்பது எதுவுமே கிடையாது. பழையது புதிய ரூபம் எடுக்கும்’ என்று ஒரு பழமொழி உண்டு!” என்றாள் மங்களம்—சின்னய்யா.

இந்தச் சமயத்தில்தான் உன் கடிதமும் வந்தது. “யாரு? உங்கள் கிராமத்து சிநேகிதியா? என்ன எழுதியிருக்கிறாள்?” என்று வேதவல்லி—சாரி கேட்டாள்.

இவளுக்கு உன்னைப் பார்க்க வேண்டும் என்று ஒரே ஆசையாக இருக்கிறதாம். உண்மையிலேயே இவளுக்கு உன் மேல் ஒரு பிரியம் ஏற்பட்டிருக்கிறது என்று எண்ணுகிறேன்.

★ ‘எவர் சில்வர்’ பாத்திரம்

எங்கள் பக்கத்து வீட்டு மாட்டுப்பெண் சுலோசனா, இன்று மத்தியானம் என்னைப் பார்க்க வந்திருந்தாள். “மாமி! எங்க மாமியாரிடம் எவ்வளவோ மன்றாடி, எங்க அம்மா எனக்குக் கைச் செலவுக்கு என்று கொடுத்த பணத்தை மிச்சம் பிடிச்சு, ஒரு ஸெட் ‘எவர்-சில்வர்’ பாத்திரம் போன மாசம் வாங்கி வந்தேனா? இப்போ எங்க மாமியார் ‘இதையெல்லாம் எடுத்து உள்ளே போடு!’ என்கிறார்” என்று முறையிட்டாள்.

“ஏன் அப்படிச் சொல்லுகிறார்?” என்றேன்.

“குழம்பு, கறி, கூட்டு எல்லாம் இவர்கள் வீட்டில் கற்சட்டியில் செய்ய வேண்டும். ரஸத்துக்கு ஒரு ஈயச்சொம்பு. இதையெல்லாம் நாம்தான் தேய்த்துக் கொள்ள வேண்டும். ‘ஈயம் பூசின பாத்திரத்தை உபயோகித்தால் ஈயம் அழிந்துவிடும். அப்புறம் காசு செலவு செய்து புதுசாப் பூச வேண்டும். கல்யாணம், கார்த்தி இப்படி என்னிக்காவது தான் இவைகளை உபயோகிக்கலாம்’ என்று என் மாமியார் சொல்லிவிட்டார்!” என்று சுலோசனா பெருமூச்சுவிட்டாள்.

“அப்புறம்?” என்றேன்.

“இந்தக் கற்சட்டியையும், ஈயச் சொம்பையும் தேய்த்து எனக்குக் கை எரிச்சலே எடுத்துவிட்டது! ‘ஒரு செட் ‘எவர்—சில்வர்’ வாங்கினால் ஈயம் பூசவே வேண்டாம். இலேசாகக் கரி அடுப்பில் சமைத்துவிடலாம். உடையாது’ என்று எவ்வளவோ சொல்லி என் கைப்பணத்தைப் போட்டு வாங்கினேன். இப்போ ‘இந்தப் பாத்திரம் தேய்க்கச் சோப்பு செலவாகிறது— தூக்கிப்போடு உள்ளே’ என்கிறார்!” என்று அழமாட்டாக் குறையாக சுலோசனா சொன்னாள்.

அவள் மாமியார் சொல்லுவதிலும் ஒரு உண்மை இருக்கத்தான் செய்கிறது. “இந்தப் பாத்திரங்களைத் தேய்க்க மாசம் ஒரு பார் சோப்பு வாங்க வேண்டி இருக்கே!’ என்று நீயே எழுதி இருக்கிறாய்.

மங்களம்—சின்னய்யா, வேதல்லி—சாரி, பார்வதி எல்லாரும் “ஆமாம்! நிஜம் தான்!” என்று ஆமோதித்தார்கள்.

“சோப்புப் போட்டால் வீண் செலவு-பாத்திரத்தில் மெருகும் அழியும்—நான் போடும் பொடி அதிகச் செலவும் இல்லை—மெருகும் போகாது—பாத்திரமும் பளிச் சென்றிருக்கும்!” என்றாள் என் அத்தை.

எல்லாரும் என் அத்தையை அவள் என்ன உபயோகிக்கிறாள் என்று கேட்டார்கள். இதுதான் அத்தையின் பாத்திரம் தேய்க்கும் பொடி:

விரட்டி, கரி இவைகளின் சாம்பலைச் சல்லடையில் சலித்துக்கொள்ள வேண்டியது. இரண்டு பங்கு சாம்பலுடன் ஒரு பங்கு கொள்ளு அரைத்து, அதன் மாவையும் கலந்து, ஒரு படி கொள்ளு மாவுக்கு ஒரு ஆழாக்கு சீயக்காய்ப் பொடியையும் கலந்துகொள்ள வேண்டியது—பாத்திரங்கள் பிசுக்கு, ஜிட்டு எதுவும் இல்லாமல் பளிச்சென்று சுலபத்தில் சுத்தமாவதுடன் மெருகு கொடுத்ததுபோல் மினுமினுவென்றும் இருக்கும்—இதை உன் சுலோசனாவுக்கும் சொல்லு—மற்றைய விவரங்கள் அடுத்த கடிதத்தில்.



(சென்ற வாரத் தொடர்ச்சி)

ஒரு நாள் பூராவும் வெளியே கிளம்பாமல் அந்த ஸிந்திக்காரன் ஹோட்டலிலே, தன் அறையிலேயே அடைந்து கிடந்த ஸாமி, மறு நாள் பத்து மணிக்கு கொலாபாவுக்குப் போனான். பவானி வீட்டிலிருந்தாளானல் என்ன சொல்வது என்று ஸாமி தீர்மானிக்கவில்லை. சமயத்துக்கு ஏதாவது சாக்குத் தோன்றுமலா போய்விடும்? ஆனால், அவள் வீட்டில் இருக்கமாட்டாள் என்றுதான் ஸாமி எதிர்பார்த்தான்.

அவள் வீட்டில் இல்லை. முந்திய இரவு, தன் முதலாளியின் காரில் ஜூஹு பீச்சுக்குக் கிளம்பிப் போய்விட்டாள் என்று, ஏற்கெனவே அந்த விஷயத்தை அறிந்தவன்போல, அங்கிருந்த வேலையாட்களிடம் பேச்சுக்கொடுத்து அறிந்து கொண்டான். அந்த வேலையாட்கள் நேரடியாகப் பதில் சொல்லாதது கண்டு அவர்களிடம் கோபமே வந்தது ஸாமிக்கு. சதியில் அவர்களும் சம்பந்தப்பட்டவர்கள்; தன்னை எள்ளி நகைக்கிறார்கள் என்று அவன் மனத்தில் பட ஆரம்பித்து விட்டது. யாரையாவது ஓங்கி அறைந்தால் தேவலை என்கிற மாதிரி ஒரு எண்ணம் ஏற்பட்டது. அதை மாற்றித் தனிமையில் தன் வலது கன்னத்திலேயே ஒரு அறை வைத்துக்கொண்டான், கன்னம் சிவக்கும்படியாக. அதற்குப் பிறகும் அவன் சித்தம் ஸ்வாதீனத்துக்கு வர ஒரு நாழிகை பிடித்தது.

அன்று மாலையில், முகம் தெரியாதபடி ஒரு பெரிய கறுப்பு மூக்குக் கண்ணாடியை வாங்கி அணிந்துகொண்டு அவன் ஜூஹு பீச்சுக்கும் போனான். எதற்காகப் போனான் என்று சொல்ல யாரால் முடியும்? இன்னுமா இந்த விஷயத்தில் அவனுக்குச் சந்தேகம் இருந்தது? தன் மனக் கவலைகளை மறந்துவிட்டு உல்லாஸமாக இருக்கவா அவன் ஜூஹு பீச்சுக்குப் போனான்? ஜூஹு பீச்சில் ஆனந்தமாகத்தான் இருந்தது; ஆனால், அந்த ஆனந்தத்தில் ஒரு சிறு பகுதியும்கூட, கவலை, ஏக்கம், அவமானம் என்கிற உலோகங்களால் ஆன அவன் கவசத்தைத் தாண்டி அவனைத் தொடவில்லை. பரந்த அந்த பீச்சிலே கூட்டம் அதிகமில்லை. ஆனால், அரை மணி நேரம் சுற்றியலைந்த பிறகுதான் அவன் தேடியது அவன் கண்ணில்பட்டது. அவன்முதலாளியும், அவன் மனைவியும், சற்று அடக்கமாகவே, கடலைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். வெகு நாட்களாகக் கல்யாணமாகிப் பழகிய தம்பதி போல உரிமையுடனும், அன்புடனும் பேசிக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

தேடிவந்ததைக் கண்டாகிவிட்டது. ஆனால், கன்னத்தில் போட்டுக்கொண்டு திரும்புவதைத் தவிர வேறு என்ன செய்வது?

அவர்கள் முன்பாக மௌனமாகப் போய் நிற்கலாம். வாய் பேசாமல் நிற்கலாம். ஆனால், அவனைக் கல்கத்தாவுக்கு அனுப்புகிற சாக்குகூட பிறகுஇருக்காது. கண் எதிரிலேயே, ஒளிவு மறைவில்லாமல், காரியங்கள் நிகழ ஆரம்பித்து விடும்.

வேறு ஏதாவது செய்தால்—குற்றம் சாட்டினால், அல்லது ஆர்ப்பாட்டங்கள் செய்தால், பைத்தியக்காரப்பட்டம்தான் கிடைக்கும். புருஷன் கட்சியில் எவ்வளவு நியாயமிருந்தாலும், பெண் மட்டும் அழகியாக இருந்துவிட்டால், எல்லோருடைய அனுதாபமும் அவளிடம் தான் இருக்கும். ‘புருஷன் மேல் என்ன பிசகோ?’ என்பார்கள். ‘அவன் ஆண்மையற்றவன் மாதிரித் தெரிகிறது’ என்று கூடச் சொல்லிவிடுவார்கள்.

திரும்பும்போது, பீச் ஓரத்தில் விடப்பட்டிருந்த அவனுடைய முதலாளியின் கார் ஸாமியின் கண்ணில் பட்டது. அதை ஏதாவது செய்யலாமா என்று ஒரு கணம் ஸாமிக்குத் தோன்றியது. என்ன பைத்தியக்காரத்தனம் என்று எண்ணியவனைக் காத்திருந்த டாக்ஸியில் திரும்பி, அன்றே ரெயில் ஏறிவிட்டான் கல்கத்தாவுக்கு.

6

ஸாமி அதற்குமுன் கல்கத்தாவுக்கு இரண்டொரு தடவைகள் போனதுண்டு. கடைக்காரியமாக ஒருதரம் போயிருக்கிறான். அது தவிர கல்யாணத்துக்கு முந்தியே வேலை தேடிக்கொண்டு தூரபந்து ஒருவர் வீட்டில் பல மாதங்கள் தங்கியிருந்திருக்கிறான் கல்கத்தா நகரத்துக்கு அவன் புதிதல்ல. ஆனால், கல்கத்தாவில் அவன் தன் கடைக் காரியத்தை அவ்வளவாகக் கவனிக்கவில்லை. கடை எக்கேடு கெட்டுப் போனால் என்ன என்பதுதான் அவன் நினைப்பு. முதலாளி என்று சொல்லிக்கொண்டவன் தனக்கிழைத்துவிட்ட துரோகத்துக்குத் தான் பதிலுக்கு என்ன செய்தாலும் தகும் என்றுதான் ஸாமி நினைத்தான். முதலாளியின் பணத்தை எப்படிச் செலவழிக்கிறோம் என்று சிந்தித்துப் பார்க்காமலும், கணக்குப் பார்க்காமலும்தான் அவன் செலவு செய்தான். பஸ்ஸில் போகக்கூடிய இடங்களுக்கெல்லாம் டாக்

பன் ஸப்ளை செய்தால் போதும் என்கிற இடத்தில் எட்டுப்பேருக்கு ஸப்ளை செய்தான். இத்தனைக்கும் போதிய அளவுக்கு அவனிடம் கடைப் பணம் இருந்தது. பெண்டிழந்தவன் இப்படிப் பணத்தைச் செலவு செய்து ஆறுதல் பெறட்டுமே என்றுதானே அந்த முதலாளி அவனிடம் இவ்வளவு பணத்தைக் கொடுத்திருந்தான். அந்த நினைப்பில்லாவிட்டால், எதற்காக ஒன்றுக்கு மூன்றாக இந்தத் தடவை பணம் கொடுத்தனுப்பினான் அந்தத் திருட்டு முதலாளி என்று கோபமாகத் தன்னையே கேட்டுக்கொண்டான் ஸாமி.

ஏதாவது அநாவசியமான செலவு செய்வதற்குப் பர்ஸை எடுக்கும்போது ஸாமிக்குத் தோன்றும், இப்படியெல்லாம் அவன் ஏமாறவேண்டும் என்றுதானே அந்தப் பணம் அவன் கையில், அவனிஷ்டப்படி செலவுசெய்யத்தரப்பட்டிருந்தது என்று. ஏமாந்து ஏற்றுக்கொண்டால் என்ன? ஏமாறாமல் விழிப்புடன் ஏற்றுக்கொண்டால்தான் என்ன? ஏற்றுக்கொண்டது ஏற்றுக்கொண்டதுதானே? அழகான மனைவியைக் கல்யாணம் செய்துகொண்டு, அவளைத் தன்னிடம் கொணர்ந்து ஒப்பித்ததற்காக அவன் முதலாளி அவனுக்குத்தந்த கைக்கூலி அது. மாசா மாசம் செய்த வேலைக்குச் சம்பளம் கொடுத்த மாதிரி, அழகான மனைவி படைத்திருந்ததற்கும் சம்பளம் இது. பம்பாய் திரும்பினால் முதலாளி கணக்குக் கேட்க மறந்து போனாலும் கூடப் போய்விடுவான். அல்லது ஸாமியே முந்திக்கொண்டு கணக்குத் தரமாட்டேன் என்று சொல்லிவிட்டால்தான் என்ன? யார் என்ன செய்துவிட முடியும் அவனை? அதையும்தான் பார்க்கலாமே!

அதைவிடச் சிறந்த வழியும் இருக்கிறதே என்று யோசித்தான் ஸாமி. கல்கத்தாவிலிருந்து பம்பாய் திரும்பவேண்டிய அவசியம்தான் என்ன? எல்லாம் அப்படியே கிடக்கட்டுமே! அவனுக்கென்ன? பெண்டாட்டி வகையாகப் படைக்காத அவனுக்கு எது எப்படிப் போனால் இனி என்ன? இப்படியே, இன்றே, காசி, ரிஷிகேசம், பத்ரிநாத் என்று கிளம்பிவிட்டால்தான் என்ன? காவியுடுத்திக்கொண்டு, ஸாமி என்கிற பெயரை 'ஸ்வாமி' என்று பண்ணிக்கொண்டு, 'போதும் இந்த இல்லறம்' என்று கிளம்பிவிட்டால் என்ன? ஆனால், அதற்குத் தகுதியில்லை என்றுதான் தோன்றிற்று அவனுக்கு. கிரஹஸ்தனாக இருந்து இல்லறம் நடத்தத் தனக்கு லாயக்கில்லை என்று பவானி ருஜூப்பித்துக் காட்டிவிட்டாள். அதே பவானியைப் பற்றிய சிந்தனை அவனைக் காஷாயம் பூணவொட்டாமலும் தடுத்துவிடும் என்பது நிச்சயமாகத் தெரிந்தது ஸாமிக்கு. பாசத்தை நீந்திக் கடந்தவன் சந்நியாசம் பூணலாம். தவறு செய்துவிட்டவர்களை மன்னித்து, அவர்களிஷ்டப்படி வாழட்டும் என்று எண்ணுகிறவன் காஷாயம் பூணுவதில் அர்த்தமுண்டு. பாசத்திலே உழலுபவன், தனக்குத் தன் மனைவி இழைத்துவிட்ட தீங்கை எண்ணி உள்ளம் குமுறுபவன், ரிஷிகேசம் போனால் என்ன, பத்ரிநாத் போனால் என்ன? பாசம் விடாது; பம்பாய்க் காந்தம் அவனை இழுத்துப் பிணைத்துக்கொண்டுதான் இருக்கும்.

கல்கத்தாவில் தெருத் தெருவாக நடந்துகொண்டே, கால்வலிக்க, மனம் வலிக்க, மேலே என்ன செய்வது என்கிற சிந்தனையில் ஆழ்ந்து துடித்தான் ஸாமி. இருபது நாள் கல்கத்தாவில் இருப்பதாக வந்தவன், இருபத்தியேழு-இருபத்தியெட்டு நாட்கள் இருந்துவிட்டான். தெருவில் பார்த்த அழகான பெண்களின் பிராத்தியேக வாழ்க்கை எப்படியெல்லாம் துரோகம் நிறைந்ததாக இருக்கும் என்று கற்பனை செய்து பார்த்தான். ஒவ்வொருத்தியும் ஒவ்வொரு பவானியாக, ஒவ்வொரு மாதிரியில் துரோகியாக அவனுக்குக் காட்சியளித்தனர். பெண் குலத்தினிடமே வெறுப்புத் தோன்றுகிற மாதிரி இருந்ததே தவிர, உண்மையில் பெண் குலத்தின் நல்லதனம், எட்டாத் தூரத்து லட்சியமாக, முன்னிலும் விட அதிக வனப்புள்ளதாக ஆகிக் கொண்டிருப்பதாக அவனுக்குப்பட்டது.

கல்கத்தாவுக்கு அவன் வந்து நாலு வாரங்களான பிற்பாடு அவன் ஒரு தீர்மானத்துக்கு வந்தான். புதுத் தீர்மானம் ஒன்றும் அல்ல அது. முன்னரே யோசித்துச் செய்து வைத்த முடிவுதான். இந்த அவமானத்தைத் தாங்காமல் தற்கொலை செய்து கொள்வது என்கிற முடிவுதான் அது. கல்கத்தாவிலே, கண் காணாத பிரதேசத்திலேயே தற்கொலை செய்துகொண்டுவிடலாம் அவன்; அநாதைப் பிரேதமாக அவனை எடுத்து சுகாதார அதிகாரிகள் அப்புறப்படுத்திவிடுவார்கள், அவன் வாழ்வு நாற்றமெடுத்தது போல உடல் நாற்றமடிக்கத் தொடங்கு முன். ஆனால், அப்படிக் கண் காணாத இடத்திலே சாக விரும்பவில்லை அவன். பம்பாயிலே அவள் கண்ணெதிரில்தான் சாக வேண்டும்; அவன் செத்துக்கொண்டிருக்கும் ஒவ்வொரு விநாடியும் அவள், தன்னால்தான் அவன் தற்கொலை செய்துகொள்ள நேர்ந்தது என்று அறிந்து, கண் முன் செத்துக்கொண்டிருக்கும் கணவனைப்பற்றித் துடியாகத்துடிக்க வேண்டுமென்று விரும்பினான், ஸாமி. அதைவிட அவளுக்குச் சிறந்த சித்திரவதை வேறு இருக்க முடியாது என்பது நிச்சயம். அவன் இறந்துவிட்டால் அவள் பம்பாயில் தங்குவது என்பதும் நடக்காது. அந்த முதலாளி, கடை கண்ணி, பொருள் முதலியவற்றை அவளுக்காக விட்டுவிட்டு, அவளுடன் சென்னை போய் விட மாட்டான் என்பதும் நிச்சயம். உயிர் வாழ்ந்து தன்னால் சாதிக்க முடியாத காரியத்தை, கள்ளக் காதலர்களைப் பிரித்துவிடும் காரியத்தை, சாவால் தன்னால் சாதித்துவிட முடியும் என்று எண்ணினான் ஸாமி. அதைத் தவிர வேறு எதுவும் சிறந்த வழி இருப்பதாகத் தெரியவில்லை.

இப்போது அவசர அவசரமாக கல்கத்தாவைவிட்டுக் கிளம்ப ஏற்பாடுகள் செய்தான் ஸாமி. கடைக் காரியங்களையும் கடைசி நிமிஷத்தில் ஏதோ கொஞ்சம் கவனித்தான். தன் மனைவியைப் போலத் தானும் முழுவதும் மனச்சாட்சியற்றவனாகப் போய்விடவில்லை என்பதைத் தனக்குத் தானே ருசுப்படுத்திக் கொண்டு, மனத்திற்கு ஆறுதல் தேடிக் கொள்வதற்காகச் செய்த காரியம்தான் இது என்பது அவனுக்கும் தெரியும். ஆனால் கடமையைச் செய்பவன் எந்தக் காரணத்துக்காகக் கடமையைச் செய்தால் என்ன?

7

பவானி என்கிற பெண் பேய், பெரிய விஷயங்களில் கடமை தவறியவளாகிவிட்டாளே தவிர, சில்லறைக் கடமைகளில் தவறாதவள் மாதிரிதான் நடந்துகொண்டாள் என்று ஸாமி தனக்குத் தானே கசப்புடன் கூறிக்கொண்டான். அவள் தன் அன்பார்ந்த கணவனுக்கு வாரம் ஒரு தரம் கடிதம் எழுதத் தவறிவிடவில்லை. எழுதியகடிதங்களும்படித்த பெண்ணுக்குரிய பாணியில், அன்பு ததும்ப, சக்கர வட்டமாகப் பூரணமாகத்தான் இருந்தன. சோரம் போகத் தெரிந்திருந்த மாதிரி அவளுக்குக் கடிதங்கள் எழுதவும் தெரிந்திருந்தது. இரண்டையும் ஒரே பள்ளிக் கூடத்திலும், காலேஜிலும்தான் கற்று அறிந்துகொண்டிருந்தாள் போலும்! வழக்கமாக ஒரு கடிதத்துக்கு இரண்டு கடிதமாக பதில் போடும் ஸாமி, தான் கல்கத்தா வந்த நாளிலிருந்து அவளுக்கு ஒரு கடிதம் கூடப் போடவில்லை. அதற்காக அவளை அவன் மறந்துவிட்

டான் என்று சொல்லுவது தவறு; ஏனென்றால், ஒரு கணம்கூட அவளைப் பற்றிய ஞாபகம் அவன் மனதைவிட்டு அத்தனை நாட்களிலும் அகன்றிருந்ததில்லை என்று நிச்சயமாகச் சொல்லலாம். காதலைப் போலவே காதல் முறிவும், பரிபூரணத்தை எட்டுகிற ஒரு நிலைதான் என்பதில் சந்தேகத்திற்கிடமில்லை.

கல்கத்தாவைவிட்டுக் கிளம்பு முன் இன்னொரு முயற்சியும் செய்து பார்த்தான் ஸாமி. பவானி தனக்கு இழைத்த மாதிரி, அதே ரகத்தைச் சேர்ந்த துரோகத்தைத் தானும் அவளுக்கு இழைத்துவிடுவது என்று எண்ணி அவன் காசு கொடுத்து இன்பத்தை விலைக்கு வாங்க முயன்றான். கல்கத்தாவிலே அது சுலபமான காரியம்தான். ஆனால் காசு ஏதோ கொஞ்சம் விரயமாயிற்றே தவிர, இன்பம் எதுவும் கிட்டியதாகத் தெரியவில்லை. விரயமான காசு முதலாளியினுடையதுதான் என்பதில் அல்ப திருப்தி ஏற்பட்டது ஸாமிக்கு. இன்பத்தைக் காசு கொடுத்து விலைக்கு வாங்க ஸாமி இரண்டாவது முயற்சி எதுவும் செய்யவில்லை; காசு கொடுத்து வாங்க முடியாது என்பது அவனுக்குத் தெளிவாகவே தெரிந்துவிட்டது.

தன் முதலாளிக்கோ தன் மனைவிக்கோ, ஸாமி தான் பம்பாய்வந்து சேருகிற தேதியை முன்கூட்டியே தெரிவிக்கவில்லை. அவன் கொலாபாவில் அவன் வீடு வந்து சேர்ந்தபோது, வாசலில் முதலாளியின் கார் நின்றிருந்ததைக் கண்டான். இதுவும் நல்லதற்குத்தான். தன் தற்கொலைத் தீர்மானத்தைத் திடப் படுத்துதற்காக ஏற்பட்டதுதான் என்று தனக்குள் சிந்தித்தவாறே, லிப்ஃடில் ஏறாமல், நாலு மாடிகளையும் ஏறியே சென்றான். அப்படிச் சென்றதில், உச்சியை எட்டுமுன், மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கி, உணர்ச்சி வேகம் தானாகவே தடைப்பட்டுக் குறைந்துவிட்டது. அதுவும் நல்லதுதான். தன்னையும் மீறியே ஏதாவது அமர்க்களம் நடந்துவிடுமோ என்று பயம் ஸாமிக்கு என்றுமே உண்டு.

ஆனால், அமர்க்களம் செய்யும்படியாக ஒன்றும் நடந்துவிடவில்லை. அவனுடைய முதலாளி, முன்னறையில் அமர்ந்து காப்பி சாப்பிட்டுக்கொண்டிருந்தான். பவானி, வழக்கத்துக்கு விரோதமாக அந்த நேரத்தில் பவுடர் போட்டுக்கொண்டிருந்தாள் என்பதை ஒரு குற்றமாகச் சொல்ல முடியுமா? மற்றபடி, தவறுதலாக எதுவும் நடந்தது என்பதையே அறியாதவர்கள்போல அவர்கள் இருவரும் நடந்துகொண்டார்கள்.

“கடைக்குக் கடிதம் வரவில்லையே—வீட்டுக்காவது வந்ததோ, நீங்கள்என்று வருவீர்கள் என்று கேட்டுப் போகவந்தேன்” என்றான் முதலாளி.

மனத்தில் அந்தப் பெண் பேய்க்கு என்னதான் இருந்ததோ! அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல் அவள் சாவதானமாகப் புன்சிரிப்புடன் சொன்னாள்: “எனக்கும் கடிதம் வந்து பத்து நாள் ஆயிற்று என்று சொன்னேன்.”

கணவன் தனக்குக் கடிதமே எழுதாத குற்றத்தை அவன்மேல், மூன்றாவது மனிதன் எதிரில் சுமத்த மனமில்லாத பத்தினிபோல அவள் நடிக்கிறாள் என்பது ஸாமிக்குத் தெளிவாகவே தெரிந்தது.

“கடையிலே எனக்கு வேலை நிறையச் சேர்ந்திருக்கும்” என்றான் ஸாமி, எதையும் பொருட்படுத்தாத குரலில்.

“இன்று அவசரம் ஒன்றுமில்லை. நாளை வரையில் காத்திருக்கும் எதுவும். கல்கத்தா போன விஷயங்கள் என்ன?” என்று முதலாளி, கடை விஷயமாகத் தவிர வேறு எதிலும் மனத்தைச் செல்லவிடாதவன் போலக் கேட்டான். அவனுக்குத் திருப்தியளிக்கும் என்று எண்ணிய விதத்தில் ஸாமியும் பதிலளித்தான்.

உள்ளே அவன் உடைகளைக் கழற்றிவிட்டு மாற்றிக்கொள்ளப் போனபோது, முதலாளி முன்னறையில் காப்பி சாப்பிட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்க, பவானியும் உடன் வந்தாள். அவளை நிமிர்ந்து ஒரு விநாடி பார்த்தான் ஸாமி. அவள் தனது கண்களைத் தாழ்த்திக்கொள்ளவில்லை; நிமிர்ந்து நேர் பார்வையாகவே அவனைப் பார்த்தாள். ஸாமிதான் தலையைத்தொங்கவிட்டுக்கொள்ள வேண்டியதாக இருந்தது. தவறு செய்தது அவளா? அல்லது, தானேதானா? ஒரே குழப்பமாக இருந்தது ஸாமிக்கு.

“நீ எங்காவது வெளியே போவதாக இருந்தால் போய்விட்டுவா, எனக்கு ஒன்றும் அசௌகரியம் இல்லை” என்றான் ஸாமி. மறைமுகமாக, இந்த வாக்கியத்தின் மூலம், ‘தனக்கு எல்லா விஷயங்களும் தெரியும்; எதையும் தன்னிடமிருந்து யாரும் மறைத்து வைக்கவேண்டிய அவசியம் இல்லை’ என்பதைத் தன் மனைவிக்குத் தெரிவிக்கவே ஸாமி விரும்பினான்.

பவானி அதைப் புரிந்துகொள்ள விரும்பியதாகத் தெரியவில்லை. “எனக்கு எங்கேயும் ஒரு வேலையும் இல்லை” என்றாள், மஹா பதிவ்ரதை மாதிரி. “உடம்புக்கு ஏதாவது அசௌக்யமா? ஏன் பதிலே போடவில்லை? நான் போட்ட கடிதங்களெல்லாம்கிடைத்தனவோ, இல்லையோ?” என்று விசாரித்தாள்.

“கிடைத்தன” என்று சுருக்கமாகப் பதில் அளித்துவிட்டு ஸாமி முன்னறைக்கு நகர்ந்தான்.

முதலாளியுடன் கடை விஷயமாகப் பத்து நிமிஷங்கள் பேசிக்கொண்டிருக்கையில் ஸாமி தீர்மானித்துவிட்டான்—எப்படித் தற்கொலை செய்துகொள்வது என்பதுபற்றி.

8

எப்படி என்பதைத் தீர்மானித்தாகிவிட்டது. எப்போது என்பதைத்தான் உடனடியாகத் தீர்மானித்து ஒரு முடிவுக்கு வர இயலவில்லை.

வாழ்க்கை எப்படித்தான் கசக்கட்டுமே—சட்டென்று அதற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட யாருக்குத்தான் சுலபத்தில் மனம் வந்துவிடும்?

பவானி அழகிதான். படித்தவள்தான். துரோகம் இழைத்துவிட்டாள். அவன் கட்டியிருந்த மனக்கோட்டைகளை எல்லாம் இடித்துத் தகர்த்துவிட்டாள். வாஸ்தவம்தான். ஆனால், அதற்காக உலகமே இருண்டுவிட வேண்டுமா?



உலகிலே ஒரு பவானிதான் உண்டா? இந்தக் கழிசடை இல்லாவிட்டால், உலகிலே வேறு கழிசடைகள் இல்லையா? எல்லோருமே கழிசடைகளாகத்தான் இருக்கவேண்டும் என்று சட்டம் ஏதாவதுண்டா? இந்தப் பவானியைத் தொலைத்துத் தலைமுழுகிவிட்டு, மனக்கோட்டைகளை மறந்துவிட்டு, வேறு ஒரு சாதாரணப் பெண்ணுடன் சாதாரண வாழ்க்கை நடத்த முயல முடியாதா?

தற்கொலை செய்து கொள்வதுதான் சிறந்த வழி என்று ஒப்புக்கொண்டாலும் கூட, உடனே பண்ணிக்கொண்டுதான் ஆகவேண்டும் என்று என்ன கட்டாயம்? வாழ்க்கை எவ்வளவோ இன்பகரமானது. இன்னும் படிக்காத புஸ்தகங்கள் எத்தனை இருந்தன? கண்டுகளிக்காத அழகுகள் எத்தனை இருந்தன? போகாத ஊர்கள் எத்தனை எத்தனை இருந்தன? இவற்றையெல்லாம் விட்டுவிட்டு, ஒரு பெண் பேய் தனக்கு இழைத்த தவறுக்காக உயிரையே மாய்த்துக்கொள்வதா?

பெண்ணின்பம் ஒன்றுதான் உலகில் இன்பமா? வேறு இன்பங்கள் கிடையாதா? வாழ்க்கையை இன்பமுள்ளதாகச் செய்பவை எத்தனை எத்தனையோ இருந்தன! நல்ல கப் காப்பிக்கு ஈடான இன்பம் உலகிலே வேறு ஏதாவதுண்டா! அல்லது புழுக்கம் நிறைந்த இரவில், சட்டுச் சடவென்று மழைத் தூற்றல் போட்டு, புழுக்கத்தை அழிப்பது போன்ற இன்பம் வேறு உண்டா! இன்னும் எத்தனையோ சொல்லலாம். இவ்வளவும் இருக்கையில், ஏன் மனிதன் பெண்ணின்பத்தையே சிறந்த இன்பமாகக் கருதி, பெண்ணைச் சுற்றிச் சுற்றி வந்து, குடும்ப வாழ்க்கையே வாழ்க்கையின் சிகரம் என்று எண்ணி, ஏமாந்து, அவஸ்தைப்படுகிறான்?

ஒரு பெண்ணுக்காக யுத்தங்கள் நடப்பது சரியான காரியம் என்று உலகம் மதிக்கிறது. ஆனால், ஒரு பெண்ணுக்காகத் தற்கொலை செய்துகொள்வது தவறு, தவறு, என்று தனக்குத்தானே ஸாமி சில சமயங்களில் சொல்லிப்பார்த்துக்கொண்டான்.

ஆனால், அந்த முடிவில்லாவிட்டால், நிலையற்ற இந்த நிலைமைக்கு முடிவுதான் என்ன? அவள், பாபத்துக்குப் பச்சாத்தாபப்படுவதுதான் எப்படி? என்று அது ஏற்படும்?

தன் முதலாளியும் தன் மனைவியும் ரகசியத்தில் எந்தெந்த நேரங்களில் எங்கெங்கே போகிறார்கள் என்று வேவு பார்ப்பதைத் தவிர வேறு ஒன்றுமே கையாலாகாத கணவனால் செய்ய முடியாதா?

முடியும்! முடியும்! முடியத்தான் வேண்டும்!

கல்கத்தாவிலிருந்து திரும்பிய எட்டாவது நாள் ஒரு வெள்ளிக்கிழமை. அன்று கடையை விட்டுக் கிளம்பும்போது ஸாமி ரகசியமாக ஒரு புட்டியிலிருந்து ஒரு வெள்ளைப் பவுடரை எடுத்து, ஒரு காகிதத்தில் மடித்துத் தன் சட்டைப் பையில் வைத்துக்கொண்டான். வருகிற வழியில் ஒரு கடையில் வெற்றிலை வாங்கினான், வழக்கப்படி. வெற்றிலையில் இருந்த ஈரத்தில் சட்டைப் பையிலிருந்த பொடியைப் போட்டு சுண்ணும்பு மாதிரிக் குழைத்து வெற்றிலை நுனியை மடித்து எடுத்து வந்தான். கொஞ்சம்தான் இருந்தது பாஷாணம். ஆனால், அது எட்டுப் பேரைக் கொல்லப் போதுமானது என்று தெரியும் ஸாமிக்கு. ஸையனைட் விஷம் அல்லவா அது?

விஷமிருந்த புட்டியை எடுத்துப் பாஷாணத்தை எடுத்த ஸாமி, புட்டியில் தன் விரல்களின் அடையாளங்கூட இல்லாமல் துடைத்துவிட்டுத்தான் புட்டியை மீண்டும் அலமாரியில் வைத்துப் பூட்டினான். ஏன் என்று அவனுக்கே தெரியாது.

9

அன்று வெள்ளிக்கிழமை, ஏதோ விசேஷம் என்று பவானி பிரமாதமாகத்தான் சமையல் செய்திருந்தாள். கிருஹஸ்தாசிரமத்தில் இதில் ஒன்றுக்கும் குறைவு வைத்ததில்லை தன் மனைவி என்று ஸாமி, தித்திப்பான பாயஸத்தைச் சாப்பிட்டுக்கொண்டே கசப்புடன் நினைத்துக்கொண்டான். பாயஸம் என்னவோ அற்புதமாக, அமிர்தமாகத்தான் அமைந்திருந்தது. இவ்வளவு அமிர்தமாக இருந்ததே பாயஸம், அதில் அந்த ஸையனைட்டைக் கலந்து அருந்திவிட்டால்தான் என்ன என்றுகூடத் தோன்றியது ஸாமிக்கு. உயிரைவிட அதற்குள்தான் அவசரம் என்ன? இன்னும் பத்து நிமிஷம், அந்தப் பாயஸத்தின் நினைப்பிலே இன்பத்தைச் சுவைத்துவிட்டுத்தான் உயிரைவிடலாமே! பாயஸம் மட்டுமல்ல—அன்று சமையலே அற்புதமாகத்தான் இருந்தது. பவானி படிப்பில் மட்டும் அல்ல; கிருஹலக்ஷ்மிக்கு வேண்டிய எல்லாக் காரியங்களையுமே நன்கு செய்யப் பழகியவள்தான், கணவனுக்குத் துரோகம் செய்கிற காரியம் உள்பட என்று நினைத்தான் ஸாமி. அதையும் சரியாகத்தானே செய்துவிட்டாள் சதிகாரி!

சாப்பிட்டுக் கையலம்பும் போது "இன்று என்ன விசேஷம்? பாயஸம் எல்லாம்" என்று கேட்டான்.

ஏதோ நோன்பின் பெயர் சொன்னாள். "புருஷனின் ஆயுள் அபிவிருத்திக்காகச் செய்கிற நோன்பு" என்றாள் பவானி.

கடவுளே சிரிக்கிறார், கணவனைத் தன் நிலைமையை எண்ணி, என்று எண்ணினான் ஸாமி. நியாயம்தான்! ஸையனைட் பாஷாணத்தைக் கொண்டுவந்து சுண்ணும்பு மாதிரிக் குழைத்து வெற்றிலையில் வைத்துவிட்டுத் தடவிப் போட்டுக் கொண்டு உயிர் துறக்கத் தயாராக இருந்த கணவனின் ஆயுள் அபிவிருத்திக்காக, இந்த ஸதி, நோன்பிருக்க வேண்டியது நியாயம்தான்! நியாயம் தான்!

கையலம்பிவிட்டு வந்து ஈஸிசேரில் சாய்ந்துகொண்டான் ஸாமி. சாப்பிட்டவுடன் வெற்றிலை போட்டுக்கொண்டு விடுவதுதான் சாதாரணமாக அவன் வழக்கம்.

"மாம்பலத்துப் பெண்ணை விட
மயிலாப்பூர்

"ஏண்டி, சும்மா படிக்கவிடாம
கத்திண்டு......!"

"நானுந்தான் கேட்கிறேன்.........கேட்டுண்டே இருக்கேன்...ஒரு பட்டுப்புடவைக்கோ அல்லது தங்கத்திருகா

ஆனால் இன்றைய தாம்பூலம் உயிரை முடிக்கும் தாம்பூலமாகவன்றோ இருக்கும். அதை இரண்டொரு நிமிஷம் கழித்துத் தான் போட்டுக்கொள்ளலாமே,

இன்னொரு விஷயம் பற்றியும் அவன் இதுவரை எவ்வித முடிவுக்கும் வரவில்லை. ஏதாவது கடிதம் எழுதி, விஷயத்தை விளக்க முயலுவதா, வேண்டாமா? கடிதம் எழுதுவதானால் என்ன எழுதுவது? "பவானிக்குப் பிறக்கப்போகும் குழந்தை என்னுடையதல்ல—அதற்காக நான் சையனைட் சாப்பிட்டுவிட்டேன்" என்று எழுதலாம். "வாழ்க்கை வெறுத்துவிட்டது எனக்கு. அதற்கு அவள்மேல் பிசகில்லை" என்று எழுதலாம். "என் மனைவியின் குற்றங்களுக்கு நான் பிராயச்சித்தம் செய்துகொள்ளுகிறேன்" என்று எழுதலாம். "என் சாவுக்குக் காரணம் என் கடை முதலாளிதான். அவனைச் சிறையிடுங்கள்" என்று எழுதலாம். "காதலுக்குப் பலியானவன் நான். எனக்கு ஒரு சமாதி எழுப்புங்கள்" என்று எழுதலாம்.

"இன்று பாயஸம் ரொம்ப நன்றாயிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே பவானி சமையலறையில் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். அவளுக்கு எதுவும் பதில் சொல்லவில்லை ஸாமி.

ஈஸிசேரில் சாய்ந்துகொண்டே சிந்தனையில் ஆழ்ந்திருந்தான் ஸாமி. கடிதம் எதுவும் எழுதிவைப்பது அநாகரிகம் என்று பட்டது அவனுக்கு. ஏனென்றால் அந்தக் கடிதம் எப்படியும் போலீஸாரிடம் போகும். பொது ஜனத்துக்கும் வெளியாகிவிடும். தனக்கும் தன் மனைவிக்கும் இடையில் இருக்கவேண்டிய பரம ரகசியமான, பிறரைப் பாதிக்கக் கூடாத ஒரு விஷயம், ஊராரைப் பாதிக்கும்; சிரிப்புக்கிடமாகும். அப்படியெல்லாம் இடம் தருவதைவிட உயிருடன் இருந்துவிடச் சம்மதிப்பதுகூடத் தேவலையே என்று எண்ணினான் ஸாமி. கடிதம் ஒன்றும் எழுதி வைக்கக்கூடாது.

பவானி சாப்பிட்டு எழுந்ததும் அவளைக் கூப்பிட்டு "இதோ பார்! இது சையனைட், கொடிய விஷம். நான் இதை வெற்றிலையில் தடவி மென்று விடுகிறேன். இதோ மென்றுவிட்டேன். இந்த என் பார்வையை உன் ஆயுள் உள்ளவரையில் ஞாபகம் வைத்துக்கொள். உன் புருஷன் என்று நான் இருந்ததை சிலசமயம் ஞாபகப்படுத்திப் பார்" என்று சொல்லலாம். ஆனால் சையனைடை மென்ற பின் இவ்வளவு சொல்ல அவகாசம் இராது; நாக்கில் அது பட்டவுடனேயே பிராணன் போய்விடும் என்று தான் எல்லாப் புஸ்தகங்களிலும் எழுதியிருக்கிறது.

இப்படிப் பலவாறாகச் சிந்தித்துக் கொண்டே ஸாமி, நன்றாகச் சாப்பிட்ட மயக்கத்தில், ஈஸிசேரில் சாய்ந்தபடியே கண்களை மூடிவிட்டான். எத்தனை நேரம் அப்படியிருந்தானோ தெரியாது. ஏதோ சப்தம் கேட்டு அவன் கண் விழித்துப் பார்த்த போது, அவன் மனைவி பவானி மேஜையண்டைநின்று வாயில் வாசனைப் பாக்கைப் போட்டு மென்று கொண்டே, வெற்றிலையில் சுண்ணும்பு தடவிக் கொண்டிருந்தாள்.

திடுக்கிட்டெழுந்த ஸாமி, வாசற் கதவைத் திறந்து கொண்டு ஒரு வார்த்தையும் பேசாமல் வீட்டைவிட்டு வெளியேறிவிட்டான். நேரே கடைக்குத்தான் போனான். அங்கு வந்திருந்த அவன் முதலாளி, அவனுக்கு ஏழெட்டு மணி நேரத்துக்குத் தாங்கக் கூடிய அளவுக்கு வேலைகளைச் சொல்லி விட்டு, வெளியேறினார். ஸாமி கடைக் காரியங்களை என்றுமில்லாத அக்கறையுடன் அன்று கவனித்துக்கொண்டிருந்தான்.

கடையில் டெலிபோன் மணி அடித்தது. மனத்தையும், கையையும் திடப்படுத்திக்கொண்டுதான், ஸாமி ரிஸீவரை எடுத்தான். அப்படியும் அவன் முதல் 'ஹலோ' வெறும் காற்றாகத்தான், சப்தரூபமில்லாமல் வெளியே வந்தது. ஆனால் போன் செய்தது யாரோ ஒரு வியாதியஸ்தன். அவசரமாக ஒரு பாட்டில் மருந்தை இந்த இடத்தில் கொணர்ந்து கொடுத்துவிட்டுப் பணம் வாங்கிப் போக வேண்டும் என்று போன் செய்தான். அதற்காகவே அவர்கள் கடையில் பல ஆட்களை நியமித்திருந்தார்கள். மருந்தை அனுப்பிவிட்டு ஸாமி கணக்குகளை எழுதுவதில் முனைந்தான். வேறு எதையும் பற்றிச் சிந்திக்கவே அவனுக்குத் தைரியமில்லை.

அவன் எதிர்பார்த்த தகவல் நாலரை மணிக்குத்தான் அவனுக்கு எட்டியது. அதுவும் போன் மூலம் எட்டவில்லை. நாலு போலீஸ் ஜவான்களும், ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரும் திடுதிப்பென்று நேரிலேயே வந்துவிட்டார்கள். ஸாமிக்கு அவர்கள் நடந்த விஷயங்களை எல்லாம் கதை கதையாகச் சொன்னார்கள். அவன் கடை முதலாளி, அவன் மனைவியைப் பல வாரங்களாகவே சுற்றி வந்து உபத்திரவித்துக்கொண்டிருந்தானும். அவள் அவனுக்கு மசிய மறுக்கவே, அவளை என்னவெல்லாமோ பயமுறுத்தியிருக்கிறான். பல நாளாக நடந்து வந்த இந்த நாடகம், இன்று சோகத்தின் உச்சிக் கட்டத்தை எட்டிவிட்டது. மனைவிகளில் சிறந்தவள் ஸதி என்று பெயரும், புகழும் பெறக்கூடிய வகையில், இந்த சினிமா யுகத்திலே, அவன் மனைவி உயிருக்கும் துணிந்து, அந்த முதலாளியின் வற்புறுத்தல்களை மறுதளித்துவிட்டாள். உயிரையே துறந்துவிட்டாள் "எல்லோருக்கும் இம்மாதிரி உத்தமியான மனைவி வாய்ப்பது அரிது. எங்கள் அனுதாபத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று இன்ஸ்பெக்டர் ஸாமிக்கு ஆறுதல் கூறினார்.

எல்லோருடைய அனுதாபத்தையும் ஏற்றுக்கொள்ளத் தயாராகவேதான் இருந்தான் ஸாமி. ஆனால்நடந்ததுஎன்ன என்பதுதான் அவனுக்கு வெகு நாள் வரையில் சரிவர விளங்கவில்லை. இறந்து கிடந்த பவானியைக் கொன்றது தன் முதலாளிதான் என்று போலீஸ்காரர்கள் துப்புத் துலக்கிவிட்டார்கள் என்று சற்று நேரத்தில் அவனுக்கு விளங்கிவிட்டது. அந்த முடிவை மாற்ற அவன் எந்த

"இந்தாடா குழந்தே, அப்பா ஊருலேருந்து இன்னும் வரல்லேன்னு சொல்லு!"

'உங்க அம்மாவந்தால் 'கக்கேபுக்கே'ன்னும, நான் சொல்றதுபோல அடிச்சுப் பேசுங்கோ, தெரிஞ்சுதா?"

"இது என்ன 'டிரஸ்' வேண்டியிருக்கு? 'ஒழுங்கா' லக்ஷணமா 'புடவை'கட்டிண்டு வெளியே போ.........இப்படியே போகாதே!"

விதத்திலும் உதவி செய்யத் தயாராக இல்லை. பெண்டாட்டி இறந்துவிட்டாள் என்று கேள்விப்பட்டது முதலே, அந்த அதிர்ச்சி தாங்காமல் சித்தஸ்வாதீனம் அற்றுவிட்டவன்போல அவன் மிரள மிரள விழித்துக்கொண்டு "பாயஸம் ரொம்ப நன்றாக இருந்தது" என்று சொல்லி, நாக்கைச் சப்புக் கொட்டத் தொடங்கிவிட்டான். வேறு எதுவும் அவன் வாயிலிருந்து வெளிவரவில்லை. ஸதி பவானியைப் பற்றி இந்தக் காலத்து பௌராணிகர்களான பத்திரிகைக்காரர்கள் பத்தி பத்தியாக எழுதி, திருப்தியடைந்தார்கள். கடை முதலாளிதான் நடந்ததற்கெல்லாம் பொறுப்பாளி. அதுவும் அவனுக்கு ஸைனைட் கொடுத்து கொலைக் குற்றத்தைச் செய்தவன் அவன் தான் என்பதில் போலீஸுக்கோ, அந்தக் கேஸை நடத்திய நீதிபதிக்கோ சந்தேகமே வரவில்லை. மருந்துக்கடை முதலாளிக்கு ஸைனைட் கிடைக்காமலா போய்விடும்? சுலபமாகவே கிடைக்குமே என்பதுதான் எல்லோருடைய வாதமும். அவனுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது நியாயமே என்று தான் எல்லோரும் எண்ணினார்கள். உலகத்தின் தீர்ப்பை மாற்ற முயல ஸாமிக்கு என்ன பைத்தியமா? தவிரவும் அவன் தான் அன்று முதலே சித்தஸ்வாதீனமேயற்றுப் போய்விட்டானே!

ஃ ஃ ஃ

"அவ்வளவுதான் கதை" என்றான் சாமா.

"சௌகர்யமான முடிவுதான்" என்றேன் நான்.

"வாழ்க்கையில் இப்படியும் நடப்பது உண்டுதானே?" என்றான் ராமு.

"வாழ்க்கையிலே இந்த மாதிரி அதிகப்படியான நிகழ்ச்சிகள் நடந்தால் நல்லதுதான் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது எனக்கு" என்றான் வாஸு.

"இது நிஜமாகவே நடந்த விஷயம் என்று நான் அத்தாட்சிகளுடன் தேவையானால் நிரூபிக்கத் தயார்" என்றான் சாமா.

"உன் வார்த்தைகளை நம்ப நாங்கள் மறுக்கவில்லை" என்றான் மணி.

"ஸாமிக்குச் சித்தப்பிரமை பல வருஷங்களுக்கப்புறம்தான் தெளிந்தது. அவன் இப்போது படிக்காத ஒரு பட்டிக்காட்டுப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டு சென்னையிலேயே ஒரு உத்தியோகம் பார்த்துக்கொண்டு சௌக்கியமாக இருக்கிறான். அவனை எனக்கு நன்றாகவே தெரியும்" என்றான் சாமா.

"இரண்டாவது மனைவி. . ."

"ரொம்பவும் நல்ல பெண். தன் கணவனின் மூத்த பெண்டாட்டி ஸதி என்று பெயரும், புகழும் பெற்றுக் கணவனுடன் வாழ்ந்ததைப் பக்தியுடன் தினம் சிரவணம் செய்துகொண்டு, மிகவும் அடக்கமாக ஊரார் புகழக் குடித்தனம் நடத்தி வருகிறாள். சீதை என்கிற பெயர் அவளுக்குப் பொருந்தும் என்று எல்லோரும் சொல்கிறார்கள்" என்று முடித்தான் சாமா.

"மணி பன்னிரண்டாகப் போகிறது போவோம்" என்று நாங்கள் கிளம்பினோம்.

★

எழுத்துலகம்

எஸ். ராஜா

ரவீந்திர நாத் தாகூருக்கு 1913-ல் நோபல் இலக்கியப் பரிசு அளிக்கப்பட்டபோது, மேலை நாட்டில் எல்லோருமே வியப்பில் மூழ்கினார்கள் என்றுதான் சொல்ல முடியும். பலர் எதிர்த்தே ஏதேதோ சொன்னார்கள்.

"இந்த மனுஷ்யனுடைய பெயரே வாயில் நுழையவில்லையே! இவர் அப்படி என்ன கவிதை எழுதியிருக்கப் போகிறார்?" என்று பல பாஷைகளில் இலக்கியப் பத்திரிகைகள் எழுதினவாம்.

1913-ல் வெளியான "யார் யாரில்" தாகூரின் பெயர் காணப்படவில்லை. 1916-ல் இங்கிலாந்தில் வெளியான கேம்பிரிட்ஜ் ஆங்கில இலக்கிய சரித்திரத்திலே தாகூரின் பெயர் சேர்க்கப்படவில்லை. "ஆங்கிலோ-இந்திய இலக்கியத்தில் சிறந்த சிருஷ்டிகர்த்தாக்கள் எல்லோருமே ஆங்கிலேயர்கள்தான்" என்று எழுதியது அந்த நூல். (பாகம் 14.)

டபிள்யூ. பி. யேட்ஸ், தாகூருக்கு அந்தக் கவிதைகளை ஆங்கிலத்தில் எழுதிக் கொடுத்தார்; அதனால்தான் அவருக்கு நோபல் இலக்கியப் பரிசு கிடைத்தது என்று பலர் சொன்னார்கள். (யேட்ஸுக்கு இந்த நோபல் இலக்கியப் பரிசு 1924-ல்தான் கொடுக்கப்பட்டது.)

வெள்ளையன் அல்லாத ஒருவனுக்கு முதல் தடவையாக எழுத்துலகத்தின் இன்றைய மிகச் சிறந்த பரிசு அளிக்கப்பட்டதைக் கண்டித்து, பல தேசத்துப் பத்திரிகைகள் கண்டனங்கள் எழுதின.

அரசியல் காரணங்களுக்காக அவருக்கு நோபல் பரிசு தரப்பட்டது என்று சொன்னவர்களும் உண்டு. ஸ்வீடன் தேசத்திலிருந்து வந்த ஒரு ராஜகுமாரன், சில காலம் கல்கத்தாவில் தாகூரின் மாளிகையில் தங்கியதாகவும், ஆங்கிலேயர்களை எதிர்த்துப் புரட்சி செய்து, இந்தியாவை ஜெர்மனியுடன் இணையச் செய்ய தாகூர் உதவுவதாக வாக்களித்ததாகவும், அந்த ஒப்பந்தத்தின்போில் அந்த ஸ்வீடன் ராஜகுமாரன் அவருக்கு நோபல் இலக்கியப் பரிசை வாங்கித் தந்ததாகவும் ஒரு பத்திரிகை கூறிற்று.

அந்த வருஷம் நோபல் இலக்கியப் பரிசு பெற லாயக்கானவர்கள் என்று சிபார்சு செய்யப்பட்டுச் சிந்திக்கப்பட்டவர்கள் தாகூரைத் தவிர மூவர். பீடர் ரொஸக்கர் என்று ஒரு ஜெர்மனியக் கவி-இவர் சில நாவல்களும் எழுதியிருக்கிறார். ஆனால், இவர் பெயர் இப்போது யாருக்கும் தெரியவே தெரியாது என்றுதான் சொல்லவேண்டும். இரண்டாவதாக, தாமஸ் ஹார்டி என்கிற ஆங்கில நாவலாசிரியர். இவருக்கு அந்தப் பரிசு கிடைக்கவேயில்லை. மூன்றாவதாக, அனடோல் பிரான்சு என்கிற பிரெஞ்சு மேதை. அனடோல் பிரான்சுக்குப் பத்து வருஷங்களுக்குப் பிறகு, அவர் சாவதற்குப் ஒரு வருஷம் முன்னதாக, நோபல் பரிசு கிடைத்தது.

ரவீந்திர நாத் தாகூருக்கு நோபல் இலக்கியப் பரிசு கிடைத்ததாகப் பத்திரிகையில் பார்த்துவிட்டு, தமிழ் நாட்டிலிருந்து ஒரு கவி "அந்தப் பரிசு பெற என்ன செய்ய வேண்டும்? யாருக்கு மனுச் செய்துகொள்ள வேண்டும்? எப்படிச் செய்ய வேண்டும்?" என்றெல்லாம் கேட்டு எழுதினதாக, தாம்ஸன் தன்னுடைய 'தாகூர் ஜீவிய சரித்திர'த்தில் சொல்லியிருக்கிறார். அப்படி எழுதிய அந்தத் தமிழ்க் கவி யார் என்பது தெரியவில்லை.

ஃ ஃ ஃ

உலக இலக்கியத்திலே அழகேயில்லாத இலக்கிய ஆசிரியன் யார் என்று கேட்டால், சிறிதுகூடத் தயங்காமல் ஆலிவர் கோல்ட்ஸ்மித் என்று சொல்லிவிடலாம்.

"ஆங்கில எழுத்தாளர்களிலே எல்லோருக்கும் பிரியமானவர்" என்று கோல்ட்ஸ்மித்தைப் பற்றி ஒரு நூறு வருஷங்களுக்குப் பின் தாக்கரே என்கிற ஆங்கில நாவலாசிரியர் சொன்னார். தாக்கரே இதைச் சொல்லி இப்போது நூறு வருஷங்களுக்கு மேலாகிவிட்டது.

தெருவோடு போய்க்கொண்டிருந்த இரண்டு மாஜி அழகிகள் ஒரு நாள் கோல்ட்ஸ்மித்தை நிறுத்திப் பின்வருமாறு சொன்னதாக ஒரு கதையுண்டு: "ஐம்பது வருஷங்களாக நாங்கள் ஐரோப்பா பூராவும் சுற்றியிருக்கிறோம். பல பாஷை ஆசிரியர்களைச் சந்தித்திருக்கிறோம். ஆனால், தங்களைப்போல கோர முகமுள்ள ஆண் ஆசிரியனை



எங்கும் சந்தித்ததில்லை. அதுபற்றி நாங்கள் எங்கள் கைகளையே குலுக்கிக் கொண்டு போகிறோம்."

அவர் அழகில்லாதவர் என்பது மட்டுமல்ல-அதிர்ஷ்டமும் சிறிதும் இல்லாதவர். "கவிகளிலே இதுவரை இப்படி நம்பிக்கைக்குப்பாத்தரிமானவர்வேறுயார்?" என்று கோல்ட்ஸ்மித்தின் நண்பன் ஜான்ஸன் எழுதினார். "ஆலிவர் சாகும்போது இரண்டாயிரம் பவுன் கடனை வைத்து விட்டுப் போயிருக்கிறானே-அவனை நம்பி யார் இவ்வளவு பணம் கொடுத்தார்கள்? ஆச்சரியம்!"

கோல்ட்ஸ்மித் சாகும்போது அவருக்கு வயது நாற்பத்தியாறு. "உன் மனசில் நிம்மதியிருக்கிறதா?" என்று கேட்ட டாக்டருக்கு "இல்லை" என்று பதில் அளித்துவிட்டு, இறந்தார் கோல்ட்ஸ்மித். அவர் எழுதிய விகார் ஆஃப் வேக்ஃபீல்டு எனும் நாவல் போல ஒரு நாவல் எழுத வேண்டும் என்கிற உத்சேத்துடன்தான் பி. ஆர். ராஜம் அய்யர்

காய கல்பம்

'தூரன்'

எனக்குள்ள விசித்திர சிநேகிதர்களுள் சேஷகண்டம் ஒரு அதிவிசித்திரப் பிரகிருதி.

அவனுக்கு வயது நாற்பத்திரண்டு ஆகிவிட்டது. ஆயினும் அவன் மணப் பிணைப்பில் சிக்குறாமல் ஏகாங்கி வாழ்க்கை போகத்திலேயே இருந்து வந்தான். சில சமயம் அவனைப் பார்க்க எனக்குப் பரிதாபமாக இருக்கும், அதாவது என் வீட்டில் இன்பம் நிலவ இல்லாள் அருள் புரியும்போது. பல சமயம் அவன் மீது எனக்குப் பொறாமை மூளும், அதாவது என் கிருஹிணி அப்படி ஒரு மாதிரியாக நடந்து கொள்ளும் போது.

சேஷகண்டம் பார்வைக்கு முப்பதுக்கு மேல் மதிக்க முடியா முறுக்குத் தளரா வாலிபனாகவே தென்படுவான். அவன் கிராப்பில் ஒரு மயிர் நரை கண்டதாகத் தெரியாது. கண்ணாடி அணிந்து அவன் நான் பார்த்தது இல்லை. ஒரு நாள் தவறாமல் அவன் க்ஷவரம் செய்துகொண்டு தான் தன்னுடைய ஓட்டல் அறையை விட்டு வெளிப்படுவான். சேஷகண்டம் என்ன லேகியங்கள் சாப்பிடுகிறானோ, அல்லது விசேஷமான யாருமறியாத யோகாசனங்கள் போடுகிறானோ, மார்க்கண்டேய உபாஸனை அப்யஸிக்கிறானோ, இல்லை காயகல்ப விகற்பங்கள் ஏதாவது தொடர்ந்தேர்த்தியாகச் செய்துகொண்டு வருகிறானோ என்று நானும் ஆச்சரியப்பட்டதுண்டு என்பதல்லாமல், அவனைக் கிண்டலாகவும், கேளிக்கையாகவும் அவனுடைய யௌவனப் பாதுகாப்பு இரகசியத்தின் சூட்சுமத்தை அறியக் கேட்டும் இருக்கிறேன். ஆனால், அவன் தன்னுடைய ரகசியத்தை என்னிடம் பகிர்ந்ததே கிடையாது.

உடை விஷயத்திலோ, அவன் மிகவும் நாகரிகஸ்தன். அன்றாடம் சலவைதான் அணிகிறது. கிராப்பை வாராமல், கலைந்த தலையுடன் அவனை ஒரு நிமிஷம்கூட நான் பார்த்தது இல்லை.

ஊரில் பல பேர்கள் அவர்களுடைய கற்பனைக்கு எட்டியபடி சேஷகண்டத்தைப் பற்றிப் பேசிக்கொண்டார்கள். அவன் அலி என்று சிலர் சொன்னார்கள். அவன் ஊரில் ஏதோ மிகப் பெரிய மனிதனின் மனைவியுடன் கபடக் காதல் நடத்தி வருகிறான் என்றார்கள். ஊர்க்காரர்கள் மேலும் தப்பில்லை. அவனுக்கு நல்ல வாழ்க்கை வாழக்கூடிய அளவிற்கு வருமானம் இருந்தும், அவன் இல்லறம் நடத்தாது ஓட்டலறத்துடன் திருப்தி கொண்டிருப்பது, ஜனங்களின் குருட்டு யோசனையைக் கண்டபடியெல்லாம் அலையவிட்டது. அவன் வாலிபனாக இருக்கும்போது காதலித்து வந்த பெண், அவனை ஏய்த்துவிட்டு வேறு ஒருவனை மணந்து கொண்டதால், பெண்ணின வெறுப்பாளியாகிவிட்டான் என்ற ஒரு புராணத்தையும் நான் சிரவணம் செய்திருக்கிறேன். எனக்கும் அவனுடைய நீடித்த பிரம்மசர்யம் மர்மமாகவே இருந்தது. பெண் குலத் துவேஷியாக அவன் தென்படவேயில்லை. பெண்களுக்கு அவன் மரியாதையும், மதிப்பும், உதவியும் பேச்சிலும், செய்கையிலும் கொடுத்தே வந்தான்.

ஒரு நாள் அவன் எல்லை மீறிய வியப்பை எனக்குத் தந்தான். என் வீட்டிற்கு வந்த அவன், பழுப்புநிற நிஜாரும், நீலக் கோட்டும், சிவப்பு டையுமாக, துணிகளின் இஸ்த்திரி வாகில் சற்றும் கோணலில்லாமல் காட்சியளித்தான். பளபளவென்று வாரப்பட்டிருந்த கிராப் பசை எண்ணெயில் நன்கு படியச் செய்யப்பட்டிருந்தது. அழகான பல் வரி

ளை வெட்கின சிரிப்பில் அவன் காட்டிப் பசவாரம்பித்தான்.

"நான் உனக்குத் தூக்கிவாரிப் போடும் ஷிச் செய்தி கொண்டு வந்திருக் றேன்" என்றான் சேஷகண்டம், கண் டி முன் நின்று கழுத்து டையின் ருக்கைச் சரி செய்து.

புரியா விழியுடன் பெரு விளங்காய் ருண்டையளவு முழித்து, அவனை நான் நாக்கினேன்.

"இப்போது நீ போட்டுக்கொண்டிருக் கும் துணிகளை மாற்றிக்கொண்டு னக்கு இருப்பதற்குள் உசந்த நிஜார் ட்டை, பூட்ஸுடன் கிளம்பு" என்று சொல்லியபடி, முகம் காட்டும்படி பள ளப்படிக்கப்பட்ட தன் பாதுகையில் தாவது தூசி ஒட்டியிருக்குமோ என்ற சம்சயமுடன் அதன்மேல் பரிசீலனை நோக்கு விடுத்தான்.

"என்ன சமாசாரம்?"

"நல்ல சமாசாரம்தானடா. கிளம்பு. கேள்விகள் கேட்காதே. லேட்டாரது. அவள் காத்திண்டிருப்பள்" என்றான்.

"அவள்?" என் குரலில் இச்சொல் வெளிப்பட்ட பாவத்தைக் கற்பனையுள்ள வர்களுக்கு விட்டுவிடுகிறேன்.

ஒரு விநாடிக்குள் என் மனதில் கோடி ஹேஷ்யங்கள் குஞ்சு பொரித்து வளைய வந்தன. அரைத் தூக்கத்தில் ஆத்மாவை வேடிக்கை பார்க்கும் சதஸாக ஒதுக்கி விட்டு, மனம் அதன் எல்லையற்ற அரங்கில் நாடகங்கள் நடத்திக்கொண்டே போகுமே, அந்த மாதிரியான அரை விழிப்பில் நான் பந்தப்பட்டுக் கிடக் கிறேனோ என்ற முழு சம்சயம் தெரிய வில்லை. அதற்குள், "நான் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறேன்" என்று அவன் சொன்னதும், உலகம் மாயை என் பதற்கு இதைவிட வேறு அத்தாட்சி என்ன வேண்டுமென்று தோன்றியது.

அதிசயங்களின் உற்பத்திக்கு உலகில் முடிவேயில்லை என்று ஒரு பெரியார் விளம்பியிருக்கிறார். ஆகையால், நீடித்து அதிசயப்பட்டுக்கொண்டிருப்பதில் பய னில்லை என்று தீர்மானித்து, முகத்தின் முத்திரையை மாற்றிக்கொண்டேன்.

"உட்கார்ந்து இருட்டாய் இருக்கிற விஷயத்தை விளக்கினால், நான் சுவா தீனத்துடன் பேச முடியும்" என்றேன்.

ஆபீஸ் ஸ்தாபிதம்: 1924

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு வருஷ பலன் மாத வாரி எழுத ரூ. 5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூபா. 2. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

பண்டித காழியூர்

ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்

தபோநிதி

தியாகராய நகர், மதராஸ்-17

தபால் பெட்டி 1417

"நடந்துகொண்டே விளக்குகிறேன். நாழியோ ஆகிறது. நல்ல உடை அணிந்து சட்டுபுட்டுனு புறப்படு" என்றான் சேஷகண்டன் பரபரப்புடன்.

இந்த அதிசய நாடகத்தின் ஆரம்பத்தையும், அதன் கொடுமுடியையும் இணைக்கும் வரலாற்றின் சுஷ்க்கத்தை டாக்ஸியில் போய்க்கொண்டே இன்பலாகிரியில் நீர் யானைபோல் முழுகி முழுகி எழுந்துகொண்டிருந்த சேஷகண்டத்திடம் இருந்து அறிவது, பிரம்மப்பிரயத்தனம், பகீரதப்பிரயத்தனம் இவைகளையெல்லாம் உவமைச் சொற்களுக்கு உதவாக்கறையாக அடித்துவிட்டது.

சில நாட்களுக்கு முன் அவன் ஒரு ஜவுளிக்கடையில் ஒரு யௌவன மாதைக் கண்ணால் பார்க்க நேர்ந்தது. இதுவரை அவன் மனம் அவன் மேல் அவ்வளவு கொடுங்கோல் செலுத்தியதே கிடையாது. அந்த யௌவன மாதின் மை தீட்டிய நீண்ட நயனங்கள் இரண்டும் அவனை ஒரு விநாடி பார்த்து ஒரு விநாடி பாராமல் மறு விநாடி பார்த்து தமக்கு உடைத்தான அன்னானை வெகு நேரம் கடையில் பின்தங்கப் பலவந்தப்படுத்திக் கொண்டிருந்து. கண்கள் சிபார்சை மனங்கள் ஏற்றுக்கொண்டு, அவர்கள் நெருங்கி ஏதோ ஒரு காரணத்தை வியாஜமாக வைத்துக்கொண்டு பேசத் தொடங்கினர். கடை கட்டும் சமயம் வரை அவர்கள் தங்கத் தயங்கிவிட்ட தால் சேஷகண்டம் நூற்றிமுப்பத்து ஏழே முக்காலே அரைக்கால் ரூபாய் பில்லைத் தானே தீர்த்துவிட்டு இருவரும் கடையிலிருந்து வெளிப்பட்டனர்.

அவளுக்கு வயது இருபத்தெட்டு இருக்கலாம், அதிகமாய் மதித்தாலும். தையல் வேலையில் அவள் டிப்ளோமா பெற்றவள். பொதுநலக்கழகம் ஒன்றில் அவள் தையல் வேலை உபாத்தியாயினியாக இரு நூறு ரூபாய் சம்பளத்தில் பொழுது போக்குக்காக ஈடுபட்டிருக்கிறாள். பணப் பற்று பிறவியிலேயே உள்ளவள்தான். தலைகால் தெரியாமல் அவன் அவளைக் காதலிக்கிறான் என்றால், அவளோ திக்கு திசை தெரியாமல் அவனைக் காதலிக் கிறாள். உலகமும், வாழ்வும், புது அர்த்தம் பெற்று, புதுச் சுவை பெற்று, பாஷ்யத் துடன் படிக்கும் காவியம் போல அவளுடன் இருக்கையில் இன்பம் சுரக்கின் றது. ஏதோ ஒரு வீம்பிற்காக விவாகத்தை அணுகாமல் எட்டி ஒதுக்கி வைத்திருந்தான். மோட்டார் ஓட்டியின் காதில் விழாமல் அடக்கிய குரலில் பித்தன்போல் அவன் உணர்ச்சி வர்ணனை செய்தான். மடை திறந்த அணைபோலப் பொங்கிப் பொங்கி வந்தன அவன் வாக்யங்கள்.

டாக்ஸி மூன்று மாடிகள் உள்ள கட்டிடத்தின் முன் நின்றது. சேஷகண்டத்தைக் கண்ட லிப்ட்மான் (தூக்கிச் சேவகன்) அறிந்து முறுவலித்து, நாங்கள் சொல்லாமலேயே இரண்டாவது தளத்தில் தூக்கியை நிறுத்தி, கதவைத் திறந்து எங்களை வெளியனுப்பிவிட்டு, தூக்கியை இறக்கிக்கொண்டு போய்விட்டான்.

சேஷகண்டம் மாடியின் இடைவழி பித்தானை அழுத்தி, கூப்பிடு மணியை ஒலித்தான்.

கதவு திறந்தது. வணங்கிச் சிரித்து வரவேற்ற மாது, நாங்கள் நுழைய இடம் விட்டு ஒதுங்கி, நாங்கள் புகுந்ததும் கதவைச் சாத்திவிட்டு, எங்களைச் சோபாக்களில் அமரச்செய்தாள்.

செல்வப்பாணியில் அவ்வறை அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஹாலின் நடுவில் கம்பளத்தின் மீது வட்டமாக ஐந்து சோபாக்கள்; அவை நடுவே ஒரு வட்ட மேஜை. கதவுகளும், ஜன்னல்களும் பூ வேலை, பின்னல் வேலைகள் செய்யப்பட்ட மஞ்சள் துணிப் படுதாக்களால் கொசுவி அழகாக இருந்தன. சுவர் மூலைகளில் கோபுர மேஜைகளில் உடுப்புகள் போட்ட பொம்மைகள் நின்றும் வீற்றும் இருந்தன. மெருகிடப்படாப் பொருளே அவ்வறையில் இல்லை.

"இவர்தான் என் சிநேகிதர் பிக்ஷாடணம். இவர் முன்புதான் நம் திருமணம் நடக்கப் போகிறது" என்று சேஷகண்டம் எனக்குத் தெரியாத உண்மையையும் அந்த மாதையும் ஒருமுகமாக அறிமுகப்படுத்தினான்.

அந்த அம்மாள், நன்றிச் சிரிப்பினைப் பூச்சிட்ட இதழ்களில் ஏற்றி, ஒரு நமஸ்தேயும் போட்டுவிட்டு, சோபாவில் தன் மெல்லிய பாரத்தை அமர்த்தினாள்.

"இவள்தான் நவீனா. என்னை மணக்க ஒப்புக்கொண்டவள்" என்று சேஷகண்டம் எனக்கு அவளை அறிமுகப் படுத்தினான்.

நானும் ஒரு அசட்டுச்சிரிப்பை மூஞ்சியில் கூத்தடிக்க விட்டுக்கொண்டு அறையைப் பரிசீலனை செய்வதைவிட்டொழித்து, அன்னாளைக் கவனித்தேன்.

நவீன கேச கிருத்திரிமங்களுடன் வெண்ணுடையுடுத்தியிருந்த அம்மாதின் பூச்சுக்கள் அவள் வயதைப் பொய் கூறினாலும், அவளுடைய மழமழப்பு இழந்த விரல்களில் சுருக்கங்கள் அவள் வயது முப்பத்திரண்டுக்கு மேல் என்று பறையடித்தன. என் கண் காணக்கூடியதைச் சேஷகண்டத்தின் கண்கள் காண இயன்றால், காதலுக்குக் கண்ணில்லை என்ற நிந்தை அநீதியாகுமல்லவா? கடியாரம் இடக் கையிலும், கண்ணாடி வளையல்கள் வலக் கையிலும், பொற் சங்கிலி மெல்லிய தாய் கழுத்திலும் திகழ்கின்றன. வெள்ளை கன குதி செருப்புகள் அவளுடைய பாதங்களைத் தாங்கின.

கூச்சம் மூவரையும் பின்கட்டு முறையாய்ப் பற்றியிருந்ததால், பேச்சு நெகிழவில்லை.

"நவீனா, நாம் கல்யாணம் செய்துகொள்ளுமுன் சில உண்மைகளை நான் உன்னிடம் சொல்லிவிடுவது நல்லது" என்று கனைத்துக்கொண்டு சேஷகண்டம் ஆரம்பித்தான்.

"நானும் அதையே நினைத்தேன். பூரி ஜெகன்னாத் பிம்பம் போல், உண்மை வேம்பால் ஆகியது. ஆகையால், கொஞ்சம் டீயும், கேக்குகளும் சாப்பிட்டுவிட்டு, உண்மையைப் பஹிரங்கம் செய்யலாம்" என்று சிரிப்புடன் செப்பிய வண்ணம் அவள் எழுந்து, "எக்ஸ்கியூஸ் மீ" என்று சொல்லிவிட்டு, அந்த ஹாலின் வடவண்டை கதவைத் திறந்துகொண்டு

... திரும்... ...ளில் கையில் பீங்கான் தட்டில் பீங்கான் பான பாத்திரங்களும், ஆவி பறக்கும் டீயுமாக வைத்து எடுத்து வந்த நவீனா, தட்டை மேஜை மீது சமர்ப்பித்து, தானும் திரும்பவும் சோபாவில் அமர்ந்தாள். தட்டில் ஒரு பிளேட்டில் கேக்குகளும், பிஸ்கட்டுகளும், இன்னுமொரு தட்டில் காரங்களும் இருந்தன. நவீனாவின் வேண்டுகோள், பார்வை சமிக்ஞைக்கு உடன்பட்டு கேக்குகளை வாய்க்குள் ஏவினேன். டீ முடியும் வரை எங்கள் சம்பாஷணை பாகப் புகழ்ச்சியைப் பற்றியதாகவே வெகுவாகச் சுற்றி வந்தது. புகழ்ச்சியைக் கேட்ட நவீனாவின் பூச்சு, அடர்த்தியான முகம், வெள்ளை ரோஜா வர்ணத்திற்கும் செவ்விய ரோஜா வர்ணத்திற்கும் மாறி மாறிக்கொண்டிருந்தது.

"நவீனா, உலகம் மாயை, நாடகம் என்று பெரியவாள் சொல்லுவா" என்று டீ கெட்டில் காலியானதும் சேஷகண்டம் பேச்செடுத்தான்.

"ஆமாம். இல்லாவிட்டால் மணப்பதே இல்லை என்று வைராக்கியம் பூண்ட நான், இப்படி இணைவேனா?" என்றாள் நவீனா.

"ஆமாம்; நானும் அப்படித்தான் இருந்தேன், நவீனா. இந்தப் பூத உலகத்தைப் பார்க்க நீ புதுக் கண்கள் தந்தாய்."

"கல்யாணம் செய்துகொண்டால் யௌவனம் பாழாகிவிடுமென்று நான் கல்யாணம் செய்துகொள்ளாமல் யௌவனக் காப்பில் ஈடுபட்டேன். கல்யாணம் செய்து கொள்ளாமலேயே கிழக்குமாரியாகிவிடுவதில் என்ன பயன் என்று உங்களைப் பார்த்த மாத்திரம் பட்டது."

"என்ன மன ஒற்றுமை நம் இரண்டு பேருக்கும், போ! நானும் பாணிக்கிரஹணம் செய்து கொண்டால் யௌவனத்திற்குக் கிரஹணம் ஏற்படும் என்று இப்படியிருந்துவிட்டேன். ஆனால், உன்னை அந்த ஜவுளிக் கடையில் கண்ட தினத்தன்று—அன்று என்று சொல்லுவானேன், அந்த க்ஷணத்திலிருந்து என்று சொல்வதைவிட்டு—உன்னோடு சேர்ந்து வாழ்ந்து கூடவே கிழமாவது பகு சிலாக்கியமாகப்பட்டது."

இப்படித் திரிந்துகொண்டிருந்த காதலர் சம்பாஷணை அவர்களுடைய மன நிலையில் அவர்களுக்கு எவ்வளவு மந்தஹாஸ்யமாக இருந்த... ...ம், எனக்கென்னமோ அதில் ஓர் நாடகச் செயற்கையின் சப்பு தட்டியது.

"உலகமே நாடகம். நாம் காண்பது யாவும் பொய். நவீனா, என்னை நேசிக்கும் உன்னிடம் சில உண்மைகளை நான் சொல்லிவிட வேண்டும் என்று துடிக்கிறேன். மணமான பிறகு ஏமாந்து போன நினைவு இருப்பது சரியல்ல" என்று சேஷகண்டம் குரல் குழையச் சொன்னபோதுதான், நான் பச்சை சாயச் சுவரில் மாட்டியிருந்த படங்கள் என்ன என்று பார்ப்பதைவிட்டு, இங்கே நடந்து கொண்டிருப்பதில் மனதை நாட்டினேன்.

"சொல்லுங்களேன்" என்றாள் நவீனா.

"நீ நினைக்கும்படிக்கு நான் அப்படி ஒரு வாலிபன் இல்லை. இதோ பார். உன் அழகிற்கும், யௌவனத்திற்கும் அபாத்திரமான என் பல் வரிசைகள் இரண்டும் பொய்" என்று சேஷகண்டம் தன்னுடைய இரண்டு பல் வரிசைகளையும் கழற்றிக் கீழே வைத்தான்.

பல்லற்ற கன்னங்கள் கிடங்காயின.

"இவ்வளவு அழகாக இயற்கைப் பல் இருக்க முடியாது என்பது எனக்குத் தெரியும்" என்று ஒரு உணர்ச்சியும் இல்லாமல் நவீனா நவின்றாள்.

"இன்னும் பார் நவீனா. நான் வெளியே கண்ணாடி போட்டுக்கொண்டே கிளம்புவதில்லை. உன் முழு அழகை இந்தக் கண்ணாடியால் பார்த்தால்தான் ஸ்பஷ்டமாகத் தெரியும்" என்று கண்ணாடியொன்றை மாட்டிக்கொண்டான் சேஷகண்டம்.

"என்னை அழகு, யௌவனம் என்று நினைப்பவர்கள் கண் பாழாகவே இருக்கும் என்று எனக்குத் தெரியும்" என்றாள் நவீனா பாதி ஹாஸ்யமாக.

"இந்த என் கருங் கிராப் எல்லாம் கருப்புப் பூசின வெள்ளை நரை" என்றான் சேஷகண்டம்.

"இவ்வளவுதானே நீங்கள் மறைத்த உண்மைகள்?" என்று நவீனா கேட்டாள்.

"இன்னும் என்ன இருக்கிறது. இனிமேல் என் மீது உனக்கு அன்பு இருக்குமா?" என்று சம்சயமேறிய துயரம் குமுறும் கண்டத்துடன் சேஷகண்டன் கேட்டான்.

"சற்று இருங்கள். நான் சொல்லிவிட வேண்டிய சில உண்மைகளும் உண்டு" என்று சொல்லிவிட்டு, நவீனா தான் ... அந்த ஹாலைத் துறந்து அடுத்த அ... யுள் புகுந்தாள்.

"ஏனப்பா சேஷகண்டம், உன் கா... கை, தலை, மூளை இதெல்லாம்கூட பிறந்ததுதானா, இல்லை ஆலையுற்பத்தி பொருள்களோ?" என்று நான் அவ... வினவினேன்.

"என்னப்பா அப்படிக் கேட்கிறாயே?"

"எனக்கே தெரியாதே உன் பல் பொ... கண் பாழ், மயிர் வெள்ளைன்னு" எ... றேன்.

"என்னை நான் கிழமாகப் பார்த்து... கொள்வதிலோ, பிறருக்குக் காட்டி... கொள்வதிலோ பிரியப்பட்டவன் இல்... ஆகையால், அவ்வப்போது யாரும் அ... யாமல் திருத்தங்கள் செய்துகொண்... வருவேன்" என்றான் அவன்.

நவீனா போன்ற ஒரு மாது—அது அ... ளுடைய அக்காளாக இருக்கலாம் என்... எண்ணும்படி ஒருவள்—உள்ளேயிருந்... வந்து சோபாவில் உட்கார்ந்தாள்.

"இப்பொழுது என்னை அடையாள... புரிகிறதா? நான்தான் நவீனா. பூச்சு... களை அழித்து, மற்ற யௌவனத்தை மிகை... படுத்திக்காட்டும் அடிப்படையான ஆ... உபகரணங்களை ஒழித்து வந்திரு... கிறேன். முதிர்ச்சியின் கோடுகளை, எ... கண் ஓரங்களிலும், கன்னக் கதுப்... களிலும், மார்பகத்தின் தளைவிலு... காணலாம். காலதேவன் கலப்பை... யினின்று தப்ப அரண் ஒன்றும் இல்லை... மையும், பௌடரும், உதட்டுப் பூச்சு... பொய்யாகக்காட்டிய இவ்வடியாளை இ... மேலும் நீங்கள் கொள்ள இஷ்டப்படுவீ... களா?"

நவீனாவின் இரு கண்களிலும் நீ... கண்ணீர் ஊறி, தேங்கி, ததும்பி வழி... தன. மையற்ற கண்கள் பௌடரிழந்... கன்னங்கள்மேல் கக்கின. கண்ணீர் மு... துக்களின் பரிதாபமான வீழ்ச்சி, நவீ... தன் உடல், பொருள், ஆவியெல்லா... தாரை வார்த்து சேஷகண்டத்திடம் த... தம் செய்ய ஊற்றிய நீர்போல் இருந்த...

"நவீனா, நீ இப்போது எப்படி இரு... கிறாயோ, அப்படியே உன்னை நா... கொள்ள இஷ்டப்படுகிறேன்" என்றா... சேஷகண்டம்.

"நானும் தங்களை.. இப்படியே .." அ... ளால் பேச முடியவில்லை.



இசையும் இ

புல்லாங்குழலின் இனிமையையொத்த இனிய பெண் குரலுடன் இன்பமான ீணை நாதமும் கலந்து காற்றில் மிதந்து ந்தது. தெருவோடு போய்க்கொண் ருந்த சந்திரசேகரனை அந்த இசையின் னிமை ஊசியைக் காந்தம் இழுப்பது பால் கவர்ச்சித்தது. அவ்வீட்டெதிரே ருந்த விளக்குக் கம்பத்தில் சாய்ந்தபடி ன்னை மறந்த நிலையில் நின்று விட் ான் அவன்.

இடையில் கான மழை சற்று ஓய்ந்தது. ங்கராபரணத்தின் மென்மையான சியை அனுபவித்த சந்திரசேகரன் ...பிரத்வனியை செவியுறத் தொடங்கினான்.

மேற்படி இரண்டுராகங்களிலும் சரி; பாடகியின் அபாரமான மனோதர்மமும் சாதகத் திறனும் சிறந்து புலனாகின. அந்த இனியகுரலுக்கு மூன்று காலங்களிலும் வெகு லாகவமாக சஞ்சாரம் செய்யக்கூடிய சக்தி இருந்தது. சந்திரசேகரன் பரம ரஸிகன்; தானே சிறிது சங்கீதப் பயிற்சி உள்ளவன். இறுதியாகப் பாட்டு நின்றதும் கனவுலகினின்று கண் விழிப்பவன்போலச்சுய உணர்வு பெற்றான். அங்ஙனம் இசை வெள்ளத்தில் அமிழ்த்திய பெண்ணின் முகத்தைத் தூரவிருந்தாகிலும் ஒரு முறை கண்டு செல்ல வேண்டுமென்னும் இயல்பான ஆவல் அவன் மனத்தே எழுந்தது.

தெரு விளக்குகள் அப்போதுதான் எரியத் தொடங்கின. கைக் கடிகாரத்தைப் பார்த்தான். மணி ஆறரை. வருவோரும் போவோருமாக வீதி சந்தடி நிரம்பியிருந்தது. வெகு நேரமாகத்தான் அந்த வீட்டின் எதிரே நின்றுகொண்டிருப்பதைக் கவனித்தவர்கள் யாரேனும் தவறாக எண்ணிக்கொள்ளக் கூடுமோ என்ற அச்சம் அவனை மெல்ல அங்கிருந்து

ஒரு காலடி முன்னால் வைத்தான். யாரோ பின்னாலிருந்து "மிஸ்டர் சேகர்!" என்று அழைப்பது கேட்டது. திரும்பிப் பார்த்தவன் தன்னுடன் கல்லூரியில் ஒரே வகுப்பில் படிக்கும் பத்மினியைக் கண்டான். ஒரு கையில் 'பாட்மிண்டன்' விளையாடும் பந்தடி மட்டையுடன் தன் ஸைக்கிளின் மீது சாய்ந்து ஒய்யாரமாக நின்றாள் அவள்.

"வாருங்கள். இப்போதுதான் 'கிளப்'பிலிருந்து திரும்பிக்கொண்டிருக்கிறேன். நீங்கள் என் வீட்டருகே நிற்பதைத் தூரத்திலிருந்தே பார்த்தேன். ஏன், எனக்காக வெகு நேரம் காத்திருந்தீர்களோ? அடடா! அப்படியானால் தாராளமாய் உள்ளே போய் உட்கார்ந்திருக்கலாமே..."

அவள் குரலில் ஓர் வகை ஆர்வமும் பரபரப்பும் தொனித்தன. அது பத்மினியின் வீடு என்ற உண்மையையே சந்திரசேகரன் அறியான். ஆயினும் தன்னைத் தேடித்தான் அவன் வந்திருக்க வேண்டுமென்ற அவளது நம்பிக்கையை எப்படித் தகர்ப்பதென்று அவனுக்குப் புரியவில்லை.

இருவரும் வீட்டினுள் நுழைந்தனர். ஹாலில் போடப்பட்டிருந்த நாற்காலிகளும் சோபாக்களும் அவர்களை வரவேற்றன. பத்மினியிடமிருந்து ஸைக்கிளை வாங்கிக்கொண்ட வேலைக்காரன், "ஐயாவும் அம்மாவும் சினிமாவுக்குப் போயிருக்காங்க" என்று அறிவித்தான்.

"சரி. நீ போய் மீனாக்ஷியைக் காப்பி-டிபன் கொண்டு வரச் சொல்லு" என்று

சந்திர கேள்வி பெற்றவ பெண் ய என்றான்.

"அவள ஆக வேண் ருக்கு மு பெயர் மீ

பத்மின யும், அல ஆம் சந்

"சற்று வெளியே வீணை கேட்டே தானே?" காரமாக.

"ஆமா பத்மினி.

சந்திர கூறினான் உங்கள் மிகவும் வாம்ஸ் உன் ருக் நீங்கள் எடுக்க ே தனே".

மீனாக் புரிந்தாள் னிடையே பல் வரி

...சேகரனது கண்கள் நாற்புறமும் ...ாவி யாரையோ தேடின. 'மீனாக்ஷி' என்று பத்மினி குறிப்பிட்டதும் அது அவளாக 'இருக்கக்கூடுமோ' என்று அவன் சந்தேகித்தான். வளவளவென்று தன் கிளப் விஷயங்களையெல்லாம் பத்மினி வாரித்தெளித்துக் கதையளந்து கொண்டு போனது கூட அவன் காதில் சரியாக ஏறவில்லை.

அடுத்த நிமிஷம் வீட்டினுட்புறமிருந்து ஓர் அழகுப் பதுமை தோன்றியது. அதன் கையிலிருந்த வெள்ளித் தட்டில் காப்பி—பலகாரங்கள் காக்ஷி தந்தன. அன்னம் போல் மெல்ல நடைபோட்டு வந்த அப்பெண் தட்டை மேஜை மீது வைத்துவிட்டு ஒதுங்கி நின்றாள்.

ஆனால், அதே சமயத்தில் அவள் கண்களில் நிழலிட்டுச் சென்ற ஏக்கத்தையும் அவன் கவனிக்கத் தவறவில்லை.

பத்மினியின் முகம் சுருங்கியிருந்தது. "சரி, மீனு. இந்தத் தட்டு—கோப்பைகளையெல்லாம் எடுத்துக்கொண்டுபோ. உள்ளே ஏதேனும் காரியம் இருந்தால் பார். நாங்கள் இருவரும் பேச வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கின்றன" என்று அவள் கூறிய போது குரலில் கடுமை தெரியாவிட்டாலும், உள்ளத்தில் குமிழியிடும் பொறாமையின் பிரதிபலிப்பைச் சந்திரசேகரன் உணர்ந்தான். மூத்தாள் பெண்ணுக்கு அவ்வீட்டில் அளிக்கப்பட்டிருந்த ஸ்தானம் எத்தகையது என்றும் புலனாகியது.

உபசாரத்துக்காகப் ... ...கிறேன். அப்படித்தானே?" விஷமப் புன்னகையுடன் பத்மினி கண் சிமிட்டினாள்; சந்திரசேகரனுக்குப் பற்றிக்கொண்டு வந்தது.

"அல்ல, அல்ல. என் புகழுரை இதயத்தின் ஆழத்தினின்று வந்தது. உண்மையில் உங்கள் தமக்கை ஓர் சங்கீத மேதை" என்று அவன் ஒரே போடாகப் போட்டான்.

பத்மினி எப்படியோ தன்னைச் சமாளித்துக் கொண்டு, பேச்சை வேறு திசையில் மாற்றினாள்.

சுவர்க் கடிகாரம் மணி எட்டடிக்கத் தொடங்கிற்று. திடுக்கிட்டவன் போல் எழுந்தான் சந்திரன். "அடடா! பொழுது போவதே தெரியாமல் உட்கார்ந்து விட்டேனே. அதற்குள் எட்டு மணியாகி விட்டதா?...நான் வருகிறேன் மிஸ் பத்மினி" என்று கிளம்பினான்.

பத்மினி பிடிவாதமாகத் தலையசைத்தாள். "மிஸ்டர் சேகர்! அத்தனை சுலுவில் நீங்கள் இங்கிருந்து தப்பிச் செல்ல முடியாது. என்றும் வராதவர் அபூர்வமாக இன்றைக்கு வந்திருக்கிறீர்கள். என் பெற்றோர் வந்ததும் உங்களை அவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டுமென்றுதானும் ஆவலால் நான் துடித்துக்கொண்டிருக்கிறேன். என்னை ஏமாற்றத்துக்கு உள்ளாக்காம...

...ன்பழம்

ப.ரா

...சேகரன் அப்போதுதான் தன் ...பக் கேட்கும் துணிவு வரப் ...ய், "மிஸ் பத்மினி! இந்தப் ...ாரென நான் அறியலாமோ?"

...? எனக்கு அக்காள் முறை ...டும். அதாவது என் தகப்பனு... ...தல் தாரத்தின் பெண் இவள். ...னாக்ஷி."

...ியின் பதில் அசுவாரசியத்தை ...ஷயத்தையும் காட்டியது. ஆனா... ...சேகரன் விடவில்லை.

...முன் நான் இந்த வீட்டுக்கு ... நின்றிருந்த போது யாரோ ...வாசித்துக்கொண்டு பாடுவது ...ர். அது இந்தப் பெண்மணி ...என்று கேட்டான் அவன், சமத்...

...ம், இவளேதான்" என்றாள்

...சகரன் மீனாக்ஷியை நோக்கிக் ...— "மிக்க சந்தோஷம், அம்மா. ...ாட்டையும் வாசிப்பையும் நான் ...ித்தேன். சிறந்த ஒரு வித் ...யாவதற்குப் போதிய திறமை ...கு இருக்கிறது. இத்துறையில் ...முன்னுக்கு வந்து நல்ல பெயர் ...வண்டுமென்பதே என் பிரார்த்...

... அடக்கத்துடன் ஓர் புன்னகை ... அவளது ரோஜா இதழ்களி... மின்வெட்டுப் போல் பூத்துப் ...ச ஒரு கணம் தோன்றி மறைந்...

தட்டைக் கையில் எடுத்துக்கொண்டு குனிந்த தலை நிமிராது அங்கிருந்து அகன்றாள் மீனாக்ஷி. சந்திரசேகரன், "ஐயோ, பாவம்!" என்று ஓர் பெரு மூச்சு விட்டான்.

"என்ன மிஸ்டர் சேகர். சங்கீதம் என்றால் உங்களுக்கு மிக இஷ்டமா? எனக்கும் அப்படித்தான். ஆனால் நீங்கள் இந்த மீனுவின் பாட்டைப் பாராட்டுவதைக் ...

தயவு செய்து உட்காருங்கள்" என்றாள் அவள், பூரண உரிமையுடன்.

"மன்னிக்க வேண்டும், மிஸ் பத்மினி. எனக்குச் சொந்த அலுவல் ஒன்று இருக்கிறது. மேலும் படக்காக்ஷி முடிந்து இரவில் வெகு நேரம் கழித்து வீடு திரும்பும் உங்கள் பெற்றோர்களை இப்போது சந்தித்துத் தொல்லை கொடுப்பதை...

றேன்."

"அப்படியானல், ஞாயிறன்று கண்டிப்பாக வருவீர்களா?"

"தவருமல் வருகிறேன்" என்று அவன் உறுதி கூறினன்.

"குறைந்த பக்ஷம் இப்போது இங்கே சாப்பிட்டு விட்டாவது போங்கள்".

வேறு வழியில்லாமல் சந்திரன் ஒப்புக்கொண்டான். ஆனல் மீனுக்ஷி சமைத்த உணவின் ருசியை அவன் அறிவதற்கு அது ஓர் வாய்ப்பாக அமைந்தது!

அவனை நிமிர்ந்து பார்க்கவே தைரியமில்லாதவள் போல் குனிந்த தலையுடன் மௌனமாகப் பரிமாறினள் மீனுக்ஷி. எனினும் ஓரிரு முறை அவர்களது கண்கள் சந்தித்துக்கொள்ளாமற் போகவில்லை.

சங்கீதத்தைப் பாராட்டியது போல் சமையலையும் பாராட்ட முற்பட்டால் எங்கே பத்மினியிடம் மன வேற்றுமை விளையுமோ என்றஞ்சி வாயை மூடிக்கொண்டிருந்தான் சந்திரன்.

இறுதியாக அவன் விடை பெற்றுப் பிரியும் போது மணி எட்டரை.

ஃ ஃ ஃ

பத்மினி அவனை விரும்புகிருள்!

இது என்ன விபரீதம்! மீனுக்ஷி—பத்மினி! பத்மினி—மீனுக்ஷி!

தராசின் தட்டு மீனுக்ஷி இருந்த பக்கம் சாய்ந்தது என்னவோ உண்மை. ஆனல், ஆனல்...அந்தப் பத்மினி அதை உணர்ந்தால் அவ்வெண்ணம் ஈடேருது செய்து விடுவது திண்ணம். அவளது பொருமை அத்தனை கொடியது.

இதற்கு என்ன செய்வது? அட பகவானே!

...னக் குழப்பத்தினின்று விடுபட முயல்பவன் போல் கண்களை இறுக மூடிக்கொண்டான். மீனுவின் முகத் தோற்றம் அவன் முன்பு நின்று, "என்னைக் கை தூக்கி விட மாட்டீர்களா? துன்ப மயமான இச்சூழ்நிலையிலிருந்து விடுவிக்க மாட்டீர்களா?" எனக் கெஞ்சிற்று.

மறு நாள் சனிக்கிழமை; அடுத்து வரு... ஞாயிறு. அன்று மீனுவின் தகப்பனை... ...யும் சிநேகிதனையையும் அவன் சந்திக்கப் போகிருன். குறைந்தபக்ஷம் தந்தைக்காவது தாயற்ற பேதைச் சிறுமியின் பால் அன்பும் அநுதாபமும் இருக்கக் கூடும். அவரிடம் தனித்துப் பேசினல்...

சேசே! இது என்ன பைத்தியக்காரத்தனம்! அப்படித் தந்தையிடம் சாய்கால் இருந்தால் அவ்வீட்டுக்குச் சமையல்காரியின் ஸ்தானத்திலா மீனுவை வைத்திருப்பார்கள்?

இப்படி எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணி மண்டையைக் குழப்பிக்கொண்டு அவதிப்பட்ட சந்திரன் இறுதியாகக் கண்ணை மூடும் போது அதிகாலை மணி நாலு.

ஃ ஃ ஃ

சந்திரன் கொடுத்த வாக்குத் தவருமல் ஞாயிற்றுக்கிழமை மாலை பத்மினியின் வீட்டை அடைந்தான். அவனுக்கு அளிக்கப்பட்ட அமோகமான வரவேற்பினின்று, பத்மினி தன் பெற்ருேரிடம் அவனைப்பற்றி வெகுவாகப் புகழ்ந்து கூறியிருக்கிருளென விளங்கியது.

பத்மினியின் தகப்பனர் நல்ல உத்தியோகத்தில் இருந்து வருபவர். அவரது வருமானத்தின் அளவை விளம்பரம் செய்பவை போல் தாயார் காதில் வைரத் தோடுகளும் கழுத்தில் வைர மாலையும் பளிச்சிட்டன. ஏன்; இன்று பத்மினி கூடத் தன் ஆபரணங்களையெல்லாம் ஒன்றுவிடாமல் அணிந்துகொண்டு காக்ஷி தந்தாள்!

அதே சமயத்தில், சாதாரணப் புடவையொன்றைக் கட்டிக்கொண்டு சொற்ப நகைகளே பூண்டு நடமாடும் மீனுவைச் சந்திரன் ஓரக் கண்ணல் கவனித்தான். அவன் வயிறு எரிந்தது.

இரு பெண்களும் ஓர் தந்தையின் குழந்தைகள் தாம். ஆனல் ஒருத்தி தன் தாயை இழந்துவிட்ட குறை...

டிபன்—காப்பி உபசாரங்களெல்லாம் முறைப்படி முடிந்தன. மொட்டை மாடியில் நாற்காலிகளைப் போட்டுக்கொண்டு எல்லோரும் பேச உட்கார்ந்தனர்.

"மிஸ்டர் சந்திரன், பத்மினி உங்களைப் பற்றி ரொம்பச் சொன்னள். உங்கள் பரிச்சயம் கிடைத்ததே எ... பாக்யமெ... கருதுகிருேம்..." என்று ராமஸ்வாமி ஐய... தொடங்கினர், அர்த்த புஷ்டியான ஓ... பார்வையுடன்.

சந்திரசேகரன் ஆச்சரியப்படவில்லை.

வெள்ளி வெற்றிலைப் பெட்டியிலிருந்து கணவருக்குத் தாம்பூலம் மடித்துக் கொடுத்துக்கொண்டிருந்த லக்ஷ்மியம்மாள், "நம் பத்மினி அபார புத்திசாலி. யாரையும் ஒரு நிமிஷத்தில் எடை போட்டு விடுவாள். ஒவ்வொரு சமயம் மனிதர்களை அவள் புரிந்து கொள்கிருற் போல் இத்தனை வயதான எங்களால் கூடத் தெரிந்துகொள்ள முடிவதில்லை" என்று குறுக்கிட்டுத் தன் பெண்ணின் புகழைப் பாடினள்.

பத்மினி 'களுக்'கென்று ஒரு சிரிப்புச் சிரித்துவிட்டுப், "பார்த்தீர்களா, மிஸ்டர் சந்திரன்? என் திறமையை மெச்சுவதற்கு என் சொந்தப் பெற்ருேரை விட்டால் வேறு யாரும் கிடையாது" என்ருள்.

"ஏன்? நான் இல்லையா?" என்று கேட்டு வைத்தான், சந்திரசேகரன், முகஸ்துதி செய்யும் பாவனையாக.

"அப்படிக் கேளுங்கள், ஹூம்" என்று ஐயர் ஆர்ப்பரித்தார். கணவனும் மனைவியும் பரஸ்பரம் ஒரு குறும்புப் பார்வையையும் கண் சிமிட்டலையும் பரிமாறிக்கொண்டனர்.

பேச்சு என்னென்னவோ விஷயங்களை வளைத்துக்கொண்டு சென்றது. அது சற்று அலுக்கத் தொடங்கிய சமயம் பத்மினி போய் 'கேரம்' போர்டை எடுத்து வந்தாள். தரையில் விரிப்பதற்கான ஜமக்காளத்தை எடுத்துக்கொண்டு பின்னே வந்த மீனுக்ஷியை யாரும் 'உட்காரம்மா' என்று ஒரு வார்த்தை சொல்லவில்லை.

ஐயரும் அம்மாளும் ஒரு கக்ஷி; சந்திரனும் பத்மினியும் எதிர்க் கக்ஷி என்று 'கேரம்' விளையாட்டு ஆரம்பமாகியது.

ஐயர் சிரமப்பட்டு குழிகளுக்குள் விழச் செய்த காய்களையெல்லாம் அம்மாள் 'மைனஸ்' போட்டு வெளியே கிளப்பினுள்! இங்கோ இவர்களிருவரும் நல்ல திறமையுடன் விளையாடி ஆட்டங்கள் ஒன்று விடாமல் ஜயித்து வந்தனர்.

தோல்வி மேல் தோல்வி கண்ட ஐயர் முகவாய்க்கட்டையைத் தடவியபடி சொன்னர்:— "'கேரம்' போர்டு ஒன்று இந்த வீட்டில் இருக்கிறதே தவிர, இந்த விளையாட்டில் எனக்கு அவ்வளவு பரிச்சயமில்லை. சீட்டாட்டமாயிருந்தால் ஒரு கை பார்த்து விடுவேன்..."

"நான் மட்டும் என்ன சும்மாவா? சின்ன வயசிலே என்னைப் போலப் பல்லாங்குழி ஆடுவதற்கு. ." இது அம்மாள்.

"அதையெல்லாம்பற்றி இப்போது சொல்லி என்ன லாபம்? அவர்கள் ஆடுவதைப் பார். நெருப்பும் விறகும் சேர்ந்த மாதிரி வெளுத்து வாங்குகிருர்கள்."

"நம் ஜோடியைவிட அவர்களது ஜோடி ரொம்பப் பொருத்தம் என்கிறீர்களோ?"

"சந்தேகமில்லாமல்..." இங்கே இன்னொரு தந்திரப் பார்வை தம்பதிகளின் கண்களில் சுடர் வீசியது.

சந்திரன் நிமிர்ந்து பார்த்தான். பத்மினியின் கண்கள் அவன் முகத்தின் மூலம் உள்ளத்தை ஊடுருவி நோக்க முயல்வது போலிருந்தன.



அதிகம் சொல்வானேன்? 'மாப்பிள்ளை-வலை'யைத் தன் மீது விரிப்பதில் தாய், தகப்பனார், மகள் ஆகிய மூவருமே பிரயாசை எடுத்துக்கொள்வது அவனுக்குப் புரிந்தது.

அன்றிரவு அவன் சாப்பாடும் அங்குதான் நடந்ததென்று சொல்லத் தேவையில்லை. அதன் பின் ஐயருடன் தனித்து நாலு வார்த்தைகள் பேசச் சந்தர்ப்பம் கிடைத்தபோது சந்திரன் அதை நழுவ விடவில்லை.

உண்மையில் பெரியவராகத்தான் வந்து வலுவில் மாட்டிக்கொண்டார்.

"மிஸ்டர் சந்திரன், தவறாக எண்ணிக் கொள்ளாதீர்கள். உங்கள் ஜாதகத்தின் நகல் ஏதேனும் கைவசம் இருக்கிறதோ?" என்று கேட்டார் அவர் வினயமாக.

"இருக்கிறது, தருகிறேன். ஆனால் ஒரு நிபந்தனையின் பேரில்தான்" என்றான் அவன்.

"அது என்னவோ?"

"நீங்கள் ஜாதகம் கேட்பது பத்மினியின் பொருட்டு என்பது தெரிகிறது. இந்நிலையிலும்கூட 'வழவழா குழகுழா'வென்று பேசிப் பயனில்லையாதலால் நான் ஸ்பஷ்டமாகச் சொல்லிவிடுகிறேன். பத்மினியை நான் ஒரு சகோதரிபோலப் பாவிக்கிறேன். அவளை மணக்கும் எண்ணம் எனக்கில்லை. ஆனால் உங்களது மூத்த பெண் மீனாக்ஷிக்கு ஒரு நல்ல வழி பிறக்க வேண்டுமென நீங்கள் விரும்புவதாயின், நான் அவளைச் சந்தோஷமாக ஏற்றுக்கொள்வேன். அவளுடன் சீதனம் எதுவும் வர வேண்டுமென நான் விரும்பவோ எதிர்பார்க்கவோ இல்லையென்றும் இப்போதே தெரிவித்து விடுகிறேன். எதற்கும் யோசித்துச் சொல்லுங்கள்."

கணீரென்ற குரலில் ஆணித்தரமாகப் பேசி விட்டான் சந்திரன். ராமஸ்வாமி ஐயரது முகம் தொங்கிப் போயிற்று. 'சரி' என்னும் பாவனையாகத் தலையை ஆட்டிவிட்டுப் பேசாதிருந்து விட்டார் அவர்.

அதன் பிறகு சந்திரன் வெகு நேரம் அவ்வீட்டில் தாமதிக்கவில்லை.

ஃ ஃ ஃ

இரு தினங்கள் சென்றன. பத்மினியைக் காலேஜில் காணோம்! மூன்றாவது நாள் அவள் வந்தாள். ஆனால் சந்திரனைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. அவளது சுபாவமான கலகலப்பும் குதூகலமும் எங்கோ மறைந்து, முகத்தில் ஏக்கம் தேங்கியிருப்பதை அவன் கவனித்தான்.

இச்சின்னங்களெல்லாம் அவன் எதிர்பார்த்தவையே. இனி ராமஸ்வாமி ஐயர் தன்னைத் தேடி வந்து மீனாக்ஷியைக் கன்னிகாதானம் செய்ய முன்வருவாரென்றும் எண்ண இடமில்லை.

சந்திரனையும் நிராசை பீடித்தது. பத்மினியைப் போலவே அவனும் உற்சாகமிழந்தவனானான். மீனாக்ஷியைத் தூரவிருந்தாகிலும் கண்டு வரவேண்டுமென்ற ஆவல் அவனை உந்தும். ஆனால் அந்த வீடு இருந்த தெருவினுள் கால் வைக்கவே தயக்கம். இப்போது தனக்குக் கிட்டத்தட்ட எதிரிகளாகிவிட்ட ராமஸ்வாமி ஐயரோ அல்லது அவரது தர்ம பத்தினியோ அவனைக் கூர்ந்து கவனித்து விட்டால்...?

அந்த அச்சந்தான் அன்றிரவு அவனை ஊர்ச் சந்தடி அடங்கிய வேளையில் அவ்வீதி வழியே செல்ல வைத்தது.

இந்த நேரத்தில் 'எதிரிகள்' யாரும் அவனைக் கவனிக்க முடியாது. அவன் மீனாவைப் பார்க்கும் வாய்ப்பும் துர்லபம் என்பது உண்மைதான். ஆயினும் 'அவள்' இருக்கும் இடத்திற்கு அருகாமையில் சென்று வந்தாலாவது இவ்விதயத்தின் தாகம் சற்றுத் தணியாதா, துடிப்புச் சிறிது அடங்காதா என்ற அற்ப நம்பிக்கையுடன் அவன் புறப்பட்டான்.

நள்ளிரவு நெருங்கும் வேளைக்குரித்தான நிசப்தம் எங்கும் நிலவியது. வீதியில் ஜனநடமாட்டம் அறவே இல்லை. படபடவென்று அடித்துக்கொள்ளும் உள்ளத்துடன் பத்மினியின்—அதாவது மீனாவின்—வீட்டை நெருங்கினான் சந்திரன். 'ஏதேனும் ஒரு அற்புதம் நிகழாதா? அவளை மீண்டுமொரு முறை பார்க்க மாட்டோமா?' என்ற ஒரு தவிப்புத்தான் அவனுக்கு!

இதென்ன அற்புதம்!

அவன் பார்த்துக்கொண்டிருக்கும் போதே அவ்வீட்டுக் கதவு திறந்தது. ஓசையின்றி வெளிப்பட்டு வாயிற்படியில் ஒரு நிமிஷ காலம் தயங்கி நின்றது ஓர் பெண்ணுருவம். அதன் கையில் ஒரு வீணை! சந்தேகமில்லாமல் அவள் மீனாக்ஷிதான்!

'இந்த அமானுஷ்ய வேளையில் இவள் தனியே எங்கு செல்கிறாள்?'

எதிர் வீட்டுத் திண்ணையின் இருட்டில் சற்றுப் பதுங்கிய சந்திரன் அவள் வாயிற்படி இறங்கி நடக்கத் தொடங்கியதும் மெல்ல அவளைப் பின் தொடர்ந்தான். அத்தெருவின் கோடி வந்தது. நாலு ரஸ்தாக்கள் சேரும் அந்த இடத்தில் விளக்குகள் பிரகாசமாக எரிந்துகொண்டிருந்தன.

இப்படித் தனியாகச் செல்லும் பெண்ணை அவளறியாது பின் தொடருவது இனியும் உசிதமல்ல என்று எண்ணியவனாய், பின்னிருந்து, "மீனாக்ஷி" என்று குரல் கொடுத்தான் சந்திரன். திடுக்கிட்டுத் திரும்பிய அவள் கல்லாய்ச் சமைந்து நின்று விட்டாள். பயத்தால் அவளுடல் வெடவெடவென்று நடுங்கத் தொடங்கிற்று.

"பயப்படாதே, அம்மா. நான் வேற்று மனிதனல்ல." சந்திரன் தன் தலையை மூடியிருந்த துண்டை அகற்றினான்.

"நீங்களா?" என்று குழறினாள் மீனாக்ஷி.

"ஆம், நான்தான். ஆனால் நீ இப்படித் தன்னந் தனியாக வீடு விட்டுக் கிளம்பக் காரணம்...?"

அவள் பேச முயன்றாள். அதற்குள் கண்களில் நீர் பொங்கத் துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டு விட்டது.

சிறிது கஷ்டத்துடன் சமாளித்துக் கொண்டு, "இதற்கெல்லாம் காரணம்... நீங்கள்தான்" என்றாள்.

"நானா...? மீனா! எல்லாம் எனக்குப் புரிகிறதம்மா. அந்த வீட்டில் வருந்தத்தக்க நிலையிலிருக்கும் உன்னை விடுவிக்க நான் எண்ணினேன். அது விபரீதமாக முடிந்திருக்கிறது. பத்மினியின் துவேஷத்தையும், அவள் தாயின் குரோதத்தையும் நீ பெற்று இன்னும் அதிகத் துன்பத்திற்கு ஆளாகிறாய் அல்லவா? இதற்கு நானே பொறுப்பாளி என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால்.. நீ இவ்வீடு விட்டு ஓட முயலும் அளவுக்கு விஷயம் முற்றுமென நான் எதிர்பார்க்கவில்லை."



மீனாட்சியின் கண்கள் பொலபொல வென்று நீரைச் சொரியத் தொடங்கின. "என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். அறியாமல் உங்களைக் குற்றம் சொல்லி விட்டேன். என் துரதிர்ஷ்டம் இப்படிப் பிடித்து ஆட்டி வைக்கிறது. அதற்கு நீங்கள் எப்படிப் பொறுப்பாளியாவீர் கள்?" என்றாள் அவள் குழறும் மொழி களில்.

"மீனா! அழாதே. உன் துரதிர்ஷ்ட நிலைக்கு ஓர் முற்றுப்புள்ளி வைக்க என் னால் முடியும். இப்போதும்கூட ஒன்றும் முழுகிப் போய்விடவில்லை. என்னை மணக்க உனக்கு இஷ்டமுண்டா, சொல்."

அவள் நனைந்த கண்களுடன் அவனை மெல்ல ஏறிட்டு நோக்கினாள். அவளது இதழ்க்கடையில் சம்மதத்தை உணர்த் தும் நாணப்புன்னகையொன்று தவழ்ந் தது.

"இப்போது எங்கே செல்வதாக உத் தேசம்?"

"திருச்சியில் என் தாய் மாமன் வீடு இருக்கிறது. ரயிலேறி அங்கு சேரலாம் என்று எண்ணினேன்."

"வேண்டாம். அதைவிட நல்ல திட்ட மொன்று நான் சொல்கிறேன். அதன்படி செய்வாயா?"

"ஊம்" என்று மீனா தலையை ஆட்டி னாள்.

"சரி. பயப்படாமல் என்னைப் பின் தொடர்ந்து வா. உலக அபவாதத்துக்கு இடம் தராத வகையில் நம் வாழ்க்கை யைப் பிணைத்துக்கொள்ள வழி இருக் கிறது."

சந்திரன் முன்னே நடக்க மீனாட்சி அவனைப் பின்தொடர்ந்தாள்.

ஃ ஃ ஃ

மறு நாள் காலை பத்து மணி இருக் கும். இரவெல்லாம் கண் விழித்திருக்க நேர்ந்தமையால் சந்திரன் இன்னும் அயர்ந்து உறங்கிக்கொண்டிருந்தான்.

தடதடவென்று அறைக்கதவை யாரோ இடிக்கும் சப்தம் கேட்டது. வாரிச் சுருட்டிக்கொண்டெழுந்து போய்க் கத வைத் திறந்தான். வெளியே நின்ற ராம ஸ்வாமி அய்யரைக் கண்டு அவன் ஆச் சர்யமுறவில்லை. அவர் வரவு அவன் எதிர்பார்த்ததே!

அய்யர் ஒரே ஆவேசமாகத் தோற்றம் அளித்தார். அவர் கண்கள் அறையெங் கும் நோட்டம் விட்டு யாரையோ தேடின.

"அட! நீங்களா? ஏது திடீரென்று. . ? வாருங்கள், உட்காருங்கள்" என்று சந் திரன் உபசரித்தான். அவன் முகத்தில் போலி அதிசயக் குறி தோன்றியது.

"சந்திரன், உண்மையைச் சொல்லும். மீனா எங்கே?" என்று பெருமூச்சுடன் மொட்டையாகக் கேட்டார் அய்யர்.

நல்ல அமெச்சூர் நடிகனான சந்திர னுக்கா சமாளித்துக்கொள்ளத் தெரி யாது! "என்ன, என்ன? மீனாவா? எங்கே அவள்? என்ன நேர்ந்துவிட்டது?" என்று பதறினான் அவன்.

அய்யர் அவனை ஏறஇறங்கப் பார்த்து ஒரு நிமிஷம் விழித்துவிட்டு அவநம் பிக்கையுடன், "உம். . அப்படியானால் உமக்கு ஒன்றுமே தெரியாதா?" என்று [illegible]டார்.

"தெரிந்தால் ஏன் இந்த மாதிரிக் கேட் [illegible]

"சரி, சொல்கிறேன். இதெல்லாம் உம் மால் வந்த வினைதானே; தெரிந்து கொள் ளும். நேற்றிரவிலிருந்து மீனாவைக் காணோம்! வீணையையும் தூக்கிக் கொண்டு எங்கோ மறைந்துவிட்டாள் அவள். . ."

"அடேடே! அப்படியா?" இந்தக் கட் டத்தில் சந்திரன் நாற்காலியிலிருந்து ஒரு முழ உயரம் எழும்பிக் குதித்துத் தன் அதிர்ச்சியைப் புலனாக்கினான்.

"எங்கே போயிருப்பாள் இந்தப் பெண்? கடிதமெதுவும் எழுதி வைத்திருக் கிறாளா, இல்லையா?"

"ஒன்றும் கிடையாது ஐயா. திருச்சி யில் அவள் தாய் மாமன் இருக்கிறான். அவனுக்குத் தந்தியடித்து விசாரித் தேன். பெண் அங்கு வந்து சேரவில்லை யென்று உடனே பதில் தந்தி வந்துவிட் டது. . ."

சந்திரனுக்கு ஏதாவது விஷயம் தெரிந்திருக்கலாம் என நம்பி வந்த அய்யர் இப்போது நிராசையுடன் தவிப் பது நிதர்சனமாகத் தெரிந்தது. என்ன இருந்தாலும் பெற்றமனமல்லவா? 'வேண் டும். உமக்கு நன்றாக வேண்டும்' என்று நினைத்துக்கொண்டான் அவன். அவ னுக்கு உள்ளூரச் சிரிப்புக்கூட வந்தது.

"மீனா நல்ல குணமுள்ள பெண்ணாகத் தெரிகிறதே. அப்படி எங்கும் ஒரேயடி யாக மறைந்துவிட மாட்டாள். கொஞ்ச நாள் யாராவது சிநேகிதிகளுடன் இருந்துவிட்டுக் கோபம் தணிந்ததும் தானே வீடு திரும்புவாள். நீங்களும் போய் நன்றாகத் தேடிப்பாருங்கள்" என்று ஆறுதல் சொல்லி ராமஸ்வாமி அய்யரை அவன் அனுப்பி வைத்தான்.

ஃ ஃ ஃ

அந்த நாலைந்து நாட்களுக்குள் அய்யர் பித்துப் பிடித்தவர் போலாகி விட்டார். "மீனா! என் கண்மணி மீனா!" என்று அவர் உள்ளம் கதறியது. தம் இளைய மனைவியும் அவள் பெண்ணு மாகச் சேர்ந்துகொண்டு அந்தப் பேதைப் பெண்ணுக்கு இழைத்த அநீதிகளும், அவற்றிற்குத் தான் உடந்தையாக இருந்ததும் இப்போது அவர் இதயத் தைக் குத்தத் தொடங்கின. தாயையும், மகளையும் பழித்தார். தம்மைத் தாமே சபித்துக்கொண்டார். அவளை இனி உயிருடன் தாம் திரும்பிப்பார்க்க முடி யுமா என்ற ஒரு அச்சம் வேறு தோன்றி அவரை வாட்டத் தொடங்கிற்று.

இந்நிலையில்தான் திடீரென ஒரு நாள் மாலை ஜில்லா ஜட்ஜின் கார் வந்து அவர் வீட்டு வாசலில் நின்றது. "எஜமான் உங்களைக் கையோடு கூட்டிவரச்சொன் னாங்க" என்று அறிவித்தான் டிரைவர். அய்யர் தட்சணமே புறப்படத் தயாராகி விட்டார்.

ஜட்ஜ் குருமூர்த்தி அய்யர் மிக நல்ல மனிதரெனப் பெயர் எடுத்தவர். அவரது உபகார குணத்தினால் முன்னுக்கு வந்த பலருள் ராமஸ்வாமியும் ஒருவர். எனவே பெரியவரைநெருங்குகை யில் ராமஸ்வாமி பணிவும், வினயமும் காட்டியதில் வியப்பில்லை.

"வந்தாயா அப்பா ராமு, வா; இப்படி உட்கார். உன் மூத்த பெண் காணாமற் போய்விட்டதாகக் கேள்விப்பட்டேன். அதுதான் உன் முகமெல்லாம் இப்படிச்

உம். . ஏன்? திடீரென்று அந்தக் குழந்தை இப்படிச் செய்யக் காரணம் என்ன?" என்று ஜட்ஜ் தொடங்கினார்.

அவரிடம் எதையும் மறைப்பதற்கு விருப்பமோ, தைரியமோ ராமஸ்வாமிக்கு இல்லை. சிறிது தயங்கிவிட்டுப் பின் கடல் மடை திறந்தாற்போல உண்மை விவரங்களைக் கக்கிவிட்டார். ". . . நான் ஒரு தகப்பன் என்று சொல்லிக்கொள் ளவே அருகதையற்றவன், ஸ்வாமி. இளையாளின் பேச்சைக் கேட்டுத் தாயில் லாப் பெண்ணை. ." என்று முடிக்கும் முன் கண்ணீர் பொங்கிவரக் குழந்தை போல் அழுதுவிட்டார்.

ஜட்ஜ் அவர் முதுகில் தட்டிக்கொடுத்து, "அழாதேயப்பா, ராமு. எல்லாம் ஈஸ்வர சித்தம். இப்போதாவது உனக்குப் புத்தி வந்ததே!" என்று ஆறுதல் கூறினார்.

"இனி புத்தி வந்துதான் என்ன பயன் ஸ்வாமி? என் கண்மணி மறைந்துவிட் டாளே!" என்று அய்யர் பிரலாபித்தார்.

"ராமு! மறைந்த உன் கண்மணி மறு படியும் தோன்றுவதானால். . ? இனி யாவது அவள் சந்தோஷமாக இருக்கச் செய்வாயா?"

"அதில் சந்தேகம் என்ன ஸ்வாமி? சத்தியமாய்ச் செய்வேன்."

"சரி. அப்படியானால் இதோ பார்."

ஜட்ஜ் இரு கைகளையும் ஒரு முறை தட்டினார். மறு கணம். . .

எதிரேயிருந்த அறைக் கதவு திறந் தது. மீனாட்சி அங்கு தோன்றினாள்! அவள் தன்னை நெருங்கும்வரைகூடக் காத்திருக்கப் பொறுமையில்லாத ராம ஸ்வாமி, எழுந்தோடிச் சென்று அவள் கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு உச்சி மோந்து ஆனந்தக் கண்ணீர் சிந்தி னார்.

ஃ ஃ ஃ

"சந்திரசேகரன் வேறு யாருமல்ல. என் சொந்த மருமகன்தான் என்பதைத் தெரிந்து கொள். அவன் அப்பா கிராமத் தில் இருக்கிறார். இவன் காலேஜ் படிப் பிற்காக இங்கே வந்தபொழுதே என் வீட்டில் இருந்துகொண்டே படிக்கச் சொன்னேன். ஆனால் தனியாக ஒரு அறையில் வசித்தால் கருத்தூன்றிப் படிப்பதற்கு வசதியிருக்கும் என்று அவன் கருதியபடியால் நான் தடை சொல்ல முடியவில்லை.

"இதற்கிடையில் நீ அவனை ஜாதகம் கேட்டதும், இதர பரிவர்த்தனைகளும் எனக்குத் தெரியாமலே நடந்தேறின. அன்றிரவு அகஸ்மாத்தாக மீனாட்சி யைச் சந்தித்தவன், அவள் நோக்க மறிந்து நேரே இங்கே அழைத்து வந்து விட்டான்; என்னிடம் உண்மையைத் தெரிவித்தான்.

"உனக்குப் புத்தி வரட்டுமென்று நாலு நாள் பொறுத்திருந்து இந்தக் குட்டி நாடகத்தை நானே ஏற்பாடு செய்தேன். இப்போது என்ன சொல்கிறாய்?"

ஜட்ஜ் குருமூர்த்தி அய்யர் ஒரு சவா லுடன் கதையை முடித்தார்.

"இனி சொல்வதற்கென்ன இருக் கிறது, ஸ்வாமி. செய்ய வேண்டியது தான் பாக்கி. அதற்கு முன்னறிவிப்பாக, இதோ. . ." ராமஸ்வாமி எழுந்து சந்திர னின் கையுடன் மீனாவின் [illegible]

எங்கள் வைத்தியரைக்கேளுங்கள்

63. ஓ. எஸ். ரா. கோயம்புத்தூர்.

க்ருத்ரஸி (ஸயாடிகா) என்னும் வாத ரோகம். இதற்கு இதுவரையில் செய்திருக்கும் சிகிச்சைகளும், இப்போது செய்துவரும் சிகிச்சைகளும் வர்ணனை செய்துள்ளது 4 பக்கம். பயனற்றவை சில; சிறிது பயனைத் தாற்காலிகமாகத் தந்தவை சில; சிகிச்சை செய்துவரும் வரையில் ஓரளவு குணமும் அதை நிறுத்தியதும் பழைய நிலை திரும்புவதுமானவை சில—என்றிப்படி எல்லாம்.

இவற்றில் தற்போது செய்துவரும் சிகிச்சையைப் பற்றி எனது அபிப்பிராயத்தை விரும்பியும், வேறு ஏதாவது செய்யக்கூடியதுண்டா என்று அறிவிக்கும்படியும் கேட்டிருக்கிறார்.

ஒரு வைத்தியர் செய்துவரும் சிகிச்சையைப்பற்றி இன்னொரு வைத்தியர் விமர்சனஞ் செய்வது வழக்கமில்லை. அது பண்பிற்கு இழிவான செயலாகும்.

நிற்க, வியாதியின் வகையை வர்ணித்துள்ள விடத்து, திருச்சிறுப்பள்ளி முதலிய உஷ்ணப் பிரதேசங்களில் உத்தியோக நிமித்தம் சுற்றுப்பிரயாணஞ் செய்யுங் காலங்களில் இவ்வுபாதி அவ்வளவாக ஏற்படுவதில்லை, யென்றும், யாதொரு இடையூறுமின்றி அலுவல்களைக் கவனிக்க முடிகிறதென்றும், குளிர் பிரதேசங்களுக்குத் திரும்பியதுமே வியாதியின் கொடுமை சகிக்க முடியாத அளவிற்கு அதிகரித்து விடுவதாயும் எழுதியிருக்கிறார். இதிலிருந்து நாம் ஒரு முக்கியமான ஸூக்ஷ்மத்தை அறியலாம். அதையொட்டி,

தத்தூராதி தைலத்தைச் சூடாக்கி, வலியுள்ள விடங்களில் தாராளமாகப் பூசி, தாபஸ்வேத முறைப்படி கோதுமை தவிட்டின் கிழியினால் ஒத்தடங் கொடுப்பது நல்ல பலனைத் தரும். இதுவரை செய்துள்ள சிகிச்சைகளில் இந்த தாபஸ்வேத சிகிச்சையை யாரும் செய்யவே இல்லை. தத்தூராதி தைலத்தை உபயோகிக்கவும் இல்லை. தத்தூரத்தில் (ஊமத்தை இலையின் ரஸத்தில்) பெலடோனா ஸாரமுற்றிருப்பதால் இவ்வலியைக் குறைப்பதில் இத்தைலம் மிகவும் பயனளிக்கும். இதிலுள்ள கற்பூரம் குறிப்பிட்டவிடங்களில் அ ழ ற் சி யூ ட் டு வதால் வலி முதலியவை உடனே குறையும். அவசியமானால் தினம் 2–3 தடவையும் இந்த ஒத்தடத்தைக் கொடுத்துக் கொள்ளலாம். உள்ளுக்கு ராஸ்னாதி அல்லது மஹாராஸ்னாதி கஷாயம் மட்டும் போதும்.

வைத்திய வினாக் கூப்பன்
அடுத்த வாரம் வெளிவரும்.

64 ஸ்ரீமதி ரா. டெல்லி.

மருந்து உபயோகித்து வருவதால் குணங்காணவில்லை. (ஒருக்கால் வேறு மருந்து வேணுமா?)

தொடர்ந்து உபயோகித்துவர குணங் கட்டாயமுண்டாகும். வேறு மருந்து விஷயம் மற்றும் ஒரு மாதமான பிறகு யோசிக்கலாம்.

65. க. ந. வே. சுண்ணாகம், இலங்கை.

கூபனை அனுப்பவில்லை.

66 குமாரி ஆர். ஏ. வி. சித்தூர்.

67 பி. எம். ஆ. லால்பேட்டை.

75. எஸ். அ. தெல்லிப்புழை, இலங்கை.

76. எம். ரா. வைத்தீஸ்வரன்கோவில்.

ஆகியோரது கேள்வி விடைகளைப் பிரசுரித்தல் அனுசிதம்.

68. ஸ்ரீமதி எஸ். ஸ. ஸ்ரீரங்கம்.

81 எம். கே. ச. சென்னை

கொடுத்துள்ள விவரம் போதாது. நேரில் பார்த்தால்தான் சொல்ல முடியும்.

69 ? ?

திமிரம் (காடராக்ட்) என்னும் நேத்திர ரோகத்திற்கு ஆபரேஷனில்லாது வேறு வைத்தியமுண்டா? உண்டானால் என்ன?

குச்சாமாமா

எனது அனுபவத்தில் எத்தனையோ மருந்துகளை உபயோகித்தவரெல்லாம் கடைசியில் ஆபரேஷன் செய்துகொள்ள வேண்டிதான் வந்தது. ஆகவே மருந்துகளால் யாருக்கும் பரிபூர்ண ஸுகம் வந்ததாகத் தகவல் இல்லை. மேலும் சாஸ்திரத்திலும், இவ்வகை மருந்துகளால் குணமாகாவிடின் ஆபரேஷனை வேணுமென்று சொல்லி இருப்பதாலும் பூரண குணத்தைக் கொடுக்கக்கூடியது ஆபரேஷன் ஒன்றுதான் என்பது விளங்குகிறது.

ஆயினும் நாரிகேளாஞ்சனத்தை தினசரி கண்ணுக்கு அஞ்சனமாக ஒவ்வொரு சொட்டு உபயோகித்து சிறிது நேரத்திற்கெல்லாம் திரிபலா கஷாயத்தினாலேயோ, நேத்திரபிந்துவினாலோ கண்ணைக் கழுவ வேண்டும். இரவில் படுக்கப் போகும்போது இரண்டு மூன்று சிட்டிகையளவு திரிபலா சூர்ணத்தைச் சில துளி தேனும் ஒரு டீ ஸ்பூன் நெய்யும் கூட்டிக் குழைத்து நக்கிவிட்டுப் படுக்கவும். நல்ல தேனாகக் கிடைக்குமானால் அதில் ஒவ்வொரு சொட்டு கண்ணில் விட்டு வருவது திமிரத்திற்கு நல்லது என்பர் சிலர்.

எப்படியாயினும் இவ்வகைச் சிகிச்சைகளால் ஆபரேஷனை ஓரளவு ஒத்திப் போடலாமேயன்றி வியாதியை பரிபூரணமாக குணப்படுத்த முடியாது.

70 எஸ். ரா. விருதுநகர்.

ப... மிருதுவாகி கரைந்து கொண்டே வருகிறது. கொஞ்சம்போனால் பற்களெல்லாம் ஆட்டங்கொடுக்கத் தொடங்கிவிடுமோ என்றும் பயமுண்டாகிறது. என்ன செய்யலாம்?

கேள்வி 57–ன் விடையைக்காணவும்.

71 வெ. த. சென்னை.

காதில் இரைச்சல்—சத்தம்—காது கேட்பதில்லை. இது 8 வருஷத்திய வியாதி. செய்யாத சிகிச்சை இல்லை. உத்தியோகமும் செய்ய இயலவில்லை, தனித்து ஒரு தொழிலும் செய்ய இடைஞ்சல். பெரிய குடும்பத்தை ரக்ஷிக்கவேண்டும். வயது முதிர்ந்த பெற்றோருமிருக்கின்றனர்.

கேள்விகள் 33, 54 இவற்றிற்களித்த விடைகளைக் கவனிக்கவும்.

72 வி. கே. ப. கொல்லம்.

கேள்வி 890–க்கு எழுதிய பதிலில் சில விளக்கங்கள் தேவை.

அளிக்கப்பட்டன.

73 ஸ்ரீமதி எஸ். ல. பம்பாய்.

தாயாருக்கு வயது 42—நரம்புத்தளர்ச்சி—சிறிய சத்தங்கூட தலையில் அடித்தது போல் தோன்றும். தூக்கமில்லை. மலச்சிக்கல். அடிவயிற்றில் எப்போதும் எரிச்சல். சாப்பிடமுடிவதில்லை. குடலில் ஏதோ ஆடி ஆடிச்சுழன்று வருவதுபோல் தோற்றம். படபடப்பு—மயக்கம்—தலைபாரம். வயிற்றில் கனம். ஸ்தூல சரீரம். வேலைசெய்ய முடிவதில்லை. ரத்த அழுக்கம் 160. ரத்தம், மலம், மூத்திர பரிசோதனையில் கெடுதல் எதுவுங் காணவில்லை. ஸ்திரீ வைத்தியர் பரிசோதித்து கர்ப்பப் பையில் ஏதும் கெடுதலில்லை எனத் தெரிவித்துவிட்டார். மாதவிடாய் கிரமமான காலத்தில் வருகிறது. ஆனால் சிலசமயம் தீட்டு அதிகம்போகிறது. அப்போது படபடப்பு முதலியவை அதிகமாகிறது. எக்ஸ்ரே படம்பிடித்ததிலும் ஒருவித குற்றமும் காணவில்லை. ..

இதோ!

சி. எம். சாமி

பலவிருத்தி குளிகை

உபயோகியுங்கள்.

மிகுந்த பலத்தையும் இரத்தவிருத்தியையும் உண்டாக்குகிறது.

60 குளிகை விலை ரூ. 6—0—0.

கவலை வேண்டாம்

எங்காட்பட்ட எவ்வித வியாதிக்கும் மருந்துகளடங்கிய கியாட்லாக்

இனாம்

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி-S.I.

இரண்டு வருஷங்களுக்குமுன் ஸதா ஏப்பம், மலச்சிக்கல் இவை இருந்தன.

(1) கேள்வி 61–ன் விடையைக் காணவும். அதனால் ரத்த அமுக்கத்தைக் குறைக்கலாம், நரம்புகளின் அழற்சி, தளர்ச்சி முதலியவையும் குறையும்.

(2) உடம்பிற்கு பலாச்வகந்தாதி தைலத்தைப் பூசி தினமும் குளிப்பது ஷை சிகிச்சைக்கு அதிகரித்த பலனைக் கொடுக்கும்.

(3) ஆம்ரபல்லவாதி லேஹ்யத்தில் வேளைக்கு ½ தோலா வீதம் தினம் 2 வேளை ஆகாரத்திற்கு முன் சாப்பிட்டு வர பசி ருசி உண்டாக்கிச் சாப்பிடமுடியும். வயிற்றிலுள்ள எரிச்சல், வேதனை ஆகியவை நீங்கும். ஆகாரத்தின் சத்துள்ள பாகம் உடலில் பிடித்து பலமுண்டாக வழிகோலும்.

(4) பாராவதக்ஷாரம் என்னும் மருந்தில் ஒரு சிட்டிக்கையளவு நெய் அல்லது வெண்ணெயில் குழைத்து ரத்தப்போக்கு அதிகமுள்ளபோது 2 முதல் 4 வேளை சாப்பிட அமிதமான ரத்தப்போக்கு நிற்கும். இது மாதவிடாய் அதிகம் போகும் காலத்தில்மட்டும் உபயோகிக்கத்தக்கது.

பொதுவாக, குஞ்சும் குளுவானுமாக இந்தப் பிள்ளைகளை விட்டுவிட்டு இவர் அப்பா 22 வருஷத்துக்குமுன் போய்விட்டார். எப்படி எப்படியோ இவர்களை இவ்வளவுதூரம் வளர்த்துவிட்டேன். குழந்தைகள் புத்தியறிந்துவிட்டன. இனி என் வேலை தீர்ந்தது என்ற மனோநிலைதான் இவ்வளவு நோய்க்குங் காரணம். அல்லது மருந்துகளுக்கு வசப்படாத நிலையில் இருப்பதற்குக் காரணம். அன்பையும் அனுதாபத்தையும் பொழிந்து, 'வாழ்க்கையில் வேலையிருக்கிறது; ஆகவே வாழ வேண்டும்' என்ற எண்ணமும் ஆசையும் பிறக்கும்படி மகளும் மகனும் மற்றுமுள்ளோரும் பரிமாறவேண்டும். இவ்வகைச் சிகிச்சைகளை 3–4 மாதம் செய்த பிறகு குறை குணங்களுக்கு எழுதவும்.

74 எஸ். ஏ. க. தேத்தாம்பட்டி.

கேள்வி, விடை இரண்டிற்கும் நெ. 6 ஐப் பார்க்கவும்.

77 எஸ். எம். என். எல். பட்டுக்கோட்டை.

மூத்திரத்தில் இனிப்பு–தேகத்தில் உளைச்சல்–அசதி, கைகால் மரமரப்பு, தேகம் மெலிவு, ரத்தக் குறைவு. என்ன செய்யலாம்?

(1) மேஹாரி சூர்ணம் இரண்டு சிட்டிக்கையளவு தினம் 2 வேளை (காலை, மாலை) தேனில் குழைத்துச் சாப்பிட்டு,

(2) திரிபலாதி கஷாயம் வேளைக்கு 2 ஔன்ஸ் வீதம் அனுபானமாகச் சாப்பிடவும்.

(3) ச்யவனபிராசம் வேளைக்கு ½ தோலாவீதம் தினம் 2 வேளை ஆகாரத்திற்குப் பிறகு சாப்பிடுவது அவசியம்.

(4) மரமரப்பு உள்ள விடங்களுக்கு பலாச்வகந்தாதி அல்லது கார்ப்பாஸாஸ்த்யாதி தைலத்தைத் தடவி ஊற விடவும். பலாச்வகந்தாதியை உடம்பிற்குத் தேய்த்து ஸ்நானம் செய்வதால் அசதி, தேக மெலிவு ஆகியவை நீங்கும்.

(5) கோதுமையை ஆகாரமாக ஏற்பது மிகவும் விரும்பத்தக்கது. இவற்றை ஒரு மாதகாலம் அனுசரித்துப் பிறகு குறை குணங்களுக்குச் சொல்லவும்.

78 எம். ச. ஊமராபாத்.

சாப்பிட்ட உணவு ஜீர்ணமாவதில் சிரமம். அளவுகடந்த ஏப்பம். நெஞ்சில் எரிச்சல், சிலசமயம் வாந்தி எடுத்தால்தான் ஸுகம். அது புளித்தஜலம். இளகின மலம், அதிகமான காற்றுடன் வெளியாகும். என்ன செய்யலாம்?

இரைப்பை பெருத்திருப்பதால் இவ்வகை நோய் உண்டாகலாம். அல்லது பித்தாதிக்கத்தால் இவ்வகை நோய் ஏற்படலாம். ஒருக்கால் மூலம் இருப்பினும் இருக்கலாம். ஆகவே மேற்கொண்டும் சிறிது தகவல் கிடைத்தால்தான் நிச்சயிக்க முடியும். எவ்வாறுயினும்,

ஆம்ரபல்லவாதி லேஹ்யத்தில் ½ தோலா வீதம் தினம் 2 வேளை ஆகாரத்திற்கு முன்பும்,

ஜம்பீராதி பானகத்தில் 1 டீ ஸ்பூனளவை ஒரு ஔன்ஸ் ஜலத்தில் கலக்கி தினம் 2 வேளை ஆகாரத்திற்குப் பிறகும் சாப்பிட்டுவருவது நலம்.

ஒரு மாஸ காலமான பிறகு குறை குணங்களுக்கு எழுதவும்.

79 எம். டி. ஸு. சென்னை.

80 எஸ். கு. குன்னம்.

ஆகிய இருவரும் குறிப்பிட்ட மருந்துகள் கிடைக்குமிடத்தைத் தெரிவிக்கும்படி கேட்டிருக்கின்றனர்.

வாரியர்

நீலீ பிருங்காதி

தைலம்

காந்தி மிக்க கருங் கூந்தல் செழிப்பாக வளருவதற்கும், கொட்டிப்போகாமலிருப்பதற்கும், கொட்டிப்போன இடங்களில் மறுபடி முளைப்பதற்கும் மிகச் சிறந்தது.

குளிர்ச்சிமிக்க ஸ்நான தைலமும்கூட

விலை 16 அவுன்ஸ் புட்டி ரூ. 6/-

கபரீ தைலம் ரூ. 5/-

★ ★

ஆரிய வைத்தியர் கே. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனு பஜார்

தெப்பக்குளம், திருச்சி.

(நிறுவனம்: 1936)

சாஸ்திரோக்தமாக தயார் செய்யப்பட்ட எல்லா ஆயுர்வேத மருந்துகளும் எங்களிடம் கிடைக்கும். ஜாபிதாவுக்கு 0-1-6 ஸ்டாம்புடன் எழுதவும்.

சிறுவர் தொடர்கதை

அதிசய வீணை

வாண்டுமாமா

இருட்டி வெகு நேரமாகிவிட்டதாலும், அன்று சரஸா தன் அப்பாவைப் போய்ப்பார்த்து இந்த அதிசயங்களைச் சொல்ல நினைத்ததாலும், விச்சு, சகுந்தலாவிடம் சொல்லிக்கொண்டு வீட்டுக்குக் கிளம்பினான். அப்போது பங்களாவின் கதவை யாரோ தட்டினார்கள். பிரம்மாண்டமான அந்தக் கட்டிடத்தில், நிசப்தமான மாலை நேரத்தில், அந்தச் சப்தம் பயங்கரமாக எதிரொலி செய்தது. வேலப்பன் போய்க் கதவைத் திறந்தான். வாசல்படியில் ஒரு கனவானும் ஒரு பையனும் நின்றுகொண்டிருந்தார்கள். அந்தப் பையனுக்கு பன்னிரண்டு வயதிருக்கும். அந்த மனிதர் வேலப்பனிடம் தான் ஜமீந்தாரிணி மாணிக்க வல்லியைப் பார்க்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருந்தார்.

"முப்பது வருஷங்களுக்கு முன்னால் இந்த வீட்டைவிட்டு ஓடிப்போன அவர்கள் பேரப்பிள்ளை வரதராஜ பூபதி அவர்களின் விஷயமாகப் பேசவேண்டும்" என்று அந்த மனிதர் சொன்னதும், எல்லோருக்கும் தூக்கிவாரிப் போட்டது.

சற்று நேரத்துக்கு முன்புதான் வரதராஜனையும், அவன் எடுத்துச் சென்ற வீணையையும்பற்றிப் பேசிக்கொண்டிருந்த குழந்தைகளுக்கு, இப்போது நிஜமாகவே அதே விஷயமாக இரண்டு அந்நியர்கள் வாசல்படியில் நின்றால், எப்படி இருக்கும்? "அந்தப் பையனுக்கு என் வயதுதான் இருக்கும். இல்லாவிட்டால், ஒரு வயது அதிகமிருக்கலாம்" என்றாள் சகுந்தலா. அவள் முகத்திலே ஒரு பரபரப்பும், ஆவலும் இருந்தது. அவள் நெஞ்சுத் துடிப்பைத் தான் கேட்டதாக சரஸா விச்சுவிடம் சாதித்தாள்.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் ராஜகுமாரும், கோவிந்தசாமியும் ஊராலுக்கு வந்து சேர்ந்தார்கள். புதிய மனிதரையும், பையனையும் வரவேற்று உட்கார வைத்தார். பிறகு சகுந்தலாவிடம் வந்து, அவர்களெல்லாம் சாப்பிட்டுவிட்டு மாடியில் போய்ப் படுத்துக்கொள்ள வேண்டுமென்றும், குடும்ப விஷயம் பேசும்போது, குழந்தைகள் அங்கே இருக்கக்கூடாதென்றும் சொல்லி அனுப்பிவிட்டார். ஆனால், அவர்களுக்குத் தூக்கமே வரவில்லை.

"எனக்கென்னமோ அந்தப் பையனைப் பார்த்தால், என் சித்தப்பாவின் பிள்ளைபோலத்தான் இருக்கிறது" என்றாள் சகுந்தலா. "அப்படித்தான் இருக்கவேண்டும். அந்தப் பார்வை, அந்தச் சாயல்..." என்று உறுதியாகச் சாதித்தாள்.

காலையில் ராஜ்குமார், சகுந்தலாவிடம் இரவு நடந்த விவரங்களை விளக்கும்வரை, குழந்தைகளின் தவிப்பு அடங்கவில்லை. சகுந்தலா நினைத்தபடியே அந்தப் பையன்தான் ஓடிப்போன வரதராஜனின் மகனும். ஜமீன் சொத்தின் ஒரு பாகத்துக்கு வாரிசு! அப்படி அந்தப் பையனுடன் வந்த மனிதர் சொல்கிறார். அந்த மனிதர் சொல்வது உண்மைதானா என்பது நிரூபணமாக வேண்டும். "நான்தான் அப்போதே சொன்னேனே" என்று குதூகலப்பட்டாள் சகுந்தலா. வந்த மனிதர்களைப்பற்றி விவரத்தை அறிந்துகொண்டதும், விச்சு, சரஸா, ராமு மூவரும் தங்கள் வீட்டிற்குக் கிளம்பினார்கள். குழந்தைகளின் முகத்தைப் பார்த்ததுமே, ரகுபதிக்கு அவர்கள் ஏதோ பரபரப்பான செய்தி கொண்டுவருகிறார்கள் என்பது தெரிந்துவிட்டது. விச்சு பூரா விவரத்தையும் விஸ்தாரமாகச் சொன்னான்.

"அது சரி; அந்தக் கிழவி என்ன சொல்கிறாள்? பேரன் வராமல் போனாலும், கொள்ளுப் பேரன் திரும்பி வந்ததில் அவளுக்கு மகிழ்ச்சிதானே!" என்று கேட்டார் ரகுபதி.

"அவளுக்கு இந்தச் சமாசாரம் ஒன்றுமே தெரியாதப்பா. அந்தப் பையன்தான் வரதராஜனின் மகன் என்று ருசுவாகும்வரை, இந்தச் செய்தியை அவளுக்குத் தெரிவிக்கக்கூடாது என்றிருக்கிறார்கள், சகுந்தலாவின் அப்பாவும், பெரியப்பாவும். நூறு வயதுக் கிழவியால் இதுபோன்ற அதிர்ச்சி தரும் செய்திகளைத் தாங்க முடியாதல்லவா அப்பா? அதனால்தான்" என்றான் விச்சு.

"அந்தப் பையன்தான் வரதராஜனின் மகன் என்பதை நிரூபித்தாக வேண்டும். அதில் எவ்வளவோ சிக்கல்கள் இருக்கின்றன. இவர்களைப்போல எவ்வளவோ பேர்கள் வந்து, தான்தான் வரதராஜனின் பங்கு சொத்துக்கு வாரிசு என்று சொல்லலாமே. அதனால்தான் ராஜ்குமார் இன்று காலையில் தங்கள் வக்கீல் ஆபத்சகாயத்தைப் பார்க்கப் போயிருக்கிறார். அவரைக் கலந்துதான் மேலே ஆகவேண்டிய விஷயங்களைக் கவனிக்க வேண்டுமாம்" என்றாள் சரஸா.

"இதில் சிக்கலும், கஷ்டமும் எதற்கு? அந்தப் பையனிடம் அந்த வீணை இருந்து, அதை அவன் அந்தப் பொம்மைப் பெண்ணின் கைகளுக்கு இடையே பொருத்தினானால் போதாதா? அவன்தான் ஓடிப்போன வரதராஜனின் மகன் என்பதற்கு இதைவிட வேறு அத்தாட்சி என்ன தேவை...?" என்றார் எழுத்தாளர் ரகுபதி.

"அதுதானே இல்லை. அந்தப் பையனிடம் அந்த வீணை இல்லாததினால் தானே இத்தனை குழப்பத்துக்கும் காரணம்?" என்றான் விச்சு.

"அந்தப் பொம்மையைப் பெரிதாக எண்ணிக்கொண்டிருப்பது எனக்குப் பிடிக்கவில்லை. சின்ன வயதில் வரதராஜன் பொம்மையை எடுத்துக்கொண்டு போனான். அவன் அப்படியே குழந்தையாக இருப்பானா? பெரியவனானதும், அந்தப் பொம்மையைத் தூக்கி எறிந்திருக்கலாம்; அல்லது அதுவே எங்காவது தொலைந்தோ, உடைந்தோ போயிருக்கலாம்" என்றாள், விச்சுவின் அம்மா.

"இருக்காதம்மா... அது சாதாரணமான பொம்மையா? ஒரு

பெரிய ஜமீனின் சொத்தையே வாங்கிக் கொடுக்கக்கூடிய மகிமை பொருந்தியதாக்கும் அது" என்றான் விச்சு. அவனுக்கு மர்மங்களிலே ரொம்ப ஆசை. ஆகவே, அந்த வாரிசு விவகாரத்தில் அந்த வீணை ஒரு பெரிய மர்மத்தைத் தாங்கி இருக்கவேண்டும் என்று ஆசைப்பட்டான். குழந்தைகளுக்கு வீட்டில் இருப்பே கொள்ளவில்லை. அன்று மத்தியானமே பங்களாவுக்குக் கிளம்பி விட்டார்கள்.

விச்சு,சரஸா,ராமு மூவரும் மறுபடியும் பங்களாவுக்குப் போனபோது, சகுந்தலா, பட்டு, கோபு மூவரும் அந்தப் புதுப் பையனோடு பேசிக்கொண்டிருந்தார்கள். சகுந்தலா, புதுப் பையனுக்கு விச்சுவையும், அவன் சகோதரியையும் அறிமுகப்படுத்தி வைத்தாள். விச்சுவுக்கு சேகரை - அந்தப் பையனின் பெயர் அது - பிடித்திருந்தது. ரொம்ப அடக்கமாக இருந்தான். அளவாகப் பேசினான். கொஞ்சம் சங்கோசப் பிருகிருதி என்பதும் தெரிந்தது. சேகருடன் வந்திருந்தவரின் பெயர் மல்லாரி. வரதராஜனின் அத்யந்த நண்பராம் அவர். வரதராஜன் இறந்ததும், அவர் மகனை அவன் வளர வேண்டிய இடத்துக்கு அழைத்து வந்திருக்கிறார். சிரிக்கச் சிரிக்கப் பேசிப் பிறரை வெகு சீக்கிரம் கவரும் சக்தி அவரிடம் இருந்தது...மல்லாரியும், சேகரும் நகரிலுள்ள ஒரு பெரிய ஹோட்டலில் ரூம் எடுத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களை ஜமீன் பங்களாவிலேயே தங்கி இருக்கும்படி ராஜ்குமார் கேட்டுக்கொண்டார். ஆனால், அவர்கள் மறுத்துவிட்டார்கள். சேகர் அந்தக் குடும்பத்தின் வாரிசு என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டு, நிலைமை திருப்திகரமாக முடியும்வரை தாங்கள் வெளியிலேயே தங்கி இருப்பதாகவும், ஆனால், அடிக்கடி பங்களாவுக்கு வந்து, அவர்களுடன் நேரத்தைக் கழிப்பதாகவும் சொல்லிப் போய் விட்டார்கள்.

சேகர் அடிக்கடி பங்களாவுக்கு வருவான். மற்ற குழந்தைகளோடு கலந்து பழகி விளையாடுவான். விச்சு, சரசு, ராமு இவர்களிடம்தான் சேகர் மனம்விட்டுப் பழகினான்; பேசினான். காரணம், அவர்கள் ஜமீன் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை என்பதனால்தான். சேகரின் பார்வையில் ஏதோ ஒரு ஏக்கம், பயம் குடிகொண்டிருப்பதாக விச்சுவுக்குத் தோன்றிற்று. அவன் எதையோ எதிர்பார்த்துத் தவிப்பதுபோலத் தோன்றிற்று, விச்சுவுக்கு. அடிக்கடி அவன் தனிமையில் உட்கார்ந்து, சிந்தனையில் மூழ்கிவிடுவதையும் பார்த்திருக்கிறான் விச்சு. அந்தப் பங்களாவின் ஒவ்வொரு மூலையையும் ஒவ்வொரு அறையையும், அங்குள்ள பொருள்களையும் திரும்பத் திரும்பப் பார்த்தும், திருப்தி அடையாத ஒரு குறை அவன் முகத்தில் இருந்தது. ஒரு நாள், சரஸாவிடம், "என் அப்பா இந்த பங்களாவின் ஒவ்வொரு இடத்தையும்பற்றி என்னிடம் கதை கதையாக வர்ணித்திருக்கிறார்" என்றான் சேகர். அவன் கண்களில் நீர் நிறைந்துவிட்டது.

"உன் அப்பா இங்கே திரும்பி வந்திருக்கலாமே? அவர் திரும்பி வந்திருந்தால், அவர் பாட்டி அவரை வரவேற்றிருப்பாள். உன் அப்பா வரவேண்டுமென்றுதான் அவள் விரும்பினளாம்" என்றாள் சரஸா.

பஞ்ச தந்திரம்

கந்தன்:

என்ன படித்தும் பயனில்லை
என்னிடம் தம்பிடி ஒன்றில்லை
பொன்னும் பொருளும் இல்லையெ-
பூமியில் என்ன வேலையினி? [னில்

கனவில் முனிவர் வந்தென்னைக்
கண்டதும் தடியால் அடியென்றார்
கனவிற் சொன்ன படிமுனிவர்
கந்தன் வாசற் படிவந்தார்!

முனிவரை வீட்டுக் குள்வைத்து
முடிமேல் தடியால் அடிவைத்தான்
கனவிற் சொன்னதும் அதுதானே
கந்தன் செய்ததும் சரிதானே!

ஆனால், சேகர் உதடு நெளியச் சிரித்தான். கொஞ்சங்கொஞ்சமாக, விச்சு அவன் தகப்பனாரைப் பற்றிய விஷயங்களைத் தெரிந்து கொண்டான்.

நாம் ஒரு உணர்ச்சி வேகத்தில் ஆத்திரத்திலே ஒரு காரியத்தைச் செய்து, பிறகு அது தவறு என்று உணர்ந்தாலும், சீக்கிரத்தில் அதை ஒப்புக்கொள்ள மனது துணியாது. போலிக் கௌரவத்துக்காக அதையே சாதிப்போம். அப்படித்தான் வரதராஜனும் கோபித்துக்கொண்டு போன வீட்டில் மறுபடி நுழையக்கூடாது என்ற வீம்புடன் வாழ்ந்து இறந்திருக்கிறார். சேகரின் அம்மா இறந்ததும், வரதராஜன் ஒரு இடத்தில் நிலைக்காமல், ஊர் ஊராகச் சுற்றியிருக்கிறார். பூனாவில்தான் மல்லாரியின் சிநேகம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், அவர் இறந்தது பம்பாயில். ஏராளமான செல்வத்தைத் தேடி, தன் தமையன்மார்களுக்குச் சமமான அந்தஸ்துடன் ஊர் திரும்ப வேண்டுமென்று எண்ணியிருந்தாராம், அவர் அப்பா வரதராஜன். அப்படி ஒரு வீம்பு.

"அந்த வீணை விஷயம்?" என்று கேட்டான் விச்சு, சேகரிடம்.

"அதைப் பற்றி உன் அப்பா உன்னிடம் ஒன்றுமே சொன்னதில்லையா? அதைப் பார்த்ததாகக்கூட உனக்கு நினைவில்லையா?" தன் கேள்விக்கு சேகர் பதில் சொல்லாததைக் கண்டு, விச்சு அவனையே பார்த்துக்கொண்டிருந்தான். சேகரின் முகம் என்னவோபோல மாறிற்று. தலை குனிந்தபடி தரையையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் உள்ளத் தவிப்பை முகத்தின் வேதனை காட்டிக்கொண்டிருந்தது. விச்சுவுக்கு சேகர் குற்றவாளியாக இருக்குமோ என்ற எண்ணம் உதிக்க ஆரம்பித்தது. சேகர் பேச்சை மாற்றவேண்டி, "டவுனுக்குப்போகலாம் வருகிறாயா? என் ரூமிற்கு ஏதாவது தபால் வந்திருக்கிறதா என்று பார்க்கவேண்டும்" என்று அவன் எழுந்தபோது, 'அந்த வீணை விஷயத்தில் ஏதோ மர்மமிருக்கிறது. அது சேகருக்குத் தெரிந்திருந்தும் சொல்லாமல் மறைக்கிறான்' என்று நினைத்துக் கொண்டே, அவனுடன் டவுனுக்குக் கிளம்பினான் விச்சு. "வீணை இருக்குமிடம் தெரிந்தால், அதைக் கொண்டுவந்து காட்டித் தன் உரிமையை அவன் நிலைநாட்டிக் கொள்ளலாமே...ஏன் அப்படிச் செய்யவில்லை? ஒருவேளை சேகர் வரதராஜனின் மகனில்லையோ...?" இவ்வாறு சிந்தித்துக்கொண்டே சேகருடன் போய்க்கொண்டிருந்தான் விச்சு.

விச்சு தன் அப்பாவை பார்க்கத் தன் வீட்டுக்கு வரும்போதுதான் அவனுக்கு ஊரிலே நடக்கும் விஷயங்கள் தெரியும். பங்களாவுக்குள் போய்விட்டால் வெளி உலகத்து விவரமே தெரியாது...அப்படி ஒரு சமயம் விச்சு வந்திருந்தபோது, ஊரிலே ஒரு பிரபல திருட்டு நடந்திருக்கும் செய்தியைப்பற்றி அவன் தகப்பனார் அவனுக்குச் சொன்னார். லட்ச ரூபாய்க்குமேல் திருட்டுப் போன சொத்தின் மதிப்பிருக்கும் என்று பத்திரிகைக்குச் செய்தி அனுப்பியிருந்தார் ரகுபதி.

"டேய் விச்சு...உங்க பங்களாவிலே எத்தனையோ தலைமுறை

மண்டை உடைத்துப் பொன்

அடியால் முனிவர் பொன்னானார்
அழகிய தங்கச் சிலையானார்
துடியாய் இதனைப் பத்திரமாய்த்
துணியால் மூடி வைக்கையிலே

ஒருநாளில்லாத் திருநாளாய்
ஓயான் * வந்தான் பார்த்திட்டான்
கந்தன்:
ஒருவர்க் கும்நீ சொல்லாதே
உனக்கும் தர்'றேன்பொன் கொஞ்சம்

★ ஓயான் என்பது ஒருவன் பெயர்

பொன்னின் மூட்டை கொண்டுவந்தே
பெண்டாட் டியிடம் கொடுத்திட்டான்
இன்னும் கொஞ்சம் நிதிசேர்க்க
ஓயான் பின்னும் யோசித்தான்.

(அடுத்த இதழில் முடியும்)

[கவிதை: சாலிவாஹனன்

25
டிப்பி
மலைக்குன்றுகளைத் தாண்டிச் செல்லும் டேவிட்டையும் கோபாலையும் தொடர்ந்து வந்த உருவம் பூசாரியே!
ஹ்ம்! என் கண்களில் பட்ட பிறகு இவர்கள் தப்பமுடியுமா? இவர்களின் பலியை ஏற்றுக் கொள்ளவே என் ஒருவனை சண்டிகாதேவி, உயிருடன் வைத்திருக்கிறாள் போலும்!
ஆபத்து சமீபத்துவிட்டதை டேவிட்டும், கோபாலும் அறியாவிட்டாலும் மலைக்குன்றின் மீதிருந்த டிப்பியின் கண்களுக்கு அது தப்பவில்லை.
வினாடி தாமதித்தாலும் காரியம் கெட்டுவிடும் என்பதைக் கண்ட டிப்பி, தன் உயிரைத் திரணமாக மதித்து, 'சர்'ரென்று கீழே குதித்தது.
டேவிட்டின் மீது தாவ யத்தனிக்கும் பூசாரியின் கழுத்தின் மீது வந்து குதித்து அவனைக் கீழே வீழ்த்தியது.
திடுக்கிட்டுத் திரும்பிய டேவிட்டும், கோபாலும் விஷயமறிந்ததும், அக் காட்டுமிராண்டியின் மீது பாய்ந்து அவனையே சண்டிகைக்குப் பலியிட்டனர்.
வாருங்கள் மிஸ்டர் கோபால்! சிறையிலிருக்கும் நம் இரு சிப்பாய்களையும் விடுவித்துக் கொண்டு வருவோம்.
உங்களுடைய டிப்பியினால் தான் நாங்கள் உயிர் பிழைக்க முடிந்தது. பழைய குற்றங்களுக்கு என்னை மன்னியுங்கள்! உங்கள் இருவரையும், ஜாக்கிரதையுடன் காட்டை விட்டு வெளியேற்றி உங்கள் இருப்பிடத்துக்குக் கொண்டு சேர்ப்பது என் பொறுப்பு! வாருங்கள்!
முற்றும்

யாக உபயோகத்திலிருக்கும் விலையுயர்ந்த நகைகள் எல்லாம் இருக்குமே. அதையெல்லாம் கொஞ்சம் ஜாக்கிரதையாப் பூட்டி வைக்கச் சொல்லு” என்று எச்சரிக்கை செய்தார் ரகுபதி. விச்சுவுடன் அன்று சேகரும் வந்திருந்தான். அவன் அவர்கள் பேசிய பேச்சில் கலந்துகொள்ளாமல் அன்றையச் செய்திப் பத்திரிகையில் திருட்டு சம்பந்தமாக வெளியாகியிருந்த விவரத்தைப் படிப்பதில் முனைந்திருந்தான். சேகரின் பார்வையில், அந்த முகத்தில், ஏதோ ரகசியம் மறைந்திருப்பதாக விச்சு நினைத்தான். குற்றவாளியைப்போலத் தயக்கத்துடனும், கலவரத்துடனும் அவன் விழிகள் தவித்தன. தன் தகப்பனர் கூட சேகரை உற்றுப் பார்த்துக்கொண்டிருப்பதையும் பார்த்தான் விச்சு.

அன்று மாலை ‘கண கண’வென்று ரகுபதி வீட்டு டெலிபோன் மணி அடித்தது. ரகுபதி பத்திரிகை நிருபராதலால், அவர் வீட்டில் டெலிபோன் உண்டு. இதேபோல வேகமாக விடாமல் மணியடித்தால், ஏதோ அவசரமான, ஆபத்தான செய்தி என்பது குழந்தைகளுக்குத் தெரியும்.

அவர்கள் எதிர்பார்த்தது போலேயே ரகுபதிக்கு வந்த செய்தி பயங்கரமானதுதான். சாமுண்டி கோட்டைக்கருகே ஒரு பெரிய ரயில் விபத்து ஏற்பட்டுவிட்டது. இரண்டு மூன்று ரயில் பெட்டிகள் தலைகுப்புற விழுந்து விட்டதாகச் செய்தி வந்திருந்தது. ரகுபதி பத்திரிகை ரிபோர்ட்டராதலால், உடனே விபத்து நடந்த இடத்துக்குக் கிளம்பி விட்டார்.

இரவு வெகு நேரம் கழித்து வந்த தன் தகப்பனரிடம் விபத்தின் வர்ணனையைக் கேட்ட பிறகுதான் மூன்று குழந்தைகளும் தூங்கச் சென்றார்கள். அதிர்ஷ்டவசமாக விபத்தினல் உயிர்ச்சேதம் எதுவும் இல்லை. பதினைந்து இருபது பேருக்கு பலமான காயம்; கொஞ்சம் பேருக்குச் சொற்பக் காயம்; அவ்வளவுதான். காயம் பட்டவர்கள் எல்லோரும் சிகிச்சைக்கு அனுப்பப்பட்டு விட்டார்கள்.

டாக்டர் ரங்கநாதன்தான் அந்த ஊரிலேயே ரொம்பப் பிரபலமானவர். ஜமுனுக்கும் ரகுபதியின் வீட்டுக்கும்கூட அவர்தான் குடும்ப வைத்தியர். டாக்டர் ரங்கநாதன் விபத்து நடந்த இடத்துக்கு விரைந்து சென்று, உ செய்து, காயம் பட்டவர்களை ஆ பத்திரிக்கு அனுப்பி வைத்தார்.

(தொடரும்)

விநோதக் கணக்கு

★

கீழே குறிப்பிட்டுள்ளபடி எழுத்துக்களின் மதிப்பைக் கொண்டு விநோதக் கணக்குகளின் விடையைக் கண்டு பிடியுங்கள்:—

(அ-1; ஆ-2; இ-3; ஈ-4; உ-5; ஊ-6; எ-7; ஏ-8; ஐ-9; ஒ-0.)

(1) உஊஈஎ × ஈஉஆ. (பெருக்கல்)

(2) ஐஉஇஆஅ
ஈஇஒஎஅ கழித்தல்

(3) 3235 × 194 (விடை எழுத்தென்ன?)

❧ ❧ ❧

விடை:

(1) ஆஉஉஆஈஈஈ

(2) உஆஆஉஒ.

(3) ஊஆஎஉஐஒ.

—“ஸாக்லா”

பாத்ருடுவின் “பாலசஞ்சீவினி” REGD

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் அசல் விஜயகரம் மருந்து. எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்

Dr பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்.

19, தெற்குமாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்-4. போன்: 71354

கும்பகோணம் கிளை: 7, சாரங்கபாணி கோவில் கீழ வீதி.

பாரிஸ்டர் மகள்

டி.எஸ்.கோதண்டராமன்

1. வழக்கும் விசாரணையும்

அமைதிக்கு இருப்பிடமாகத் திகழும் "சக்தி நிவாஸ்", அன்றைய தினம் அல்லோலகல்லோலப் பட்டது. அவ்வளவு அமர்க்களத்திற்குக் காரணமும் இருந்தது. சின்ன எஜமானி நீலாவின் உயர்ரக மோதிரத்தைக் காணவில்லை! அவளுடைய தந்தை பாரிஸ்டர் பரமானந்தம் மிகவும் கவனித்துப் பார்த்து வாங்கி, அன்புடன் அவளுக்கு அளித்தது, அது. அதைக் காணவில்லையென்றால்...?

வீட்டு வேலைக்காரர்கள், சமையற்காரர் முதலியவர்களை விசாரித்தாகி விட்டது. வீட்டின் மாடியிலிருந்த நீலாவின் அறைக்கு அன்றைய தினம், பொழுது விடிந்ததிலிருந்து தாங்கள் செல்லவேயில்லை என்பதை அசைக்க முடியாத சாட்சியங்களுடன் அவர்கள் நிரூபித்து விட்டார்கள்.

இனி, விசாரிக்கப்பட வேண்டியவன் டிரைவர் தணிகாசலம் மட்டும்தான். காலையில் சுமார் எட்டு, எட்டரை மணிக்கு அவன்தான் மாடிப்பக்கம் சென்றான். ஒன்பது மணிக்கு நீலாவினுடைய அறையில், மேஜைமேலிருந்த மோதிரத்தைக் காணவில்லை! அவனைத் தவிர, வேறு யார் அதை எடுத்திருக்க முடியும்? இவ்வளவு அப்பட்டமான வழக்கைத் தீர்மானிப்பதற்கு, பாரிஸ்டரா வேண்டும்? நீலாவின் தாயாரான மரகதமே வழக்கை நடத்தித் தீர்ப்புக் கூறத் தீர்மானித்து விட்டாள்! வழக்கில் ஜூரியாக இருந்தாள், நீலா!

தணிகாசலம் வந்ததும், அவனை விசாரித்தார்கள். மோதிரத்தைக் காணவில்லை என்பதைக் கேட்டு, அவன் திடுக்கிட வேண்டுமே? ஊஹூம்! பெரிய எஜமானி ஆவேசத்துடன் கூறிய வழக்கு விவரத்தையும், குற்றச்சாட்டையும் நிச்சலனமாகக் குனிந்த தலை நிமிராமல் கேட்டுக்கொண்டான்.

"பேசாமல் மோதிரத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டுக் குற்றத்தை ஒப்புக்கொள். தொலைந்து போகிறது, எட்டு வருஷமாக இங்கேயே இருக்கிறாயே என்று உன்னை மன்னித்துவிடுகிறேன்... இல்லையென்றால், இந்த விநாடியிலிருந்து வேலையிலிருந்து நின்றுவிடு, ஆமாம். . ." என்று உறுமினாள் மரகதம்.

தலைநிமிர்ந்து நீலாவை உற்றுப் பார்த்தான், தணிகாசலம். அவன் கண்களில் கோபம் அனல் கக்கவில்லை; துயரம் மெல்லிய திரையைத் தொங்கவிட்டிருந்தது. அந்தத் திரைக்குப் பின்னே இருந்த கண்மணிகளின் தீட்சண்யத்தைத் தாங்க முடியாத நீலா, சட்டென்று பார்வையைத் தாழ்த்திக்கொண்டாள். முகம் பரபரத்தது. இடது கால் கட்டைவிரல், தரையை அர்த்தமில்லாமல் கிளறிக்கொண்டிருந்தது.

"அம்மா, மோதிரத்தை நான் எடுக்கவில்லை என்று சத்தியமாகச் சொல்கிறேன். அது எப்படி மறைந்தது என்பது எனக்குத் தெரியும். ஆனால்,... அப்படிச் செய்ய நான் விரும்பவில்லை!..."

"ஓஹோ!.... இனி, இந்த வீட்டில் நீ வேலை செய்வதை நானும் விரும்பவில்லை. போ!..."

பெரிய எஜமானியின் முடிவைக் கேட்டு, தணிகாசலம் ஒடிந்து போய்விடவில்லை. இந்த விஷயம் பரமானந்தத்துக்குத் தெரிந்தால், தீர ஆலோசியாமல் தீர்ப்புக் கூறமாட்டார் என்ற நம்பிக்கை உண்டு, அவனுக்கு!

2. மேல் கோர்ட் எதிர்ப்பு !

பாரிஸ்டர் பரமானந்தம் இரண்டு நாட்களுக்குப்பின், வெளியூர் பிரயாணத்தை முடித்துக்கொண்டு, திரும்பி வந்தார். அவர் வந்ததும் வராததுமாக, நீலாவின் மோதிரம் தொலைந்துபோன சரித்திரத்தைத் தக்க வர்ணனைகளுடன் விவரித்து, இந்த வழக்கைத் தான் நடத்தி, வெற்றி கண்ட பெருமையையும் கூறினாள் மரகதம்!

"தணிகாசலத்தையா வேலையை விட்டு நீக்கிட்டே?... அவன் அப்படியெல்லாம் செய்யக்கூடியவன் இல்லே, மரகதம்.... நான் வரும்வரை பொறுத்திருக்கக் கூடாதா?" என்றார் பாரிஸ்டர். 'இந்தக் கேஸில் நீ தீர்ப்பு வழங்கியதே தப்பு!' —என்ற மாதிரியில் இருந்தது, அவர் பேச்சு!

"நல்லாயிருக்கு போங்க! அவன்தான் திருடிட்டான்னு நல்லாத் தெரியுது; இனிமே, அவனை வீட்டிலே வெச்சிருந்தா, தினம் ஒரு பொருளா காணாமல் போகும்..."

இரண்டு 'த்ஸோ, த்ஸோ'க்களை உதிர்த்துத் தன் எதிர்ப்பை வெளிப்படுத்திக் கொண்டார், பரமானந்தம். மரகதம் பெருமையடித்துக்கொண்டபடி, இந்த வழக்கில் நியாயமான தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டதாக அவருக்குத் தோன்றவில்லை. தணிகாசலத்திடம் அவருக்கு அந்தரங்கமான அன்பு உண்டு. அவன் மோதிரத்தை எடுத்திருப்பான் என்பதை அவரால் எண்ணிப் பார்க்கக்கூட முடியவில்லை.

"மரகதம், அவன் மோதிரத்தை எடுப்பதை யாராவது கண்ணால் பார்த்தாங்களா?"

"யாரும் பார்க்கல்லே. திருடுகிறவன் மத்தவங்க பார்க்கும்போதா திருடுவான்?... அவன் மாடிக்குப் போய்விட்டு வந்தான்; மோதிரத்தைக் காணல்லே. வேறு யாரும் போகவுமில்லை. இதிலே சந்தேகத்துக்கு என்ன இடமிருக்கு?"

"அவன் போய்விட்டு வந்ததனாலே அவன்தான் திருடிட்டான்னு தீர்மானித்து விடலாமா?"

மௌனமாக இவ்வளவு நேரம் நின்றுகொண்டிருந்த நீலா, தன் தாய்க்கு உதவி புரிய வந்தாள். "அப்பா, கோர்ட் மாதிரி குறுக்குக் கேள்வி போடறீங்களே?... தணிகாசலம்தான் எடுத்திருப்பான்னு தோணிச்சு. அம்மா உடனே அவனை நிறுத்திட்டாங்க. வேறொருவனை அமர்த்திக்கொண்டால் போயிற்று. அவ்வளவுதானே?"

தந்தை பார்த்த பார்வையில், நீலாவின் உடலில் 'ஜிவ்'வென்று சூடேறியது!

3. சந்தேகம் வாதிமேல்

பரமானந்தத்தின் மனம் நிம்மதியடையவில்லை. இருநூறு ரூபாய் பெறு

டதற்காக அவர் வருந்தவில்லை. இரண்டு மணி நேரம் நீதி மன்றத்தில் அவர் வழக்காடினால், அந்தத் தொகை அநாயாசமாகக் கிடைத்துவிடும்! ஆனால், இந்தச் சம்பவத்தை எளிதாகத் தூக்கி எறிந்துவிடவோ, அல்லது ஆழத்தில் போட்டுப் புதைத்துவிடவோ நீலா விரும்புகிறாள் என்பது அவருக்கு நிச்சயமாகிவிட்டது. நீலா ஏன் இப்படிச் செய்யவேண்டும்? அந்தச் சம்பவத்தை அவரிடம் மரகதம் கூறத் தொடங்கியபோது, நீலாவின் முகம் ஏன் மாறவேண்டும்? மோதிரம் காணாமல் போய்விட்டதைப்பற்றிக் கவலையே படாதவள்போல் ஏன் நடிக்கிறாள், அவள்?...

பாரிஸ்டரின் உள்ளத்தில் இந்தக் கேள்விகள் வெகு சுலபமாகக் கிளைத்தெழுந்தன. நீலாவை சுதந்திரப் பறவையாக இவ்வளவு காலம் விட்டிருந்தது தவறுதான் என்று அவருக்கே தோன்றியது. ஒரே மகள் என்பதனால், ஆசையும், பாசமும் அவர் கண்களை மறைத்துவிட்டனவா? கல்லூரி மாணவி, நாலும் தெரிந்தவள் – என்ற தைரியத்தில் அவளுடைய நடவடிக்கைகளை அதிகமாகக் கவனிக்காமலே இருந்துவிட்டார், அவர். 'கவனிக்க வேண்டும்' என்று நினைத்திருந்தால்கூட, அவருக்கு நேரம் ஏது?... ஒரு வேளை, நீலாவின் நடத்தை...

சத்தில், சூன்யம் இருளைப் பரப்பியது. சிந்தனையை ஓட்டிவிடுவதற்காக, எதிரே இருந்த வழக்குக் கட்டில் கண்களைச் செலுத்தினார். ஆனால், தன் வீட்டு வழக்கை இவ்வளவு சுலபத்தில் விட்டுவிடக்கூடாது என்ற தீர்மானம் அவருள் எழுந்து, பலமாகக் குரல் கொடுத்தது.

4. எதிர்பாராத சாட்சியம்

பரமானந்தம் அந்தப் பதிலை எதிர் பார்க்கவில்லை. தணிகாசலம் உடனே வருவான் என்று நம்பிக்கொண்டிருந்தார். ஆனால், அவன் ஊரில் இல்லை என்ற பதிலைத்தான் அவனைத் தேடிச் சென்ற வேலைக்காரன் கொண்டு வந்தான். தணிகாசலம் திரும்பிவர இரண்டு, மூன்று நாட்கள் ஆகலாமாம்.

மண்டையை உடைத்துக்கொண்டார், பரமானந்தம். சிக்கல் மிகுந்த பல வழக்குகளை எவ்வளவோ தைரியத்துடன் நடத்தியிருக்கிறார்,அவர். ஆனால், இந்த வழக்கில் அவர் நெஞ்சம் தள்ளாடியது!

'தடையங்கள் ஏதும் கிடைக்கவில்லையே?..'. என்று அவர் கவலைப்பட்டுக் கொண்டிருந்தபோது, வேலைக்காரன் அன்றையத் தபால்களை அவர்முன் கொண்டுவந்து வைத்தான். அவைகளில் நீலாவுக்கு வந்த ஒரு கவர், அவர் கண்களில் பட்டது. முன்பெல்லாம் அவளுக்கு வரும் கடிதங்களின் உறையைப் பிரிக்காமலே, அவளுக்கு அனுப்பி விடுவார். இன்று மனம் சண்டித்தனம் செய்தது. உறையைக் கிழித்து, கடிதத்தைப் படித்தார்:

"அன்பார்ந்த நீலா,

நீ உரிய காலத்தில் உதவியதற்கு என் நன்றி. நூற்றைம்பது ரூபாயை அலட்சியமாகத் தந்துவிட்டாய்! நான் ஐந்தாறு நாட்களாக உன்னைக் காணாமல், என் மனம் அலைபாய்கிறது. தயவு செய்து வருவாயா?

நன்றி மறவா,
ஜெயராமன்".

கடிதத்தின் அடியில் இடப்பட்டிருந்த கையெழுத்தையும், விலாசத்தையும் அரை டஜன் தடவைகள் திரும்பத் திரும்பப் படித்தார், பரமானந்தம். "ஜெயராமன்!" அவர் உள்ளம் கூவியது: "யார் அவன்? அவனுக்கு நீலா ஏன் பணம் கொடுத்து உதவினாள்?... நூற்றைம்பது ரூபாய்! அவ்வளவு பணம் அவளிடம் ஏது?... ஐந்தாறு நாட்களாக– அதாவது, மோதிரம் காணாமற்போன நாளிலிருந்து – அவளைக் காணாமல் அவன் மனம் அலைபாய்கிறதாமே!"

5. புலன் விசாரணை

"ஜெயராமன் வீடு, இதுதானே?"

"ஆமாம். நான்தான் ஜெயராமன். நீங்கள் யாரென்று..."

"நீலாவின் தகப்பனார்!"

ஜெயராமன் துள்ளிக் குதித்தான். "வாருங்கள், ஸார்! உள்ளே வாருங்கள்... சுசீ, சுசீ! இதோ பார், நீலாவின் அப்பா வந்திருக்கிறார்...!" – சந்தோஷத்தில் தலை கால் புரியாமல் அவன் பேசிய போதிலும், குரலில் நயம் இருந்தது. அவனுடைய அழகான உருவத்தைப்

போலவே, நடையிலும் கவர்ச்சி இருந்தது. அசையும் உதடுகளிலும், சுழலும் கண்களிலும் காந்தம் இருந்தது...

வெறும் நாகப்பாம்பு!

கெட்ட மனிதர்களுக்குத்தான் அழகு எப்படி அமைந்துவிடுகிறது!... வீட்டில் 'அக்கா' தாண்டவமாடுகிருள்; முகத்தில் 'தங்கை'யின் தனியாட்சி நடைபெறுகிறது!...

உட்காருவதற்குப் பழைய நாற்காலி கூட இல்லாததால், நின்றுகொண்டே தான் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார், பரமானந்தம். 'நமஸ்காரம்' என்ற குரல், அவரைத் திரும்பிப் பார்க்கச் செய்தது.

"என் தங்கை சுசீலா, ஸார்!... நீலாவின் சிநேகிதி; வகுப்புத் தோழி..." என்று அறிமுகப்படுத்தி வைத்தான், ஜெயராமன்.

கன்னங்களில் அசைவு ஏற்படாமலேயே, பல்லைக் கடித்துக்கொண்டார், பரமானந்தம்.

"...நீலா வரவில்லை?"

"இல்லை...."

"ஐந்தாறு நாட்களாகவே அவளைக் காணவில்லையே? ஊரில் இல்லையா?... அவளுக்கு நன்றி தெரிவிக்க வேண்டுமென்று அண்ணு துடித்துக்கொண்டிருந்தான். அவளைக் காணவில்லை. நேற்றுத்தான் கடிதம் எழுதிப் போட்டான்..."

"ஆமாம், ஸார். உங்கள் வீட்டிற்கே வந்தாவது, நீலாவுக்கு நன்றி தெரிவிக்க எண்ணினேன். நேரம்தான் கிடைக்கவில்லை! . . ப ட் ட ண த்தில் அடுத்த பேட்டையில் இருப்பவர்களுடன் கூடக் கடிதத்தில்தான் பேச வேண்டியிருக்கிறது! . . ."

"...."

"நான் காலையில் ஆபீசுக்குப் போனால், இருட்டியபின்தான் திரும்புவேன். சுசீலாவுக்கோ அம்மாவைப் பார்த்துக் கொண்டு, வேளாவேளைக்கு மருந்து கொடுக்கத்தான் நேரம் சரியாக இருக்கிறது. நல்ல வேளை, காலேஜில் லீவு விட்டிருக்கிறார்களோ, அவள் பிழைத்தாளோ! இல்லாவிட்டால், காலேஜுக்குப் போவதா, வீட்டிலிருந்துகொண்டு அம்மாவைக் கவனித்துக்கொள்வதா என்ற கவலையே பெரும்பாடாகப் போய்விடும்!..."

ஜெயராமனின் பேச்சை உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டு வந்தார், பரமானந்தம். புதிய புதிய உண்மைகள் புலனுவதுபோல், அவருக்குத் தோன்றியது.

"அம்மாவுக்கு இப்போது எப்படி இருக்கிறது?" – ஏதேனும் பேச வேண்டும் என்பதற்காகக் கேட்டுவைத்தார், அவர்.

"ரொம்பத் தேவலை. கையில் பணம் கிடைத்தவுடன் டாக்டரும் அக்கறையாகக் கவனிக்கிருர். சம்பளம் வந்த பின்பு, பணம்தருகிறேன்என்றதும்,அவர் படுத்திய பாடு!... எங்கள் தேவையை உணர்ந்து நீலாவாகவே பணம் கொண்டு வந்து கொடுத்தாள்.–சிநேகிதியின் உதவிக்காக–என்று கேட்டதும், நீங்கள் சற்றுக்கூடத் தயங்காமல், பணம் கொடுத்தீர்களாம்! மிகவும் நன்றி, ஸார்!"

ஒருவழியாகச் சமாளித்துக்கொண்டு, பரமானந்தம் வீடு திரும்பினர்.

6. "தள்ளுபடி செய்கிறேன்!"

"சக்தி நிவாஸி"ற்குள் நுழைந்தார், பரமானந்தம். அங்கே அவருக்காகத் தணிகாசலம் கா த் து க் கொண்டிருந்தான்.

"தணிகாசலம்?"

"ஆமா, ஸார்!.. உங்ககிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்."

"சொல்லு."

"மோதிரம் தொலைந்து போனதைப் பத்தி..."

"உம்?"

"..வந்து.. நீங்க நீலா அம்மா பேரிலேயே சந்தேகப்படறதாத் தெரியுது. . ."

தணிகாசலத்தை ஏறிட்டுப் பார்த்தார், பரமானந்தம். "உனக்கு எப்படித் தெரியும்?"

"சின்னம்மாவே சொன்னுங்க!... நான் கூட அவங்களைப்பத்தி ரொம்பத் தப்பா நெனச்சுட்டேன், ஸார். அந்த ஜெயராமன் என்கிறவரை அடிக்கடி பார்க்கப் போறுங்களேன்னு என் மனசு ரொம்பத் தவிச்சுது. இரண்டு மூணு தடவை அவங்களிடமே சொல்லிப் பார்த்தேன். கேட்கல்லே! மோதிரத்தை வித்து, ஜெயராமன் தங்கையிடம் கொடுத்திட்டு வந்தது எனக்குத் தெரியும். நான் திடுக்கிட்டுப் போயிட்டேன், ஸார்! வாழ்க்கையிலே ஒரு தடவை தவறி நடந்துட்டா, வாழ்வு முழுக்க வேதனைதான் ஸார்!..."

"...!"

"நீங்க சின்ன அம்மா பேரிலேயே சந்தேகப்படறதாத் தெரிஞ்சதும், அவங்க அப்படியே மனம் நொந்துட்டாங்க. ஜெயராமனுக்குப் பணம் கொடுத்தது, அவருடைய அம்மா வைத்தியத்துக்காகத்தான்..."

"உனக்கு எப்படித் தெரிந்தது?"

"நேத்து, சின்ன அம்மா எல்லாத்தையும் எங்கிட்ட சொல்லிட்டாங்களே! ஜெயராமன் தங்கையிடம் நம்ப அம்மாவுக்கு ரொம்பப் பிரியம். தங்கையை எப்படியாவது படிக்கவச்சு, முன்னுக்குக் கொண்டுவந்திடணும்னு அவர் ரொம்பக் கயிஷ்டப்படுகிருராம். உங்க சந்தேகத்தைப் போக்கறதுக்காக, நான் வந்து, உங்க கிட்டச் சொல்லணுமின்னு நீலா அம்மா கேட்டுக்கிட்டாங்க..."

ஒரு கணம் மௌனமாக நின்ருர், பரமானந்தம். நெஞ்சை அடைத்துக்கொண்டிருந்த உணர்ச்சியை நழுவவிட்டுப் பேசினுர், அவர்.

"தணிகாசலம், எனக்கு எல்லாம் தெரியும். நான் ஜெயராமனைச் சந்தித்துப் பேசினேன்..."

கதவுக்கு வெளியே நின்றுகொண்டு, தந்தையின் பதிலுக்காகத் துடித்துக் கொண்டிருந்த நீலா, சட்டென்று உள்ளே நுழைந்தாள். "அவருடைய அம்மாவுக்கு உடம்பு எப்படி இருக்கிறதாம், அப்பா?"

கேள்வியின் தொனிப்பில் கொந்தளித்த ஆர்வத்தைக் கண்ட பரமானந்தத்தின் கண்கள் கலங்கின.

"பிழைத்துக்கொண்டு விடுவாராம், நீலா... உன்னை வீணுகச் சந்தேகித்துவிட்டேன், நான். உனக்கு இவ்வளவு பரந்த நோக்கும், தெளிந்த அறிவும் இருக்குமென்று..."

"நான் உங்கள் மகள், அப்பா!"

..."ஆனல், நீ உண்மையைக் கூறியிருந்தால், எவ்வளவு மன வேதனையைத் தவிர்த்திருக்கலாம்!"

"எல்லாம் அம்மாவின் அவசரத்தால் வந்ததுதான்!... நீங்கள் ஊரில் இல்லாததால், மோதிரத்தை விற்கவேண்டி வந்துவிட்டது. அம்மாவிடம் பணம் கேட்டால், என்னைப் பார்வையாலேயே பொசுக்கிவிடுவார்! . ."

பரமானந்தம் மெல்லச் சிரித்தார்.

"என் கையில் மோதிரத்தைக் காணுமல், அம்மா படபடப்புடன் ஏதோ கேட்டார். மனக்குழப்பத்தில் நானும் ஏதோ பதில் சொன்னேன். அந்தத் தவறின் விபரீதத்தை இப்போதுதான் உணர்கிறேன். என்னை மன்னித்துவிடுங்கள், அப்பா!..."

ஒரு கணம் அவ்விடத்தில் மௌனம் நிலவியது. பின், வலது கையைச் சற்று உயர்த்தியவாறே, பரமானந்தம் களிப்புடன் கூறினுர்.

"ஆகவே, பிரதிவாதியின்மேல் சாட்டப்பட்ட குற்றம் நிரூபிக்கப்படாததுடன், வாதியின்பேரிலேயே திரும்புவதால், இந்த வழக்கை நான் தள்ளுபடி செய்கிறேன்!"

தணிகாசலம், 'கார் ஷெட்'டை நோக்கி நடந்தான்!



சில்லறை விற்பனைக்கான
கிளை ஆபீஸ்கள்:
285, சைனுபஜார் ரோடு,
மதராஸ்
&
71, பாண்டி பஜார்,
தியாகராய நகர்

மோக முள்

தி. ஜானகிராமன்

கிரிபியைச் சாப்பிட்டான் பாபு. சாமி ராவ் கடைசிவரையில் கூட இராதது தவறுதான். ஆனால், நாம் எதற்காக நிதானத்தை இழக்க வேண்டும்? மனிதனைப் பார்த்ததும் பாராததுமாக ஏன் படபடவென்று பொரிய வேண்டும்? . . சாமி ராவுக்கே தான் செய்தது அவ்வளவு சரியல்ல என்று பட்டிருக்கிறது. கொஞ்சம் இரக்கமாகத்தான் பேசுகிறார். அவர் சொல்கிறாற்போல, ஆளை முதலில் பார்த்த போது, பின்னால் இப்படி நடந்து கொள்வான் என்று கண்டுகொள்ள முடிந்ததா?

"என்ன இருந்தாலும் நீங்க கூட வந்திருக்கணும்" என்று தணிந்த குரலில் தன் கட்சியையும் விடாமல் சொன்னான் பாபு.

"ஒரு 'பார்ட்டி'க்கு வரேன்னு ப்ராமிஸ் பண்ணிப்பிட்டேன் சார். அவரு பங்களூரிலிருந்து வந்திருந்தாரு."

"இந்த பார்ட்டி முக்யமாகப் படலியாக்கும் உங்களுக்கு."

"அதைவிட முக்யம்தான் இது. இல்லேன்னு சொல்லலெ. உங்களைப் பார்த்தப்பறம்தானே நான் நேரே போவதாக டிக்கட்டு வாங்கினேன். நீங்க பாத்துட்டுத்தானே இருந்தீங்க? நீங்கதான் இருக்கீங்களேன்னு போனேன். அப்பவும், நீங்க கொஞ்சம் அழுத்தமாக நீ இருக்கத்தான் வேணும்யான்னு சொல்லியிருந்தா, நான் கட்டாயம் தங்கியிருப்பேன். என்ன, நான் சொல்றது தெரியலே?"

பாபுவுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. இப்படி சமயத்திற்கு ஏற்றவாறு பேசுகிறானேஎன்று வியப்பும் வருத்தமுமாக இருந்தது. இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்களே! என்ன செய்கிறது?

"அது சரி, நான் அழுத்திச் சொல்லாதது தவறாக இருக்கலாம். நீங்கள் அவரிடம் எல்லா சமாச்சாரத்தையும் சொல்லியிருக்கப் படாதா? அவர் வாராமலேயே இருந்திருப்பாரோ!"

"சொல்லியிருக்கலாம். படிச்சவனாச்சே, வித்யாசமா நெனச்சுக்க மாட்டான்னு நெனச்சேன். சொல்லணும்னிட்டே தோணவும் இல்லே எனக்கு."

சிறிது மௌனத்திற்குப் பிறகு, "நான் வாராதது, அவன்கிட்ட முன்னாடியே சொல்லாதது எல்லாம் தப்புதான். அந்தத் தப்புக்கெல்லாம் சேத்து ஈடுபண்ணிப்பிடறேன். நல்ல பஸ்ட் கிளாஸ் வரனைப் பாத்து, இருந்து கலியாணத்தை நடத்தி வச்சுப்பிடறேன்" என்றார் சாமிராவ்.

பாபு வாயை அடக்கிக்கொண்டான்.

"சரிதானே சார்?"

"ரொம்ப தாங்ஸ்."

"என் கலியாணத்துக்கு எத்தனை பேர் தலைப் பொறுப்பா அலையறாங்க பாத்தியாம்மா?" என்றாள் யமுனா.

"பின்னே எங்களுக்கில்லாம யாருக்கு இருக்கும்?...உங்கப்பாவானா சீக்காப்படுத்திட்டுக் கிடக்கறாரு. நாங்கதானே அலையணும்?"

"சீக்கா? என்ன சீக்கு?" என்று பார்வதி பாயைப் பார்த்தான் பாபு.

"இப்ப என்னமோ நாலஞ்சு நாளா ஜுரமாப் படுத்திருக்காங்களாம்" என்றாள் பார்வதி.

"அடிக்கடி கால் கையெல்லாம் பிடிச்சுக்கிட்டாப்பல படுத்திடறாரு...கால் வாயு மாதிரி. அலையக்கிலைய முடியாது" என்றார் சாமி ராவ்.

"இப்ப என்ன ஜுரமாம்?"

"ஏதோ வாயு சம்பந்தம்கிறாராம் டாக்டரு. இன்னிக்கி லெட்டர் எழுதியிருக்குறான் மூத்த பிள்ளை. போய்ப் பாத்திட்டு வரலாம்னு பாக்கறோம்."

"ஊர்லேதானே இருக்கார்?"

"ஊர்லேதான். தஞ்சாவூர் வீட்டைத்தான் காலிபண்ணியாச்சே."

"இஞ்ச நடந்ததெல்லாம் அவருக்குத் தெரியுமோ?"

"நான் எழுதினேன். அதுக்கு ரண்டு நாள் முன்னாடியே ஜுரமாம். கவலைப்பட வாண்டாம்னு எழுதியிருக்கான் அவன்."

"கோயம்புத்தூர்க்காரர் வர்றதைப் பத்தி நீங்க அவரைக் கிராமத்திலே போய்ப் பாத்துத்தான் சொன்னேளா சார்?"

"லெட்டர் எழுதிப்போட்டேன். அப்பறம் நேரே ஊருக்குப் போய் சொன்னேன். அழச்சுக்கிட்டு வந்து நீயே பாத்து, கூடஇருந்து செட்ல் பண்ணுன்னாரு. இவன் இப்படிக் குரங்கா இருப்பான்னு கண்டேனா நான்?...போய் எனக்கு வேறல்ல டோஸ் கொடுத்திருக்கான்?"

"உங்களுக்கென்ன டோஸ்?"

"நான்தான் இந்த அவமானத்துக்கெல்லாம் காரணமாம்."

"அதான் முன்னாடியே சொல்லியிருக்கணும்னேன் நான்."

"குரங்கு சார் அவன்...இருக்கட்டும், இருக்கட்டும். சும்மாவா விட்டிடப் போறேன்? இன்னொரு தரம் கோயம்புத்தூர் போறப்போ, போய்க் கண்டு சும்மா அலசி விட்டிடமாட்டேன்!"

"நீங்க எதையாவது பண்ணுங்க! காரியம் கெட்டுப் போச்சு" என்று அலுத்துக் கொண்டாள் பார்வதி.

"ஒண்ணும் கெட்டுப்போகலெ. நாம எதிர்பார்க்கறது எல்லாம் நடந்திருமா? ரண்டு காரியம் நடக்கும். ரண்டு நடக்காது. இப்படித்தான். இது சகஜம்தானே? இதுக்காக சும்மா அலட்டிக்க முடியுமா? இல்லே, யத்னம் பண்றதை விட்டிட முடியுமா? என்ன சார், நான் சொல்றது என்ன?"

"நீங்க விடப் போறதில்லேன்னு சொல்றேளாக்கும்?"

"யாரும் முயற்சியைக் கைவிடக் கூடாது. அதான் என் கொள்கை."

"வாஸ்தவம்."

"இவன் இல்லாட்டி எத்தினியோ பேரு. அவனுக்குப் பண்ணிக்கக் கொடுத்து வக்யலெ. நமக்கு என்ன வரனா இல்லே?" என்று உற்சாகத்துடன் பொடியைப் போட்டுக்கொண்டார் சாமி ராவ்.

யாரும் பதில் சொல்லவில்லை.

"இவனை விட்டா ஆயிரம் பேரு. கொண்ணாந்து நிறுத்தறேனா இல்லியா பாருங்க" என்று நாற்காலியை விட்டு எழுந்தார் சாமி ராவ்.

"என்ன சார் எழுந்திட்டீங்க?"

"ஆமாம். புறப்படணும் நேரமாச்சு."

"நீங்க புறப்பட்டாத்தான் நிறுத்த முடியாதே!" என்றான் பாபு.

"நீங்க என்னா சார்?" என்று சிரித்தார் சாமிராவ். "சார், உங்கப்பாவுக்கும் உங்களுக்கும் மலைக்கும் மடுவுக்கும். அவரு இரைஞ்சுகூடப் பேசமாட்டாரு."

"வாஸ்தவம். நான் இப்படி இருந்தா தானே, அவர் நல்லவர்னு தெரியும்?"

"அப்படியில்லே சார். வித்யாசமா நெனச்சுக்காதீங்க. அவரு கொஞ்சம் அமர்ந்த சுபாவம்னு சொல்ல வந்தேன். நீங்க வித்யாசமா எடுத்துக்காதீங்க."

"எடுத்துக்கலெ. நீங்க உண்மையைச் சொல்றேள். வித்யாசமா எடுத்துப்பானேன்?"

"நான் தப்பாச் சொல்லலேன்னேன்... அப்பறம் என்ன சேதி? அப்பா திடமாயிருக்காங்களா? நாலு மாசம் முன்னலெ பாபநாசம் கடைத் தெருவிலே பாத்தேன். ரொம்ப இளைச்சாப்பல இருந்தாரு. வயித்து வலின்னு சொன்னரு... பாவம், எது வந்தாலும் வரலாம். வயித்து வலிமட்டும் வரப்படாது சார். ஆளை வச்சு வச்சு இம்சை பண்ணும். மருந்து சாப்பிடறுருல்ல?"

"ம்..."

"ஜாக்ரதையாப் பாத்துங்க...அப்ப நான் வரட்டுமா? யமுனு, வர்றேன். வரேம்மா பார்வதி."

"சரி."

சாமி ராவ் வாசலில் இறங்கிப் போனதும், மறுபடியும் ஊஞ்சலில் வந்து உட்கார்ந்து கொண்டான் பாபு.

"எங்கியோ அவசரமாப் போறேன்னியே! எங்கே?" என்று கேட்டாள் யமுனு.

பாபு சிரித்து விட்டான்.

"அதுக்கு எத்தனையோ ஜோலி" என்றுள் பார்வதி.

"ஒரு ஜோலியும் இல்லே. இந்த மனுஷனோட எதாவது வாய் வளந்துடப் போறதேன்னு பயந்துண்டுதான் சொன்னேன்... நல்ல வேளையா நீங்க காப்பாத்தினேள்."

"அவனோட நமக்கென்ன?"

"ஒண்ணும் வாண்டாம்னுதான் சொல்லிப்பிட்டேனே. நீ இனிமே தலையிட வாண்டாம்னுதானே சொன்னேன்?"

"தொலையறுன் போ."

"அவன் இன்னும் பிரயத்னம் பண்ணப் போறதாகச் சொல்றுனே. விடமாட்டேங்கறுனே."

"நீ சத்யம் பண்ணைப்பலதான்!" என்றுள் யமுனு.

பாபு திரும்பிப் பார்த்தான்.

"கோச்சுக்காதே. நீ வருத்தப்பட்டாப் போல அவரும் வருத்தப்படறுர்னு சொன்னேன், சும்மா."



பாபுவுக்கு என்ன சொல்கிறதென்று தெரியவில்லை. "உனக்கு என்னவெல்லாமோ சொல்லணும்னு தோணறது. சொல்லேன்."

"சும்மாத்தான் சொன்னேன். சாமி ராவ் வாசப்படி தாண்டினப்பறமே நீ, நான், அம்மா, கல்யாணம் எல்லாத்தியும் மறந்திருப்பாரு. மீற முடியாம கட்டிக் கிட்டிப் போட்டுக்கமாட்டாரு, எக்கச் சக்கமா வார்த்தையைச் சொல்லி."

பாபுவுக்குப் பெருமையாகத்தானிருந்தது. "என்னமோ, பஸ்ட் க்ளாஸ் வரனைக் கொண்டு நிறுத்தறேன்னு சொல்லிட்டுப் போயிருக்கார். பார்ப்பமே" என்றுன்.

"அப்பா, அம்மா, அக்கா எல்லாரும் சௌக்யந்தானே?" என்றுள் யமுனு.

"எல்லாரும் சௌக்யம். இன்னும் நாலு நாள்ளெ நெல்லு அனுப்பறேன்னு சொன்னர், அப்பா."

"ம்...விளைச்சல் எப்படியாம்?"

"சுமார்தான். எலி வெட்டு அதிகமாம்."

"சண்டைக்குப் பாம்புத் தோலு வேணும்னு பாம்பெல்லாம் புடிக்கிறுங்களாம். அதுனலெ எலி பெருகிடிச்சாமே" என்றுள் பார்வதி.

"என்னது!"

"ஆமாம்பா. அப்படித்தான் சொல்லிக்கிறுங்க."

"இது புது சேதியா இருக்கே. நான் கேக்கவே இல்லியே இத்தனை நாளா? சண்டைக்கு எதுக்குப் பாம்புத் தோல்?"

"எனக்குத் தெரியுமா? என்னமோ சொல்லிக்கிறுங்க."

"ஊர்மேலே போடற 'பாம்பு'கள் போராதுன்னு பாம்புத்தோல் வேறயா? [illegible] லாம் கிடைக்கிறதே. வீட்டுக்குள்ளே உட்கார்ந்து இத்தனை சேதி சம்பாதிக்கிறேளே."

"பின்னே உங்கமாதிரி சேதியைத் தேடிக்கிட்டா போக முடியும் நாங்க?... அப்ப விளைச்சல் சுமார்தானுமா?"

"சுமார்தான். தாளடிக்காவது எலி வெட்டு அதிகமா இல்லாம இருக்கறதுக்காக, வில்லு, மருந்து எல்லாம் வாங்கி வச்சிருக்கார் அப்பா."

"வில்லா? எலியை அடிக்கிறதுக்கா?"

"வில்லுன்னு ராமன் விடற வில்லு இல்லை. வில்லு மாதிரி இருக்கும். அதிலே பண்டம் வச்சிருக்கும். எலி வர்யை வச்சுதுன்னு மாட்டிக்கும்."

"எலிப் பொறியா?"

"அந்த மாதிரிதான். மருந்து வேற அடிக்கச் சொல்லியிருக்காராம்."

"உங்கப்பாவுக்கு சிரமம்தான்.."

"எலிகளுக்கும் சிரமம்தான். நாம சாப்பிடறதுக்காக எலிகள்ளாம் சாக வேண்டிருக்கே" என்றுள் யமுனு.

"யாராவது ஒருத்தர்தானே சாப்பிடணும்?"

"எலி, மனுஷா எல்லாரும் நிறைய சாப்பிடும்படியா விளையப்படாதோ?"

"அதுக்கு நீ போய்த்தான் விவசாயம் பண்ணணும்."

"பண்றேன். அதுக்குள்ளாரதான் எனக்குக் கலியாணம் பண்ணிப்பிடறேன், பண்ணிப்பிடறேன்னு கச்சை கட்டிட்டு நிக்கிறீங்களே எல்லாருமா!"

"பாத்தேளா, அவளுக்குக் கலியாணத்தைப் பத்தியே பேசணும்போலிருக்கு. எப்படியாவது பேச்சை அங்கே கொண்டு வந்துடறு."

"கலியாணம் ஆற பாடா இல்லெ. பேசியாவது சந்தோஷப்படப்படாதா?" என்றுள் யமுனு.

சற்றுக் கழித்து பாபு கேட்டான்: "ஊருக்குப் போப்போறேன்னேளே மாமாவைப் பார்க்க; எப்ப போப் போறேள்?"

"மூத்தவன் எழுதியிருக்கிறுன். கவலைப்பட வாண்டாம்னு. வாச்சொல்லிகிரச் சொல்லி ஒண்ணும் எழுதலெ. நான்தான் போயிட்டு வரலாமான்னு பாக்கிறேன், ஜம்னுவை அழைச்சுக்கிட்டு. சாதாரணமா ஜுரமாத்தான் இருக்குன்னு எழுதியிருக்குறுன். ரத்தக் கொதிப்பாமே, அது கொஞ்சம் உண்டு அவருக்கு. நாலஞ்சு வருஷமா இருக்கு. இதோடு கீல்வாயு வேற. சித்தெ அலஞ்சா படுத்துக்கிடறுரு. அதான் எனக்குக் கவலையா இருக்கு" என்று பார்வதி சொன்னபோது, அவள் முகத்தைப் பார்க்க முடியவில்லை. பயத்திலும் கவலையிலும் அவள் உள்ளம் சாம்புவது கண்ணில் தெரிந்தது.

"கிட்டப் போய் செஞ்சு போடலாம்னு, நமக்கு லபிக்கலெ" என்று உஷ்ணமாகப் பெருமூச்சு விட்டாள். குரல் கரகரத்தது. அழுதுவிடுவாள் போலிருந்தது.

"நீங்க என்ன ஒண்ணுமில்லாததுக்கெல்லாம் கவலைப்படறேள்? பயப்படாதீங்கோ. கீல் வாயு, ரத்த அமுக்கம் எல்லாம் இப்ப ரொம்ப பேருக்கு இருக்கு.

"சுந்தர காண்டம்"

"மூலமும் உரையும்"

வெளிவந்துவிட்டது!

1400 பக்கங்களுக்குமேல் சிறந்த கிளேஸ் காகிதத்தில், அழகிய காலிகோ பைண்டில். தேவ நாகர லிபியில் மூலமும் தமிழில் விரிவுரையும் கொண்டது. எல்லோரும் படித்து தெரிந்துகொள்ளும் வகையில் சிறப்பாக வெளியிடப்பட்டுள்ளது. இரண்டு பாகங்களும் சேர்த்து விலை 12—0—0.

"பால காண்டம்" சீக்கிரம் வெளிவரும். மற்ற காண்டங்களும் அச்சில் இருக்கின்றன

வாவில்ள ராமஸ்வாமி சாஸ்த்ருலு & ஸன்ஸ்,
292, சுபாஷ் சந்திர போஸ் ரோடு, சென்னை-1.

காரியும் புகையிலையும் நடமாடற காலத்திலெ இதுக்கெல்லாம் பஞ்சமில்லை. ஆனா, யாருக்கும் பயப்படும்படியாக ஒண்ணும் ஏற்பட்டுடறதில்லை."

"என்னமோ, ஸ்வாமிதான் காப்பாத்தணும். நானும் கோயிலுக்கெல்லாம் வேண்டிக்கிட்டுதான் இருக்குறேன்."

"கோயிலுக்கு வேண்டிக்கிறதை வாண்டாம்ங்கலை. வேண்டிக்குங்கோ. வேண்டிண்டப்பறம் அந்த ஸ்வாமி செய்வாரோ மாட்டார்ரோன்னு சந்தேகம் வேற பட்டுண்டு கவலைப்பட்டுண்டிருக்கிறதிலே என்ன லாபம்?"

"அதுவும் சரிதான். ஸ்வாமி மேலே பாரத்தைப் போட்டுட்டு அக்கடான்னு தான் இருக்கணும். மனசு கேக்குதா?"

"என்ன வேண்டிண்டிருக்கேள்?"

"வியாதி வக்கை இல்லாம இருக்கணும்னுதான்."

"எந்த ஸ்வாமிக்கெல்லாம் வேண்டிண்டிருக்கேள்?"

"எல்லாருக்கும்தான். வைத்தீச்வரன் கோயில், தஞ்சாவூர் மாரியம்மன்—எல்லாம்தான்."

"அப்படியே யமுனா கலியாணத்துக்கும் வேண்டிக்கப்படாதோ?"

"என் கல்யாணத்துக்குத்தானே? அதுக்கு ஒரு சாமி பாக்கியில்லே. அதெல்லாம் செய்யற செலவு வேற இருக்கு. கலியாணச் செலவுக்கு மேலே ரட்டைச் செலவு அதுக்கு இருக்கு" என்று யமுனா சிரித்தாள்.

"என்னது ரட்டைச் செலவா! கலியாணச் செலவைப் போலவா!"

"ஆமாம். திருப்பதி, திருக்கழுக்குன்றம், குணசேகரம், தஞ்சாவூர் காமாட்சி, வைத்தீச்வரன் கோயில்—அப்பறம் உங்க ஊர் கிட்ட பெரிய ஆலமரத்துக்கடியிலெ மந்தவெளி அனுமார்னு ஒருத்தர் இருக்குறாரமே—உங்க அக்கா சொன்னா, 'அவருக்கு வேண்டிங்க, அடுத்த மாசமே ஆயிடும்னு.' அவருக்கும் வேண்டிக்கிட்டிருக்கா அம்மா. ரண்டு வருஷம் ஆச்சு. போதுமா? ரட்டைச் செலவு ஆகுமா இல்லியா கலியாணத்துக்கு ஆருப்போல?"

"தேவலையே...இவ்வளவு இருக்கா?"

"அப்பறம் நீ, சாமி ராவ் எல்லாரும் கங்கணம் கட்டிகிட்டிருக்கீங்க."

"அதுசரி, வேண்டிக்காதவ நீ ஒருத்திதான்போலிருக்கு. நீ பேசறதைப் பாத்தா, உன் தங்கை கலியாணத்தைப் பத்திப் பேசுருப்போலன்னா இருக்கு?"

"நான் வேற வேண்டிக்கணுமா? கலியாணச் செலவு போராதுன்னு...எனக்குக் கலியாணம் ஆகணும்னு வேறே யாராவது வேண்டிப்பாங்களா?" என்று குழந்தை மாதிரி கேட்டாள் யமுனா.

"ஏன் வேண்டிக்கப்படாதா?"

வேலைக்காரி வந்தாள் அப்போது. "சரி, நான் போய்ப் பாத்திரங்கள்ளாம் எடுத்துப் போடறேன்" என்று பார்வதிபாய் எழுந்துபோனதும், பாபு தணிந்த குரலில் கேட்டான்:

"யமுனா, நான் ஒண்ணு கேக்கறேன். ஒண்ணும் வித்யாசமா நெனச்சுக்கமாட்டியே."

"நெனச்சிண்டா என்ன பண்ணுவே?"

"நான் என்ன பண்ண முடியும்?"

"என்ன கேக்கப் போறே?"

"இல்லை. உன் கலியாண விஷயமாப் பேசறபோதெல்லாம் இப்படியே வறட்டுத்தனமாகப் பேசிண்டிருக்கியே, ஏன்?"

"அது என் இஷ்டம்."

"உன் இஷ்டம்தான். அதான் தெரியறதே. ஏன்னுதானே கேக்கறேன்?"

"நீ தெரிஞ்சிண்டு என்ன பண்ணப் போறே?"

"ஒண்ணும் பண்ணவாண்டாம். தெரிஞ்சுக்கலாமோல்லியோ?"

"தெரிஞ்சிண்டு என்ன ஆகணும்?"

"இப்படி கேட்டுண்டே இருந்தா அப்பறம் என்ன சொல்றதுக்கிருக்கு?"

"நீ தெரிஞ்சுக்க வாண்டாம்."

"வாண்டாம்னுதான் பாக்கறேன். இருந்தாலும் இப்படி வறட்டுத்தனமா நடந்துக்கறபோது வேடிக்கையாயிருக்கு. குழப்பமாயிருக்கு. என்னத்துக்குடா இப்படி ஒருத்தி நடந்துக்கணும்னு கேட்டுக்கத் தோணறது."

"ஏன் இப்படி ஒருத்தி நடந்துக்கணும்?"

"நீ என்னைக் கேக்கறியா?"

"நீ ஏதாவது தெரிஞ்சிண்டிருப்பேன்னு கேக்கறேன்."

"எனக்குத் தெரியலை."

"ஏன் தெரியலெ?"

"இந்த சங்கிலியிலெ முட்டிக்கிண்டாத் தெரியுமோ என்னவோ?" என்றான் பாபு சற்று ஆத்திரத்துடன்.

"அதுக்குள்ளியும் கோபம் வந்துட்டுதா?"

"கோபம் வரலெ. நீ பேசறத்தைப் பார்த்தாலே இரண்டு கையும் விரிச்சுண்டு கத்தணும்போலிருக்கு."

"எங்கே, கத்து பாப்போம்."

"நான் ஏன் கத்தறேன்? ஏந்துண்டு போறேன். எனக்கு நாழியாச்சு."

"உக்காரு. அப்பறம் போகலாம்."

"எதுக்காக?"

"உன் கேள்விக்குப் பதில் சொல்றேன்."

"எந்தக் கேள்விக்கு?"

"அதான். வறட்டுத்தனமாப் பேசறேன்னு சொன்னியே, அதுக்கு."

"இதை அப்பவே சொல்லியிருக்கலாமே?"

வெட்டுக்காயம், சொரி சிறங்கு, வேனில்கட்டி, தீப்பட்ட புண், கரப்பான், முகப்பரு, சேத்துப்புண், கொப்புளம், பத்து முதலிய சகல சரும வியாதிகளையும் போக்கும் களிம்பு.

சைபால் CIBOL

ரமணீஸ் **பேபி கிரைப்**

குழந்தைகளுக்கு ஏற்படும் மாந்தம், வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல், பல் முளைக்கும்போது ஏற்படும் வயிற்றுப் போக்கு முதலிய சகல அஜீரணக் கோளாறுகளையும் போக்கி, புஷ்டி அளிப்பது.

நவீன யந்திர சாதனங்களால் தயாராகிறது

"எல்லிஸ் பாம்" (ELLIS BALM)

ஜலதோஷம், நரம்புவலி, தலைவலி, பல்வலி, மார்சளி, முதலியவைகளைப் போக்கவல்லது.

எமது பாக்டரியில் எல்லா மருந்துகளும் நவீன யந்திர சாதனங்களாலேயே தயாராகின்றன.

தயாரிப்பவர்கள்:

தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி,

மதுரை.

"ஏன் இப்ப சொன்ன கேக்கமாட்டியா?"

"ஐயோ!"

"ஏன் ஐயோச் சப்தம் போடறே—கலியாண விஷயமாப் பேசறப்போ."

"சொல்றதுன்னு சொல்லு உடனே. இல்லாட்டா, நான் எந்துண்டு போறேன்."

"சரி சொல்றேன்...முதல்லெ நான் ஒண்ணு கேக்கறேன். நீ வித்யாசமா நெனச்சுக்கமாட்டியே?"

"நெனச்சுக்கலே."

"உனக்கு என்ன வயசு?"

"இருபது முடியப் போறது."

"இவ்வளவுதானா?"

"ஏன்?"

"அதான் இப்படி கோபம், ஆத்தாமை எல்லாம் இருக்கு. எனக்கு என்ன வயசு தெரியுமோ உனக்கு?"

"சரியாத் தெரியாது."

"இந்தப் புரட்டாசியோட முப்பது முடிஞ்சுப்பிட்டது."

"ம்."

"அதனாலெ எனக்குக் கோபம், ஆத்தாமை எல்லாம் அனாவசியமா வராது."

"சரிதான்."

"கலியாணப் பேச்சிலேயும் எனக்கு அவ்வளவு உத்சாகம் கிடையாது."

"நீ என்ன கிழவியா?"

"உனக்கு எப்படித் தோண்றது?"

"இருபத்தஞ்சு வயசு மாதிரி."

"அஞ்சு வயசு குறைச்சலாவா?"

"ஆமாம்."

"அதனாலெதான் நான் ஏன் வறட்டுத்தனமாப் பேசறேங்கறது புரியலையா உனக்கு?"

"எதினாலேயோ! நீ பேசறது விசித்ரமாயிருக்கு."

"நீ கேக்கறதும்தான் எனக்கு விசித்ரமாயிருக்கு."

"நான் சொன்னதையே திருப்பிச் சொன்னா, சரியான பதில் சொன்னாப் போல ஆயிடுமா?"

"ஏன் ஆகாது?"

"ராமா ராம."

சுதேசமித்திரன், சென்னை-2

தேவை

கீழ்க்கண்ட இடங்களில் எமது மித்திரன் தினப்பதிப்பு.வாரப்பதிப்புகளை விற்பனை செய்யவும். சந்தாதாரர்களுக்குப் பட்டுவாடா செய்யவும் ஊக்கமுள்ள ஏஜெண்டுகள் தேவை. விண்ணப்பதாரர் செக்யூரிடி கட்டக்கூடியவராகவும் உள்ளூர் வாசியாகவும் இருத்தல் நலம். விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாஸதாருக்கு எழுதவும்.

விஜயவாடா
குத்தி
அனந்தப்பூர்
நெல்லூர்
கூடூர்
கடப்பை

சர்குலேஷன் மானேஜர்.

"ராமா ராமன்னு கையை விரிச்சுண்டு கத்தறதுக்கப்பறம் செல்ல மாட்டேங்கறது."

"பாபூ, உனக்குக் கத்திரிக்காய்த் தொகையல் பிடிக்குமா? பருப்புத் துவையல் பிடிக்குமா?" என்று உள்ளிருந்து குரல் கேட்டது.

"ரண்டும் பிடிக்கும்."

"அப்ப கத்திரிக்காய்த் துவையலே பண்ணிவிடட்டுமா?"

"எதுக்கு?"

"எதுக்குன்னா? சாப்பிடத்தான்."

"நான் சாப்பிடப் போறேன்னு சொன்னேனா?"

"நீ சொல்லித்தான் ஆகணுமா என்ன?"

"இல்லை இல்லை. எனக்கு நேரமாயிடுத்து. நான் போகணும்."

பார்வதி அருகே வந்தாள்.

"சாப்பிட்டுப் போயிடேன்."

"இல்லே. பாட்டியம்மா காத்திண்டிருப்பா. வாண்டாம். இஞ்ச சாப்பிடறது ஓடியாப் போப்போறது!"

"என்னமோ, வந்திருக்கியே சாப்பிட்டுடலாம்னு சொன்னேன்."

"பரவாயில்லே."

"பாபு இன்னிக்கி அவ்வளவு குஷியா இல்லெ" என்றாள் யமுனா.

"அதுக்கு சாமி ராவைக் கண்டவுடனே பொச பொசன்னு வந்திட்டாப்போல இருக்கு."

"இல்லே இல்லெ. வர்றபோதே தெளிவா இல்லே" என்றாள் யமுனா.

பாபுவுக்குச் சற்று திகைப்பாகத்தான் இருந்தது.

"அதெல்லாம் ஒண்ணும் இல்லெ. நான் சாதாரணமாத்தான் இருக்கேன்" என்று மறுத்தான்.

"மூஞ்சியிலெ தெரியலியே அது."

திடீரென்று மறைந்திருந்த பயம் அவன் மனதில் மீண்டும் தலையெடுத்தது. மொட்டை மாடியும் காகிதக் கசக்கலும் தலைமைக் குமாஸ்தாவும் அவர் மனைவியும் முன்னே வந்து நின்று, மனதை அலைத்தன. கல்வரம் உள்ளே மொனு மொனு வென்று அரித்தது.

"பாட்டி நல்ல டிபனைப் பண்ணிப் போடலியோ?" என்றாள் யமுனா.

"இன்னிக்கி நல்ல டிபன். சுப்பாச்சாரி ஹோட்டல்லெ ஊத்தப்பம், கமகமன்னு காபி—உங்க வீட்டுக் காபிமாதிரியே நல்ல காபி."

"அப்பறம் எங்க வீட்டுக் காபியும் குடிச்சாச்சு. ஆனால், உத்சாகம் வந்ததாகத் தெரியலியே!"

"காலமே ஊர்லேந்து வரபோது பஸ் நின்னு போயிடுத்து. ஒண்ணரை மைல் தள்ளினோம் எல்லாருமா. அப்பறம் மத்யானம் க்ளாசிலே தூக்கம் வரும்படியா வாத்யார் சொல்லிக் கொடுத்தார். நேத்திக்கி ராத்திரி வேற தூக்கமில்லே."

"தூங்காம என்ன பண்ணினே?"

"ஒண்ணுமில்லே."

"அப்படின்னா ஏன் தூக்கம் வரலே?"

"ஏதோ ஜபம் கிபம் பண்ணிண்டிருந்தேன்."

"ஏது? தேவலையே. அதெல்லாம் வேறு வச்சிட்டிருக்கியா?"



"ஏன் என்னைப் பாத்தா பாஷாண்டி மாதிரி இருக்கா?"

"என்னடி ஜம்னா, தத்துப்பித்துனு எதுக்குத்தான் விளையாடறதுன்னு கிடையாதா?"

"விளையாடலே அவ. எனக்கு ஒரு பாடம்தானே அது?"

"என்ன பாடம் பாபு?" என்றாள் யமுனா.

"நான் சொன்னது தப்புதானே?"

"பாபுக்கு எதுக்கு எடுத்தாலும் மூக்குக்குமேலே கோபம் வந்திடுதும்மா?"

"பின்னே எல்லாத்துக்கும் எதாவது சொல்லிட்டிருந்தா நீ?"

"பாபு, கோபமா?"

"நான் கோபிச்சுக்கலேயே."

"இல்லே; நீ கோச்சிட்டுத்தானிருக்கே."

"ராமா ராம."

"நீ இந்த மாதிரி கோவிச்சுக்கறதுன்னா, நான் வாயைத் தைச்சுப் போட்டுடறேன்."

"நான் கோவிச்சுக்கலெ, கோவிச்சுக்கலெ, கோவிச்சுக்கலெ. போருமா?"

"இது என்னவாம்?"

பாபு சிரித்தான்.

"நீங்க இவ்வளவு சாதுவா இருக்கேளே..."

"உங்க பொண்ணுமாத்திரம் இப்படி இருக்காளேன்னு கேக்கறியா?"

"சும்மா இருடி ஜம்னா" என்றாள் பார்வதி.

"நான் வரட்டுமா?"

"வா. ஊருக்குப் போறதுன்னா...ரண்டு மூணு நாள் கழிச்சுத்தான் போவோம். எல்லாத்துக்கும் நாளைக்கி வாயேன்."

"முடிஞ்சா வரேன்."

"நெல் வண்டி எப்ப வரும் பாபு?"

"ரண்டு நாள்ளெ வரும்னு சொன்னேனே."

"சரியாக் காதிலே கேட்டுட்டேன்."

"நீங்க ரண்டு பேரும் பேசறதைப் பாத்தா காமன் பண்டிகை லாவணி மாதிரி இருக்கு" என்றாள் பார்வதி.

"நான் எரிஞ்ச கக்ஷி, பாபு எரியாத கக்ஷி."

"நான் லாவணி சின்னக் குழந்தையிலே பார்த்தது, தஞ்சாவூர்லெ. எனக்கு ஞாபகம்கூட இல்லெ சரியா. . உங்கடவா தான் ரொம்ப கொண்டாடறா அதை."

"எங்கடவங்களுக்கு வேற வேலை இல்லெ, மீசையைத் தடவிக்கிட்டு காமன் எரிஞ்சானா இல்லியான்னு பாட்டுப் பாடிக்கிட்டு கிடப்பான். அந்த ஜோர்லே இவன் ராஜ்யமே எரிஞ்சு போறதைக்கூட அணைக்க முடியலெ" என்றாள் பார்வதி.

"சரி, அப்ப நான் வரட்டுமா?"

"சரி."

"நாளைக்கு முடிஞ்சாத்தான் வருவியாக்கும்?" என்றாள் யமுனா.

"ஆமாம்."

செருப்பை மாட்டிக்கொண்டு வாசலில் இறங்கினவனுக்கு, அன்று அம்மா அழைத்து வந்த சுமங்கலிகள் ஞாபகம் வந்தது. நமஸ்காரம் செய்ய இன்னும் யாரோ மீதியிருந்த நினைவு வந்தது. திரும்பினான்.

"என்ன பாபு?"

சங்கோசம் பற்றிக்கொண்டது.

"ஒன்றுமில்லை. ஏதோ நினைச்சிண்டேன். மறந்து போச்சு" என்று தயங்கினான் நினைத்துப் பார்க்கிறாற்போல.

"எப்ப நெனச்சிண்டே?" என்றாள் யமுனா. "எங்கே நினைச்சுண்டே?"

பாபு பதில் சொல்லத் தெரியாமல் சற்று விழித்தான்.

"உள்ளே இருக்கறபோது நெனச்சிருந்தா, மறுபடியும் அங்க வந்து கொஞ்சம் உட்காரு. ஞாபகம் வரும்."

"ம்ஹ்ம்...வராதாத் தெரியலை" என்று தலையசைத்து, சிரித்துவிட்டுத் திரும்பினான் அவன்; "நான் போயிட்டு வரேன்."

'நீ வந்ததே யமுனாவை வணங்கத்தானே? இதற்கு என்ன தயக்கம், பயம்? ஏன் என்று கேட்டால், ஏதாவது சொல்லிச் சமாளித்துக்கொள்ள முடியாதா, இப்போது சொன்னாற்போல? . .' என்று உள்ளே எழுந்த கேள்வியைச் செவியுற்று திணறிக்கொண்டே நடந்தான்.

ஃ ஃ ஃ

அறைக்குத் திரும்பி வந்தபோது சூரியன் அஸ்தமித்து விட்டது. பட்சிகளின் கூடடைகிற பாட்டுகள் கொல்லை முழுவதும் ஒரே இரைச்சலாக, ஒரே ரகளையாக இரைந்துகொண்டிருந்தன. மனதில் இப்போது அவ்வளவு பயம் இல்லை. நமுநமுவென்றுமட்டும் ஒரு சிறு அமைதியின்மை. உடலும் ஒரேயடியாக அயர்ந்துவிட்டிருந்தது. மொட்டை மாடியைத் துளைத்துத் துளைத்துப் பார்த்தும் காகிதக் கசக்கல் ஒன்றும் தென்படவில்லை.

ஒரு மணி நேரம் இரைச்சலில்லாமல், அமைதியாகப் படுத்து உறங்கினால் தேவலைபோலிருந்தது. பாபு கட்டிலில் பாயை விரித்துத் தூசியடைந்திருந்த ஜமக்காளத்தை உதறி, தலையணையைப் போட்டுப் படுத்தான். தெருச் சப்தமும், காவேரியில் தோய்க்கிற சப்தமும், கொல்லையில் சம்போத்து ஜோடியும், கிளிக் கூட்டமும் போடுகிற இரைச்சலும் கண்ணை மூட விடவில்லை. ஜன்னல் கதவைச் சாத்தப் போகும்போது தலைமை குமாஸ்தாவின் உருவம் அடுத்த மொட்டை மாடியில் தெரிந்தது. ஒரு பனியனை மட்டும் போட்டு, எச்சில் துப்ப அறையைவிட்டு வெளியே வந்தவர், ஜன்னலில் அவனைப் பார்த்துவிட்டு, துப்பிவிட்டுப் போனது...அவர் பார்த்தது சாதாரணமாகத்தானிருந்தது. பார்வையில் விசேஷ அர்த்தம் ஒன்றும் தெரியவில்லை. ஜன்னல் கதவுகளையும் மற்ற கதவுகளையும் சாத்தி, படுத்தான். ஒரு இரைச்சல்கூடக் கேட்காமல் இருக்க, இரண்டு காதுகளையும் விரல்களைவிட்டு இறுக அடைத்துக்கொண்டு, கண்ணை மூடிக்கொண்டான். ராஜூவை நினைத்தான். அப்பாவை நினைத்தான். அவர் காட்டிய தெய்வத்தை நினைத்து சொன்ன வணக்கத்தை முனகி முனகி மனதை இரைச்சலிலிருந்து மீட்டுக்கொண்டுவிட்டான். மனது அப்படி ஒரே நிலையில் நிற்பதாக இல்லை. எங்கெங்கேயோ சுற்றி அலைந்தது. ஆனால், அதைப் பிடித்துப் பிடித்துத் தியானத்தின் சுவட்டில் விடுவதும், அது தப்பித் தப்பி விலகுவதும், மீண்டும் சுவட்டில் விழுவதும், ஒரு அளவுக்கு அமைதியை அளிப்பதாக இருந்தது. நியாயமாக வேலை செய்து கூலி வாங்கினாற்போல, ஒரு தூக்கம் கடைசியில் வந்தது. நல்ல தூக்கம். நீண்ட தூக்கம் இல்லை. அரைமணிக்குள்பட்ட தூக்கம் தான்.

தூங்கி எழும்போது நன்றாக இருட்டிவிட்டது. கதவுகள் சாத்தியிருந்ததால் உள்ளடைந்த புழுக்கம் மூச்சை அடைப்பதுபோலிருந்தது. எல்லாக் கதவுகளையும் திறந்து விட்டான். மின்சார விளக்குகள் தெருவிலும் காலேஜ் ஹாஸ்டலிலும் எரிந்துகொண்டிருந்தன. அடுத்த மொட்டை மாடி அறையிலும் வெளிச்சம் தெரிந்தது. பாபு இன்னும் அரிக்கேனை ஏற்றவில்லை. ஜன்னல் வழியாகப் பார்த்தபோது, கையில் பேனாவுடன் அறையிலிருந்து வெளி வந்தார் தலைமைக் குமாஸ்தா. பாதி எழுத்திலேயே எழுந்து வருகிறதுபோல் தோன்றிற்று. துப்பிவிட்டு உள்ளே போனார். நின்று அடுத்த மாடி அறையைப் பார்க்கவில்லை. சரி, விஷயம் அவருக்கு நிச்சயமாகத் தெரியாது என்று தன் அறையின் கும்பிருளில் நின்றிருந்த பாபு நிச்சயம் செய்து, ஆறுதல் அடைந்தான். விளக்கையும் ஏற்றவில்லை. இருளில் நின்றபடியே பார்த்துக்கொண்டு நின்றான். பத்து நிமிஷம் கழித்து, அந்தத் தலை தெரிந்தது. அவள் தலைதான். கருகருவென்று காதின் முன் மயிர் இறங்கிய அழகுத் தலை தெரிந்தது. தலைமைக் குமாஸ்தா என்ன சொன்னாரோ? சிரித்தது—சந்தோஷச் சிரிப்புதான். பின்பு பாபுவின் ஜன்னலை இரண்டு தடவை பார்த்தது. இங்கு இருள் இல்லாவிட்டால், இவன் கண்களை நேராகச் சந்தித்திருக்கக்கூடிய பார்வைதான் அது. இரண்டு மூன்று தடவை பார்த்துவிட்டு மறைந்துவிட்டது.

யமுனாவைப்போல அறிவும் ஒளியும் திகழ்கிற முகம் இல்லை இது. ஆனால் தளதளவென்று பருவம் பால் வடிந்தது. கன்னத்தில் தலைமைக்குமாஸ்தா அணிவித்த வைரத் தோட்டின் பூரிப்பு அடித்துக் கொண்டிருந்தது. வைரமோ, ரங்கூன் வைரமோ—அந்தக் கன்னத்தில் அந்த ஒளி சிதறிப் பொலியும்போது, வைரம் மாதிரிதான் இருக்கிறது. கால் மணி அப்படியே நின்றுவிட்டுக் கீழே இறங்கி, காவேரியில் கை, காலை அலம்பிவிட்டு நீலுப் பாட்டி வீட்டுக்குச் சாப்பிடப் போனான் பாபு.

(தொடரும்)



திருப்பாப்புலியூர் அர்ச். சூசையப்பர் உயர்நிலைப்பள்ளியில், தென் ஆர்காடு போலீஸ் தலைமையதிகாரி முன்னிலையில் 'தேசிங்கு' என்னும் நாடகம் மார்ச் 18-ந் தேதி நடைபெற்றது.

பொல்லாத நிபந்தனை

[காடோடி]

தை பிறந்தால் வழிபிறக்கும் என்பார்கள். ஆனால், தை பிறந்து மறு மாதம் வந்த பிறகும் கோவிந்தய்யருக்கு வழியே பிறக்கவில்லை. ஆம்; அவருடைய மகள் மங்களத்தின் கல்யாண விஷயமாகத்தான். அவர் வருத்தப்படக் காரணம், நாம் நினைப்பதுபோல் அல்ல! கல்யாணமாகி அவள் புக்ககம் சென்றால், இத்தனை வருஷங்களாக அவருக்கு வேதனையும், தலைவலியும் கொடுத்து வந்த பிடில் வாத்திய ஒலியிலிருந்து விடுதலை பெற்று ஆறுதலடையலாமே என்ற எண்ணத்தில்தான் அவர் அவளுக்குக் கல்யாணமாகாததுபற்றி வருத்தப்பட்டார்.

மற்றொரு விஷயமும் அவருக்கு அதிகமான தலைவலியைக் கொடுத்து வந்தது. கோவிந்தய்யருடைய வீட்டிற்குப் பக்கத்திலிருக்கும் சிறிய வீடும் அவருடையதே. மங்களம் பிடில் கற்றுக் கொள்ளாததற்குமுன் அவ்வீடு மாதம் பத்து ரூபாய் வாடகை கொடுத்து வந்தது. அவள் பிடில் வாசிக்க ஆரம்பித்த இரண்டு மாதங்களுக்கெல்லாம் அவ்வீட்டில் குடியிருந்தவர் ஜாகை காலி செய்துவிட்டார்! முதலில் கோவிந்தய்யர் இதைச் சாதாரணமாக எண்ணினர். ஆனால், அடுத்தடுத்து வந்த குடிகள் எல்லாம் இரண்டு மூன்று மாதங்களுக்கு மேல் தங்குவதேயில்லை! தன்னுடைய மகள் எழுப்பும் பிடில் ஒலிதான் இந்தப் போக்கிற்குக் காரணம் என்று ஒரு வருடத்திற்குப் பிறகே அவருக்குத் தெரிய வந்தது!

மங்களத்தை நோக்கி வந்த ஜாதகங்கள் பொருத்தம், சீர் விஷயம் போன்ற இனங்களினால் நழுவிக்கொண்டேயிருந்தன. அவள் கல்யாணத்திற்குச் சீக்கிரமாக வழி பிறக்கும் எனத் தோன்றவில்லை! அந்த வீட்டிற்கும் தான் . . . !

கோவிந்தய்யரின் பொறுமை எல்லை மீறிச் சென்றது. மேலும், அவர் பணத்திலேயே குறியான மனிதர். வீடு வாடகையற்று இருப்பதை அவரால் எப்படிப் பொறுக்க முடியும்?

மூன்று நாட்கள் சிந்தனை செய்த பிறகு, ஒரு முடிவிற்கு வந்தார், 'வீடு வாடகைக்கு விடப்படும்' என்று தினசரிகளில் விளம்பரம் செய்வது. வீட்டைப் பார்க்க வருபவர்களிடம் வீட்டைப்பற்றிப் பிரமாதமாகப் பேசுவது. அத்துடன் ஒரு 'நிபந்தனை'யும் விதிப்பது' என்று. அந்த நிபந்தனையிலேதான் அவர் நோக்கம் புதைந்து கிடந்தது.

முடிவு செய்தபடியே பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்துவிட்டார். 'குறைந்த வாடகை; சிறந்த வீடு!'—இப்படிப் பலவிதக் கவர்ச்சியான விஷயங்களைக் கலந்து, கடைசியாக அவரது நிபந்தனையையும் சேர்த்து வைத்தார்:—

"ஆனால், குடியிருக்க வருபவர் குறைந்தது இரண்டு வருஷங்களாவது நிரந்தரமாக இருக்கவேண்டும். இந்த வாக்குறுதி கொண்ட பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும். இந்த நிபந்தனையை ஏற்பவர்கள்மட்டுமே வீட்டை வந்து பார்க்கலாம்!"

விளம்பரம் வெளியாகி மூன்று நாட்கள் சென்றுவிட்டன. உள்ளூர் வாசிகளுக்கு அந்த வீட்டின் மகிமை ஓரளவு தெரியும். ஆகையினால், கோவிந்தய்யர் எதிர்பார்த்தபடி போட்டி போட்டுக் கொண்டு எவருமே அந்த வீட்டை வந்து பார்க்கவில்லை! என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து நின்றார், அவர்.

ஒரு நாள், அவருடைய விளம்பரம் பயன் தரும்வண்ணம் ஒரு இளைஞன் அவரைத் தேடிக்கொண்டு வந்தான். மகிழ்ச்சியிலே மிதந்த கோவிந்தய்யர், அந்த இளைஞனைப் பிரமாதமாக வரவேற்றார்.

"என்ன விஷயம்? வீடு பார்க்கத்தானே?" என்று கோவிந்தய்யரே கேட்டுவிட்டார், துடிதுடிப்புடன்.

"ஆம்; அந்த விஷயமாகத்தான். விளம்பரத்தைப் பத்திரிகைகளில் படித்தேன்!" என்ற அந்த இளைஞனும் கோவிந்தய்யரும் பக்கத்து வீட்டுக்குக் கிளம்பினர்.

வீட்டைச் சுற்றிக் காண்பிக்க ஆரம்பித்தார் கோவிந்தய்யர்.

"இதோ பார்த்தீர்களா . . . ! காற்றோட்டத்திற்கு ஜன்னல்கள் . . . !"—

"அவசியம் தேவை!"—

"எத்தனை பேர் வந்தாலும் உட்காரலாம் . . . விசாலமான கூடம் . . . !"

"எனக்கு மிகவும் தேவையானது! ..."

"எல்லாம் கற்சுவர். . . பூகம்பமே கண்டாலும் இடிந்து விழாது! . . ."

"அப்படிப்பட்ட வீடுதான் வேண்டுமென்று தேடிக்கொண்டிருக்கிறேன்..."—

இன்னும் எவ்வளவெல்லாமோ தன் வீட்டைப் புகழ்ந்து கூறினர், கோவிந்தய்யர். அவன் எங்கே குடி வாராமல் போய்விடுவானோ என்ற பயத்தில்.

கடைசியாக, ஒரு அசட்டுச் சிரிப்புடன் கோவிந்தய்யர், "பேப்பரில் நிபந்தனையைப் படித்து, பிறகே வீட்டைப் பார்க்க வந்திருப்பீர்கள் என நினைக்கிறேன்! . . ." என்றார்.

"ஆம்; இரண்டு வருஷம் என்ன, ஐந்து வருஷங்களுக்குக்கூடப் பத்திரம் எழுதிக் கொடுக்கத் தயார்! அதுபோலவே நீங்களும் மூன்று வருஷத்திற்கு என்னைக் குடி பெயர்ந்து செல்லும்படிச் சொல்லக்கூடாது. என்னுடைய நிபந்தனைக்கும் எழுத்துமூலம் உறுதி அளித்தால் நல்லது!" என்றான் இளைஞன்.

பழம் நழுவிப் பாலில் விழுந்த மாதிரியாயிற்று, கோவிந்தய்யருக்கு!

"ஓ! பேஷாக . . . ! நன்றாக எழுதி வாங்கிக் கொள்ளுங்கள். எனக்கும் இம்மாதிரியான குடிதான் வேண்டும் . . . !" என்று தலையை ஆட்டி மகிழ்வுடன் கூறினர்.

"நாளைக்கு நாள் நன்றாக இருக்கிறது. நாளையே குடி வரலாமென்றிருக்கிறேன்... சுமார் பத்து மணிக்கு மேல் . . ."

"பத்து மணிக்கா? நான் ஊரில் இருக்கமாட்டேன். சாயந்திரம்தான் வருவேன் . . . அதற்கென்ன? . . . ? இந்தாருங்கள் சாவி! . . ." என்ற கோவிந்தய்யர், வீட்டுச் சாவியை இளைஞனிடமே கொடுத்துவிட்டு, 'அட்வான்ஸாக' இருபது ரூபாயுடன், தன்னுடைய நிபந்தனைக்கும் கையெழுத்திட்டு வாங்கிக் கொண்டார். இளைஞனும் தன்னுடைய நிபந்தனையில் அவரிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டு விடை பெற்றுத் திரும்பிச் சென்றுவிட்டான்.

கோவிந்தய்யர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை! சந்திர மண்டலத்தில் கொடி நாட்டியதுபோன்ற உணர்ச்சி..!

மறு நாள் பத்து மணிக்கு பக்கத்து வீட்டில் புதுக்குடித்தனம் ஏறிவிட்டது. மாலை வீடு திரும்பி வீட்டுப் படியின் மீது காலை வைத்ததுமே, கோவிந்தய்யருக்குத் தூக்கிவாரிப் போட்டது! இமாலயத் திகைப்பை அடைந்தார் என்று கூடச் சொல்லலாம்!

மங்களம் பிடிலைக் கோரமாக வாசித்துக் கொண்டிருந்ததனால் ஏற்பட்ட திகைப்பு அல்ல; அதைத் தொடர்ந்து அதிர்ந்த மற்றொரு சப்தமே காரணம், அவருடைய திகைப்பிற்கு!

ஆம்; மிருதங்கத்தின் பலமான இடியோசை!

தன்னைச் சமாளித்துக்கொண்டே உள்ளே நுழைந்தார். அந்த இடி ஓசை இன்னும் பலமாகக் கேட்டது, புதிதாகக் குடிபெற்ற அவருக்குச் சொந்தமான பக்கத்து வீட்டிலிருந்து!

அவர் உள்ளத்தில் திடீரென ஒரு சந்தேகம் தோன்றியது. அது சரிதானா என்பதைத் தெரிந்துகொள்ள உடனே வாசலுக்கு வந்து பக்கத்து வீட்டை நோக்கினர்.

அவருடைய சந்தேகம் வீண் போகவில்லை! பக்கத்து வீட்டு வாசலில்—அவர் புதிதாகக் குடிவைத்த தன்னுடைய வீட்டு வாசலில்—கீழ்க்கண்ட விளம்பரம் அடங்கிய போர்டு ஒன்று தொங்கக் கண்டார்!

தியாகராஜய்யர்,
(மிருதங்க வித்துவான்)
இவ்விடம் மிருதங்கம் போதிக்கப்படும்!

கோவிந்தய்யருக்கு மயக்கமே வந்துவிட்டது!



வெதுவெதுப்பான மிருதுவான மெத்தையிலே படுத்துக்கொண்டிருந்தேன். இரவு முழுவதும் தூக்கமின்மையால், கண் எரிச்சலெடுத்தது. ஜன்னலுக்கு வெளியே பார்த்தேன். குங்குமத்தை வாரி இறைத்த மாதிரி கீழ் வானம் செக்கச் செவேலென்று, நாணமுற்ற நங்கையாய்த் திகழ்ந்தது. வீதியிலே பசு, எருமை மாடுகளின் மந்த நடையும், அவைகளின் மணி ஓசையும், உஷத் கால அமைதியைக் குலைத்தன. இடை இடையே பால்காரர்களின் அதட்டும் குரல்கள். அழகிய மங்கையர், இரவின் இன்ப அரவணைப்பில் ஆழ்ந்துவிட்ட நாணம் சூழ, பரபரப்புடன் வீட்டுக் காரியங்களைக் கவனித்தனர். இந்தப் பல்வேறு சப்தங்கள் எனக்கு இனிமையான கீதமாய் இசைந்து நின்றன. மனமும் நிம்மதி அடைந்தது. இன்னும் இவ்வுலகிலே, ஒரே ஒரு நாள்தான் இந்த சப்தங்களை என் காதுகள் கேட்கும். பிறகு இவை வருமா?

மெதுவாக, என் படுக்கைக்கு அருகே ஆழ்ந்து தூங்கும் என் கணவர் பக்கம் திரும்பிப் பார்த்தேன். நெற்றியில் கருமயிர் புரளச் சாந்த முகத்துடன், ஆழ்ந்த மெல்லிய மூச்சுடன் தூங்கும் அவர் நிலை, என் மனதைப் பிழிந்தது! என்ன ஆனந்தமாகத் தூங்குகிறார்? ஆனால், அவர் எனக்காகப் பத்து மாதங்களாகக் கஷ்டப்படுகிறார். குறைப் பிரசவத்தின் கோளாறும், பாரிச வாயுவின் தீவிரமும் சேர்ந்து, என்னைப் படுக்கையில் நிரந்தரமாகத் தள்ளிவிட்டன. என் தாங்கமுடியாத வலியைக் கண்டு அவர், தன்னலம் மறந்து, பரிவுடன், பொறுமையாய்க் கவனித்து வருகிறார். பல் தேய்த்துவிடுவது முதல் உணவு ஊட்டல், உடை உடுத்துதல் வரை அவர் உதவியை நாடி நிற்கிறேன். 'பாங்கி'யிலிருந்த கடைசி தம்பிடிவரை எனக்காக வைத்தியம் செய்யச் செலவிட்டார்—பிழைப்பேன், மறுபடியும் எழுந்து வீட்டில் சிட்டுக் குருவியாய்ச் சுறுசுறுப்புடன் ஓடியாடிப் பழையபடி நடமாடுவேன் என்று நம்பிக்கையை வளர்த்தார் ... உண்மையில் என் ஆயுட்காலம் வரை 'பிறர் கையை' எதிர்நோக்கியே வாழும்படி விதி விதித்துவிட்டது. வயது இருபத்தைந்துதானென்றாலும், நடமாட ரொம்ப காலம் பிடிக்குமாம். டாக்டர் ரகசியமாகக் கணவரிடம் கூறுவதை ஏன் நான் அறிந்தேன்?

அவர் என் அன்புக் கணவர்! ஆனால், நான் அவருக்கு 'மனைவி' என்று பெயருக்கு மாத்திரம்தான்! இனி வீடு தேடிக் களைத்துவரும் அவரை இன்முகத்துடன் வரவேற்று உபசரிக்க முடியாது! குழந்தைகள் என்ற மாமணிகளை அவர் என் வயிற்றுக் கடலிலே பெற முடியாது! குடும்பத்தை நடத்த முடியாது.. அவருக்கு நான் ஒரு பெரும் சுமை! . . . என் கண்களை நீர் திரையிட்டது.

“என்ன சுசீலா, இரவிலே நன்றாகத் தூங்கினாயா? என்ன கண்களில் முத்துக்கள்? கடலிலே அல்லவா அவை பிறக்கும்?”

அவர் சிரித்துக்கொண்டே ஆர்வத்துடன் சொன்னார்!

நானும் சிரித்துவிட்டேன். “பெண்களுக்கும் கண்ணீருக்கும் ரொம்ப ரத்த பாசம் உண்டு! இன்றைக்கு நன்றாகத் தூங்கினேன் ... இப்படி இருந்தால் ... எவ்வளவோ தேவலை. . . நாளைய தினம் வலிக்கும், தூக்கத்திற்கும் இடமே இருக்காது ... உங்கள் கவனிப்பிலே வலி வராது.”

“அதுதான் சுசீ, 'ரைட்'! ஒரு நிமிஷத்திலே சூடான காபி; ரொட்டி பிறகு...”

“மருந்து” என்றேன்.

இருவரும் சிரித்துவிட்டோம் ... நாளைக்குச் சிரிக்கத் துணை கிடையாது.

அவர் மௌனமாய் 'ஷேவிங்' செய்துகொள்வதை நான் கண் கொட்டாமல் கவனித்தேன். கருநிறம் பாவிய தாடைகள் மழமழவென்று மாறுவதைப் பார்த்தேன் ... நாளைக்கு அவர் வாழ்வும் கருநிறத்தினின்று விடுபட்டு, மழமழவென்று பிரகாசிக்கும் அல்லவா? அவரை இன்று பூராவும் நானே கவனிக்க ஆசைப்பட்டேன். ஆசைப்பட்ட வஸ்துவைக் குழந்தை கீழே வைக்க நேரிட்டால், அதன் கண்களில் படரும் 'சிணுக்க'மும், ஆவலும் என்னையும் பீடித்தன. . கீழே அவர் சமைப்பதை—காய்கறி வதக்கும் ஓசையை, கடுகு வெடிப்பதை—உன்னிப்பாகக் கவனித்தேன். . கண்களை மூடி கண்ணீர் மெல்லிய இரப்பை ஊடே பெருகுவதைத் தடுக்க முயன்றேன். . . பெண், கண்ணீரைத் தடுக்க முடியுமா? இந்தச் சிறு சப்தங்களை எல்லாம் மறக்காது, என் தனித்த, நீண்ட, எல்லையில்லா எல்லைப் பிரயாணத்திற்கு வழித்துணையாக அழைத்துச் செல்ல வேண்டும். . . .

கண் திறந்தேன். அறையில் ஒருவருமில்லை. மெள்ள வலக்கைக்கு அருகே உள்ள மேசை டிராயரைத் திறந்தேன். அங்கே மீளாத் தூக்கத்திற்கு அமிர்தமாக இருக்கும் மருந்து டப்பியைக் கண்டேன். ஏறக்குறைய நூறு மாத்திரைகள்—தூக்க மருந்து வில்லைகள், பளபளக்கும், நெளியும், செவ்வர்ணமாத்திரைகள்—அதிலே இருந்தன. வலியை மறக்கடித்து, தூக்கத்தை வரவழைத்துப் போதையில் தள்ளும் அவைகளை அதிகமாக உட்கொண்டால் சுதந்திரம் உண்டு. ஆனால், அவைகளை மூன்று மாதமாக உண்ணாமலேயே காலம் தள்ளினேன். மொத்தமாக இன்று உண்டால், என் கணவருக்குச் சர்வ சுதந்திரம் கிட்டும். சில நாட்களுக்கு அவர் எனக்காக அழலாம்—பிறகு என்னை மறந்துவிடுவார்— துக்கம் என் தொண்டையை அடைத்தது.

அந்த டப்பியை என் தலையணையின் கீழ் வைத்துக்கொண்டேன்.

உடை மாற்றிக்கொள்ள உடைகளைத் தந்தார் ... உணவைக் கொண்டுவந்தார்.. நான் சிரித்தவாறே பேசினேன் ... இறக்குமுன் அழுகை ஏன்? மேசையில் உண்ணும் அவரைக் கவனித்தேன். நேற்று வந்த கடிதங்களைப்பற்றி, டாக்டரைப்பற்றி, மருந்துகளைப்பற்றிப் பேசினேன். இந்தப் பத்து மாதங்களாக எங்கள் வாழ்வில் நிகழ்ந்த நல்ல நாட்களைப் பற்றிப் பேசினேன்; பேசினேன். அவர் சிரிப்புடன் சும்மா இருந்தார். அவரையும் பிறகு பேசச் செய்தேன். “ஏது, என் சுசீ, இவ்வளவு கலகலப்பாய் இருக்

கிறாள்?" என்று சிரித்தார் ..., அவருடைய கலகலவென்ற தெம்புதரும் குரலினிமையை என் இருதயப் பேழையில் போட்டு நிரப்ப முயன்றேன், தேனீ எவ்விதம் தேனைச் சேகரிக்கிறதோ, அது மாதிரி அன்று தடுமாறினேன். அவரும் தன்னை மறந்து பேசினார்...

"அடடா, சுசீ, மணி பத்து ஆகிவிட்டதே! ஆபீஸுக்கு லேட்; 'மானேஜர்' என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும்! நான் வரட்டுமா? மூன்று மணிக்கே வந்துவிடுவேன். சரோ வந்தால், கவனிக்கச் சொல்லு. . ." 'டக் டக்' என்று பூட்ஸ் சப்தித்தது ... வாயிற்படிவரை சென்றவர், திரும்பினார். "சுசீ" என்று என் அருகே வந்தார் ...., அவருடைய உஷ்ணம் வீசும் மூச்சும், வெதுவெதுப்பான மெல்லிய அதரங்களும் என் குளிர்ந்த நெற்றியுடன் உறவாடின ... எனக்குக் கண்களில் நீர் நிறைந்துவிட, அவர் உருவம் மங்கி நின்றது ... "சுசீ, தினமும் இப்படி இருந்தால் நீ தேறிவிடுவாய், அழாதே!" என்றார் ... என் நெற்றியிலே அவர் இன்ப முத்திரை குறுகுறுப்பை உண்டாக்கியது!

என் காதுகள் அவருடைய பூட்ஸ் சப்தங்களைப் பிடித்து வைத்துக்கொள்ளத் தணறின. சப்தம் தேய்ந்தது .. அவரை மறுபடியும் கூப்பிட நினைத்தேன் .. கூடாது. . கூடாது.. தொந்தரவுகூடாது. . போதும்..அவர் இனி சுதந்திரப் பறவை. சுசீலா என்ற விலங்கு அவரைப் பீடிக்காது! அவருக்கும் எனக்கும் விடுதலை! வாழ்விலே இது ஓர் புனித நாள்!

சரோ வந்தால், தாகத்திற்கு அதிகமாகத் தண்ணீர் வைக்கும்படிச் சொல்லவேண்டும். மருந்தை உட்கொண்டால் தாகம் ஏற்படுமே? சரோ என் நாத்தனார். வயதும் என் வயதே. குழந்தைகள் இரண்டு உண்டு அவளுக்கு. நான் புஷ்பிக்காத மரம். மேலும், பட்டுப்போன விகாரமான மரம், அவளோ பூத்துக் குலுங்கும் பச்சை மரம்! ஏன், இந்த உலக நந்தவனத்தில்எல்லாமரங்களும்புஷ்பித்துவிடுவதில்லை? அதுவும் சில அகாலத்தில் பட்டுவிடுவது ஏன்? சரோவின் அவ்விரு குழந்தைகளும் புஷ்டியாய் உள்ளன. பெண் பெரியது. வயது ஏழு. ஆண் குழந்தைக்கு ஐந்து வயது. அவள் என் வீட்டிற்குப் பக்கத்திலேதான் இருக்கிறாள்.

அவள் சிரித்துக்கொண்டே, மேலே வந்தாள். படுக்கையைத் தட்டிப் போட்டாள். "தர்மோஸ் பிளாஸ்கில்" இரண்டு கப் ஓவல்டின் கரைத்து வைத்தாள். கூஜாவிலே தண்ணீரை வைத்தாள். ஆரஞ்சு, சாத்துக்குடி சுளைகளை உரித்து, சக்கை விதைகள் நீக்கி, தட்டிலே அலங்காரமாக வைத்தாள். அவள் கணவர் அதிர்ஷ்டசாலி!

"சரோ, உனக்குத்தான் என்னால் எவ்வளவு துன்பம்? ஒரு நாளா, இரண்டு நாளா? பத்து மாதங்கள்! உனக்குக் கஷ்டமாயில்லையா?"

"போ மன்னி, ரொம்ப அழகுதான் நீ பேசறது? இதனால் இளைத்துவிடமாட்டேன். உண்மையில், நாம் இருவரும் தொண்டு கிழமாகிவிட்டாலும்கூட நான் உன் வீடு வந்து, தட்டுத்தடுமாறி மெத்தைப்படி ஏறிவந்து, உனக்கு உதவி செய்வேன்!"

உடனே அவள் தன் உதடுகளைக் கடித்துக்கொண்டாள்!

ஆம்; நான் சாகும்வரை இந்நிலையிலேதான் இருப்பேனே தவிர, இவ்வீட்டிலே சுற்றிச்சுற்றி வரமாட்டேன் என்பதை எவ்வளவு அழகாய்ச் சொல்கிறாள்!

"மன்னி, என் பைத்தியக்காரப் பேச்சை மறந்துவிடு. என் நாக்கை அறுத்தெறிய வேண்டும்!"

"சரோ, அதை மறந்துவிடு! எல்லாம் விதியின் செயல். நீ என்ன செய்வே?"

"என்ன; இக்காலத்திலேதான் டாக்டர்கள் என்ன என்னவற்றிற்கோ புதுப் புது மருந்துகளைக் கண்டுபிடிக்கிறார்களே! நீ ஏன் நம்பிக்கையை இழக்க வேண்டும்?"

அவள் கண்களில் நீர் தேங்கியது!

அவள் போய்விட்டாள்.

உண்மையில் அவள் எனக்கு உதவி செய்வாள். அவள் நல்லவள்! ஆனால், நான்—

தலையணைக்கு அடியிலே இருந்த மருந்து டப்பியை எடுத்தேன். முதலில் ஐந்து மாத்திரைகளை எடுத்து வாயில் போட்டுக்கொண்டேன். இறக்கும்போது கட்டாயம் கண்களைத் திறந்து வைத்துக்கொள்ளவேண்டும், எல்லாவற்றையும் பார்க்கவேண்டும். கண்களை ஜன்னலுக்கு வெளியே ஓட்டினேன் ... கீழே பெரிய தோட்டம். அங்கே சரோவின் செல்வங்கள் விளையாடிக்கொண்டிருந்தன. ஒரு பெரிய மரம். அதற்கு அருகே பெரிய சிமென்ட் தொட்டி நிறைய நீர்..அதிலே கற்களை வீசி வீசி இருவரும் விளையாடினர். கண்களை உள்ளே ஓட்டினேன். எதிரே சுவரில் எங்களிருவரின் மணக்கோலப் போட்டோ இருந்தது. கொசுவம் புடவை கட்டி, அமரிக்கையாய், கணவருடன் போட்டோவிலே நிற்கும் சுசீலா, இன்று!இறக்கப்போகிறாள்.மேஜை மேலே டெலிபோன். ஆபீஸுக்கும் எனக்கும் இடையே போன். கணவருடன் உள்ள ஒரே ஒரு தொடர்பு! மறுபடியும் ஐந்து வில்லைகளை விழுங்கினேன். தண்ணீர் குடித்தேன். மறுபடியும் வெளியே பார்த்தேன். சரோவின் பிள்ளை குமார், சிமென்டு தொட்டித் தண்ணீரிலே இறங்க முயன்றான் ... இந்துவோ, வேடிக்கை பார்த்தாள். குமார் தொட்டியில் விழுந்தால், அவனுடலே கிடைக்கும்! நானிறப்பதற்குமுன் அவனே போய்விடுவான்! இதைக் கவனிக்க யாருமே பக்கத்திலே இல்லை! எங்கே சரோ? கூச்சலிட முயன்றேன் ..., ஆனால், மருந்து என் குரலை அமுக்கிவிட்டது. ஒரு ஆவேசத்துடன் கையை வீசி மேஜையிலுள்ள போனை எடுத்து, பரபரப்புடன் எண்ணைத் திருப்பினேன். சரோ வீட்டின் டெலிபோன் நம்பர் எது? என் கை ஆடியது ..., ஒன்று, ஆறு, எட்டு ஒன்பது, மூன்று ... சரியான நம்பர்தானா அது? டெலிபோனை அதிரும்படி "சரோ, குழந்தை, தோட்டம், தண்ணீர் ..." எனக் கூச்சலிட்டேன் ... போன் கீழே விழுந்துவிட்டது ... மயக்கம் தள்ளியது ... இருட்டு சூழ்ந்தது.

எவ்வளவு நேரம் சென்றதோ? மெதுவாக எனக்கு வெளிச்சம் தோன்றியது. ஒரு கை தெரிந்தது...அதைப் பிடித்தவாறே, "ஓடு, ஓடு குமார்" என முணுமுணுத்தேன்.

"சரி, இனிமேல் பயமில்லை, சார்", என்ற குரல் கேட்டது. கண்விழித்தேன். எதிரே டாக்டர்; அவரருகே சரோ. மற்றொரு பக்கத்திலே என் கணவர். "எங்கே என் குமார்?" என்றேன்.

"குமார் பிழைத்துவிட்டான், மன்னி; எல்லாம் உன்னாலேதான். தண்ணீரில் விழுந்துவிட்ட அவனை, நானே எடுத்தேன் ..., நீ என் தெய்வம், மன்னி!"

அவள் குரல் தழுதழுத்தது. பெருமூச்சுவிட்டாள்.

"சுசீலா, என்ன இது? சரோ வந்து உன்னைப் பார்க்க, மயக்கமாக இருந்தாயாம். அவள் எனக்கு டெலிபோன் பண்ண, நான் டாக்டரை வரவழைத்தேன். இன்னும் ஐந்து மாத்திரை கூட உண்டிருந்தால் ... சுத்த அசடு நீ" என்றார். "ஏன் தற்கொலைக்கு முயன்றாய்? எப்படி நீ என்னை விட்டுவிட்டுத் தனியாகச் செல்ல நினைத்தாய்? நீ எனக்கு எவ்வளவு வேண்டியவள் தெரியுமா?"

"இல்லை, உங்களுக்கு நான் பாரமே! சரோவிற்குத் தொந்தரவு. உங்களுக்கு மனைவியே தவிர, என்னால் என்ன சுகம் உங்களுக்கு?"

"சரி, பைத்தியம் ஜாஸ்தியாகிவிட்டது. சுசீலா, நீ இன்று சரோவிற்குச் செய்த உதவியைப்போல யாருமே செய்ய முடியாது. சுசீ, நீ உன் உயிருக்காக மன்றாடிக்கொண்டு இருக்கும்போது, மற்றொரு உயிரைக் காப்பாற்ற முயன்று வெற்றி பெற்றாய்! உயிரின் மதிப்பை அறிந்து இருந்தும், உன் உயிர் மதிப்பை நீ அறியவில்லை. ஆகவே, என்னையும் அறியவில்லை. நீ எனக்காகவே வாழ்கிறாய், வாழ வேண்டும்! ஆபீஸிலிருந்து வீட்டிற்கு நான் வருவதற்கு நீதான் காரணம். உன் அறையே என் சுவர்க்கம். உண்மையில் உன் உடல் நிலை, உன்னை—உன் மனத்தை, என்னுடன் இறுகச் சேர்த்துவிட்டது. இதுவே தேவை. அப்படியிருக்க, நீ எப்படி இதை அறுத்தெறியலாம்? எனக்கு வேண்டியது சுசீலாவே— உன் வாழ்வே,"

..., அவர் குரல் தழதழத்தது. என் கைகளை எடுத்துத் தன் கைகளிலே சிறையிட்டார் ... அப்பப்பா, என்ன ஆனந்தம்!

அவர் வேண்டுவது என்னை, வீண் சுதந்திரமல்ல .... என்னை, என் நிலைக்காக, வெறுக்காது, வேண்டி நேசிக்கிறார். . அவரை விட்டுவிட்டு மரணம் எதற்கு? நான் பாக்கியசாலியே. . .

"என்னை மன்னியுங்கள் ... உங்களைப் புண்படுத்திவிட்டேன்!"—என் கண்களில் பெருகும் நீரை அவர் துடைத்தார் ......

"சுசீ, நீ என்னோடு வாழ்ந்துவா, போதும் ... இதுவே நான் கேட்பது" அவர் மெள்ளச் சொன்னார் ... சிறிது நேரம் சென்றது.

சரோ, குமாரை எடுத்துக்கொண்டு தன் கணவருடன் உள்ளே நுழைந்தாள். "டேய் குமார், மாமிக்கு ஒரு முத்தம் தா" என்றாள்.

மலரின் மென்மையுடன் என் தாடைகளில் குளிர் முத்தம் தந்தான் குமார்.

என் வாழ்விலே இன்பம் மீண்டது.

கலாமண்டபம்

சற்றே மந்தமடைந்திருந்த சென்னைத் திரையுலகம், இப்போது மறுபடியும் சுறு சுறுப்பை அடைந்துவிட்டதெனலாம். படத் தயாரிப்பை நிறுத்துவதென முடிவு செய்திருந்த ஸ்டூடியோ முதலாளி கள்கூட, திரும்ப எடுக்கத் தீர்மானித்து விட்டார்கள். அதற்குக் காரணம் எதுவா யினும் பட ரஸிகர்களுக்குச் சந்தோஷம் அளிக்கக்கூடிய அபிவிருத்தியே இது. மாதத்துக்குப் பத்து படம் வீதம் கண்டு களிக்க அவர்களுக்குச் சந்தர்ப்பம் இருக்கிறது. பத்து படங்களுக்கு மேலேயேகூட வெளிவரலாம். அந்த அளவு படங்கள், நூற்றுக்கு மேற்பட்ட படங்கள், தற்போது தயாராகி வருகின்றன எல்லா ஸ்டூடியோக்களிலுமாக.

இவற்றில் தமிழ்ப் படங்கள் மட்டிலும் ஏறக்குறைய 65. ஒவ்வொரு ஸ்டூடியோவிலும் இரண்டு அல்லது மூன்று படங்களுக்குக் குறையாமல் பல்வேறு தயாரிப்புக் கட்டங்களிலிருக்கின்றன. ஸ்டூடியோவாரியாகப் பார்ப்போம்:—

வாஹினி: விஜயா ப்ரொடக்ஷன்ஸ் 'சசிரேகா பரிணயம்', ஆர். ஆர். பிக்சர்ஸ் 'காத்தவராயன் கதை', தேவர் பிலிம்ஸ் 'தாய்க்குப் பின் தாரம்', வீனஸ் பிக்சர்ஸ் 'அமர தீபம்', ரவி ப்ரொடக்ஷன்ஸ் 'பாக்கியவதி', கிருஷ்ணா பிக்சர்ஸ் 'மதுரை வீரன்', ஜூபிலி பிக்சர்ஸ் 'மர்ம வீரன்', டி. என். ஆர். ப்ரொடக்ஷன்ஸ் 'லலிதாங்கி', உமா பிக்சர்ஸ் 'சக்ரவர்த்தித் திருமகள்', லலிதா பிலிம்ஸ் 'சரணதாஸி', சிவகாமி பிக்சர்ஸ் 'புதுமைப் பித்தன்', செந்தில் ஆர்ட் ப்ரொடக்ஷன்ஸ் 'கடமையும், காதலும்', ரவி பிலிம்ஸ் 'மகாகவி காளிதாஸ்', கே. எம். டி. வி. என். ப்ரொடக்ஷன்ஸ் 'மனைவியே மனிதனின் மாணிக்கம்'.

ரேவதி: நடராஜா பிலிம்ஸ் 'டயல் மிஸ்டர் சஞ்சீவி', கஸ்தூரி பிலிம்ஸ் 'சதாரம்', அசோகா பிக்சர்ஸ் 'பூலோக ரம்பை', ஏ. எல். எஸ். ப்ரொடக்ஷன்ஸ் 'அம்பிகாபதி', மினர்வா பிக்சர்ஸ் 'சாரங்கதரா', சுகுமார் ப்ரொடக்ஷன்ஸ் 'தெருப் பாடகன்', வி. ஆர். வி. ப்ரொடக்ஷன்ஸ் 'பத்தினித் தெய்வம்', பீப்பிள்ஸ் பிலிம்ஸ் 'அவன் அமரன்', ஏ. டி. எம். ப்ரொடக்ஷன்ஸ் 'தோழன்', மணி வேல் பிக்சர்ஸ் 'கண் திறந்து பார்', (கிருஷ்ணா பிக்சர்ஸ் 'மதுரை வீரன்', ஜூபிலி பிக்சர்ஸ் 'மர்ம வீரன்', கஸ்தூரி பிலிம்ஸ் 'சதாரம்' ஆகியவை இங்கும் பிடிக்கப்படுகின்றன).

நியூடோன்: மதராஸ் பிக்சர்ஸ் 'செந்தாமரை', கமால் பிரதர்ஸ் 'புதையல்',

சினிமாச் செய்திகள்

★

நாகூர் சினி ப்ரொடக்ஷன்ஸ் 'குடும்ப விளக்கு', சர்வோதயா பிலிம்ஸ் 'புது வாழ்வு', பராசக்தி பிக்சர்ஸ் 'நாடகமே உலகம்'. (சுகுமார் ப்ரொடக்ஷன்ஸ் 'தெருப் பாடகன்', கஸ்தூரி பிலிம்ஸ் 'சதாரம்' ஆகியவை இங்கும் வளருகின்றன).

சியாமளா: ஓம் சக்தி பிலிம்ஸ் 'தந்தி', சியாமளாவின் 'சிலம்புக் குகை', 'படித்த பெண்', 'தயாரிப்பு நெ. 5', எம். ஆர். எஸ். பிக்சர்ஸ் 'சந்திப்பு', மனோரமா பிலிம்ஸ் 'எதிரொலி'.

(இங்கும் சுகுமார் ப்ரொடக்ஷன்ஸ் 'தெருப் பாடகன்'.)

'நாக பஞ்சமி'யில் எஸ். வரலக்ஷ்மி.

நெப்ட்யூன்: ஜூபிடாரின் 'கன்னியின் சபதம்', பிரின்ஸிபல் பிக்சர்ஸின் 'வெறும் பேச்சல்ல'.

சிடேடல்: ஜே. எஸ். எல். பிக்சர்ஸ் 'மூன்று பெண்கள்', சிடேடல் தயாரிப்பு நெ. 1 (மதராஸ் பிக்சர்ஸின் 'செந்தாமரை' இங்கும் மலர்கிறது).

பரணி: மேகலா பிக்சர்ஸ் 'ரங்கோன் ராதா', பரணியின் 'ரத்னமாலா', 'மண மகன் தேவை'.

(கஸ்தூரி பிலிம்ஸ் 'சதாரம்', டி. என். ஆர். ப்ரொடக்ஷன்ஸ் 'லலிதாங்கி' படப் பிடிப்பு இங்கும் உண்டு).

பிலிம் ஸெண்டர்: மெர்க்குரி பிலிம்ஸ் 'வாழ்விலோர் நாள்', சொந்தத் தயாரிப்பான 'நன்னம்பிக்கை', தார் ஆர்ட் பிலிம்ஸ் 'என் விதி'.

ரோஹிணி: சொந்தத் தயாரிப்பான 'அமிர்த ஹஸ்தம்', ஸ்டெல்லா பிலிம்ஸின் 'புஷ்பா'. (சர்வோதயா பிலிம்ஸின் 'புது வாழ்வு' இங்கும் உருவாகிறது).

பிரகாஷ்: கஜலட்சுமி பிக்சர்ஸின் தயாரிப்பு நெ. 1., பிரமோதா பிலிம்ஸின் 'ஹரிச்சந்திரா'.

ஏ. வி. எம். ஸ்டூடியோவில் எஸ். கே. பிக்சர்ஸின் 'குல தெய்வம்', ஸதர்ன் மூவீஸின் 'வேடன் கண்ணப்பா', வீனஸ் ஸ்டூடியோவில் ஸாரதி பிலிம்ஸின் 'காலம் மாறிப் போச்சு' ஆகியவை பிடிக்கப்பட்டு வருகின்றன. ராயல் ஸ்டூடியோவில் மூனுஸின் 'தேவசுந்தரி', ஜெமினியில் 'நீலவேணி' ஆகியவற்றின் பூர்வாங்க வேலைகள் நடந்து வருகின்றன. வெளியூர்களிலோ மைசூர் பிரிமியர் ஸ்டூடியோவில் பார்வர்ட் ஆர்ட் பிலிம்ஸின் 'குங்குமம்', சேலம் ரத்னாவில் எம். ஆர். பிக்சர்ஸின் 'நடிகன்', மாடர்ன் தியேட்டர்ஸில் 'பாச வலை', திருவனந்தபுரம் மெரிலண்டில் நீலா ப்ரொடக்ஷன்ஸ் 'ஸி .ஐ. டி.', 'ராஜ ராஜன்' ஆகியவை எடுக்கப்பட்டு வருகின்றன.

இவற்றில் 'சதாரம்', 'மதுரை வீரன்', 'குடும்ப விளக்கு' போன்றவை திரையிடத் தயாராகிவிட்டன. 'மர்ம வீரன்', 'புதுமைப்பித்தன்' போன்றவை பாதிக்கு மேல் வளர்ந்துவிட்டன. இப்போதைய வேகம் நீடிக்கும்பட்சத்தில், குறைந்தது அரை டஜன் படங்களாவது மாதந்தோறும் வெளிவந்தாக வேண்டும்.

இவை தவிர, புதிதாகப் பல படங்கள் எடுக்கவும் முயற்சிகள் நடந்து வருகின்றன. இவற்றில் கங்கா சினி ப்ரொடக்ஷன்ஸ் 'மகாத்மா கபீர்', விக்ரம் ப்ரொ



என் அழகை வலேபோட்டுச் சிறை வைத்துவிட முடியுமா என்கிருர் போலும் குல்தீப் கார், 'ராஜா பீர்பலி'ல்.

டக்ஷன்ஸ் 'சிவாஜி', ஜெய்சக்தி பிக்சர் ஸின் 'அலாவுத்'னும் அற்புத விளக்கும்', எவரெஸ்ட் பிக்சர்ஸ் 'கவிரத்ன காளி தாஸ்', கஸ்தூரி பிலிம்ஸ் 'சத்தியவான் சாவித்திரி', சர்வோதயா பிலிம்ஸ் 'பாக்ய சக்கரம்', ஸ்டார் பிக்சர்ஸ் 'அன்பின் பெருமை', விஜயா பிலிம்ஸ் 'யார் பையன்?', கோல்டன் பிக்சர்ஸ் 'ராஜா தேசிங்கு', கணேஷ் மூவிடோன் 'மகா தேவி', சேகர் ப்ரொடக்ஷன்ஸ் 'மணிமேகலே', கல்பனு பிக்சர்ஸ் 'ரம்பை யின் காதல்', ஸ்வராஜ் பிலிம்ஸ் 'சிவ சக்தி', ஆர். என். ஆர். ப்ரொடக்ஷன்ஸ் 'ஆசை மகள்', ரேவதி ப்ரொடக்ஷன்ஸ் 'ராஜ பக்தி', எம். ஏ. வி. பிக்சர்ஸ் 'செங் கமலத் த°வு', 'பாட்டி சொன்ன கதை', தாயகம் பிக்சர்ஸ் 'குமாரிக் கோட்டம்', கே. என். பிலிம்ஸ் 'வளர்த்த பாசம்', லியோ பிலிம்ஸ் 'ஞான ! வள்ளல்', ஜுபிடர் பிக்சர்ஸ் 'தங்கப் பதுமை', அஸோஸியேடட்பிக்சர்ஸ் 'சந்தானம்', போன்றவற்றை முக்கியமாகச் சொல்ல லாம். எம். ஏ. வி. யின் 'சம்பூர்ண ராமா யணம்' போன்ற பிரம்மாண்டத் தயா ரிப்புகளும் இருக்கின்றன. ஆக்கூடி, திக்குமுக்காட வைக்கும் படப் படை யெடுப்புக்கு இப்போது முதலே ரஸிகர் கள் தயாராயிருக்கத்தான் வேண்டும்.

பேட்டி

"ஒரே சமயத்தில் ஏகப்பட்ட படங் களில் நடிப்பதென்பது கூடாது. எதற் கும் ஒரு அளவு அவசியம் வேண்டும். அதை மீறிப்போனல் நட்சத்திரங் களுக்கேதான் கேடு. ஒரு படத்திலும் போதிய கவனம் செலுத்தி நடிக்கமுடி யாது என்பதோடு, அதனல் பெயரும் பெருமையும் மங்குவதோடு, உடல் நல மும் குன்றுவது உறுதி; நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு, விரைவில் நலிவுற்றுவிடு வோம். இதை என் சொந்த அனுபவத்தி லிருந்தே கூறுகிறேன். ஆண்டுக்கு அதிக பட்சமாக ஆறு படங்களில்தான் நடிக்க லாமென்பது என் கருத்து" என்று சென்ற திங்களன்று மயிலே உட்லண்ட்ஸ் ஹோட்டலில் தென்னிந்திய சினிமாப் பத்திரிகையாளர் சங்கத்தினரைச் சந் தித்த பிரபல தெலுங்கு நடிகர் ஸ்ரீ ஏ. நாகேச்வர ராவ் கூறினர்.

நடிகர்கள் சொந்தத்தில் படமெடுக்கப் புகுவதும் தவறு என்ருர் அவர். "நடிப் பிலாகட்டும், புகழிலாகட்டும், பணத்தில் தாகுகட்டும், ஒருவிதத்திலும் பிரயோ சனமில்லே இதனல். பிறர் படமென்ருல் நடிப்பிலேயே குறியாயிருக்கிறேம். தயாரிப்புத் தொல்லேகள் ஏதும் இல்லா மல், எவ்வளவு சாத்யமோ அவ்வளவு சிறப்பாக நடிக்க முயல்கிறேம். இந்த முறையில் நடித்தால், ஆடினல் பாடினல் பண வசூல் ஜாஸ்தியாயிருக்குமே என் றெல்லாம் சிந்தித்து தரத்தைக் குறைக்க முயல்வதில்லே; கலேயைக் கலேயாகவே பாவித்து நம் பங்கை பயபக்தியுடன், ஆர்வமுடன் செலுத்துகிறேம். சொந் தப்படமென்று வந்துவிட்டாலோ இந்

சந்திரபாபுவையும் 'ப்ரெண்ட்' ராமசாமியையும் குதித்துக் கொம்மாளம் போடச் செய்கையில் சஹஸ்ரநாமத்தையே சங்கடப்படவைக்கிறது 'ஒன்றே குலம்.'



'கண்ணின் மணிகளை' நன்ருகப் பார்த்துக்கொள்ளுங்கள் என்கிருர் பத்மினி! (வலது) என் கண்கள் மட்டுமென்ன, 'புது டில்லி' வரையில் எட்டுமே என்று எட்டிப் பார்க்கிருரே வைஜயந்திமாலா?

தக் கலையார்வம் காற்ருேடு போய்விடுகிறது. காசிலேயே கருத்துச் சென்று கண்டபடி ஆடிப்பாடி நடிக்க ஆரம்பித்துவிடுகிருேம். இதனல் புகழ் மங்குவது ஒருபுறமிருக்க, போட்ட முதலேகூட மீள்வது சிரமமாகிவிடுகிறது பல சந்தர்ப்பங்களில். சர்க்காரின் வரிகளுக்கும், மற்ற செலவுகளுக்கும் கண்டது போக லாபம் மிஞ்சுவது என்பது அபூர்வம்தான். எனவே பாடுபட்டுத் தேடிய பணத்தை எதற்காக இந்த மாதிரி அபாயப் பரீட்சைகளில் ஈடுபடுத்தவேண்டும்? 'அக்கடா' என்று நடிப்பதைவிட்டு ஏன் வீண் தொல்லைகளை வலுவில் வரவழைத்துக்கொள்ளவேண்டும்?" என்று வினவினர் அவர்.

நட்சத்திரங்களுக்குள்ள பல்வேறு சிரமங்களையும் ஸ்ரீ நாகேச்வர ராவ் விளக்கினர். குறிப்பாக, பகட்டான போலி வாழ்க்கை நடத்த வேண்டியிருப்பதையும், சதாசர்வகாலமும் நடித்துக்கொண்டேயிருப்பதால் அன்ருட வாழ்க்கையே நடிப்பாகிவிடுவதையும் குறிப்பிட்டார். தம்மைப் பொறுத்தவரையில் முகஸ்துதியைத்தாம் விரும்புவதில்லையென்றும், கண்டனங்களைக்கண்டும் கலங்குவது கிடையாதென்றும், உண்மையில், குறையற நடிக்கத் தூண்டுகோலாகவே கண்டனங்களைத்தாம் கருதுவதாயும் கூறினர். அரசியலில் எதிர்க்கட்சி எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் நேர்மையான விமர்சனம், குறையிருந்தால் தைரியமாகக் கண்டிக்கப் புகவேண்டும் என்ருர். இறுதியாக, எந்த நடிகரும் பாத்திரத்தோடு ஐக்கியமாகி தம்மை மறந்து நடிப்பது என்பது இயலாத காரியமென்றும், நடிக்கிருேம் என்ற நினைவு இருந்தேயாக வேண்டுமென்றும், சென்ற 14 ஆண்டுகளில் 50 படங்களில் நடித்த அனுபவத்திலிருந்தே இதைத் தாம் கூறுவதாயும் தெரிவித்தார்.

ரகுவீரை அழவைக்கிருரா அல்லது சிரிக்கவைக்கிருரா தாம்பரம் லலிதா என்பது இவ்வாரம் திரைக்கு வந்திருக்கும் 'கோகிலவாணி'யைப் பார்த்தால் தெளிவுபட்டுப் போய்விடும்.

கல்கத்தா படவுலகம்

வங்காளிப் படங்களைப் பொறுத்த வரையில் 1955-ம் வருஷம் வெற்றிகரமானதொன்றேயென வங்க சினிமாப் பத்திரிகையாளர் சங்கத்தார் கருதுகின்றனர். வெளிப்படையாக இப்படி அவர்கள் சொல்லாதபோதிலும் சென்ற வருஷம் வெளியான படங்களைக் குறித்து அவர்கள் சமீபத்தில் கூறிய முடிவுகளிலிருந்து இது தெரிகிறது; இந்தியப் படங்களில் சிறந்தவையென அவர்கள் பொறுக்கிய பத்து படங்களிலிருந்து இது நன்கு தெரிகிறது—அந்தப் பத்துப் படங்களில் ஆறு, வங்காளிப் படங்களாகும்!

(1) பதர் பாஞ்சலி (2) ஸ்ரீ 420 (3) ராணி ராஷ்மணி (4) ராய் கமல் (5) அர்த்தாங்கினி (6) ஜனக் ஜனக் பாயல் பாஜே (7) ஜாக்ரிதி (8) ஹிராத் (9) அனுபமா (10) பந்தீஷ் ஆகியவைதான் அவர்கள் தேர்ந்தெடுத்துள்ள பத்து படங்கள். இந்தத் தீர்ப்பு சரியானதல்லவென இந்தியாவின் இதர பாகங்களைச் சேர்ந்தவர்கள் கூறக்கூடுமாயினும், வங்கப் பத்திரிகையாளர் தங்கள் குறுகிய மாகாணப் பித்துக்கு இடம் கொடுத்துவிட்டார்களெனக் குற்றம் சாட்டக்கூடுமாயினும் இம்முடிவு வங்கப் படத் தயாரிப்பாளர்களுக்கும், டைரக்டர்களுக்கும் பேருவகை தருமென்பதில் ஐயமில்லை. குறிப்பாக, தலைசிறந்த படமே வங்காளிப் படமாயிருப்பதும், முதல் ஐந்திலும் நான்கு ஸ்தானங்களை அவை பெற்றுவிட்டதும், அவர்களைத் துள்ளிக் குதிக்கச் செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

ஆயினும், என்னைப் பொறுத்தவரையில் இந்தத் தீர்ப்பு சரியானது என்று நான் சொல்லத் தயாராயில்லை. அதிலும் 'பதர் பாஞ்சலி'க்கு முதலிடம் கொடுத்திருப்பது முற்றிலும் தவறு என்பதே என் கருத்து. சென்ற வருஷத் தயாரிப்புகளில் பொதுஜன கவனத்தை அதிகம் பெற்றது அதுதான் என்பதென்னவோ வாஸ்தவமே. இருந்தபோதிலும் அதுதான் அதிசிறந்தது, அதிக வெற்றி தந்தது என்று கூற முடியாது; பல அம்சங்களில் புது வழி காட்டியதெனினும் அதனாலேயே அது சிறந்ததாகிவிடாது.

உண்மையில், 'ஸ்ரீ 420'க்குத்தான் அக்ரஸ்தானம் அளித்திருக்க வேண்டும். வங்க சினிமாப் பத்திரிகையாளர் அப்படிச் செய்திருப்பதுதான் முறைமையும்கூட. ஏனெனில், ஆறு வகைகளில்—டைரக்ஷன், படப்பிடிப்பு, ஒலிப்பதிவு, திரைக்கதை போன்று ஆறு அம்சங்களில்—சிறந்த ஹிந்திப் படம் என அவர்களே முடிவு கூறியிருக்கிறார்கள்; இப்படிக் கூறிவிட்டு, ஐவகைச் சிறப்பைப் பெற்றிருப்பதாக அவர்களாலேயே தீர்ப்பளிக்கப்பட்ட 'பதர் பாஞ்சலி'க்கு முதலிடம் தந்தது முரணானதல்லவா?

பொதுஜன ஆதரவைக் கருத்தில் கொண்டு பார்த்தாலும் 'ஸ்ரீ 420'க்கும், 'பதர் பாஞ்சலி'க்கும் ஏணி வைத்தாலும் எட்டாது. ஏன், முறையே மூன்றுவது, ஆறுவது ஸ்தானங்களைப் பெற்ற 'ராணி ராஷ்மணி', 'ஜனக் ஜனக் பாயல் பாஜே' ஆகியவற்றுக்குக் கிடைத்த அளவு ஆதரவுகூட 'பதர் பாஞ்சலி'க்குக் கிட்டவில்லை. கருத்தைக் கவர்வதாக இருந்தது அதன் கதையம்சம்தான். அதைப் பேரிலக்கியம் என்றால் 'ஸ்ரீ 420' கதையைப் பிரத்தியட்ச வாழ்வை விண்டு காட்டும் நிகரற்ற நூதன இலக்கியம் என்றே கூறவேண்டும். எப்படியோ அன்றாட வாழ்வை அறவே புறக்கணித்து முதலிடத்தைத் தட்டிக்

டில்லியில் தக்ஷிண பாரத ஸமாஜம், கர்னாடக சங்கீத சபை ஆதரவில் 'நாரதர்' ஸ்ரீநிவாஸ ராவ் கோஷ்டியாரின் நாடகங்களை சபாநாயகர் ஸ்ரீ எம். அனந்தசயனம் அய்யங்கார் துவக்கிவைத்தபோது எடுத்த படம். நாடக கோஷ்டியாருடன், சமாஜ்-சபா தலைவர் ஸ்ரீ பட்டாபிராமனையும், ஸ்ரீ கே. ராமமூர்த்தி, ஸ்ரீ ஏ. ஜீ. வி. சுப்ரமண்யம் முதலிய நிர்வாகிகளையும் படத்தில் காணலாம்.

கொண்டு போய்விட்டது 'பாதர் பாஞ்சலி!'

இந்தத் தீர்ப்பு அதிருப்திகரம்தான் என்றாலும் மற்றொரு விஷயத்தில் பூற்றிலும்திருப்திதந்துவிட்டனர்வங்கசினிமா பத்திரிகையாளர்: நான் பன்முறை கூறிய ஜோஸ்யத்தை மெய்ப்பித்துவிட்டனர், சிறந்த உப நடிகர் என்று சபி பிஸ்வாஸைத் தேர்ந்தெடுத்ததன் மூலம். உண்மையில், பிரதான நடிகர்களைவிட இவருக்கே அதிகப் புகழ் கிடைத்திருக்கிறது, 'ஸபர் உபாரே' போன்ற பல வங்காளிப் படங்களில். பல படங்கள் தோல்வியுறாது காப்பாற்றப்பட்டதும் இவராலேயே எனலாம். இத்தகையவரை கௌரவித்ததன் மூலம் தங்களையும், வங்க சினிமாப் பத்திரிகையாளர் கௌரவித்துக்கொண்டுள்ளனரென்றால் மிகையாகாது.

❀ ❀ ❀

கோர சோகத்தின் சிகரம் அல்லது ஹாஸ்யத்தின் உச்சியைத் தொடுவனவாகவேயுள்ளன தற்போது வெளிவரும் வங்காளிப் படங்களெல்லாம். இரண்டுக்குமே நல்ல ஆதரவு கிடைத்து வருகிறது. இதில் முதல் ரகத்தைச் சேர்ந்தது 'ஸாகேப், பீபி, கோலம்'. எதிர்பார்த்தபடி சோகம், சிருங்காரத்தைப் பிழிந்து தருவதாகவே உள்ளது ஸர்க்கார் ப்ரொடக்ஷன்ஸ் படம் எடுத்துள்ள பிமல் மித்ராவின் இக்கதை—வங்க பிரபுத்துவத்தின் அந்திம காலத்தைச் சித்திரிப்பதாகும் இது. அப்போதெல்லாம் பகலில் சூதாட்டமும், இரவில் களியாட்டமும்தான் பிரபுக்களின் அன்றாட வாழ்க்கை முறை. மனைவியுடன் இரவில் தங்குவது மானக்கேடு என்றே நினைத்து வந்தார்கள் அவர்கள். இதனால் தவித்த மனைவியரெல்லாம் விலைமாதுகள் போன்றுகூட நடந்து, தங்கள் கணவன்மாரின் மனதைத் திருப்பப் பார்த்தனர்—நல்ல கதைதான் இது. ஆயினும் எப்படி இதற்கு 'யூ' ஸர்ட்டிபிகேட்டைத் தணிக்கையாளர் அளித்தனர் என்பது ஆச்சரியமாகவே இருக்கிறது. பிரபுக்களின் லீலைகள், வயது வந்த ஆண்களேகூடச் சகிக்க முடியாத அளவு இருக்கிறது; குடும்பத்தோடு போய்ப் பார்ப்பது எப்படி? இவ்வாறு அதியாக இருப்பதால்தானோ என்னவோ, ஸாகேபாக சபி பிஸ்வாஸும், பீபியாக ஸுமித்ராவும், கோலம் பாகத்தில் உத்தமும் வெகு நன்றாக நடித்திருப்பினும் கூட எதிர்பார்த்த அளவு பொதுஜன ஆதரவு இல்லை.

இதற்குப் போகக்கூடிய கூட்டமெல்லாம் 'தான்ஸிலு'க்குத் திரும்பிவிட்டதென்றே சொல்ல வேண்டும். 'பாச ஜாத்ரி' என்ற பெயருடன் முன்பு வெளிவந்து பிரமாத வெற்றி பெற்ற ஹாஸ்யப் படத்தின் தொடர்ச்சியே இது. அதில் தோன்றிய கான்ஸா, கோட்னு என்ற இரு பாத்திரங்கள் இதிலும் உண்டு. தங்கள் குழுவில் சேர்த்துக்கொள்ளும் ஒரு மங்கை மிக ஒல்லியாக இருப்பது கண்டு அவளுக்கு அவர்கள் சதை போட வைக்கப் படாத பாடு படுகிறார்கள்—படம் சக்கை போடு போடக் கேட்கவா வேண்டும்!

பொருளடக்கம்

Vol: XXVII] மன்மதஞு பங்குனிமீ 19உ ஏப்ரல் 1, 1956 [No. 9

விலைவாசி ஏற்றம் 3
காற்றுவாக்கிலே —அரட்டை 4
திரிவேணி
—ஹேமா ஆனந்ததீர்த்தன் 5
தனிப்பிரயாணத்திலே —சம்பந்தம் 9
பிரமுகர் வரிசை 11
தலைநகர் தபால் 12
அன்பின் துன்பம் —இதயவாசி 13
நவநாகரிகக்குறிப்புகள் —காசினி 18
ஸதி பவானி —க. நா. சுப்ரமண்யம் 19
எழுத்துலகம் —எஸ். ராஜா 24
காயகல்பம் —தூன் 25
இசையும் இன்பமும் —ப. ரா. 28
வைத்தியரைக்கேளுங்கள்
—குச்சாமாமா 33
அதிசய வீணை —வாண்டுமாமா 35
பஞ்சதந்திரம் 36
டிப்பி —சந்தனு 38
பாரிஸ்டர் மகள்
—டி. எஸ். கோதண்டராமன் 40
மோகமுள் —தி. ஜானகிராமன் 43
பொல்லாத நிபந்தனை —காடோடி 48
மீண்ட இன்பம் —கே. வி. நடராஜன் 49
கலாமண்டபம் 51
வாசுதேவாச்சார் கீர்த்தனை 55

"மித்திரன்" வாரப்பதிப்பில் வெளிவரும் கதைகளில் பெயர்கள், சம்பவங்கள் எல்லாம் கற்பனையே: அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

டில்லிக்கு யாத்திரையாகச் சென்ற தென்னிந்தியக் குடியானவர்கள் சுமார் 400 பேர், மார்ச் 24-ந் தேதி பண்டித நேருவைச் சந்தித்து, கிருஷிகர் சம்பூர்ண யாத்திரை ஸ்பெஷல் ரயில் ஸ்தாபன சார்பில் 5 ஆண்டுத் திட்டத்துக்கு உதவுவதற்காக ரூ. 1116 அடங்கிய ஒரு பணமுடிப்பைச் சமர்ப்பித்தனர்.

காலச் சக்கரம்

எம்.எல்.ஏ:-மலையத்தனை ஊழல் கண்ணில் படவில்லையா?
மந்திரி:- இல்லையே! கடுகன்று அது!
லஞ்ச ஊழல்
லஞ்ச ஊழல்பற்றி திட்ட வட்டமில்லாத புகார்கள் சொல்வதாக எம்.எல்.ஏக்களை சென்னை நிதிமந்திரி கண்டித்தார்
வருமானத்தின் மீது வரிச் சுமையால் முதலாக்கம் பாதிக்கப்படும் என்கிறார் சென்னை வர்த்தக சபைத் தலைவர்
வருமானத்தின் மீது வரி
முதலீடு
பஞ்ச நிலைமை
கீழ் பாகிஸ்தானிலிருந்து மக்கள் வெளியேற்றம் உச்ச நிலையை அடைந்து விட்டது

மைசூர் வாசுதேவாச்சார் கீர்த்தனைகள்

ராகம் : கோகில ப்ரியா] [தாளம் : சதுரச்ர த்ரிபுடை

ஆ. ஸரிகமபதநிஸ் } 11-வது மேளம்
அ. ஸ்நிதபமகரிஸ }

பல்லவி

நீ கபிமானமு லேதா ராமா நாபை
4
நீரஜ நேத்ர நீரத நிபகாத்ர (நீ)
4

அநுபல்லவி

ஓ கமலாஸநாதி விநுத சரண
3
லோக ரக்ஷக வாஸுதேவ க்ருபாகர (நீ)
3

சரணம்

பூமிஜா மானஸாம்போருஹ பாஸ்கர
4 3 4
நீ மஹிமலு நேநேமனி பொகடுது
3 3 3
காமிதார்த்த பலதான துரீண
4
ப்ரேமதோ ப்ரோசே ஸமயமிதே கத (நீ) (34)
3

பல்லவி:—உனக்கு அபிமானமில்லையா? ராமா! என்மேல். தாமரைப் புஷ்பம் போன்ற கண்ணுள்ளவனே! கார் மேகத்திற்கு ஒப்பான காயமுள்ளவனே!—என்மேல் உனக்கு அபிமானமில்லையா.

அநுபல்லவி:—ப்ரம்மாதி ஸகல தேவர்களும் வணங்கும் பாதங்கள் உள்ளவனே! உலகங்களையெல்லாம் ரக்ஷிப்பவனே! எல்லா ஜீவராசிகளின் ஹ்ருதயங்களையும் தன் வாசஸ்தலமாகக் கொண்டவனே! (அவ்விதமே) கருணை செய்துகொண்டிருப்பவனே!

சரணம்:—ஸீதா தேவியின் மனதாகிற தாமரைப் புஷ்பத்தை மலரச் செய்கிற சூரியனே! உன் மஹிமைகளை (வேதங்களாலும் அறியமுடியாதவைகளை) நான் என்னவென்று புகழ்வேன். வேண்டிய பலன்களைக் கொடுப்பதில் முன் நிற்பவனே! அன்போடு என்னைக் காக்கும் சமயம் இதுவன்றோ! ஓ ராமா! என்மேல் உனக்கு அபிமானம் இல்லையா?

தாளம் : சதுரச்ர த்ரிபுடை.

I	O	O

பல்லவி

,,, ஸரிகரீஸா,,நிதநீ	ஸா,,ஸா,ஸநி	தநிஸா ஸநிதா பா ஸநிஸநி
...நீ.கபிமா...நமு	லே..தா ரா.	ம... ... ... நா...
ஸரிகாரீ ஸரிகரீ ஸா கரிரிஸஸநி தநீ	ஸா,,ஸா,ஸநி	ஸரிகா ரிகமா பதநீஸ்நி தாநிதபா
பை...நீ.கபிமா......நமு	லே..த..ரா.	ம.. ... நா... .....
மககரிஸநி ஸரிகரீஸா,,நிதநீ	ஸா,,ஸா,ஸநி	தநிஸா ஸநிதா பா ஸநிஸநி
பை.....நீ. கபிமா...நமு	லே..த...ரா	ம.. ... . நா...
ஸரிகாரீ ஸரிககா மா,,,, மபாம	கா,தபத பமமா	மககரி ஸா நிஸநித பதநித
பை.... நீ.ர ஜநே........	த்ர.நீ.ர த...	வி.. ப, கா...த்ர..

நீ (நீ கபிமானமு லேதா.)

அநுபல்லவி

,,, மபத நீஸ்ா நிதாநி ஸ்ஸ்ஸா	,,,நித நிஸ்ா	நீநித தப பத நித
ஓ கமலா ... .ஸநா	...திவி னுத.	சர.ண.....
நீ, நிமபா தநீ ஸ்ரிக்ரிரிஸ்ஸ்நிநித நிஸ்ா.	,,,நிதநிஸ்ா	நீநிததப பதநித
..ஓ...கமலா.........ஸநா.	...திவினுத.	சர.ண.....
பதநிதநீ ஸ்ரிக்ாரீ க்ரிரிஸ் ஸ்ா ஸ்நிதா தப த நிஸ்நி	ஸ்ா, ஸ்நி தபம	மபமா கமகா ரிஸ நிஸநிந
..... லோ..கர.... க்ஷ.க... வா ஸ...	...தே. வக்ரு	பா.. .....கர....

பதநிதநீ (நீ கபிமானமு லேதா.)

சரணம்

,,,தா த தா பமபம பாதநி தா..ஸ்நி ஙபபா..	,,மா ப தபா நித பமமா	கரி ஸரிகா ; கமா
...பூமிஜா மா........ ந ம்...	..போ... ரு.ஹ...	பா ....ஸ்கர
,,,கரிஸ ஸரிகரி ரிஸஸா ஸநிதா தநி தநிஸநி	ஸா, ஸரிகமா	கரி கமா தபதா,
...நீ.ம ஹி...ம... ஆ... நே.	... நே. மனி.	பொ. ஙா..டு.து..

காமிதார்த்த பலதான துரீண ‖
ப்ரேமதோ ப்ரோசே ஸமயமிதே கத ‖

(அநுபல்லவி மாதிரி பாடவும்)

திருவொற்றியூர் ஸ்ரீ தியாகராஜப் பெருமான் பிரும்மோத்ஸவத்தின் முதல் நாளன்று வீதி வலம் வந்த திருப்புகழ் பஜனை கோஷ்டி. அன்றைய உபயம் கொண்டித் தோப்பு 'மனோன்மணி விலாஸ்' ஸ்ரீ எம். ஏ. சுப்பிரமணிய முதலியாருடையது.

குல்தீப் பிக்சர்ஸ் 'டாங்காவாலி'யில் நிருபா ராய்.

Printed and Published by N. Rajagopalan, at the 'Swadesamitran' Press, 'Victory House' Mount Road, Madras, Editor: C. R. Srinivasan, B. A.